# ராசி



ரா.கி.ரங்கராஜன்

# ராசி

ரா.கி. ரங்கராஜன்

அல்லயன்ஸ்

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ் புத்தக நிறுவனம்)

# முன்னுரை

சமூகக் கண்ணோட்டத்துடன் ஒரு நாவல் எழுதும் படி அமரர் எஸ்.ஏ.பி. பணித்ததற்கேற்ப இந்த நாவலை எழுதினேன். கோத்திரப் பிரசினையை எடுத்துக் கொள்ளும் படி சொன்னவரும் அவர்தான். கோத்திரம் என்பது இந்துக் களில் சில வகுப்பினரிடையே மட்டும் இருந்து வருகிற விஷயம். அதுகூடப் பெரும்பாலும் மறைந்து கொண்டிருக் கிறது. சில குழப்பங்களுடனும் தடுமாற்றங்களுடனும் நான் எழுதி முடித்த தொடர்கதை இது.

எனினும் காதலும் இளமையும் இந்தக் கதையில் நயமாகவும் சுவையாகவும் வந்திருக்கிறதென்று பல வாசகர்கள் பாராட்டினார்கள்.

திருமணம் செய்து கொள்ளாமலே ஒரு இளைஞனும் இளம் பெண்ணும் சேர்ந்து வாழ்கிறார்கள் என்பது சமீப காலத்துப் புரட்சிக் கருத்து. இந்தியில் ஒரு திரைப்படம்கூட அண்மையில் வெளிவந்திருக்கிறது. சுமார் முப்பது வருடங் களுக்கு முன்பே நான் அப்படி எழுதியிருப்பதை எண்ணி ஆச்சரியமாகவும் இருக்கிறது. பெருமையாகவும் இருக் கிறது.

கதைக்கு நிச்சயமான ஒரு முடிவைத் தராமல் இரண்டும் கெட்டானாக விட்டிருக்கிறேன் என்று சில

வாசகர்கள் அப்போது தெரிவித்தார்கள். இருக்கலாம். டாஃபன் டு மாரியர் என்ற பிரபல நாவலாசிரியரின் சில நாவல்கள் அப்படி முடிந்திருக்கும். கதையின் முடிவ வாசகர்களின் ஊகத்துக்கு விட்டிருப்பார். அவருடைய படைப்புக்களினால் ஏற்பட்ட தாக்கம் என்னை ஓரளவு பாதித்திருந்த கட்டம் அது. அதனால் 'ராசி'யின் முடிவும் அப்படி அமைந்திருக்கக் கூடும்.

திருமதி மங்கை கிருஷ்ணஸ்வாமி புரூப் திருத்து வதில் மிகவும் உதவி செய்தார். அவருக்கும் புத்தகத்தை அழகிய முறையில் பிரசுரித்துள்ள அல்லயன்ஸ் நிறுவனத் தினருக்கும் நன்றி.

ரா.கி. ரங்கராஜன்

# ராசி

## ஒன்று

''ஆக்ஸிடெண்டுக்கு ஒரு ஸீயா, ரெண்டு ஸீயா சித்தி?'' என்று பாட நோட்டை எடுத்து வந்து கேட்டாள் மாலு.

ஆபீசிலிருந்து எடுத்து வந்த ஃபைல்களை இப்போது பிரிக்கலாமா இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பிரிக்கலாமா என்று யோசனை செய்து கொண்டிருந்த சியாமா அவளைத் திரும்பி நோக்கினாள். மேஜை மீதிருந்த விளக்குக் குல்லா போட்டிருந்ததால் அதன் வெளிச்சம் மாலுவின் கழுத்துக்குக் கீழே குறுக்காகக் கோடு கிழித்த மாதிரி விழுந்திருந்தது. அந்தப் பத்து வயதுச் சிறுமியின் முகத்தில் ஒளி படவில்லையாயினும் அவள் நல்ல சிவப்பாகையால் பளீரென்று தெரிந்தது. அந்த வெளிச்சத்தின் சர்க்கஸைச் சியாமா ரசித்தாள். 'கழுதை! வளர்ந்தால் ஊரைச் சாப்பிட்டு விடுவாள் அழகில்!'

''சொல்லு சித்தி, ஒரு ஸீயா ரெண்டு ஸீயா?''

''முதல்லே சித்தின்னு கூப்பிட்டதுக்குப் பத்துத் தோப்புக்கரணம் போடு. இருந்திருந்து எனக்கு இருபது

வயது ஆகல்லே. சித்தி சித்தின்னு சொல்லி என்னைக் கிழவியாக்காதே, அக்கான்னு கூப்பிடுன்னு எத்தனை வாட்டி சொல்லியிருக்கேன்? ஊம்?''

''ஸாரி சித்—அக்கா'' என்று மாலு கன்னத்தில் போட்டுக் கொண்ட போது, அதைக் கேட்டுப் பின்புறத்துச் சமையலறையில் கடகடவென்று சப்பாத்தி இட்டுக் கொண்டிருந்த அக்கா ரங்கம்மாவும் முன்புறத்து அறையில் கொசு ஆயின்ட் மென்ட்டைக் காலுக்கும் கைக்கும் தடவிக் கொண்டிருந்த மாமா வெங்கடேசுவரனும் ஒரே சமயத்தில் சிரிப்பது கேட்டது. 'நினைவு தெரிந்த நாளாய் அக்காவின் கணவனை மாமா என்று தானே நாம் கூப்பிட்டுக் கொண்டு வருகிறோம்' என்று எண்ணிக் கொண்டாள் சியாமா. ஆனால் வெங்கடேசுவரன் ஒரு தடவை கூட ஆட்சேபித்த தில்லை. தாத்தா என்று அவள் கூப்பிட்டு வந்திருந்தால் கூட அவர் ஒன்றும் சொல்ல மாட்டார். சியாமா அவருக்குக் கடைசி மைத்துனியல்ல. முதல் மகள்.

''ரெண்டு ஸீ, மாலு'' என்றாள் சியாமா. ''இரு, நோட்டை இப்படி வைச்சுட்டு, அந்த வார்த்தையை எழுது பார்க்கலாம். எழுதினாத்தான் ஞாபகம் வரும். பென்ஸில் எங்கே?''

''நான் பென்ஸில் வைச்சுக்கிறதில்லே, அக்கா. எல்லாம் பேனாதான்.''

''ஏன்?''

''பென்ஸில்னா சீவணும். சீவணும்னா பிளேட் வேணும். பிளேட் வைச்சிட்டிருந்தால் விரல்லே வெட்டி ரத்தம் கொட்டுது. பயமாயிருக்கு.''

சியாமா தலையை அசைத்தாள். ''சே சே! இந்த வயசிலேயே நீ வெட்டுக் காயம், ரத்தம் இதுக்கெல்லாம் பயந்தாயோ, பின்னாலே அவ்வளவுதான். நல்லா ஜான்ஸி ரா்ணி மாதிரி உலகமே டோன்ட் கேர்னு இருக்க வேணாம்? என்ன?''

மாலு தலையை ஆட்டினாள் புரிந்த மாதிரி.

''சரி. எழுது.''

மாலு, தன் வழக்கப்படி நாக்கு நுனியைத் துருத்திக் கொண்டு, 'ஏ-ஸீ-ஸீ' என்று எழுதத் தொடங்கினாள்.

''ஸீயா இது? இ மாதிரி இருக்கு. இப்படிக் கொடு பேனாவை,'' என்று சியாமா அவளிடமிருந்து நோட்டையும் பேனாவையும் வாங்கிக் கொண்டு, எழுதிக் காட்ட முயன்றாள். ஆனால் 'ஏ'க்கு மேல் எழுத முடியவில்லை.

''ஏண்டி மாலு, இந்த வீட்டில் நான் ஒருத்தி திக்கித் திக்கிப் பேசுவது போறாதா? பேனா கூடத் திக்கணுமா?'' என்று சிரித்தாள்.

''நீ எங்கே சித்—''

''ஊம்!''

''நீ எங்கே அக்கா திக்குறே? எப்பவாச்சும் ஒரு வாட்டி திக்குது. அப்ப உனக்கு அது எத்தனை அழகா இருக்கு தெரியுமா?''

''ஐஸ்! ஐஸ்!'' என்றாள் சியாமா. ஆனால் மாலு சொன்னது உண்மைதான் என்று அவளுக்குத் தெரியும். எப்போது திக்கும், எப்போது திக்காது என்று அவளாலேயே சொல்ல முடியாது. எப்போதாவது ஒருமுறை எதிர்பாராத

படி திக்கிவிடும். அது அவளுக்கு ஒரு தனிக் கவர்ச்சி தருகிறது என்று அவள் சினேகிதிகள் சொல்லுவதுண்டு. பி.யூ.ஸி.யில் படித்துக் கொண்டிருந்த போது, ஒருத்தி, ''சியாம், உண்மையைச் சொல்லிடு. உனக்கு அழகா இருக்கு என்கிறதுக்காகத்தானே நடுநடுவே திக்கற மாதிரி பாசாங்கு செய்யறே?'' என்று கூடக் கேட்டிருக்கிறாள்...

தடக் தடக்கென்று மின்சார ரயில் விரைந்து மறையும் ஓசை கேட்டது. இரண்டு தெரு தாண்டினால் மாம்பலம் ஸ்டேஷன். ஆகவே நாள் பூரா இந்தப் பின்னணி ஒலித்துக் கொண்டேயிருக்கும். இப்போது போவது டபிள் யூனிட்டோ? தடக் தடக் அதிக நேரம் கேட்கிறதே?

பைல் கட்டில் மேலிருந்த நாடாவை அவிழ்ப்பதற் காகத் திரும்பினாள் சியாமா.

மரப் பீரோவின் மேல் பகுதியில் இருந்த கண் ணாடியில் அவள் வட்ட முகமும் சுருட்டைக் கூந்தலும் மங்கலாகப் பிரதிபலித்தன. கழுத்தை ஒரு வெட்டு வெட்டி உதட்டைச் சுழித்தாள். பிரதிபிம்பமும் அப்படியே செய்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. ஒரு முறைப்பு முறைத்து விட்டுப் பைலைப் பிரித்தாள்.

'பத்திரம், பத்திரம்' என்று ஹெட் கிளார்க் வேதாசலம் அன்று மாலை தன் பெண்பிள்ளைக் குரலில் எச்சரித்தது அவள் காதில் ஒலித்தது. கமர்ஷியல் டாக்ஸ் துறையில் சியாமா ஜூனியர் அஸிஸ்டென்ட்டாக — இளநிலை எழுத்தராக இருந்தாள். ''டி.ஸீ.டி.ஓ. ரொம்பக் கண்டிச்சு சொல்லியிருக்கார், ஃபைல்களை வீட்டுக்கு எடுத்துப் போகக் கூடாதுன்னு. இந்த டைப்பிஸ்ட் கடன்காரன் வந்திருந்தான்னா உன்கிட்டே கொடுக்கவே

மாட்டேன். எல்லாத்திலேயும் ஆர்டர் பாஸ் பண்ணியாச்சு. கார்பன் வைச்சு, கையாலேயே காப்பி எடுத்திடு. காலையிலே வர்றப்போ கொண்டு வந்திடு மறக்காமே'' என்பது வேதாசலத்தின் எச்சரிக்கை...

'ஆபீசுக்குப் போனால் அங்கேயும் ஒரு பயந்தாங் கொள்ளி!' என்று நினைத்துக் கொண்டே முதல் பைலில் நகல் எடுக்க ஆரம்பித்தாள். மவுண்ட் ரோடில் ஒரு பகுதி அவளுடைய அஸ்ஸெஸ்மென்ட் சர்க்கிள். பெரும்பாலும் பெரிய பெரிய ஜெனரல் ஷாப்கள் தான். ஒவ்வொரு பைலும் ஒவ்வொரு ஷாப்பைப் பற்றியது. அவர்கள் கொடுத்துள்ள மாதாந்தர ரிடர்ன், அவர்களுக்கு நிர்ண யிக்கப்பட்ட வரித்தொகை, அது பற்றிய நோட்டீஸ், ஷாப்காரரின் ஆட்சேபம், கெஞ்சல், மறு பரிசீலனை, குறிப்பு, இறுதியான ஆர்டர் — இப்படி அதனதன் சரித்திரம் அதனதன் பைலில்...

''இந்தாம்மா சியாமா.'' கொசுத் தடுப்பு ட்யூப்பை அவள் மேஜைமீது கொண்டுவந்து வைத்தார் வெங்கடேசு வரன். தான் தடவிக் கொண்டிருந்த ஆயின்ட்மென்ட்டின் நெடி அவளுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ என்று சற்று எட்டவே நின்றார். ''கொஞ்சம்தான் இருக்கு. நல்லா அழுத்தி எடுத்து, காலிலே தடவிக்கொள். கொலைக் கொசு!''

''தாங்ஸ், மாமா.''

''ஃபைல் பார்க்கிறாயாக்கும்?''

''ஆமாம் மாமா.''

''நிறைய எடுத்து வந்திருக்கியே?''

ஃபைலை மூடிவிட்டுப் புன்னகையுடன் நாற் காலியை அவர் பக்கமாகத் திருப்பிக் கொண்டாள் சியாமா. ''மாமா, என்னவோ சொல்லணும்னு நினைக்கிறீங்க. அவுட் வித் இட். அப்புறமா ஃபைலைப் பார்த்துக்கிறேன்.''

''வேண்டாம்மா. சொல்றதுக்கு முன்னேயே உனக்குக் கோபம் வர்றதே?''

''கோபமா? உங்க மேலேயா?'' சொல்கையில் சியாமாவுக்குக் குரல் தழதழத்தது.

'எத்தனையோ பேருக்கு உறவினர்கள் இருக்கி றார்கள். ஆனால் எங்க வெங்கடேசுவர மாமா மாதிரி யாருக்குக் கிடைக்கும்?' என்று எண்ணிக்கொண்டாள் அவள்.

பத்து வருடத்துக்கு முந்தி...

சியாமாவின் அப்பா இறந்து போய் அன்று பத்து நாளாகிறது. அம்மாவுடன் ஒரு கல்யாணத்துக்குப் போயி ருந்தார். முகூர்த்தத்துக்கு இருந்தார், சாப்பாடும் சாப்பிட்டார். திரும்பினார் வீட்டுக்குள் நுழையும்போது மார்பை வலிக்கிற மாதிரி இருக்கிறதே என்று சொல்லி விட்டு ஈஸிசேரில் சாய்ந்தவர்தான், எழவில்லை.

பத்து நாள் காரியங்களும் முடிந்து... புறப்பாடுகள்...

சியாமாவுக்கு மூன்று அக்கா. மூன்று பேரும் கல்யாணமானவர்கள். சகோதரர் கிடையாது. ரங்கம்மா அக்காதான் மூத்தவள். எல்லா அக்காக்களும் எல்லா மாப்பிள்ளைகளும் வந்திருந்தார்கள். அன்று ஒவ்வொருவ ராக ஊர் திரும்ப ஏற்பாடு நடக்கிறது... ஏன் பேச்சுக் குரலே இல்லை?... மௌனமாய் லக்கேஜ்கள் கட்டினார்கள்:

மௌனமாய் டாக்ஸி அழைத்து வந்தார்கள். அந்த நிசப்தத்துக்குக் காரணம்? புரியவில்லையா என்ன?

விதவை அம்மாவுக்கும் கடைசித் தங்கை சியாமாவுக்கும் இனி வழி என்ன என்பதுதான். ஒரு சாதாரண வக்கீலிடம் குமாஸ்தாவாக இருந்த அப்பா, மூன்று பெண்களுக்குக் கல்யாணம் செய்து தந்ததே பெரிய காரியம். இனிமேல்? இவர்களை யார் அழைத்துச்சென்று சம்ரட்சிப்பது? யாருக்குக் கட்டுப்படியாகும்?

மழையாகக் கொட்டாமல் கறுத்துத் தொங்கியபடி இருக்கும் மேகம்போல் அந்தப் பிரசினைதான் வீடெங்கும் வியாபித்திருந்தது.

உடம்பைப் பார்த்துக் கோம்மா... ஐய, எதுக்கம்மா இத்தனை முருங்கைக்காயும் வாழைக்காயும்... சியாமி, அம்மாவைப் படுத்தக் கூடாது... சார், டாக்ஸி வெட்டியா காத்திட்டிருக்குது, சார். — இப்படி, மையத்தை விட்டு விட்டு ஓரத்தையே கிள்ளுகின்ற உரையாடல்கள்...

எல்லார் மனத்திலும் இருப்பதை உணர்ந்து, அதை உடைத்துவிட வேண்டும் என்று எண்ணம் கொண்டவர் போல, வெங்கடேசுவரன் பகிரங்கமாகவே அறிவித்தார். ''அம்மா, நான் விழுப்புரம் வேலையை ராஜினாமா செய்து விட்டு, அடுத்த மாசம் இங்கே வந்து வேறு வேலை தேடிக்கிறேன்; எங்களோடு நீங்களும் சியாமாவும் இருந்துக்கலாம்'' என்று.

ரங்கம்மா அக்கா கூட, ''இருக்கிற வேலையை விட்டு விட்டு இங்கே வருவானேன்? இவர்களை அங்கே அழைத்துக் கொண்டால் போச்சு'' என்றாள்.

''வேண்டாம் ரங்கா, வேறு வழியில்லாமல் பெண் வீட்டில் போய் உட்கார்ந்து கொண்டாள் என்ற இளப்பம் உன் அம்மாவுக்கு வரக்கூடாது. அவர்கள் வீட்டில் நாம் இருக்கிற மாதிரி உலகத்துக்குக் காட்டிக் கொள்ள வேண்டும்'' என்று சொல்லிவிட்டார் அவர். ஆசிரியர் வேலை ராஜினாமா... நூறு ரூபாய் குறைவான சம்பளம்... சென்னையில் ஒரு பள்ளிக்கூடத்தில் புதிய உத்தியோகம்... பிறகு அம்மா இறந்து போனாள். சொந்தப் பிள்ளை மாதிரி எல்லாம் செய்தார்...

இப்படிப்பட்ட மாமா மீது சியாமாவுக்குக் கோபம் வருமா?...

சப்பாத்தியும் சட்டினியும் தட்டில் வைத்து எடுத்து வந்தாள் ரங்கம்மா, மேஜை மீதிருந்த பைல்களை ஓரமாய் நகர்த்திவிட்டு, தட்டை மேஜைமீது வைத்தாள். 'நீங்கள் போங்கள். நான் பேசிக்கொள்கிறேன்' என்று கணவரிடம் ஜாடை காட்டி அனுப்பினாள். ''அந்தத் திருவள்ளூர் வரன் தகைந்து வரும் போல் இருக்கிறது, சியாமா. நீ ஒண்ணும் பிடி கொடுத்துப் பதில் சொல்லக் காணோமேன்னு...''

''பார்த்துக்கலாமே அக்கா? முன்னேகூட இப்படி ஒண்ணு ரொம்ப ரொம்பக் கிட்ட வந்து, பிறகு வேறே பெரிய வரன் கிடைச்சவுடன் நம்மைக் கைகழுவிட்டுப் போயிடலையா...''

இது கொஞ்சம் விட்டுப் பிடிக்க வேண்டிய சமாசாரம் என்று ரங்கம்மாவுக்குத் தோன்றியது. மெல்லத் திரும்பிப் போய்விட்டாள்.

'கல்யாணம் என்று ஒன்று வேண்டியதுதானா அக்கா? ஆண்பிள்ளைத் துணை இல்லாமலேயே வாழ்ந்துவிட

முடியாதா?' என்று எவ்வளவோ முறை சியாமா கேட்க எண்ணியதுண்டு. ஏன் கேட்கவில்லை? அப்படியொரு முரட்டுத்தனம் காட்டி மாமாவின் மனசை வருத்தப்படுத்தக் கூடாதென்ற நல்ல எண்ணமா? அல்லது அப்படிப் பேசுவது படித்த பண்பாடுள்ள பெண்ணுக்கு அழகல்ல என்ற நாகரிக உணர்வா? அல்லது, அல்லது... அந்தப் பேச்சை அவர்கள் அசலாக எடுத்துக் கொண்டு வாழ்நாள் முழுதும் நம்மைக் கன்னியாகவே விட்டுவிடக் கூடாதே என்று உள்ளூர அவள் மனம் ஏங்குகிறதோ ஒரு வேளை?...

பால் பாயிண்ட் பேனாவை வைத்து விட்டு விரலைச் சொடுக்கிக் கொண்டாள் சியாமா! விரல்கள் எப்படிச் சிவந்து விட்டன. மாலுவுக்கு நாமொன்றும் குறைவில்லை நிறத்தில்.

இரண்டாவது பைலைப் பிரித்திருப்பாள்...

கணகணவென்ற மணியோசையும் வீய்ய்ய்ங் என்று ஊளையுமாக எங்கோ ஒரு தீயணைப்பு வண்டி விரைந்து கொண்டிருப்பது காதில் விழுந்தது. 'பாவம், எந்த வீட்டில் தீ விபத்தோ?' என்று ஒரு வினாடி நினைத்துக் கொண்டு விட்டு மறுபடி வேலையில் மூழ்கினாள். ஆனால் உடனேயே இன்னொரு மணியோசை —

திகைப்புடன் வாசலுக்குப் போய்ப் பார்த்த போது, தெருக்கோடியில் செக்கச் செவேலென்று ஒரே ஜோதியாக வானத்தில்...

''மாமா! நெருப்பு! குடிசைப் பகுதியிலே!'' என்று உள்புறம் ஒரு குரல் கொடுத்து விட்டு, மூட்டை முடிச்சுகளுடன் அலறி அடித்துக் கொண்டு ஓடி வரும் குடிசை

வாசிகளிடம் 'இப்படி வையுங்கள்' என்று இடம் கொடுத்தாள்.

"சியாமா! நீ எங்கேடி போறே? போகாதே! எப்படி இருக்குமோ என்னவோ!" என்று ரங்கம்மா கூவுவது அவள் காதில் விழவில்லை.

அந்தத் தெருவும் அதற்கு இணையாக இருந்த மூன்று தெருக்களும் முடிகின்ற இடத்தில் ஒரு குடிசைப் பகுதி. ஐந்நூறு குடிசைகள் இருக்கும். அதன் நடுவே இருபது முப்பது குடிசைகள் திமுதிமுவென்று எரிந்து கொண் டிருப்பதும் மூன்று தீயணைப்பு வண்டிகள் தண்ணீரைப் பீய்ச்சிக் கொண்டிருப்பதும் விளக்குகள் அணைந்துவிட்ட அந்தக் கும்மிருட்டிலும் தெளிவாகத் தெரிந்தது. அலை அலையாய் மண்டிக் கொண்டு வந்த புகை மூட்டத்தில் சியாமாவுக்கு நெஞ்சு கமறியது. அகப்பட்ட குழந்தை குட்டிகளையும் கிடைத்த தட்டு முட்டுச் சாமான்களையும் பொறுக்கிக் கொண்டு எதிரில் பலர் ஓடி வந்து மோதிக் கொண்டு தாண்டிச்செல்கிறார்கள். எத்தனை வகை ஓலங்கள்! அடி கசுமாலம்! அந்தச் சப்பாணிப் புள்ளையை உட்டுட்டுப் போறியேடி! தூக்குடி அதை... வயத்துப் புள்ளைக்காரி நீ ஏம்மே இஸிக்கிறே? இங்கேயே எதுனா ஆவப் போவுது ரோதனை!..ஓடுங்கடா டேய்! கூரை எகிறி உயுவுது... எந்தக் கொலைகாரப் பாவி கொள்ளி வைச்சானோ தெரியலையே...

சேறும் சகதியுமாகிவிட்ட தெரு காலடியில் சதசதக்க, படீர், படீரென்று குடிசையின் மூங்கில்கள் தெறித்து விழ, அக்கினியின் குழந்தைகள் ஆகாயத்தில் தாவித் தாவி விளையாட... இங்கே நின்று வேடிக்கை பார்ப்பது காட்டி

பிராண்டித்தனம் என்று சியாமா எண்ணினாள். தீயணைப்புக்காரர்களுக்கு இடையூறு வேறே... அவள் திரும்ப எத்தனிக்கையில் —

திடுப்பென ஒரு வாலிபமான குரல் —

''கொஞ்சம் இந்த அம்மாளைப் பிடிச்சுக்குங்க.''

கையையும் காலையும் உதறித் திமிறிக் கொண்டிருந்த ஒரு கிழவியைக் குண்டு கட்டாய்த் தூக்கி வந்தான் அந்த தீயணைப்பு இளைஞன்.

''விடு! விடு என்னை! உன் வூட்டுக் குழந்தை போச்சுன்னா தெரியும்பா!'' என்று கிழவி திமிறினாள்.

''கொஞ்சம் இருங்க... என்ன செய்தாங்க இவங்க?'' என்று கேட்டாள்.

'எப்படிப்பட்ட நேரத்தில் என்ன குறுக்கு விசாரணை?' என்று அவனுக்குக் கோபம் வந்தது. இருந்தாலும் சியாமாவின் அழகு அவனைப் பேச வைத்தது. ''பேரப் பிள்ளையைக் காணோமாம்... தீயிலே புகுந்து உயிரை விடறேன் என்கிறாங்க...''

''மை காட்! நான் பார்த்துக்கிறேன். நீங்க போங்க!''

கிழவியைச் சியாமாவின் பொறுப்பில் விட்டு விட்டு அவன் திரும்பியபோது, அந்த முகத்தில் கரியும் தண்ணீரும் மட்டுமல்லாமல் துடிப்பும் துறுதுறுப்பும்கூட மினுமினுப் பதைக் குடிசைகளின் நெருப்பு வெளிச்சத்தில் சியாமா கண்டாள்.

''மிஸ்டர்!''

அவன் திரும்பிப் பார்த்தான்.

''உங்கள் முழங்கை... தீக்காயம் ஏற்பட்டிருக்கிறது...''

''ஓ! தட்ஸ் நத்திங்!'' என்று சொல்லிவிட்டு அவன் கூட்டத்தினுள் புகுந்தான்.

பிறகு மறுபடியும் ஒரு முறை தலையைக் காட்டி, ''கிழவி! விட்டுடாதீங்க!'' என்று சொல்லிவிட்டு மறைந்தான்.

கிழவி அவள் பிடியிலிருந்து விடுபட முயன்றாள். ''என் கண்ணு... என் செல்லம்... என்னை வுடும்மா...''

''இங்கேயே எங்காவது விளையாடிட்டு இருக்கும். பாட்டி'' என்று சியாமா சொல்வதைக் கிழவி ஏற்கவில்லை. மறுபடியும் திமிறினாள். சியாமாவுக்குக் கோபம் வந்து விட்டது.

''இதோ பார் பாட்டி. நகர்ந்தியோ, தெரியும் சேதி! நான் பொல்லாதவளாயிடுவேன்!'' என்று அவள் போட்ட அதட்டலில் சுற்றிலுமிருந்தவர்கள் சிரித்தார்கள்.

சியாமா சிரிக்கவில்லை. தான் நிறைவேற்ற வேண்டிய மிகப் பெரிய கடமை ஒன்று உண்டென்றால், அது அந்த வாலிபனின் கோரிக்கையை நிறைவேற்றுவது தான் என்று அவளுக்குத் தோன்றியது. ஏன் அப்படி? அவனுடைய குரலா? முகமா? சுறுசுறுப்பா? வீட்டிலே பைகளைப் போட்டது போட்டபடி வந்திருக்கிறோமே என்பதைக் கூட மறக்கும்படி செய்து இங்கே ஆணியடித்த மாதிரி நிற்க வைத்திருப்பது என்ன மந்திர சக்தி? அவளுக்குத் தெரியவில்லை.

# இரண்டு

சியாமா வீட்டுக்குத் திரும்பியபோது கடியாரம் அரை அடித்தது. பதினொன்றரையா, பன்னிரண்டரையா? அவளுக்குத் தெரியவில்லை. ஈரத்திலும் புகையிலும் நின்றிருந்ததாலும், அவள் மீது பலபேர் இடித்து மோதிக் கொண்டு சென்றதாலும் உடம்பெல்லாம் கசகசவென்று ஆகிவிட்டதைப் பற்றியே அவள் நினைத்துக் கொண் டிருந்தாள். புடவையைப் பார்க்கச் சகிக்கவில்லை. படுக்குமுன் கை காலையும் முகத்தையும் நன்றாகச் சோப்புப் போட்டுக் கழுவிக் கொண்டு சுத்தமாய் வேறு ஸாரி மாற்றிக் கொண்டால்தான் தூக்கம் வரும் என்று தோன்றியது.

அழுது கொண்டே தூங்கிப் போகும் குழந்தையைப் போல, சற்று முன்னர்தான் தீயின் உக்கிரம் சிறிது சிறிதாகக் குறைந்து இறுதியில் அடங்கியே போயிருந்தது.

அந்தக் கிழவி வெகு நேரம் திமிறிக்கொண்டு இருந்தாள். ''விடம்மா என்னை!'' என்று சியாமாவின் பிடியிலிருந்து விடுபடவேண்டிக் கையை முறித்துக் கொண் டிருந்தாள். ''உன் பேரப்பிள்ளையா இருந்திச்சுன்னா இப்படி கம்முனு குந்திக்கினு இருப்பியா?'' என்று அவள் கூச்சலிட்டுக் கொண்டிருந்த போது அவளது உறவுக்காரன் ஒருவன் வந்து கிழவியைத் தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டு அழைத்துச் சென்றான்.

வீட்டு வாசலில் கவலையுடன் நின்றிருந்தாள்

''எங்கேடி போயிட்டே நீ பாட்டுக்கு? ஆனாலும் உனக்கு இந்த இது ஆகாதடியம்மா. வயிற்றிலே நெருப்பைக் கட்டிட்டுத் தவிக்கிறோம்...''

''சீக்கிரம் அணை, அக்கா! நீ வேறே இங்கே இன்னொரு ஆக்ஸிடெண்ட் ஆரம்பித்துவிடாதே. தண்ணி கூடத் தீர்ந்து போயிருக்கும்!'' என்று சிரித்துக் கொண்டே படியேறிய சியாமா, ''மாமா எங்கே? இத்தனை அமர்க்களத்துக்கும் நடுவே தூங்கிக்கிட்டா இருக்கார்?'' என்றாள்.

''நல்லா தூங்குவேனே!'' என்று அவள் பின்னால் குரல் கேட்டது.

வெங்கடேசுவரனும் அப்போதுதான் உள்ளே வந்தார்.

''தெருவே அல்லோலகல்லோலப் படுகிறது. போதாக் குறைக்கு, பின் போர்ஷன் நாராயணன் வேறே 'தீ இந்தப் பக்கம் பரவினாலும் பரவும். நம்ம சட்டிப் பானையைத்தூக்கிடறது நல்லது'ன்னு பயமுறுத்திட்டார். அட்வகேட்டையும் டாக்டர் கணேசனையும் கேட்டேன். 'நெருப்பு ஐம்பது வீடு தாண்டியா ஐயா வரும்'னு சிரிக்கிறாங்க. எப்படியோ நல்ல வேளை, அணைஞ்சு போச்சு.''

ஃபயர் சர்விஸ்காரங்க பிரமாதமாய் வேலை செய்தாங்க. இருந்தாலும் குடிசை ஜனங்களோட...'' சியாமாவின் பேச்சுப் பாதியில் நின்றது. பைல்களை ஒழுங்காய் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தவள் உதட்டைக் கடித்தபடி அறையின் நாலு புறங்களையும்

பார்த்தாள். குழந்தை மாலு தன் புத்தகங்களை அப்படியப் படியே போட்டு விட்டுத் தூங்கச்சென்றிருந்ததால் அவற்றையும் கலைத்துக் குலைத்துத்தேடினாள்.

''என்னம்மா சியாமா, என்னத்தைக் காணோம்?'' என்றார் வெங்கடேசுவரன்.

''ஒரு பைல் மாமா.''

''இருந்தாலும் உனக்கு ரொம்ப அஜாக்கிரதைடி சியாமா. அப்படியா போட்டது போட்டபடி வேடிக்கை பார்க்கப் போவாய்!'' ரங்கம்மா கடிந்து கொண்டாள்.

''பொறு. அவள் கொஞ்சம் நிதானமாய்ப் பொறுமை யாய்ப் பார்க்கட்டும். அதற்குள் நீ பொலு பொலுன்னு பிடித்துக் கொண்டு விடாதே! ஏம்மா சியாமா, இத்தனை பைல் பத்திரமாய் இருக்கிறப்போ எதைக் காணோம் என்கிறே?''

''ராமன்ராஜ் என்று ஒரு துணிக் கடையின் பைல் மாமா.''

''ஆபீசிலிருந்து கொண்டு வந்தது நினைவிருக்கோ?''

''நன்றாய்.''

''ரொம்ப முக்கியமான பைலாம்மா?''

சியாமா நிதானித்தாள். முக்கியம் என்று சொல்லி விட்டால், அதைக் கண்டுபிடித்துத் தருகிறவரையில் அவருக்கு இருப்புக் கொள்ளாது. அந்தத் தவிப்பு, பாவம், அவருக்கு ஏன்?

''அப்படியொண்ணும் இல்லே மாமா... ஆபீசில் எத்தனையோ இருக்கும். வேறு காப்பி எடுத்துக்கலாம்...'' என்றாள், குரலை லேசாக்கிக் கொண்டு.

அவர் நிம்மதி அடைந்துவிட்டது, அவர் குரலில் தெரிந்தது.

"சரி, படுத்துக்கோ. ரொம்ப அகாலமாயிட்டுது." அவர் அடுத்த அறைக்குச் சென்றார். அது தான்அவருக்கு பெட் ரூம்.

"உங்களைத்தானே? பாலுக்குப் புரை ஊத்திட்டீங் களா?" என்று தினசரி, கணவனைக் கேட்கும் வழக்கமான கடைசிக் கேள்வியைக் கேட்டுவிட்டு, ரங்கம்மாவும் சியாமாவின் மேஜைக்குக் கொஞ்சம் தள்ளிப் படுத்துக் கொண்டாள்.

மாலு சற்றுப் புரண்டு 'ஏ-ஸி-ஸி' என்று ஸ்கூல் பாடத்தைத்தூக்கத்திலும் முனகியபடியே காலைத் தூக்கி அம்மாவின் இடுப்பின் மீது போட்டுக்கொண்டாள். "புழுக்கம் வெந்து போகிறது. இவள் ஒருத்தி!" என்று அந்தக் காலை விலக்கிவிட்டாள் ரங்கம்மா.

சியாமாவுக்குக் கவலையாக இருந்தது. மேஜையில் முழங்கை ஊன்றி, இரு கைகளிலும் நெற்றியைத் தாங்கிய வாறு உட்கார்ந்திருந்தாள். மணிக்கட்டின் கீழே சாய்ந்து சரிந்திருக்கும் இரண்டு மிளகு வளையல்களை மாற்றி மாற்றி அடிக்கண்ணால் பார்த்த போது, அதன் உருண்டை உருண்டையான வரம்புகள் வர வரப் பெருத்துக் கொண்டே போகிற மாதிரி ஒரு பித்துக்குளித் தனமான கற்பனை அவள் நெஞ்சினுள் உருவாயிற்று.

ராமன்ராஜ் அண் கோவின் பையை எடுத்து வந்தது அவளுக்கு நன்றாய் நினைவிருந்தது. பின்னே எங்கே, எப்படித் தொலைந்தது? மற்றவர்கள் தூங்கிவிட்டார்கள்

என்று உறுதியானதும் அவள் வீடெங்கும் குடைந்தாள். அகப்படவில்லை.

நாளை...

ஒரு பைல் காணாமல் போயிற்றென்றால் முதலில் ஹெட்கிளார்க்கிடம் ரிப்போர்ட் பண்ண வேண்டும் என்று ஆபீஸ் ரூல். அவள் வேதாசலத்திடம் செல்கிறாள். அவர் ஒரு அலார்மிஸ்ட். பயத்தில் பாதிப் பிராணன் போய் விடுகிறது. என்ன... என்ன சொல்றே? வீட்டுக்குப் பைலை எடுத்துக் கொண்டே போகக்கூடாது என்று ஜே.ஸி.டி.ஓ. சொல்லியிருக்கிறப்போ இப்படிப் பண்ணிட்டு வந்து நிற்கிறியே. என்ன சார் செய்யலாம்? உனக்கு முன்னாடி இங்கே இருந்தவன் உன்கிட்டே சார்ஜ் ஒப்படைச்சபோது அந்த பைலைக் கொடுக்கவேயில்லைன்னு ஒரேயடியா அடிச்சுடலாமா... ஊகூம். அப்படி எவனோ ஒரு அப்பாவி மீது பழி போடுவது எனக்குப் பிடிக்கலே சார். அது வேண்டாம் சார். சரியில்லை. அப்படியானால் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. என்ன சார்? அந்த ராமன்ராஜ் காரனிடமே போகலாம். போய்? எல்லாவற்றுக்கும் அவனிடமே ஒரோர் காப்பி கேட்போம். கேட்டு மறுபடி ஒரு பைல் தயாரிப்போம். இப்பவே போகலாம். வாங்க சார்.

இரண்டு பேரும், சாயந்தரம் ஆபீஸ் விட்டதும் போகிறார்கள், ராமன்ராஜ் முதலாளி சரியான எத்தன். ஏற்கெனவே இவர்கள் அஸஸ்மெண்ட் போட்டதில் ஆயிரம் அப்ஜெக்ஷன் கிளப்பிக் கொண்டிருந்தவன். என்கிட்டே ஏது சார் காப்பி! எல்லாம் தான் நீங்க எடுத்துட்டுப் போயிட்டீங்களே? சார் நீங்க அப்படிச்

சொல்லக் கூடாது. என்னை என்ன பண்ணச் சொல்றீங்க? நான் காப்பி வைச்சுக் கலியே?

தோல்வியுடன் திரும்புகிறார்கள். ஜே.ஸி.டி.ஓ.வுக்கு விஷயம் எட்டுகிறது. கடுமையாய் மெமோ அனுப்புகிறார் சியாமாவுக்கு...

அவளால் அதற்கு மேல் கற்பனை செய்யப் பிடிக்க வில்லை. ஒரு வேளை வாசலில் எங்காவது விழுந்திருக் கலாமோ என்று தோன்றியது. மறுபடியும் வாசல் பக்கம் போய்ப் பார்த்தாள். தீயடங்கினாலும் சந்தடி அடங்காமல், தெருவில் இன்னும் யாரோ பேசிக் கொண்டும் கூவிப் கொண்டும் போய்க் கொண்டிருந்தார்கள். வெகு தூரத்தி லிருந்து புகை வடம் வடமாக வந்து நெடி அடித்தது.

பெரும்பாலான குடிசை மக்கள், அருகிலிருந்த கார்ப்பரேஷன் பள்ளிக்குக் குடியேறிவிட்ட போதிலும், ஒரு சிலர் வீடுகளின் காம்பவுண்டு சுவர் ஓரமா அடுப்பு மூட்டிக் சோறாக்கிக்கொண்டிருந்தார்கள்.

தெருவில் இறங்கினாள் அவள். தீயைப் பார்க்க ஓடியபோது கையோடு பையையும் எடுத்துச் சென்றிருப் பாளோ? தெருவில் விழுந்திருக்குமோ? ஒரு நைப்பாசை தான். வீட்டு வாசலை அவள் ஆராய்ந்து கொண்டிருந்த சமயம் இரண்டு மூன்று தீயணைப்பு வண்டிகள் மெள்ள அவளைத் தாண்டிக் கொண்டு சென்றன. வேலை முடிந்து திரும்புவதால் கணகணவென்ற மணியோசையைக் காணோம்.

மெயின் ரோடில் இணைந்து கொள்வதற்காக, கடைசித் தீயணைப்பு வண்டி தெருவில் முனையில் —

அவள் வீட்டுக்கு இரண்டு வீடு தள்ளி — சில நிமிடங்கள் நின்றது. ஏதோ சிறு ரிப்பேர் போலும். தெரு விளக்குகள் அணைந்து விட்ட போதிலும் வீட்டு வாசல்களில் எரிந்து கொண் டிருந்த விளக்குகள் அந்த வண்டிக்கு நிறைய வெளிச்சம் தந்தன. அந்த வெளிச்சத்தில் அவளால் அவனைக் காண முடிந்தது. பின்னால் நின்றிருந்த ஏழெட்டுப் பேரில் ஒருவனாக ஏணியைப் பிடித்துக் கொண்டு அவன் நின்றிருந்தான். தன் தோழர்களிடம் அவன் கையை ஆட்டிக்கொண்டு உற்சாகமாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டபோது சியாமாவுக்கு ஒரு வினாடி உள்ளத்தில் குறுகுறுப்பு உதித்த போதிலும், பையைப் பற்றிய கவலையே அவள் மனத்தை ஆக்கிரமித்திருந்தது.

ஆனால் வண்டியில் இருந்த அவன் அவளைக் கவனித்து விட்டான். அங்கிருந்தபடியே என்னவோ கையை ஆட்டி, சைகையில் தெரிவித்தான்.

சியாமாவுக்கு அவன் சொல்வதைப் புரிந்து கொள்ள இயலவில்லை. அவன் தன் தோழர்களிடம் ஏதோ சொல்லி விட்டு வண்டியிலிருந்து குதித்து அவளை நோக்கி வந்தான்.

யுத்தத்தில் போராடிய ராணுவ வீரனைப் போல அவனுடைய உடையும் தோற்றமும் இருந்தன. ஒரு குழந்தைத்தனமான சுறுசுறுப்பு அவனிடம் தென்பட்டது. என்னதான் கரியும் ஈரமும் அவன் தேகத்தில் படர்ந்திருந் தாலும், அந்த முகத்தில் ஒரு கவர்ச்சிகரமான களையும், நடையில் ஒரு மிடுக்கும் காணப்பட்டன.

''அந்தக் கிழவி...'' என்றான் அவன். பிறகு தான் சியாமாவுக்குப் புரிந்தது. அவன் சாடை காட்டியது அந்தக்

கிழவியைப் பற்றித்தான் என்று. ''யாரோ உறவு ஆள் வந்து அவளை அழைத்துப் போயிட்டான்'' என்றாள்.

''பள்ளிக் கூடத்தில் அவளுடைய பேரன் பத்திரமாயிருந்தான். பாட்டியின் கவலை விட்டது. அது உங்களுக்குத் தெரிந்திருக்காதே என்று தான் சொன்னேன்...''

''அப்படியா?'' என்றாள் சியாமா?

''என்னமோ தேடிக் கொண்டிருந்த மாதிரி தோன்றியதே?'' என்றான்.

''ஒன்றுமில்லை. ஒரு இது...''

பேச்சுக் குரலைக் கேட்டு, ரங்கம்மா எழுந்து வந்து விட்டாள். நடையில் நின்றபடி, ''யாரோடு பேசிக்கிட்டிருக்கிறே சியாமா? உள்ளே கூப்பிடக் கூடாதோ?'' என்றாள்.

''தெரிஞ்சவங்க'' என்று சுருக்கமாய்ச் சொல்லி விட்டு, ''ஒரு ஃபைல்... என் ஆபீசிலிருந்து கொண்டு வந்தது...'' என்றாள்.

''அங்கே குடிசையின் பக்கம் ஓடி வந்தீங்களே, அப்போ அவசரத்தில் கையோடு எடுத்து வந்தீங்களோ என்னவோ?''

''இருக்கலாம். தெரியலை.''

''இருங்க, குடிசைகள் எரிகிறப்போ ஜனங்க போட்டு விட்டு ஓடின பல பண்டம் பாடிகளைப் போலீஸ்காரங்க சேகரிச்சு வைச்சாங்க.''

பரபரப்புடன் சட்டெனச் சியாமா தலை நிமிர்ந்து, ''எங்கே வைச்சிருக்காங்க?'' என்றாள்.

புறப்படுவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த போலீஸ் ஜீப்பை அவன் கையை ஆட்டி நிற்கச் சொன்னான்.

மூட்டை மூட்டையாகப் பலவற்றைக் கட்டிப் போட்டிருந்தார்கள் ஜீப்பில். ''இதுவா பாருங்கள்... இதுவோ ஒருவேளை?'' என்று அவன் பலவற்றை எடுத்து எடுத்துக் காட்டினான்.

இனி கிடைக்காது என்று அவள் அவநம்பிக்கை கொண்ட சமயம், அந்த அட்டை! பாய்ந்து எடுத்தாள். அதே! ஓரத்தில் சிறிது ஈரம்பட்டிருந்ததே தவிர மற்றப்படி சேதம் அடையாமலிருந்தது.

''உங்களுக்கு...எ...எ..'' என்று சியாமா திணறினாள் மனப்பூர்வமான நன்றியுடன்.

''நோ, நோ, உங்களுக்கெல்லாம் உதவிசெய்ய எனக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்'' என்று சொன்னபடி சியாமாவுடன் கூடவே அவள் வீடுவரை மறுபடியும் வந்தான் அவன். முகம் கழுவிக் கொண்டு வேறு ஸாரி கட்டிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தைச் செயல்படுத்தாமலே இருந்து விட்டோமே என்று ஏனோ அவளுக்கு எண்ணம் ஏற்பட்டது.

தன் நன்றியை எப்படிக் காட்டுவது என்று தெரியாதவளாய் ''காப்பி சாப்பிட்டு விட்டு போக வேண்டும்'' என்றாள்.

''ஓ எஸ்!'' அவன் தன் கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டு ஒரு குறும்புச் சிரிப்புடன், ''இந்த நேரத்தில் கூட ஒரு வீட்டில் பால் இருக்கிறது, காப்பி கிடைக்கிறது என்றால் விடலாமா!'' என்றான்.

சியாமாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ''ஞாபக மில்லாமல் சொல்லிவிட்டேன். தண்ணீராவது குடியுங்கள்'' என்று சொல்லி வீட்டுக்குள் சென்று ஒரு டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து தந்தாள்.

''உங்கள் வீட்டுக் குழாயெல்லாம் இரும்பிலே செய்யாமல் கரும்பிலே செய்திருக்காங்க போலிருக்கு'' என்றவாறு அவன் தண்ணீரை ருசித்த போது, அந்த முழங்கைக் காயத்தை அவள் மீண்டும் கவனித்தாள்...

''அதைக் கவனிக்காமலேயே விட்டு வைச்சிருக் கீங்களே?'' என்றாள் கவலையுடன்.

''த்சு'' என்றான் அவன், ''நேரே ஆஸ்பிடலுக்குப் போய் இந்த மாதிரி காயத்துக்கெல்லாம் மருந்து போட்டுக் கொள்வோம்.''

''நான் பர்னால் கொண்டு வர்றேன். இருங்க'' என்று சொல்லி மறுபடி வீட்டுக்குள் சென்றாள். சமையலறை வலை பீரோவில் இருந்த பாதிக் குப்பியை எடுத்துக் கொண்டு திரும்பியபோது வெங்கடேசுவரனின் அறையில் பேச்சுக் குரல் கேட்டது.

''யாரோ தெரிஞ்சவர்னு சொன்னாள்.'' — ரங்கம்மா.

''இருக்கட்டும். அவளை நீ ஒன்றும் கேட்க வேண்டாம். இப்படிக் கொஞ்சம் பழகிக் கிழகியாவது

அவளுக்கு ஒரு இது ஏற்படட்டும். கல்யாணத்தில் ஒரு நாட்டம் உண்டாகட்டும்'' என்று வெங்கடேசுவரன் கிசுகிசுத்துக் கொண்டிருந்தார்.

சியாமா உதட்டைக் கடித்துக்கொண்டாள். எவனோ வழியோடு போகிறவன். உபகாரம் செய்தான். தண்ணீர் கேட்டான். கொடுத்தாள். உடனே...

வாசலுக்கு வந்தவள், வெடுக்கென்று, ''ஆஸ்பத்திரி யிலேயே மருந்து போட்டுக் கொள்ளுங்கள்'' என்று முகத்திலறைந்தாற் போல் அவனிடம் சொல்லிவிட்டுத் திரும்பினாள் வீட்டுக்குள்.

''ராகுல்! ராகுலன்!'' என்று தீயணைப்பு வண்டியி லிருந்து அவன் தோழர்கள் கூப்பிட்டார்கள்.

அவன் ஒரு நிமிடம் அங்கே திகைத்துப் போய் நிற்பதையும், பிறகு தானே தலையாட்டியபடி ஏதோ சொல்லிக்கொண்டு திரும்புவதையும் சியாமா லட்சியம் செய்யவில்லை.

முள்ளைக் கடித்த ஒட்டகத்தைப் போல, ரத்தம் சொட்டும் நினைவுகள் அவள் உள்ளத்தில் எழுந்தன.

## மூன்று

''என் அன்பார்ந்த ராகுலுக்கு, அப்பா எழுதிக் கொண்டது, ஆசீர்வாதம். நீ ரொம்பவும் எதிர்பாராத விதமாக அனுப்பிய 25 ரூபாய் கிடைத்தது. ரொம்ப ஆச்சரியமும் சந்தோஷமும் ஏற்பட்டது. திடீரென்று உனக்கு என்ன வந்தது என்று யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். தெரியவில்லை...''

தீயணைப்பு நிலையம் அந்தப் பிற்பகல் நாலரை மணி வேளைக்கு அமைதியாயிருந்தது. ஸடேஷன் ஃபயர் ஆபீசர் இராசலிங்கம், ''எஸ் ஸார்... ரைட் சார்... சரி சார்...'' என்று டெலிபோனில் பேசிக் கொண்டிருப்பதும், தண்ணீர்க் குழய்களை இணைக்கும் பித்தளைக் கப்ளிங்கு களுக்குப் பாலிஷ் போட்டுக்கொண்டிருந்த ஃபயர்மேன் டிரைவர் நாகப்பன், ''பேர் வைச்சான் பார், மேல் கப்ளிங், ஃபீமேல் கப்ளிங்னு!'' என்று சிரித்துக் கொண்டிருப்பதும் ஸென்ட்ரி சாமுவேல், ''ரைட்... ரைட்...'' என்று ஆம்புலன்ஸுக்கு வழி காட்டிக் கொண்டிருப்பதும் தவிர, வேறு ஒசையற்றிருந்தது.

மொபைல் வாட்டர் டாங்க் வண்டியின் பின்னே, தரையில் கர்சீப்பைப் போட்டுக் கொண்டு முக்காலிட்டு உட்கார்ந்திருந்த ராகுல், தந்தையின் கார்டை மறுபடி பார்த்தான்.

ஆமாம், அன்றைக்கு எனக்கு என்ன வந்தது?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொள்கிற மாதிரி தலையை அசைத்துக் கொண்டான். அன்றைத் தினம் அவன் மிகுந்த சந்தோஷத்தில் இருந்தது நினைவு வந்தது. வெடுக்கென்று சியாமா பேச்சை முறித்துக் கொண்டது திகைப்பு ஏற்படுத்தினாலும், அதற்கு முன்பு அவள் பேசியதும் கவலைப்பட்டதும் முகம் மலர்ந்ததும் பரிவு காட்டியதும் அவன் நினைவில் திரும்பத் திரும்பத் தோன்றிக் கொண்டே யிருந்தன. மறுநாளும் அந்தக் கனவு மயக்கத்திலேயே அவன் இருந்தபோது, அந்த அவார்டு பணம் இருபத் தைந்து ரூபாய் கைக்குக் கிடைத்தது. சென்ற மாதத்தில் ஒரு நாள், பக்கத்தில் ஒரு பள்ளிக் கூடத்தில் இரண்டு குழந்தைகள் தண்ணீர்த் தொட்டிக்குள் விழுந்து விட்ட

போது, அவன் போய் அவர்களை மீட்டு, முதலுதவி கொடுத்து, சுவாசம் வரும்படி செய்ததற்காக அந்த அவார்டு தொகை.

சியாமாவைப் பற்றிய ஆனந்தமான நினைப்பில் இருந்ததால், அந்தப் பணத்தை அப்படியே யாருக்காவது தூக்கிக் கொடுத்துவிட வேண்டும் என்று தோன்றியது. என்ன காரணத்தாலோ, கடலூருக்கருகே ஒரு கிராமத்தில் தன்னந்தனியே இருந்து வரும் தந்தையின் ஞாபகம் வந்தது. அனுப்பிவிட்டான். அவ்வளவுதான்...

அப்பா மேலும் எழுதியிருந்தார்:

'நேற்று உன் அம்மாவின் திதி. அவள் ஞாபகமாக நீ இந்த ரூபாயை அங்கே ஏதாவது கோவிலில் கொடுத்து, செய்யச் சொல்லியிருக்கலாமே...''

அம்மாவின் ஞாபகமாக!

ராகுல் சிரித்துக்கொண்டான். அவனுடைய இன்றைய வாழ்க்கையே அம்மாவின் ஞாபகமாகத்தானே! அது அவன் அப்பாவுக்குத் தெரியாது. அப்பாவுக்கென்ன, யாருக்குமே தெரியாது...

அப்பாவின் கார்டை இரண்டாக மடித்துப் பையில் வைத்துக் கொண்டான் ராகுல். ட்யூட்டி நேரம் முடிந்திருந்தது. சாயந்தர வேளையில் சந்தடிகள் ரஸ்தாவில் அதிகரித்தன. உடை மாற்றிக்கொண்டு வாசலுக்கு வந்தான்.

''தம்பி! ஆப்பிள் வாங்கிக்கயேன். ரூபாய்க்கு ரெண்டு!'' என்று கூடைக்காரியொருத்தி கூவினாள்.

தற்செயலாய் அவன் பார்வை, பிளாட்பாரத்தின் ஓரமாக வந்து நின்ற பஸ்ஸின் பக்கம் சென்றது. பலர் இறங்கிக்கொண்டிருந்தார்கள். ஜன்னல் ஓரமாக —

சியாமா உட்கார்ந்திருந்தாள். கையில் ஒரு நாவல் வைத்திருந்தாள் போலும். அதிலே அவள் பார்வை பதிந்திருந்தது. புத்தகத்தை பிடித்திருந்த இடது கை, பஸ்ஸுக்கு வெளியே ஜன்னல் கம்பிக்கு மேலாக, சிறிது நீட்டிக் கொண்டிருந்தது. அந்த மடங்கிய கரத்தின் திரட்சி... முன்னுச்சிக் கூந்தலை வலது கை விரல் நீவிவிட்டுக் கொண்டிருந்தது...

''வந்து பணம் தரேம்மா'' என்று பழக்காரியிடம் சொல்லி இரண்டு பழத்தை எடுத்துக்கொண்டு ஓடும் பஸ்ஸில் ஏறிக்கொண்டதுதான் அவனுக்குத் தெரியும்.

ஆனால் அவளுக்கும் தனக்கும் இடையேயிருந்த அந்த ஐந்தாறு ஸீட்கள்... நூறு மைல் தூரம் போல அவனைத் தயங்க வைத்தது. வழியில் நின்றிருந்தவர்களை விலக்கிக் கொண்டு அவளை நெருங்குவதற்கும் அவளுக்குப் பக்கத்திலிருந்த ஒரு பெண்மணி இறங்கு வதற்காக எழுந்து கொள்வதற்கும் சரியாயிருந்தது.

''உட்காரலாமில்லையா... இஃப் யூ டோன்ட் மைண்ட்...'' என்று ராகுல் மெல்லக் கேட்டதும் அவள் சட்டென நிமிர்ந்தாள். அவனை இன்னாரெனத் தெரிந்து கொண்ட அடையாளம் அவள் கண்களின் ஒளியில் புறப் பட்டது. இருந்தாலும் தன் மலர்ச்சியை வெளிக்காட்டாத வளாக, சற்றே நகர்ந்து கொண்டு அவன் உட்காரலாம் என்பதற்குச் சம்மதம் தெரிவித்தாள்.

''தாங்ஸ்.'' ராகுல் உட்கார்ந்து கொண்டான்.

அவளிடமிருந்து சுகந்தமான ஒரு மணம் மெல்ல வீசிக்கொண்டிருந்தது.

மவுண்ட் ரோடில் சாயந்தர வேளைகளில் போக நேரும்போதெல்லாம், ஆபீஸ் முடிந்து வீட்டுக்குத் திரும்பு வதற்காக ஏ.ஜி.ஆபீஸ் வாசலிலும், காமதேனு வாசலிலும் கூட்டம் கூட்டமாக நிற்கும் பெண்களை அவன் பார்த்ததுண்டு. 'ஏன் இவர்கள் கண்களில் இப்படியொரு களைப்பு? தலை ஏன் இத்தனை கலைப்பு? தோற்றத்தில் இவ்வளவு சோர்வு? என்னதான் அப்படி வேலை செய்கிறார்கள்? செய்யட்டும். வீடு திரும்புகிறபோது, ஐந்து நிமிடம் செலவழித்து முகத்தைப் பளிச்சென்று துடைத்துக் கொண்டு கிளம்பக் கூடாதா? அதற்குக்கூட டயமில்லாமல் என்ன அப்படிப்பட்ட அவசரம்?' என்றெல்லாம் தன்னுள் சிடுசிடுத்து, உதட்டைப் பிதுக்கி, விரல்களை நெட்டியெடுத்துக்கொள்வான். இதோ சியாமாவும்தான் ஆபீசிலிருந்து திரும்புகிறாள்! எவ்வளவு பளீரென்று... அவள் காலும் தன் காலும் ஒரே பஸ் தரையை மிக அருகே தொட்டுக் கொண்டு...

''கொஞ்சம் வழி விடுகிறீர்களா? நான் இறங்க வேண்டும்'' என்றாள் அவள்.

அதற்குள்ளாகவா! ராகுல் திடுக்கிட்டான். ஆனால் அவள் இன்னும் எழுந்து கொண்டு விடவில்லை. வேண்டு மென்றே அவனைப் பயமுறுத்துகிறாளோ...

''பழம்... வாங்கினேன்... நன்றாயிருக்கும் போல் இருக்கிறது...'' தடுமாறியவனாக ஒரு ஆப்பிளை அவளிடம் தந்தான்.

"தாங்ஸ்... வேண்டாம்." மறுத்தாள் அவள்.

"ஆபீசிலிருந்து வர உங்களுக்கு இவ்வளவு நேரமாயிடறதா?" என்றான்.

"வழக்கமாய் ஆகாது. இன்று ஆகிவிட்டது."

முந்தின சந்திப்பைப்பற்றி, அந்தத் தீ விபத்தைப் பற்றி, கிழவியைப்பற்றி, ஏதாவது அவள் கேட்கமாட்டாளா என்று அவன் ஏங்கினான். அவள் கேட்கக் காணோம். 'அந்த ஃபைல்...' என்று தானாகவே ஆரம்பிக்கலாமா என ஒரு கணம் எண்ணினான். தான் செய்த சிறு உதவியைத் திரும்ப ஞாபகப்படுத்துவது அற்பத்தனம் என்று தோன்றியது.

யாருக்குமே, அவர்களுடைய உத்தியோகத்தைப் பற்றிக் கேட்டால் சந்தோஷம் ஏற்படும் என்று அவன் எதிலோ படித்திருந்தது நினைவு வந்தது. "கமர்ஷியல் டாக்ஸ் டிபார்மெண்ட்டில் உங்க நேச்சர் ஆஃப் ஒர்க் என்ன?" என்று கேட்டு வைத்தான்.

"சாதாரணமானதுதான்."

எழுந்துகொண்டாள். பனகல் பார்க் ஸ்டாப்பில் இறங்கிவிட்டாள்.

பிறகுதான் அவன் கவனித்தான் — தன் கையில் ஒரே ஒரு ஆப்பிள்தான் இருக்கிறது என்பதை. வேண்டாம் என்று மறுத்தாளே தவிர, பிறகு அதை வாங்கிக் கொண்டுதான் போயிருக்கிறாள்.

'என்னை அப்படியொன்றும் அவள் ஒதுக்கிவிட வில்லை!' என்று தன்னுள் சொல்லி உதட்டை மகிழ்ச்சி

யுடன் சுழித்துக் கொண்டான். ஒரு நிமிடம் அப்படிச் சந்தோஷப் பட்டாலும், ஒருவேளை ஞாபக மறதியாக எடுத்துப் போயிருப்பாளோ என்ற சந்தேகமும் அவனைக் குடைந்தது. அல்லது இரண்டுபேருக்கும் தெரியாமல் ஸீட்டுக்கு அடியில் ஒரு பழம் விழுந்து உருண்டு ஓடியிருக்குமோ என்று தோன்றியது. ஸீட்டுக்கு அடியில் குனிந்து பார்க்கலாமா வேண்டாமா என்று தயங்கியபடியே அவள் இறங்கிச் சென்ற ஸ்டாப்பிங்கைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தபோது அடுத்த ஸ்டாப் வந்துவிட்டது.

ஒரு யோசனையுமில்லாமல் இறங்கிக் கொண்டு நடந்தவன், தன்னையும் அறியாமல் பழைய மாம்பலத்துக்கு வந்து விட்டோம் என்பதை உணர்ந்தான். எப்போதும் மேம்பாலத்தில் ஏறியிறங்கினோம் என்பதுகூட அவனுக்கு உணர்வில்லை.

எரிந்து பாழாகியிருந்த குடிசைகளுக்கு இப்போது புதுக் கூரைகள் வேயப்பட்டு, மாலைக் காற்றில் கீற்று நுனிகள் மெல்லச் சிலிர்த்துக்கொண்டிருந்தன.

'ராகுல்! அந்தத் தெருவுக்கா போகப் போகிறாய்?' என்று தன்னைத் தானே கேட்டுக்கொள்கிற மாதிரி அவன் நின்றான். 'ஏன், போனாலென்ன?' என்கிற மாதிரி தலையை அசைத்துக்கொண்டான். அந்த வீட்டைப் பார்க்காமலே நடந்தால் போச்சு என்று தன்னுள் அவன் சொல்லிக் கொண்ட போதிலும், நடை கொஞ்சம் கொஞ்சமாக மெதுப்பட்டது.

அன்று இரவு சில நிமிடங்களே பார்த்திருந்த வீடு... ஒன்றே போல மூன்று வீடுகள் அடுத்தடுத்து அமைந்

திருந்தன. அவளுடைய வீடு எதுவாக இருக்கும். என்று சற்றுத் தயங்கி நடந்தபோது, ஜன்னல் வழியே சியாமா தென்பட்டாள். அவளுடைய முதுகுப் பக்கம்தான் அவனுக்குத் தெரிந்தது என்றாலும், அது அவள் தான் என்பது சர்வ நிச்சயமாக அவனுக்குப் புரிந்தது.

அவள் அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால் — ராகுலின் இதயத்துக்குள் ஒரு படபடப்பு ஏற்பட்டது அவள் செய்து கொண்டிருந்த வேலையை கண்டபோது. ஒரு மேஜைமீது அந்த ஆப்பிளை — அவன் கொடுத்த அதே ஆப்பிளை — வைத்து, சிறு கத்தியால் துண்டம் போட்டு, தன் பக்கத்திலிருந்த சிறுமியிடம் கொடுத்துத் தானும் வாயில் போட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

''வாங்கினியா சித்தி?'' என்று அந்தச் சிறுமி கேட்டாள்.

''அக்கான்னு கேட்டேன்னா இன்னொரு துண்டு தருவேன்'' என்றாள் சியாமா.

''வாங்கினியா அக்கா?''

''ஒருத்தர் கொடுத்தார். வா..வா.. வாயை நல்லாத் திற.''

''ஒருத்தர்னா — ஒருத்தர்னா?''

''வேண்டியவர்னு வைச்சுக்கயேன்.''

''வேண்டியவர்னா?''

''வேண்டியவர்னா வேண்டியவர். என்னடி கேள்வி? வாயிலே வைச்சிக்கிட்டே பேசாதே. முழுங்கு.''

வேண்டியவன்! நான் அவளுக்கு வேண்டியவன்! அவளே சொல்லிவிட்டாள்! ராகுலுக்கு நடுத் தெருவில் ரொம்ப நேரமாய் நின்று கொண்டிருக்கிறோம் என்பதுகூட மறந்துவிட்டது.

''உள்ளே வாயேப்பா.''

சுய நினைவு வந்தது. திரும்பிப் பார்த்தவன், வீட்டு வாசலில் நின்றிருந்த ஒரு பெரியவர் அவனைப் புன்னகை யுடன் அழைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான். தன்னை அவருக்கு எப்படித் தெரியும் என்று அவனுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது.

''நான் சியாமாவின் ஸிஸ்டர்ஸ் ஹஸ்பெண்ட். வெங்கடேசுவரன்'' என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டு மறுபடியும் அவனை, ''வாப்பா'' என்று அழைத்தார்.

மாமா யாரை அப்படி வருந்திக் கூப்பிடுகிறார் என்று பார்க்க விரும்பியவளாகக் கதவருகே வந்தாள் சியாமா. உயர்த்திய ஒரு கையைக் கதவின் விளிம்பில் பதித்தபடி, விரைந்து வந்தவள் அப்படியே நின்றுவிட்ட கோலம், வீட்டின் உள்புறம் நிலவிய இருட்டின் பின்னணியில், ஒரு சிற்பம் புத்தம் புதிதாகச் செதுக்கப்பட்டு நிறுத்தி வைக்கப் பட்டிருப்பதுபோல் இருந்தது. பஸ்ஸில் அவளைப் பார்த்த போது, முழங்கால் வரை பிரம்மாண்ட டிசைன்கள் போட்ட பாம்பே டையிங் ஸாரி அவள் அணிந்திருந்தது அவனுக்கு நன்றாய் நினைவிருந்தது. அது லைட் லெமன் கலர். இப்போது கட்டம் போட்ட மல்ட்டி கலர் கைத்தறிப் புடவை மாற்றிக் கொண்டிருந்தாள். அவனை அவ்வளவு

சீக்கிரத்தில் மறுபடி பார்ப்பது குறித்து அவள் வியப்புக் கொள்வது வெளிப்படையாகத் தெரிந்தது. ஆனால் 'சற்று முன் தான் இவரைச் சந்தித்தேன்' என்று அவள் வெங்கடேசுவரனிடம் சொல்லாததில் ராகுல் சந்தோஷ மடைந்தான்.

''அன்னைக்கு நீங்களெல்லாம் வந்து காப்பாற்றி யிருக்காவிட்டால் எங்கள் தெருவே குளோசாயிருக்கும்!'' என்று கூறியபடி அவனை வரவேற்ற வெங்கடேசுவரன், ''இல்லையா சியாமா?'' என்று மைத்துனியைப் பேச்சுக்கு இழுத்தார்.

''ஆமாம், மாமா. ரொம்பப் பாடுபட்டார்கள்'' என்று சியாமா ஒப்புக்குச்சொல்லிவிட்டு, சிறுமியின் கையைப் பற்றிக்கொண்டு, ''வாடி மாலு.வி...வி... விசாலம் மாமி வீட்டு வரையில் போயிட்டு வந்துடலாம்'' என்றாள்.

ராகுலுக்கு ஒரு ஸ்டூலை இழுத்துப் போட்டு உட்காரச் சொன்ன வெங்கடேசுவரன், ''என்னம்மா சியாமா, எங்கே புறப்படறே?'' என்றார்.

''அக்கா போய் ரொம்ப நேரமாகிறது, மாமா. போய் அழைச்சிட்டு வரேன்'' என்ற போது அவள் பார்வை தன் பக்கமே தாவிக் கொண்டிருப்பதை கவனித்தான் அவன். சுவரெங்கும் பல காலண்டர்கள் மாட்டப்பட்டு அந்தச் சிறிய அறை மேலும் அடைசலாயிருந்தது. நடுவே ஒரு படம் — கான்வகேஷன் டிரெஸ்ஸில் சியாமா. எத்தனை பளீரென்று இருக்கிறாள்! 'இந்தப் படத்தை எனக்குக் கொடுங்களேன்' என்று கேட்டால் என்ன சொல்வார்கள்...?

''வந்தவர்களுக்குக் காப்பி கொடுத்து விட்டுப் போம்மா'' என்றார் வெங்கடேசுவரன்.

''சிரமப்பட வேண்டாம். நான் இப்பத்தான் சாப்பிட்டேன்'' என்றான் ராகுல் அவளுடைய விழிகளை அர்த்தத்துடன் சந்தித்தவனாக. 'சியாமா, நான் என்ன தப்பு செய்தேன்? எதனால் என் முன்னே ஒரு நிமிடம் கூட நிற்கப் பிடிக்காமல் பறக்கப் பார்க்கிறாய்? என்று கேள்வி மேல் கேள்வியாய்க் கேட்க நினைத்து, அது அவன் நாக்கு நுனிவரை வந்து நின்றது. அப்படியெல்லாம் கேட்கக் கூடாது என்று தன்னை அதட்டிக்கொள்பவன் போல ஷர்ட்டின் நுனிகளை நெருடிக் கொண்டு மௌனமானான்.

''இதோ வந்துடறேன் மாமா'' என்று சொல்லி, நடையில் போட்டிருந்த செருப்பை மாட்டிக் கொண்டு அவள் புறப்பட்டாள். ஒரு செருப்பை மாட்டிக் கொண்ட பின் இன்னொரு செருப்புக்காகக் காலால் தரையைத் தடவுகையில் அவள் கண்கள் அவனை ஒரு முறை நோக்கி விட்டுத் தாழ்ந்தன. 'என்னை மன்னியுங்கள்' என்று சொல்வது போல் ராகுலுக்குத் தோன்றியது.

''ஆப்பிளாவது எடுத்துக் கொள். சியாமா வாங்கி வந்தாள்'' என்று சொல்லி, சில துண்டங்களை வெங்கடேசுவரன் அவன் முன்னே கொண்டு வந்து வைத்தார். ராகுல் தன் புன்னகையை மறைத்துக் கொண்டு ஒன்றை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். மாலுவிடம் பேசிய வாறே தொலைவில் சியாமா செல்வதை அவன் கண்கள் கண்டன.

''சியாமாவை ரொம்ப நாளாய் உனக்குத் தெரியு மாப்பா?'' என்றார் அவர்.

''இல்லை... இப்பத்தான்...'' என்றானே தவிர, எப்போது என்பதை அவன் சொல்லவில்லை.

வெங்கடேசுவரனின் எட்டு முழ வேட்டியைத் துவைத்துப் பிழிந்து ஜன்னல் சட்டத்தில் வைத்து விட்டுச் சென்றிருந்தாள் ரங்கம்மா. அதை உதறி, மடித்து, சுருக்கமில்லாமல் டப் டப் பென்று அடித்து, கழியின் மூலம் கொடியில் உலர்த்தும் போது, கொஞ்சம் கொஞ்சமாய் அவனைப் பற்றிய விவரங்களையும் கேட்டுக் கொண்டேயிருந்தார் அவர். அவருடைய மனத்தில் எதுவோ ஒன்று புரண்டு கொண்டிருப்பதை அவனால் ஊகிக்க முடிந்தது. அது தானாக வெளிவரட்டும் என்று அவருடைய மகா ஸ்லோவான பேச்சை அவன் பொறுத்துக் கொண்டு பதிலளித்தவாறு இருந்தான். அதற்குள் சியாமா திரும்பி வந்து விடக் கூடும் என்ற எதிர்பார்ப்பும் அவனை இருக்கச் சொல்லித் தூண்டிக் கொண்டிருந்தது.

ஆனால் வெங்கடேசுவரனோ அதற்குள் அவள் வந்து விடப் போகிறாளே என்று கவலைப்பட்ட மாதிரி இருந்தது. பின்கை கட்டிக் கொண்டு உலவியபடி, "உன்னைப் போல ஒரு நல்ல பிள்ளை... கௌரவமான வேலை... கண்ணியமான குடும்பம்... இப்படி ஒருத்தர் சியாமாவுக்குக் கிடைக்கணும் என்று அவள் அக்காவும் நானும் கடவுளை வேண்டாத நாளில்லை..." என்றார்.

ராகுலுக்கு மார்பு படபடத்தது. அவர் பேச்சு எதிர்பாராததாக, நம்ப முடியாததாக இருந்த போதிலும் அந்தரங்க சுத்தியுடன், மனப்பூர்வமாக அவர் பேசுவது அவனுக்குப் புரிந்தது. "ஆனால்... நீங்கள் நினைக்கிற மாதிரி... ஒரு... இதுவாய் அவள் என்னுடன் பேசியது உண்மைதான்... ஆனால் கொஞ்சம்... அப்புறம் திடீர்னு முறித்துக் கொண்ட மாதிரி..." அவன் வருத்தத்துடன் தலையை அசைத்தான்.

''சொல்றேன்.'' வெங்கடேசுவரன் அவன் எதிரில் ஒரு மோடாவைப் போட்டுக் கொண்டு அமர்ந்தார். ''இரண்டு வருஷத்துக்கு முன்னே அவளுக்கு ஒ ந கசப்பான அனுபவம்... சியாமா கொஞ்சம் ரோஷக்காரி... அதிலிருந்து கல்யாணப் பேச்சே அவளுக்குப் பிடிக்கிற தில்லை... நீ தானப்பா ராகுல் எப்படியாவது அவள் மனசை மாத்தணும்... நீ... உன் கிட்டே எனக்குப் பழக்கமேயில்லை... இருந்தாலும் என் தம்பி மாதிரி ஒரு பாசம் ஏற்படறதாலே இத்தனை தூரம் சொல்கிறேன்...''

அவர் குரல் தழதழத்து முடிந்தது.

வேறு ஏதோ ஓர் அனுபவத்தால்தான் தன்னிடம் காதல் கொண்டிருந்தும், கொண்டிருப்பதைக் காட்டிக் கொள்ளாமல் அவள் தவிக்கிறாள் என்பதை அறிந்ததே அவனுக்கு ஆறுதலாகயிருந்தது.

என்ன அப்படிப்பட்ட கசப்பான அனுபவம்? ராகுலின் மனம் குறுகுறுத்தது.

## நான்கு

'ஏன் சியாமா, நீ அவ்வளவு விருட்டென்று கிளம்பித்தான் இருக்க வேணுமா? விசாலம் மாமி வீட்டுக்குப் போய்த்தான் ஆகணுமா?' என்று ஒரு குரல் அவளுக்குள்ளிருந்து அதட்டிக் கொண்டிருந்தது.

'ஆமாம்! பின்னே என்ன? மாமாவுக்கு மனசு கிடந்து அடித்துக் கொள்கிறது. ராகுலுக்குக் காப்பி கொடுக்கச் சொல்கிறார். உட்காரேன் என்பார். இரண்டுபேரையும் இணைத்து வைத்துப் பேச்சுக் கொடுப்பார். பிறகு

வாசலிலே யாரோ கூப்பிடுகிற மாதிரி இரண்டு பேரையும் பேசிக் கொண்டிருக்க விட்டுவிட்டு வாசல் பக்கம் போவார். ராகுல், நீ சினிமா பார்க்கிறது உண்டா என்று கேட்பார். உண்டு என்று சொல்லணும். இங்கிலீஷ் படமா, இந்திப் படமா என்பார். இந்திப் படம் என்று சொல்லணும். நாவல் படித்துக் கொண்டிருந்தாயே பஸ்ஸில், யாருடையது என்பார். இன்னார் எழுதினது என்பதைச் சொல்லிவிட்டு மரியாதையை உத்தேசித்து உங்களுக்கு என்னென்ன சினிமா பிடிக்கும், என்னென்ன புத்தகம் படிப்பீர்கள் என்று கேட்கணும். எதற்கு அந்தப் போலி நாடகமெல்லாம்?' என்று அவள் அந்த உள்குரலுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

பொல்லாத உள்குரல் அது. 'ஏண்டி சியாமா, ஒரு போலி நாடகத்தை இவ்வளவு விரிவாக, இத்தனை வாக்கியம் வாக்கியமாக ஏன் நீ கற்பனை செய்து கொள்ளணும்? அதிலே ஒரு சுகமா?' என்று திருப்பிக் கேட்டது.

மிகச் சமீபத்தில் ஒரு பெண் குரல் இம்முறை அசலான குரல் அவள் எண்ணங்களுக்கு லகான் போட்டது. ''ஹை சியாம்! எப்படி இருக்கே?''

நிமிர்ந்தவள், ''அடே! வசந்தியா! எங்கேடி இவ்வளவு தூரம்?'' என்று அதிசயித்தாள்.

''அயோத்யா மண்டபத்திலே ராமநவமி உற்சவத்துக்காகச் சிட்டி பாபு வீணையாமே? நான் விடவே மாட்டேன், நீயும் வரியா? என் தம்பி கூடத் துணைக்கு வந்திருக்கான்'' என்றாள் அவள், சற்று எட்டத்தில் நின்றிருந்த பையனைக் காட்டி.

அக்காவிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு இவளுடன் போய்விட்டால் என்ன என்று ஒரு நிமிடம் சியாமாவுக்குத் தோன்றியது. ஆனால் அவள் வீட்டுக்கும் மண்டபத்துக்கும் ஒரு மைல் இருக்கும். வீட்டிலிருந்து அவ்வளவு தொலைவு செல்ல ஏனோ அவளுக்கு மனமில்லை. ''வீட்டிலே வேலை இருக்கு, வசு'' என்றாள்.

தெருவோடு போய்க் கொண்டிருந்தவர்கள் அந்த இரண்டு பெண்களையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு சென்றார்கள். காரணம் சியாமா அல்ல. வசந்தி. இருட்டிக்கொண்டிருக்கும் அந்த வேளையில் கூட அவள் கறுப்புக் கண்ணாடி அணிந்திருப்பதைக் கண்டு ஆச்சரியம். அந்த அழகான முகத்தில், வலது கன்னத்தில் கரேலென்று ஒரு பெரிய கோரமான தழும்பு விழுந்திருப்பதைப் பார்த்துப் பரிதாபம்.

இரண்டுக்கும் காரணம் சியாமாவுக்குத் தெரியும். ''கண் இப்போ எப்படி இருக்கு'' என்று தோழியின் தோளைத் தொட்டுப் பரிவுடன் கேட்டாள்.

''த்ஸ¬ மேற்கொண்டு கெடாது, அவ்வளவுதான்'' என்றாள் வசந்தி.

இரண்டு வருடத்துக்கு முன்னால் அவளும் சியாமாவும் ஒரே மவுண்ட் ரோடு ஆபீசில் வேலை செய்தவர்கள் தான். வசந்தி மூன்று வருடம் சீனியர், சியாமா வேலைக்கு வந்த முதல் நாள், ''அந்த நாற்காலி வேண்டாம். ஒரே மூட்டைப் பூச்சி. இதில் உட்காருங்கள்'' என்று நாற்காலியை மாற்றித் தந்து அவள் பிரியத்தைச் சம்பாதித்துக் கொண்டவள் வசந்தி. வேலையில் தடுமாறும்

போதெல்லாம் சொல்லிக் கொடுத்தவள். மூன்று மாதத்துக்குள் டிபனை மாற்றிக் கொள்வது முதல், புடவை இரவல் பெறுவது வரையில் இரண்டு பேருக்கும் ரொம்ப நெருக்கம் ஏற்பட்டிருந்த சமயம் —

வசந்திக்கு அந்தக் கோர விபத்து ஏற்பட்டது. மறுநாள் தான் ஆபீசில் தெரிந்தது. எல்லோருமாய் லஞ்ச் நேரத்தின் போது பர்மிஷன் வாங்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்தார்கள். 'நல்ல காலம், எப்படி யெல்லாமோ ஆகியிருக்க வேண்டியது இத்தோடு தப்பியது' என்று டாக்டர் சொன்னார்.

வசந்தியின் வீட்டில் உறவுகாரர்கள் போக்குவரத்து ரொம்ப அதிகம். ''அப்பப்பா! வீட்டில் நிற்கவே இட மில்லை. எட்டு மணிக்கே ஆபீஸ் வந்துவிட்டேன்'' என்று எத்தனையோ நாள் வசந்தி சொல்லியிருக்கிறாள். அப்படியொரு உறவுப் பட்டாளம் முந்தின நாள் இரவு திடீரென்று வந்து இறங்கியதாம். அவர்களுக்காக அவசர அவசரமாய் வசந்தியின் அம்மா சாதம் வடிக்க, வசந்தி அப்பளம் வறுவல் பொரித்துக் கொண்டிருந்தாளாம் எண்ணெயில். வீட்டுக்குள் பம்பரம் விளையாடிக் கொண் டிருந்தான் அவள் தம்பி — அதோ பரம சாது மாதிரி நின்று கொண்டிருக்கிறானே, அதே பையன்தான். கை தவறித் துள்ளி விழுந்தது பம்பரம் வாணலியில், கொதிக்கும் எண்ணெயில்.

சுரீரென்று கொள்ளிக்கட்டையால் முகம் பூரா சுட்ட மாதரி எண்ணெய் தெறித்ததுதான் தெரியும் வசந்திக்கு. அங்கேயே மயக்கமாய் விழுந்துவிட்டாளாம்.

கன்னத்தில் ஒரு பெரிய தழும்பை ஏற்படுத்தி, கண்களில் ஒன்றில் பூ விழும்படி செய்துவிட்டது அந்த விபத்து. இன்னொரு கண்ணும் அரை குறையான பார்வை தான் அவளுக்கு. தொடர்ந்து ஏதோ வைத்தியம் செய்து கொண்டிருக்கிறாள். மெடிகல் கவுன்ஸில்வரை போய் ஃபிட்னஸ் ஸர்டிபிகேட் வாங்கித் தந்த பின்தான் வேலையே நிலைத்தது.

அதன்பிறகு அதிக நாள் வசந்தி அங்கே வேலை பார்க்கவில்லை.

பேட்டை கிளைக்கு மாற்றிக் கொண்டு போய் விட்டாள்.

''சரி, நீ வரலேங்கறே, நான் போகட்டா? அங்கிட்டு இந்நேரம் கச்சேரி ஆரம்பிச்சிருக்கும்'' என்றாள் வசந்தி அவள் மதுரைக்காரி. 'அங்கிட்டு — போகட்டா' போடாமல் ஒரு வாக்கியம் பேச வராது.

ஜாக்கிரதையா தம்பி கையைப் பிடிச்சிட்டுப் போடி.உடம்பைப் பார்த்திட்டு வீட்டோட இருக்காமே நல்ல சங்கீதப் பித்து!'' என்று கடிந்து கொண்டு விடை கொடுத்தாள் சியாமா.

இரண்டு தப்படி சென்ற வசந்தி திரும்பி வந்து, ''நான் கர்னாடிக் பித்தாவே இருந்திட்டுப் போறேன். நீ மாடர்ன் பித்துன்னா அடுத்த வியாழக்கிழமை எங்க ஆபீசுக்கு வா, பார்க்கலாம்'' என்றாள்.

''வியாழக்கிழமை என்ன விசேஷம்? உனக்குக் கல்யாணத்துக்குப் பெண் பார்க்க வர்றாங்களா?'' என்று சிரித்தாள் சியாமளா.

''உனக்கு அதேதான் ஞாபகம்! எங்க மனமகிழ் மன்றத்திலே ஆனிவர்ஸரி. மியூசிக் புரோக்ராம். அங்கே ஆபீஸ் விட்டதும் நேரே வந்துடு, என்ன?

''பார்க்கறேன்.''

''பார்க்கறேன் கீர்க்கறேனெல்லாம் வேண்டாம். போன் பண்ணி ரிமைண்ட் பண்ணறேன். வந்திடு.''

வசந்தி போய் விட்டாள். இத்தனை நேரம் இங்கே பேசிக் கொண்டிருந்த சமயம், அங்கே ராகுல் புறப்பட்டுப் போயிருந்தாலும் போயிருப்பாரோ? சியாமா திரும்பித் தன் வீட்டைப் பார்த்தாள். வீட்டுக்குள் எரியும் விளக்கின் வெளிச்சம் அன்னக் கூடை வடிவத்தில் தெருவில் விழுந் திருந்தது. அவர் போயிருந்தால் மாமா வீட்டுக்குள் உட்கார்ந்திருக்கமாட்டார். காற்றுக்காக வாசலில் வந்து நின்றிருப்பார்.

ஹூம், வேறு வழியில்லை என்று எண்ணிக் கொண்டு விசாலம் மாமியின் வீட்டுக்குள் நுழைந்தாள். சாதாரணமாக அங்கே போக அவளுக்குப் பிடிக்காது. அவளுக்கு மட்டுமல்ல, அந்தத் தெருவில் பெரும்பா லோருக்குப் பிடிக்காது. அந்தம்மாளுக்கு டம்பம் அதிகம். அந்தத் தெருவில் விலைவாசிகளை உயர்த்தி விடுகிறவள் என்று அவள்மீது எல்லோருக்குமே ஒரு ஆத்திரம். கறிகாய் வண்டிக்காரன் கத்தரிக்காய் கிலோ ஒன்றேமுக்கால் ரூபாய் என்றால் கண்ணை மூடிக்கொண்டு கொடுத்து விடுவாள். ஆப்பிள் ஒரு பழம் ஒன்றரை ரூபாய் என்றால், அந் தம்மாளிடம் மறு பேச்சுக் கிடையாது. வாங்கி விடுவாள்.

பேரம் பேசுவது கௌரவக் குறைவு என்பது அவள் எண்ணம். அவள் அப்படி வாங்கின பிறகு மற்றவர் களாலும் பேரம் பண்ண முடியாது. அப்படியே பண்ணி னாலும் 'இந்த அம்மாள் இப்பத்தானே உங்க கண் முன்னாலே ஒண்ணே முக்கால் ரூபாய்னு வாங்கினாங்க? என்று முகத்தில் அடித்த மாதிரி அவன் போய்விடுவான்.

அப்படிப்பட்ட மாமியின் வீட்டுக்குள் இன்று...

''கூப்பிட வந்துட்டியாக்கும்? அஞ்சு நிமிஷம் கூட உட்காரல்லே!'' என்று குறைப்பட்டுக் கொண்டே எழுந்தாள் ரங்கம்மா, தங்கையைக் கண்டதும்.

''நீ போ அக்கா முன்னாலே, யாரோ வந்திருக்காங்க, மாமா கூப்பிட்டார். நான் 'கொஞ்சம் பொறுத்து வரேன். மாலு இருக்கட்டும்:'' என்ற சியாமா, விசாலம் மாமியின் கண்ணிலே ஆச்சரியமும் ஆனந்தமும் படர்வதைக் கவனித்து, ''உள்ளே வரக் கூடாதான்னு தினம் மாமி கூப்பிடறார். இன்னைக்குத்தான் சந்தர்ப்பம் வந்தது.'' என்றாள்.

மாலுவுக்கு ஏதோ காமிக்ஸ் புத்தகம் கிடைத்து விட்டது. அம்மா போனதையும் கவனிக்கவில்லை, சித்தி வந்ததையும் பார்க்கவில்லை.

''சியாமா, நீ பார்த்து, உன் வாயாலே நன்றா யிருக்குன்னு சொல்லணும். அப்பத்தான் எனக்குத் திருப்தி'' என்றபடி ஸ்டீல் பீரோவிலிருந்து பட்டுப் புடவையை எடுத்துப் பிரித்தாள் விசலாம் மாமி.

''பிரமாதமாயிருக்கு. உங்க சிவப்பு நிறத்துக்கு ரொம்ப மாட்ச்.''

''அதை ஏன் கேட்கிறே! மரூன் கலரிலே பாபி பாட்டர்ன் வேணும்னு எத்தனை கடை ஏறியிறங்கினேன் தெரியுமா? கடைசியிலே காஞ்சிபுரம் போய், தறிகாரன் கிட்டே சொல்லி, ஆர்டர்கொடுத்து ஸ்பெஷலாய்ப் போடச் சொன்னேன்.''

''விலையைச் சொல்ல மாட்டேங்கறீங்களே?''

''அறுநூத்தி அறுபது.''

''அம்மாடி! காஞ்சிபுரத்திலேயே அப்படின்னா. இங்கே மெட்றாசிலே எழுநூத்தைம்பதுக்குக் குறையாது.''

பாவம் இந்த மாமி என்று எண்ணிக்கொண்டாள் சியாமா. வாழ்க்கையில் வேறு என்னென்னவோ ஏமாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும்... மனசுக்குள் ஏதேதோ ஏக்கங்கள் இருக்க வேண்டும்... அதனால்தான் இப்படி ஜம்பமடித்துத் தனக்குச் சந்தோஷம் ஏற்படுத்திக் கொள்கிறாள் போலிருக்கிறது.

'என்ன வந்தது எனக்கு இன்றைக்கு?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள் சியாமா. சகிக்க முடியாத இந்தத் தற்பெருமைக்கெல்லாம் எப்படி நல்ல தாக அர்த்தம் செய்து கொள்ள முடிகிறது? இந்த மாமியின் குரலையும் முகத்தையும் பொறுத்துக்கொண்டு உட்கார்ந் திருக்கும்படி செய்திருப்பது எது? என் மனத்துக்குள்ளே ஏதோ ஒரு வகையான குதூகலம் நிரம்பி வழிகிறது. இன்னதென்று சொல்ல முடியாத உவகை, உள்ளத்துக்குள் ஆயிரம் ஊற்றுக் கண்களில் உற்பத்தியாகிப் பீரிட்டடிக் கிறது... ஏன் அப்படிப் பரவசம்?

..."இந்தப் புடவையைக் கட்டிட்டதும் 'அவர்' என்ன சொன்னார் தெரியுமோ? இருபத்தைஞ்சு வயசு மாதிரி இருக்காம்...! எப்படி இருக்கு, கூத்து!" என்றாள் விசாலம் மாமி.

மாமாவுடன் இன்னும் அவர் பேசிக்கொண்டுதான் இருப்பாரா? எதிலே உட்கார்ந்திருப்பார்? அந்த மர நாற்காலியிலேயா? மாலு அதிலே காம்பஸ் முள்ளால் கீறிக் கீறி ஒரே சொற சொற... அடுத்த மாசம் எந்தச் செலவைக் குறைத்தாவது நல்லதாக இரண்டு கூடை நாற்காலி வாங்கிப் போடணும்... அக்கா இன்னேரம் காப்பி போட்டுத் தந்திருப்பாள். போன வருஷம் எக்ஸிபிஷனில் வாங்கிய பீங்கான் டம்ளரை அலமாரியில் உள்ளே தள்ளினாற்போல் வைத்திருக்கிறேன். அக்காவுக்கு அது நினைவிருக்கிறதோ இல்லையோ, அந்தப் பழைய பித்தளை டபராவில் கொடுத்துத் தொலைத்திருப்பாள்...

"போகலாமா சித்தி?" என்று குரல் கொடுத்தாள் மாலு. படித்து முடித்துவிட்ட புத்தகத்தைப் பொத்தென்று போட்டபடி.

எழுந்து கொண்டாள் சியாமா.

அதோ! வாசலில் ராகுலும் மாமாவும் பேசிக் கொண்டு நிற்கிறார்கள். பாண்ட்டின் இரண்டு பைகளிலும் கைவிட்டுக்கொண்டு, சற்றே அண்ணாந்தபடி அவன் சிரிப்பது ஒருதனி ஸ்டைலாக இருக்கிறது.

வீட்டுக்குள் அவள் நுழைகையில் அவர்களுடைய பேச்சு சற்று நின்றது. ஆனால் சியாமா நிற்கவில்லை. அவர்கள் பக்கமே திரும்பக் கூடாதென்ற உறுதியை வரவழைத்துக் கொண்டவளாக, நேரே வீட்டுக்குள் நுழைந்தாள்.

அவன் ஏதோ தன்னைக் கேட்பதற்காகத் திரும்புகிற மாதிரி தோன்றியது. என்னவாயிருக்கும்? 'ஏன் இப்படி என்னைக் கத்திரிக்கிறாய்?' என்றா.

அக்கா சமையலறையில் வேலையாக இருந்தாள். வாசற்புறமுள்ள அறைக்குள் நுழைந்ததும், எப்போதும் போல உடனே கண்ணாடியில் அவள் முகம் தெரிந்தது. முகத்தை எத்தனை கடு கடுவென்று வைத்துக் கொண்டு இருந்திருக்கிறோம்...

''நீங்க அடிக்கடி வந்திட்டிருக்கணும், ராகுல்...''

இன்விடேஷன் கொடுத்து விட்டாராக்கும் — ஸ்டாண்டிங் இன்விடேஷன்! மாமா, கன்னாபின்னா வென்று கோட்டை கட்டாதீர்கள். நீங்களும் அக்காவும் நினைக்கிற மாதிரியெல்லாம் எதுவும் இல்லை. இருக்கவும் போவதில்லை.

''எந்தக் கிளாஸ் படிக்கிறே?''

சரிதான் — மாமாவை விட்டாயிற்று. அடுத்து மாலுவைப் பிடிக்கிற முயற்சியா?

''ஸிக்ஸ்த் ஸ்டாண்டர்டு, அங்க்கிள்.'' மாலுவுக்கு அன்னியர்கள் யாரைக் கண்டாலும் அங்க்கிள் அல்லது ஆண்ட்டிதான்.

''ஸிக்ஸ்த் ஸ்டாண்டர்டு? அடேயப்பா! நான் கூட அவ்வளவு படிக்கலியே?''

ஒரே சிரிப்பு. சியாமாவுக்கும் சிரிக்க வேண்டும் போலிருந்தது.

''நீங்க அடிக்கடி வருவீங்களா அங்க்கிள்?''

மாலு, நீயும் விழுந்து விட்டாயா இந்த ஆள் வலையில்?

''நான் வரணுமானால் ஒரு வழி இருக்கு. இங்கே பக்கத்திலே ஏதாவதொரு வைக்கோல் போர் இருந்தால் ஒரு நெருப்புக் குச்சியைக் கிழிச்சு வை. இல்லே, எருமை மாடு ஏதாவது அகப்பட்டால் கிணத்திலே பிடிச்சுத் தள்ளு. அல்லது, ஜன்னல் கம்பி எதுக்குள்ளேயாவது தலையை விட்டுக் கொண்டு வெளியே எடுக்க முடியாமல் முழி. பிறகு, ஃபோர் டூ ஜீரோ ஃபைவ் எய்ட் ஃபோருக்குப் போன் பண்ணு. கட்டாயம் ராகுல் அங்கிள் வேணும்னு சொல்லு. வேறு யாரையாவது அனுப்பிடப் போறாங்க!''

வாசலிலிருந்தவர்கள் மட்டுமின்றி அறைக் குள்ளிருந்த சியாமாவும் தன்னை மறந்து சிரித்துவிட்டாள். எழுந்து ஜன்னலருகே சென்று, ராகுலைப் பார்க்க வேண்டும் போல் ஒரு திடீர் ஆவல் அவளுக்கு ஏற்பட்டது. எழுந்து கொண்டவள், அந்த எண்ணத்தை அடக்கிக் கொண்டவளாக, விளக்கு ஸ்விட்சைப் போட்டு விட்டுத் திரும்ப உட்கார்ந்தாள்.

அவன் புறப்பட்டு விட்டான்.

மறுநாள் முதற் கொண்டு, சிறிது சிறிதாக அவனைப் பற்றிய நினைப்பை ஒழித்து வரமுயன்றாள். ஆனால், சமையலறையிலே ஒரு திரி ஸ்டவ் இருக்கிறதே, அதே போல் தான் தன் இதயமும் என்று அவளுக்குத் தெரியாமல் இல்லை. திருகைத் திருகித் திரியை முழுதாக இறக்கி விட்டு, ஸ்டவ் அணைந்து விட்டது என்று நினைத் திருப்பாள். வெகு நேரம் கழித்துத் தற்செயலாய்ப் பார்த்

தால், ஒரு கடுகத்தனை ஜுவாலை சிவப்புப் பொட்டாக எரிந்து கொண்டிருக்கும், திருகைக் கொஞ்சம் உயர்த்தி னாலும் போதும் — குப்பென்று பற்றிக் கொள்ளும்...

''போறாத வேளைக்கு எவனாவது ஏதாவது கிளப்பி விட்டுடறான். இங்கே இருக்கிறவன் பிராணன் போகிறது'' என்று மூக்குக் கண்ணாடியைத் துடைத்துக் கொண்டே முணுமுணுத்தார் ஹெட்கிளார்க் வேதாசலம்.

''என்ன சார் விஷயம்?'' என்று சியாமா விசாரித்தாள்.

''ட்ரை ஸெல் இல்லே — பாட்டரி? அதுக்கு இந்த ஸ்டேட்லே தான் ஸேல்ஸ் டாக்ஸ் ஜாஸ்தின்னு ரெப்ரஸென்டேஷன் வந்திருக்காம். ரீ கன்ஸிடர் பண்ணப் போறாங்களாம். ஸ்டேடிஸ்டிக்ஸ் எடுத்து அனுப்பச் சொல்லித் தாக்கீது வந்திருக்கு...''

''எடுத்துட்டால் போச்சு! எ...எ...என்ன...சார் பிரமாத வேலை!'' என்று அன்று முதல் அந்தக் காரியத்தில் மூழ்கினாள் சியாமா.

அந்த மும்முரத்தில் வசந்தி சொல்லியிருந்த நிகழச்சி அவளுக்கு நினைவேயில்லை. ''என்ன, கட்டாயம் வந்துடறியா?'' என்று அவள் அன்று போன் செய்த பிறகுதான் ஞாபகம் வந்தது. சாயந்தரம் அரை மணி நேரம் பர்மிஷன் வாங்கிக்கொண்டு புறப்பட்டாள்.

ஆனால் வசந்தியின் அலுவலகத்தில் முன்புறம் யாரையும் காணோம். விழாவுக்கான ஏற்பாடுகள் அலங் கோலமாய் நின்றிருந்தன. கடடிடத்தின் பின்புறமுள்ள பாழும் கிணற்றைச் சுற்றிப் பல பேர் கூடியிருந்தார்கள்.

## ஐந்து

அன்று காலை ஆறேகால் மணிக்குக் கண் விழித்த போது, பொழுது சாய்வதற்குள் அத்தனை பெரிய பயங் கரத்தைச் சந்திப்போமென்று வசந்தி சிறிதும் எதிர்பார்க்க வில்லை.

நண்டும் சிண்டுமாக ஆறேழு பேர் முடங்கும் வழக்கமான காமரா அறையில்தான் அன்றும் அவள் படுத் திருந்தாள். வழக்கம் போல அவளுடைய கடைக் குட்டித் தம்பிதான் அவள் பக்கத்தில் படுத்திருந்தான். வழக்கம் போல் இன்றைக்கும்தான் அவள் வேடிக்கையாக, ''இன்று உன் மூஞ்சியில் முழித்துவிட்டேனோ இல்லையோ! அவ்வளவுதான்'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து கொண்டாள்.

கண் பார்வை பலப்படுவதற்காக டாக்டர் கொடுத் திருந்த மாத்திரைகளை சாப்பிட்ட போதும் சரி; அன்றைய கோட்டாவாக வந்து சேர்ந்திருந்த விருந்தாளிகளைச் குசலம்விசாரித்தபோதும் சரி அவளுக்காகக் கட்டி வைத்திருந்த உப்புமா டிபன் பொட்டலத்தை அம்மா ஒரு ஜாடை காட்டி விட்டு விருந்தாளி வீட்டுக் குழந்தைக்காகப் பிரித்த போதும் சரி; குளத்தங்கரை ஸ்டாப்பில் பஸ்ஸில் — அது 43-ஆம் நம்பர் பஸ்தானா என்று உற்றுப் பார்த்து விட்டு — ஏறிக் கொண்டபோதும் சரி; ஆபிஸில் அன்றைய விழாவுக்காக நடுஹாலை ஒழுங்கு சுத்தம் செய்வதில் மற்றவர்களுடன் சேர்ந்து ஈடுபட்டபோதும் சரி; சியாமாவுக்குப் போன் செய்து ஞாபகப்படுத்திய போதும்சரி —

அவள் உற்சாகமாகவே இருந்து வந்தாள். அவளுக்குக் கண் வைத்தியம் செய்தவர் வெறும் டாக்டர் மட்டுமல்ல; மனத்தத்துவம் தெரிந்தவர். ''வசந்தி, நீ உன்னைப்பற்றியும் உன் கண்ணைப் பற்றியும் நினைத்துக் கொண்டிராதே. எப்போதும் பிறரைப் பற்றியே கவனம் செலுத்து'' என்று சொல்லித் தந்திருந்தார். அவள் கறுப்புக் கண்ணாடி அணிந்தது கூட, பிறர் தன் குறையைக் கண்டு பிடித்துப் பரிதாபம் காட்டக் கூடாதே என்பதற் காகத்தான்.

அப்படிப் பிறருக்கு உதவி செய்வதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் பழக்கத்தை அவள் ஏற்படுத்திக் கொண்டிராவிட்டால், இப்போது எண்பது அடி ஆழத்தில், பாழ் கிணற்றின் கட்டாந்தரையில் மயக்கமுற்றுக் கிடக்க மாட்டாளோ என்னவோ. ஆர்க்கெஸ்டிராக்காரர்கள் எல்லாரும் வந்தபோது மணி ஐந்து. மெல்லிசை நிகழ்ச்சி தொடங்குவதற்காக அவரவர்கள் தங்கள் வாத்தியங்களைச் சரிவர வைத்து விட்டு, காப்பி சுவைத்துக் கொண் டிருந்தார்கள்.

ஒரு டிரம்காரர் மட்டும் அவளை அணுகி வந்து, ''ஒரு சின்ன ஹெல்ப்'' என்றார்.

''ஒ, எஸ்.'' என்றாள் வசந்தி.

''இரண்டு நாற்காலியைச் சேர்த்துப் போட்டு டிரம்மை வைச்சுட்டுப்போறேன். குறுக்கே வைக்கிற மாதிரி ஒரு பலகை கிடைச்சால் தேவலை'' என்றார் அவர்.

''பின் பக்கம் ஏதாவது கிடக்கும். வாருங்கள் பார்க்கலாம்'' என்று அழைத்துப் போனாள்.

இன்னும் பொழுது இருட்டவில்லை என்று அவள் உணர்ந்தேயிருந்தாள். இருந்தாலும் எல்லாம் மசமசவென்று தெரிந்தன.

''அதோ அங்கே என்ன... பலகை மாதிரி...'' என்று இரண்டு எட்டு எடுத்து வைத்ததுதான் அவளுக்குத் தெரியும் —

கோரைப் புற்கள் மறைத்திருந்த அந்தக் கிணற்றுக் கைப்பிடிச்சுவர் அவள் காலை இடறிவிட்டது.

கால் தடுக்கியதால் விழப் போகிறோம் என்றுதான் அவள் முதலில் நினைத்தாள். தரையில் உடம்பு மோதாமல், கீழே கீழே இன்னும் கீழே என்று போய்க் கொண்டேயிருப்பதை உணர்ந்த பிறகுதான் கிணற்றுக்குள் விழுந்து கொண்டிருக்கிறோம் என்பது புரிந்தது. குறுக்கும் நெடுக்குமாக முளைத்திருந்த செடிகளிலும், துருத்திக் கொண்டிருந்த கற்களிலும் அவள் கால்களும் கைகளும் இடித்து உரசினது கையில் அகப்பட்ட இரண்டொரு செடிகளைப் பற்றிக் கொள்ளப் பார்த்தாள். பலிக்க வில்லை. ஏதாவதொரு இடுக்கில் பாதத்தை ஊன்ற முயன்றாள். பயனில்லை. முகத்தில் பல கீறல்கள்; தொடையிலும் முழங்கையிலும் கணக்கற்ற சிராய்ப்புகள். தலையில் ஓர் அடி.

முடிவற்று விழுந்து கொண்டேயிருக்கிறோம் என்று அவளுக்குத் தோன்றியபோதிலும் மொத்தம் ஐந்து நொடிகள்கூட ஆகியிருக்காது அந்தப் பாழ்கிணற்றின் அடிமட்டத்திலே போய் அவள் மல்லாந்து விழுந்தபோது.

அதிலே தண்ணீரில்லை என்பதை உணர்ந்த கணத்தில் ஓர் ஆறுதல் ஏற்பட்ட போதிலும், கரடு முரடான

தரையில் என்னென்னவோ பூச்சிகள் உடம்பெங்கும் ஓடத் தொடங்கியபோது அருவருப்பு ஏற்பட்டது. கண்ணுக்கு மேலே செடி கொடிகள் அடர்ந்திருந்தன. ஒரே இருட்டுதான். மூச்சுத் திணறுகிற மாதிரி இருந்தது. டார்ச் லைட்டுகளை ஆட்டுகிற மாதிரி வெளிச்சத்தின் ரேகைகள் ஓடுவது — ஒருவேளை பிரமையோ? தலையைப் பயங்கர மாய் வலித்தது. ரத்தக் காயமா என்று பார்க்க எண்ணி, தடவிக்கொண்டாள். ஈரப் பசையாகத் தெரியவில்லை. ஆனால் விண் விண்ணென்று விண் விண்ணென்று விண் விண்ணென்று... தனக்குத்தானே சுருண்டு கொள்கிறாள்; ஐந்தடி மேனியும் ஒடுங்கி, ஓர் பந்தாகத்திரண்டு, பந்தும் கடுகாகச் சிறுத்து... வசந்தி! வசந்தி! யார் கூப்பிடுவது? கறுப்பு வானத்தில் ஒரு ஒளிக் கோடு இப்படியும் அப்படியும் தாவுகிறது... ஒரு பலகை இருக்குமா?... வாங்க பெரியப்பா, இப்பத்தான் வண்டியா... காப்பி சாப்பிட்ட தன் ஈரம் உதடுகளில்... சியாமா, மறந்துட்டியா?... என்ன இப்படி மூச்சுத் திணறுகிறது...

அதன் பிறகு அவளுக்கு நினைவில்லை.

வசந்தி வேலை பார்த்த வணிகத்துறை அலுவலகம், சைதாப்பேட்டை மறைமலையடிகள் பாலத்தின் இறக் கத்தில், ராஜ்பவனுக்குச் செல்லும் பாதையின் தொடக் கத்தில் இருந்தது. சாலையை ஒட்டினாற்போல் இடிந்து போன காம்பவுண்டு சுவர்-சாயந்தர வேளைகளில் வேலையற்றவர்கள் கும்பல் கும்பலாய் ஏறி உட்காரந்து அரட்டை அடிக்க வசதியாயிருக்கும். காம்பவுண்டுக்கு உள்ளே ஒரு தன்னந்தனியான, பழைய பங்களா. அரைத் தென்னை மர உயரத்துக்கு நாலு பிரம்மாண்டமான

தூண்களைக் கொண்ட போர்ட்டிகோ. உள்ளே ஹால் களிலுள்ள மர அலமாரிகளில் பைல்களும் இருக்கும், வௌவால்களும் இருக்கும். அந்தக் காட்டினுள் புகுந்து எந்த ஃபைல் எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க, பதினைந்து இருபது வருட சர்வீஸ் போட்ட குமாஸ் தாக்களால் தான் முடியும். கட்டிடத்தின் பின் பகுதியில், கோரைப்புற்கள் முழங்காலளவு வளர்ந்திருக்கும் மைதானம் இருந்தது. குடியரசு தினம், சுதந்திர தினம் போன்ற விழாக்களில் மற்ற டிபார்ட்மெண்ட்காரர்கள் அலங்கார ஊர்வலங்கள் நடத்திவிட்டு, கடைசியில் இங்கே போட்டுவிட்டு, போவார்கள் தங்களுடைய ஓட்டை உடைசல் பல்லக்குகளையும் விமானங்களையும் பொம்மைகளையும்.

அந்தக் குப்பை கூளங்களுக்கு நடுவேதான் அந்தப் பாழ்கிணறு இருந்தது.

மெல்லிசை நிகழ்ச்சியை எதிர்பார்த்து ஆவலுடன் வந்த சியாமாவுக்கு எப்படிப்பட்ட அதிர்ச்சி! கிணற்றைச் சூழ்ந்து ஏழெட்டுப் பேர் குனிந்து கொண்டிருக்கிறார்கள். வாய்மீது கையைக் குவித்துக் கொண்டு ''வசந்தி! வசந்தி!'' என்று மாற்றி மாற்றிக் கூவிக் கொண்டிருக்கிறார்கள்.

சிலர், டார்ச்சைக் கிணற்றினுள் அடித்தபடி ''பயப் படாமல் இருங்க! உதவி வந்துகிட்டே இருக்கு. இதோ ஆள் வருது!'' என்று தைரியம் கொடுத்துக்கொண்டிருக் கிறார்கள்.

பகீரென்றது சியாமாவுக்கு.

என்ன இதெல்லாம்? ஐயோ, என்ன இதெல்லாம்! யாராவது சொல்லுங்களேன்!

வசந்தியைத் தவிர மூன்று பெண் குமாஸ்தாக்கள் அந்தக் கிளையில் உண்டு. அவர்களில் ஒருத்தி, ''அவளை நாம் எத்தனையோ தடவை எச்சரிக்கை பண்ணி யிருக்கிறோம், இங்கெல்லாம் போகாதேன்னு'' என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.

''பின்னே ஏன் போனாள்?''

''ஆர்க்கெஸ்டிராகாரர்கள் வந்திருக்கிறாங்க இல்லையா... அவர்களில் ஒருத்தருக்கு டிரம்மைச் சரியாய் வைச்சுக்க முடியல்லே. இரண்டு நாற்காலியைச் சேர்த்துப் போட்டாங்க. மத்தியிலே ஒரு பலகை வைச்சால் நல்லாயிருக்கும்னார். வேறே யாரையாச்சும் அனுப்பக் கூடாது? நான் போய் எடுத்து வர்றேன்னு கிளம்பிட்டாள். நல்ல காலம் உடனே பார்த்ததாலே...''

தாளவில்லை சியாமாவுக்கு. ''வசந்தி விழுந்துட் டாளா? கிணத்திலேயா? ஐயையோ! யாரும் இறங்கிப் பார்க்கல்லே?''

கிணற்றை நோக்கி ஓடினவளை யாரோ தடுத்து நிறுத்தினார்கள். ''என்னம்மா நீ அறிவில்லாமே பேசறே? இறங்காமலா இருப்பாங்க? இரண்டடி இறங்கறதுக் குள்ளே மூச்சுத் திணறுது. பாழ் கிணறு இல்லே... ஃபயர் சர்வீஸ்காரங்க இதோ வந்துடுவாங்க!''

தீயணைப்புக்காரர்களா? அவர்களுக்கு இங்கே என்ன வேலை?...

வாசலில் பல கார்களின் சத்தம்...

மூன்று கார்கள் வேகமாய் வந்து டக்டக்கென்று நின்றன. ஏ.ஸி.டி.ஓ., டி.ஸி.டி.ஓ., ஜே.ஸி.டி.ஓ.,

எல்லோரும் திமுதிமுவென்று வந்து விட்டார்கள். ஸி.டி.ஓ.வின் பி.ஏ.யும் கூட, ''என்ன விஷயம்னு சார் விசாரிச்சிட்டு வரச்சொன்னார்'' என்று சொல்லிக்கொண்டு ஒரு ஸ்கூட்டரில் வந்து இறங்கினார்.

''ஸ்டுபிட்! ஸ்டுபிட்!'' என்று வெடித்தார். ஜே.ஸி.டி.ஓ., ''என்ன வேண்டியிருக்கு ஆனிவர்ஸரியும் வெண்டைக்காயும்! யார் பர்மிஷன் கொடுத்தாங்க? வேறே இடம் கிடைக்கல்லே உங்க கொண்டாட்டத்துக்கெல்லாம்? ஆஃபீஸ் ப்ரெமிஸஸ்லே எப்படி நடத்தப் போச்சு?... ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிட்டால் யார் மண்டையை உருட்டுவாங்கன்னு நினைச்சீங்க...?

ஒண்ணு கிடக்க ஒண்ணு! ஏழுமலையானே, வசந்தியைக் காப்பாற்றிவிடு. மலைக்கு நடந்தே வருகிறேன். உன் கோவிலில் அங்கப் பிரதட்சணம் செய்கிறேன்...

கணகணவென்று மணியோசை... செக்கச் செவே லென்ற வண்டி... நாலைந்து பேர் குதித்து இறங்கு கிறார்கள். கயிறுகள், பெரிய பெட்டி, ஒரு ஹெல்மெட், முகமூடி, நீண்ட கறுப்புக் குழாய்கள், ஒத்துங்கள் — தயவு பண்ணி எங்களுக்கு இடையூறு செய்யாதீர்கள் — நீங்க வேண்டாம். நான் இறங்கறேன் — பிரியேன் ஐயா கயிற்றை —

வந்து விட்டார்கள்! வசந்தி. இதோ வந்து விட்டார்கள் உன்னைக் காப்பாற்ற. இன்னும் கொஞ்ச நேரம் தாக்குப் பிடி... சில நிமிடங்கள் தான்...

கண்ணீர் திரையிட்ட விழிகளின் வழியே சியாமா பார்த்தபோது —

யாரது? அவன்தான். ராகுல்.

ஒரு வினாடி தன்னை மறந்துவிட்டாள் சியாமா. ''வாங்க, சீக்கிரமாய் வாங்க!'' என்று வாய்விட்டுச் சொல்லியும் விட்டாள்.

அவன் அவளைப் பார்த்த மாதிரி தோன்றிற்றே தவிர, மனசுக்குள் பதிந்த மாதிரி தோன்றவில்லை. வேலை யிலேயே கண்ணாயிருந்தான். அதற்குள் சியாமா சுதாரித்துக் கொண்டு விட்டாள். அவனைச் சூழ்ந்து கொண்ட கும்பலின் பின்னே ஒளிந்து கொண்டாள். ஆனால் அவன் ஆணையிடும் சுறுசுறுப்பு... முதுகிலும் முகத்திலும் சுவாசத்துக்கான கருவிகளைச் சுமந்து கொண்டு... கயிறு... கையை ஆட்டிக் கட்டளைகள் பிறப்பிக்கும் மிடுக்கு...

வசந்தி! தைரியமாயிரு. இவர் உன்னை நிச்சயம் காப்பாற்றுவார்.

சில நிமிடங்களில்...

''இழுங்க, இழுங்க!'' கிணற்றைச் சுற்றி ஒரு திடீர் பரபரப்பு.

கயிற்றை மேலே இழுத்து வட்ட வட்டமாக அவர்கள் போடப் போட சியாமாவின் திகில் ஒரு பந்தாகத் திரண்டு வந்து நெஞ்சை அடைத்துக் கொண்டது.

முதலில் அவன் தலை தெரிந்தது. கைப்பிடிச் சுவரைப் பற்றிக் கொண்டு ஒரு தாவுத் தாவி வெளியே குதித்தான். அடுத்த கயிற்றில், நாற்காலி முடிச்சில் கட்டப் பட்டிருந்த வசந்தி...

சியாமா ஓடினாள் அவர்களருகே. இதயம் என்னமாய் அடித்துக்கொள்கிறது! ராகுலின் பார்வையில் படாதபடி நின்றுகொண்டாள்...

''ஒண்ணுமில்லையே... பிழைச்சிட்டாங்க இல்லே... மூச்சு வருதா... உயிரோடு இருக்காங்க இல்லே...'' பல கேள்விகள் ராகுலைத் துளைத்தன.

''தயவு பண்ணி ஒரு நிமிடம் விலகுங்கள்... அவங்களுக்கு ஒன்றும் ஆபத்தும் இல்லை... ஃபஸ்ட் எய்ட் கொடுக்கணும். கொஞ்சம் காற்று வருகிற மாதிரி நகருங்க. ப்ளீஸ்...'' என்று கேட்டுக் கொண்டவாறே ராகுல் வசந்தியைப் பிணைத்திருந்த கயிற்றை அவிழ்த்து, அவளை மல்லாத்திக் கிடத்தி விலாப்புறங்களில் அமுக்கி, சுவாசம் வருவதற்காகப் படாத பாடு பட்டு...

''மிஸ் வசந்தி... உங்களுக்கு ஒன்றுமில்லை. யூ ஆர் ஆல்ரைட், நாங்க இருக்கிறோம். பயப்படாதீங்க.'' அவன் வாய் சொல்லிக் கொண்டேயிருந்தது.

வசந்தியின் மார்பு இப்போது எழுந்து தாழ்ந்து கொண்டிருந்தது. முகத்தில் ரத்த ஓட்டம் பரவுகிற அறிகுறி தெரிந்தது.

அப்பாடா! அப்பாடா! சியாமாவுக்கு தன் தொண்டையை அடைத்துக் கொண்டிருந்த தடை நீங்கி, இப்போது தான் தாராளமாய் மூச்சுவிட முடிகிற மாதிரி இருந்தது. முதலுதவி கொடுத்துக் கொண்டிருக்கும் ராகுலைப் பார்த்தாள். நெஞ்சில் பெருமிதம் நிறைந்தது.

''யூ டிட் எ ஒண்டர்ஃபுல் ஜாப்!'' என்று அவனையும் அவனது சகாக்களையும் பாராட்டுகிறார்கள்... கை குலுக்குகிறார்கள்... கூல் ட்ரிங்...

அவன் அவர்களுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்கவில்லை. ''ஸ்டிரெச்சரை இறக்குங்க. ஆம்புலன்ஸை கிட்டே ஓட்டி வாப்பா!'' என்று கட்டளைப் பிறப்பித்தவன், ஹெட்கிளார்க்கிடம், ''இனி மேல் அபாயமில்லை. எதற்கும் ஹாஸ்பிடலில் காட்டி விட்டு வீட்டுக்குப் போகட்டும...'' என்றான்.

''இவ்வளவு செய்தீங்க. தயவுபண்ணி ஆஸ்பத்திரி வரைக்கும் போய் நல்லபடியா அவங்க வீட்டுக்குப் போற மாதிரி ஏற்பாடு செய்து கொடுத்துட்டுப் போங்களேன்'' என்றார் டி.ஸி.டி.ஓ.,

தீயணைப்பு வண்டியில் ஏறுவதற்காக ஒரு காலை வைத்திருந்தவன், ''ஓகே'' என்றான். அந்த வண்டியைப் போகச்சொல்லிவிட்டு, ஆம்புலன்ஸில் ஏறிக் கொண்டான்.

ஐந்து நிமிடத்தில் அந்த இடம் காலியாகிவிட்டது. ஒரே ஒரு போலீஸ் அதிகாரி மட்டும் கிணற்றைப் பார்த்து ஏதோ குறிப்பு எடுத்துக் கொண்டிருந்தார்.

''தாங்க் காட்!'' என்று சொல்லிக் கொண்டே எல்லோரும் கட்டிடத்தினுள் போனார்கள். ''மியூஸிக் புரோக்ராம் அவ்வளவுதான்னு நினைச்சிருந்தோம்...''

இத்தனை நேர உளைச்சலுக்குப் பின், நிம்மதியையும் மகிழ்ச்சியையும் தேடிச்செல்கிறவர்கள்... ஆம்புலன்ஸ் வலதுபுறமும் தீயணைப்பு வண்டி இடது புறமுமாகத் திரும்புகின்றன... மெல்லிசையின் இனிய நாதங்கள்

காற்றில் மெல்ல மிதந்து வருகின்றன... இருண்டு கொண்டிருக்கும் சாலையில் ஒவ்வொன்றாக விளக்குகள்...

சியாமா அசையாமல் நகராமல் நின்றிருந்தாள். ராகுல்! ராகுல்! ஒரு பார்வைகூடப் பார்க்காமல்... ஒரு வார்த்தை கூடப் பேசாமல்... ஒரு புன்சிரிப்புக் கூடப் பரிமாறாமல்... போய் விட்டீர்களே! நியாயமா! நியாயமா!

அந்தக் கிணற்றுச்சுவரின் மீது உட்கார்ந்தாள். ஓவென்று அழவேண்டும் போலிருந்தது.

## ஆறு

ராகுலைப் பற்றி நினைக்கக் கூடாது. துளிகூட நினைக்கக் கூடாது. அவனை மறப்பதிலேயே முனைப்பாக இருந்தாள் சியாமா.

''சித்தி! இப்ப என்ன பண்றது சித்தி?'' வாயை இரண்டு கையாலும் பொத்திக் கொண்டு மாலு கேட்டாள்.

''வாயை நல்லாத் திறந்துகொண்டு பேசுடி, கானா!'' என்றாள் சியாமா. ''என்ன ஆயிட்டது உனக்கு?''

''பல்லு விழுந்திட்டுது அக்கா. ஒருத்தருக்கும் தெரியக் கூடாது இல்லே?''

''சீ சீ! போய்த் துப்பிட்டு வா.''

''ஐயையோ! மானத்தைப் பார்க்கிறாப் போலத் துப்பினால் சிங்கப் பல்லு முளைக்குமாம். என் ஃபிரண்ட் ஞானாவதி சொல்லியிருக்கிறாள்!''

'ஞானாவதியுமாச்சு, பாடாவதியுமாச்சு!' என்று சொல்ல வாயெடுத்தாள் சியாமா. நம் சின்ன வயசில்

நாமும் இதே கதையைக் கேட்டிருக்கிறோம் என்பது ஞாபகம் வந்தது. இந்தப் பயங்களெல்லாம் தான் ஒரு குழந்தையின் வாழ்க்கையைச் சுவாரஸ்யமாக்குகின்றன... மாலுவுடன் அவளுடைய அட்வெஞ்ச்சரில் கலந்து கொள்ள வேண்டும் போல் ஆசை ஏற்பட்டது.

''மண்ணிலே புதைச்சிடணுமாம், சித்தி — ஸாரி, அக்கா'' என்று மாலு மேலும் சொன்னாள்.

''ச...ச...சரி, வா.''

கொல்லைப்புறம் இவர்கள் போர்ஷனுக்கும் பின் போர்ஷனுக்கும் நடுவே இரண்டு பூச்செடிகள் போடுகிற அளவுக்கு மண் தரை இருந்தது. அங்கே ஒரு கொட்டாங் கச்சியைக் கொண்டு சிறு பள்ளம் பறித்தாள் சியாமா. ''இங்கே புதை.''

''கண்ணை மூடிக்க சித்தி. நீ மட்டும் பார்க்கலாமா?''

சியாமா கண்ணை மூடிக்கொண்டதும் மாலு தன் வாயில் இருந்ததை ரொம்பப் பத்திரமாய்ப் புதைத்து விட்டு, மண்ணைப் போட்டு மூடினாள். ''கண்ணைத் திறக்கலாம் அக்கா.''

''வாயைக் கொப்புளி நல்லா.''

பின்புறம் எட்டிப் பார்த்த ரங்கம்மாள், ''என்னடி அங்கே சித்தியும் பெண்ணும் திருட்டுத்தனம் பண்ணறீங்க?'' என்று கேட்டாள்.

''எங்களுக்குள்ளே ஆயிரம் இருக்கும். உன்கிட்டே சொல்லுவமா?'' என்றாள் சியாமா. ''இல்லேடி மாலு?''

''உக்கும்.''

அக்கா சிரித்துக் கொண்டே செல்வதைப் பார்த்த போது, பக்கெட் தண்ணீரில் கையைக் கழுவிக் கொண்ட போது, மாலு வாயைத் திறந்து எந்தப் பல் விழுந்தது என்பதைக் காட்டியபோது, அவள் பிஞ்சுக் கரத்தைப் பிடித்துக் கொண்டு வீட்டுக்குள் திரும்பியபோது —

சியாமாவின் இதயம் லேசாயிற்று. ராகுல் நம்மைப் பார்க்கவில்லை, பேசவில்லை என்பதற்காக நேற்று இடிந்து போனது நாமா என்று வெட்கப்பட்டுக் கொண்டாள். தினசரி தெருவிலும் மின்சார ட்ரெயினிலும் ஆபீசிலும் சந்திக்கிற நூற்றுக்கணக்கான பேர்களில் அவனும் ஒருவன். டோண்ட் கேர்காரி என்று பேர் பெற்றிருக்கிற நாமா அந்த ஆளுக்காக ஏங்கினோம்...

முன்னறையில் நாற்காலியை நகர்த்திப் போடும் சத்தம் கேட்டது. என்னதான் செய்கிறார் மாமா?

எட்டிப் பார்த்தாள்.

வெங்கடேசுவரன் உடைசல் மர நாற்காலியில் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந்தார். அவருடைய முதுகுப்புறம் மட்டுமே தெரிந்தது அவளுக்கு. பனியன் அணிந்திருந்தார். அதிலே கையகலத்துக்குப் பெரிசாய் ஒரு கிழிசல்...

ஓகோ, இப்படியெல்லாம் வேஷமா? 'பாவம் வெங்கடேசுவரன். அந்தப் பெண் அவருக்கு ஒரு பனியன் கூட வாங்கித் தருவதில்லை. அரதல் கிழிசலைப் போட்டுக் கொண்டிருக்கிறார்...' என்று நாலு பேர் பேச வேண்டுமாக்கும்...

யாரிடமும் எதுவும் சொல்லவில்லை. பர்ஸை எடுத்து ஜாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டு பஜார் தெருவுக்குப் புறப்பட்டாள்.

ரெடிமேட் கடைக்குள் நுழைந்தாள். மாமா அதிகப் பருமனுமில்லை. ரொம்ப ஒல்லியுமில்லை. மீடியம் சைஸில் ஒரு பனியன் வாங்கிக் கொண்டாள். விலை ஆறேகால் ரூபாய். நல்ல வேளை, பர்சில் ஆறே முக்கால் ரூபாய் சொச்சம் இருந்தது.

வீட்டுக்குத்திரும்பியபோதும் மாமா எழுதிக் கொண்டு தான் இருந்தார். பனியன் பாக்கெட்டை முதுகுக்குப் பின்னே மறைத்துச்கொண்டாள்.

"மாமா எழுந்திருங்க!"

"என்னம்மா?"

"எழுந்திருக்கன்னா எழுந்திருங்களேன்."

"சரி, எழுந்தேன்." எழுந்து கொண்டார் அவர்.

"கண்ணை மூடிக்கிட்டுக் கையை நீட்டுங்க. ஒரு பிரஸெண்ட் தரப்போறேன்!"

தான் எழுதிக் கொண்டிருந்ததை ஓர் அட்டையின் கீழே வைத்துவிட்டு அவர் திரும்பினார். "பரவாயில்லை. இப்படி மேஜை மேலேயே வையேன்."

"கையை நீட்டுங்கன்னா நீட்டுங்க."

"என்ன அப்படி ஒரு அதிசயப் பொருள்?" என்று கேட்ட வண்ணம் ரங்கம்மா உள்ளேயிருந்து வந்து விட்டாள். அவள் பின்னாலேயே மாலுவும், "நான் பார்த்துட்டேன்!

நான் பார்த்துட்டேன்!'' என்று சொல்லிக் கொண்டு வந்தாள்.

அவர்களுக்கும் தெரியாதபடி, மாமாவும் பார்த்து விடாதபடி சுவர் ஓரமாகத் திரும்பிக் கொண்டாள் சியாமா. ''ஊகூம்! கையை நீட்டுங்கன்னா ஏன் இப்படித் தயங்கறீங்க?''

''அது... வந்து... நீ ஏதாவது சொல்லுவே...'' என்று தயங்கிக் கொண்டே வெங்கடேசுவரன் உள்ளங்கையை விரித்தாற்போல் நீட்டினார்.

அவர் ஏன் தயங்கினாரென்று தெரிந்துவிட்டது.

ஆட்காட்டி விரலின் நுனியிலும் கட்டை விரலின் நுனியிலும் ஈரமான மஞ்சள் பொடி தெரிந்தது. மேஜையைப் பார்த்தாள். ஒரு கடிதத்தின் மூலை தென்பட்டது — மஞ்சள் தடவிய முனை. அருகில் ஒரு பிளாஸ்டிக் கிண்ணத்தில் மஞ்சள் பொடி கரைத்த தண்ணீர்...

சியாமாவின் கல்யாண விஷயமாய் யாருக்கோ ஜாதகத்தை அனுப்புகிறார்...

உதட்டைக் கடித்துக் கொண்டு அட்டையின் கீழிருந்த ஜாதகத்தையும், கவரையும் எடுத்தாள். விலாசம் எழுதப் படாத புதுக்கவர்...

''கிழிக்காதே! கிழிக்காதே!'' என்று சட்டெனத் தடுத்தார் வெங்கடேசுவரன். ''அது தப்பு சியாமா. ஆகாது...''

'சியாமா!' என்று உள்ளுக்குள்ளிருந்து ஒரு கேலியான குரல் அவளைக் கூப்பிட்டது. 'மாமா ஏன்தான் இப்படிப்

பதறுகிறாரோ! கல்யாணம் என்றால் சீறுகிற மாதிரி, ஜாதகத்தை எடுத்தால் கிழித்துப் போடுகிற மாதிரி — அந்த மனநிலையிலா நீ இருக்கிறாய்?'

''இந்தாங்க'' என்று பாக்கெட்டைப் பிரித்து அவர் கையில் பனியனைத் தந்தாள்.

''என்னம்மா இது?''

''அந்தக் கிழிசல் பனியனை முதலில் கழட்டி எறியுங்க, மாமா!'' என்றாள் அவள். ''ஒரு வார்த்தை என்கிட்டே சொன்னால் வாங்கித் தந்திருக்க மாட்டேனோ? அல்லது நீங்களாகவே வாங்கிக்கொண்டிருந்தால் தான் ஏன் வாங்கினீங்கன்னு கேட்டிருக்கப் போறேனா?''

வெங்கடேசுவரனின் முகத்தில் நிம்மதி படர்ந்தது. ஜாதக விஷயமாக அவள் பெரிதாய்ச் சண்டை போடாதது அவருக்குத் தைரியம் தந்தது. ''ரைட்! எனக்கு என்னென் வேணும்னு சொல்றேன், வாங்கித் தரியா? இரண்டு லட்சம் ரொக்கம், ஒரு பங்களா, ஒரு கார்...'' என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

ரங்கம்மாவும், ''எனக்கு நாலு ஸ்டீல் பீரோ நிறையப் பட்டுப் புடவை, நகைகள். மாலுவுக்குத் தனியாய் ஒரு பீரோ...'' என்றாள்.

அன்று ஆபீஸ் விடுமுறையாகையால், தன் கையிருப்பு மொத்தத்தையும் பனியனுக்கே செலவழித்து விட்டோம் என்பது சியாமாவுக்குத்தெரியவில்லை. சாயந் தரம் வசந்தியைப் பார்த்து வரலாமென்று ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டபோதுதான், கையில் ஐம்பத்திரண்டே பைசா இருப்பதைக் கண்டாள்.

பரவாயில்லை. சிநேகிதிக்காக கொஞ்சம் நடக்கலாம்...

வசந்தியினால் படுக்கையில் திரும்பக் கூட முடிய வில்லை. காலில் எலும்பு முறிவுக்காகப் பலமான கட்டுப் போட்டிருந்தார்கள். மண்டையிலும் ஒரு கட்டு... ஒன்று மில்லையென்று நினைத்தது எத்தனை தப்பு!...

''நான்... நான்... ஏற்கெனவே இருக்கிற லட்சணத்துக்கு இதெல்லாம் வேறே!'' என்று திணறித் திணறிப்பேசினாள் அவள். ''ஒரு மாசம் ஆகுமாம்...''

''வேண்டாம்... அதிகம் பேசாதே'' என்று தடுத்தாள் சியாமா. இருந்தாலும் அவளை உற்சாக மூட்டுவதற்காக, ''ஆமாம், தண்ணீர் வேணும்னா பானையிலிருந்து ஒரு டம்ளர் மொண்டுக்கக் கூடாதோ? கி...கி...கிணத்திலேயா குதிக்கணும்?'' என்றாள்.

வசந்தி பலவீனமாகச் சிரித்து விட்டு, ''நான் உயிர் பிழைச்சதே பெரிய காரியமாம். நேத்து என்னை ரெஸ்க்யூ பண்ணிய ஃபயர் சர்வீஸ்காரரை எல்லாரும் புகழறாங்க,'' என்றாள்.

சியாமாவுக்குள் ஒரு கிளு கிளுப்பு ஏற்பட்டது. இருந்தாலும் பேச்சை மாற்றினாள். ''முசுடு முசுடுன்னு சொல்லுவியே தேவராஜ். அதை உங்க டிவிஷனுக்கே மாத்திட்டாங்களே! வந்திட்டுதா? அதன் சிடுசிடுப்பை யெல்லாம் எப்படித்தான் பொறுத்திட்டிருக்கியோ?''

''பாவம் அந்த தேவராஜ். அம்பத்தூர் பக்கத்திலே ஒரு செக் போஸ்ட்டுக்குப் போடப் போறாங்களாம்.

வெய்யிலிலே சாகணும்ணு சொல்லி அழுதுகிட்டே யிருக்கான் மனுஷன்.''

''செக் போஸ்டா? இன்ட்டரஸ்டிங்கா இருக்குமே? நானா இருந்தால் நல்ல டிடெக்டிவ் வேலை கிடைச் சுதுன்னு சந்தோஷப்படுவேன். நாள் பூரா போற வர்ற வண்டிகளை நிறுத்திட்டே இருக்கலாம். நல்ல தமாஷான வேலை.''

வசந்தி சிரித்தாள்.

''உன் அம்மா வந்தாங்களா?'' என்றாள் சியாமா.

''ஊம்...ஊம்...''

''அந்தப் பேஷண்ட்டுடன் அதிகம் பேச்சுக் கொடுக் காதீங்கம்மா.'' என்று ஒரு நர்ஸ் சியாமாவை எச்சரித்து விட்டுச்சென்றாள்.

''அந்த ஃபயர் சர்விஸ்காரர்... ராகுல்னு பேர் இல்லே...?''

ஏன் திரும்பத் திரும்ப அதே பேச்சை எடுக்கிறாள் வசந்தி?

''நீ நேத்து அங்கே இருந்தேன்னு அவர் சொன்னார். உன்னைத் தெரியும் போலிருக்கு... அதிருக்கட்டும், சியாமா. எத்தனை நாளைக்கடி எனக்கெல்லாம் கல்யாணச் சாப்பாடு போடாமல் ஏமாத்தப் போறே?''

''உன் கழுத்திலே ஏறட்டும். அதுக்கு மறுநாள் எனக்கு! சொல்லிக்காமே மட்டும் பண்ணினுடாதே!''

விஸிட்டர்கள் நேரம் முடிந்து விட்டதற்கான மணி அடித்தது. ஒரு கட்டிலருகே ஸ்கிரீன் போட்டு மறைத்திருந்தார்கள். அபாயமான கேஸ் என்பதாலோ, உடம்பைச் சுத்தம் கித்தம் செய்கிறார்களோ, தெரியவில்லை. வெராந்தாவில் ஒரு பெரியவர், 'ரமணி!' என்று கத்திக் கொண்டே தலை தெறிக்க ஓடினார். பின் தொடர்ந்து சிலர் ஓடினார்கள். நர்ஸ்களின் டக்டக் நடை, உரித்த ஆரஞ்சு தோல்களின் நெடி, மருந்து நாற்றம், பிளாஸ்க் மூடிகள் திருகப்படும் ஓசை, முக்காலிகள் நகர்த்தப்படும் சத்தம்...

சியாமாவின் பார்வை வெராந்தாவின் பக்கமே சுழன்றது. யாரை எதிர்பார்க்கிறாள் அவள்? ஒருத்தரையுமில்லை, ஒருத்தரையுமில்லை! வசந்திதான் அவனைப் பற்றிப் பேச்செடுத்தாள். மற்றபடி அவனை நினைக்காமல் தானே இருக்கிறோம்? மண்டையா வெடித்துவிட்டது.

''நான் வர்றேன். ஒரு வாரம் ஸி.எல்.போட்டு வீட்டிலேயே இரு. ஆபீசுக்கு வந்தப்புறம் எனக்குப் போன் பண்ணு.''

சினேகிதியின் கன்னத்தில் மெல்ல ஒரு தட்டுத் தட்டி விடை பெற்றுக் கொண்டு வாசலுக்கு வந்த போது, வெளியே இன்னும் இத்தனை வெளிச்சமாயிருப்பதைக் கண்டு ஆச்சரியம் ஏற்பட்டது. ஸென்ட்ரல் ஸ்டேஷன் கடியாரம் ஆறு மணி காட்டியது. ஒரு கணவனும் மனைவியும் அவளுக்குக் கொஞ்சம் முன்னே போய்க் கொண்டிருந்தார்கள். அவள் தன் குழந்தையைத் தோளில் சாத்தி, காலோடு தலை போர்த்துக் கொண்டிருந்தாள். ஆணா பெண்ணா என்று தெரியாவிட்டாலும் அந்தப் பேபி கொட்டக் கொட்ட முழித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

பின்னால் வந்து கொண்டிருந்த கணவன் 'ராஸ்கலுக்கு ஒன்றுமில்லை. சிரிக்கிறான் பார்!' என்று சொல்லிக் கொண்டிருந்தான். அவள் தன் தோளிலிருந்து குழந்தையை எடுத்து, முகத்தைப் பார்த்துச் சிரித்துவிட்டு, திரும்பித் தோளில் சாத்திக் கொண்டாள். பிறகு அவர்கள் தோளோடு தோள் இடிக்கப் பேசிக் கொண்டே சுரங்கப் பாதையில் இறங்கிச்சென்று விட்டார்கள்.

இருந்த சில்லறையில் கோடம்பாக்கம் வரை ரயிலில் வர முடிந்தது. பிறகு மறுபடி நடை....

கறிகாய்க் கடைகளைத் தாண்டி சியாமா நடந்து கொண்டிருந்தாள்.

"உங்களுக்குச் சேப்பங்கிழங்கு பிடிக்குமே? வாங்கறேன்," என்று ஒரு பெண் குரல்.

"கோவைக் காய் உனக்குப்பிடிக்கும். அதை வாங்கிக்க முதலில்," என்று ஒரு ஆணின் பதில்.

இன்னதென்று புரியாத நெகிழ்ச்சிகள் சியாமாவின் இதயத்தை நெருடின.

நன்றாக இருட்டிவிட்டது அவள் வீட்டை அடைந்த போது.

வாசல் புறத்தில் அழுது வடிந்து கொண்டிருந்த பல்பை மாற்றி, பளீரென்று அறுபது வாட் பல்பு மாட்டிக் கொண்டிருந்தார் வெங்கடேசுவரன். அவள் வாங்கித் தந்த பனியனைப் போட்டிருந்தது மட்டுமல்ல; அவர் முகத்தில் ஓர் அலாதியான உற்சாகம் தென்பட்டது. கண்கள் குறும்புத் தனமாக மினுமினுத்துக் கொண்டிருந்தன.

''என்ன மாமா, ஓ..ஓ... ஒரே ஜோதிமயமா இருக்கிறது வீடு மொத்தமும்?'' என்றாள்.

''என்ன சொல்லட்டுமா?'' என்று உரத்த குரலில் ஆரம்பித்தவர், உடனே சிறிது தயங்கி, ''அதாம்மா... உன் விஷயம்தான்... அந்தப் பிள்ளை வந்திருந்தான்...'' என்றார்.

''எந்தப் பிள்ளை?'' என்றாள் சியாமா.

''அவன் தான்... அந்த ஃபயர் சர்விஸ் பையன்... ராகுல்...''

''வரட்டுமே?''

உள்ளேயிருந்து வேகமாய் வந்தாள் ரங்கம்மா... ''என்னத்துக்கு இப்படிச் சுற்றி வளைச்சுப் பேசறீங்க? டக்குனு சொன்னால் தெரிஞ்சுக்கிறாள். அவளுக்குத் தெரியாதா நல்லது கெட்டது? என்னிக்கோ என்னவோ நடந்தது என்கிறதுக்காக இத்தனை நாளும் பிடிவாதம் பிடிச்சாள். இவன் தங்கமான பிள்ளை.... இதைவிட நல்ல இடம் கிடைக்காதுன்னு அவளுக்குத் தெரியாதா?...''

''அக்கா! என்னக்கா நீ பாட்டுக்குப் பேசிட்டே போறே?''

வெங்கடேசுவரன், பட்டென்று, ''அதாம்மா. அவனுக்கு உன்னைக் கல்யாணம் பண்ணிக்க ரொம்ப இஷ்டமாம். அன்னிக்கே ஊகிச்சேன். இன்று நிச்சயமாய் சொல்லிட்டுப் போனான். நீ என்ன சொல்றே?'' என்றார்.

''நீங்க என்ன சொன்னாலும் கட்டுப்படறேன் மாமா!''

ஒரே பாய்ச்சலில் அவள் வீட்டுக்குப் போய் விட்டாள். வெங்கடேசுவரனும் ரங்கம்மாளும் பிரமித்து ஒருவரையொருவர் பார்த்தபடி நின்றார்கள்.

## ஏழு

மாமா திகைத்தது, அக்கா அதிசயித்தது, மாலு சிரித்தது, எல்லாருமாய் ஒரே சமயத்தில் சளசளவென்று பேசியது, தன்னைக் கேலி செய்தது, சாப்பாட்டின் போது கும்மாளமடித்தது, ''நன்றாகச் சாப்பிடடி! 'என்ன, என் பெண்டாட்டியை இளைக்க வைச்சுட்டிங்க!' என்று அந்த ஃபயர் சர்விஸ்காரர் என்னைத் திட்டப் போறார்!'' என்று அக்கா செல்லமாய்க் கரண்டியால் தலையில் தட்டியது எல்லாம் அடங்கி, இப்போது அவர்களெல்லாம் தூங்கப் போய்விட்ட நிலையில், சியாமா மட்டும் விழித்துக் கொண்டு ஜன்னலடியில் உட்கார்ந்திருந்தாள்.

ஜன்னலின் விளிம்பையொட்டிய சாணகல மேடையில், கால்களை மடித்துக் கட்டிக் கொண்டு, மோவாயை முழங்கால் மீது ஊன்றிக் கொண்டு, தெருவைப் பார்த்தாற் போல் அவள் உட்கார்ந்திருந்தாள்.

வீடும் தெருவும் மாம்பலம் மொத்தமும் உறக்கத்தின் மடியில் துவளத் தொடங்கிய அந்தச் சூழ்நிலை, ஆனந்தத்தில் கூத்தாடுகிற மாதிரி அவளுக்குப் பட்டது. நொண்டி நொண்டி ஓடுகிற அந்தத் தெரு நாய், துள்ளி விளையாடுகிற மாதிரி இருந்தது; தீனமாய்க் கையேந்துகிற ராப்பிச்சைக்காரனின் புலம்பல் உல்லாசத் தெம்மாங்கு போல் கேட்டது; இப்போதோ அடுத்த நிமிடமோ என்று

மினுமினுத்த கார்ப்பரேஷன் விளக்கு, ஆயிரம் கோடி சூரியப் பிரகாசமா ஜொலித்தது; ஜன்னல் கதவின் மேல் உலர்த்தியிருந்த பழைய கந்தல் துணி காற்றில் மெல்ல அசைவது, 'குதி! குதி!' என்று குதிக்கிற மாதிரி இருந்தது.

'என்ன சொன்னேன்? ஏன் சொன்னேன்? எதுக்காகச் சொன்னேன்?'' என்று தன்னைத்தானே அவள் கேட்டுக் கொண்டாள். ஆனால் எந்தச் சக்தி தன்னைக் கல்யாணத் துக்குச் சம்மதிக்க் வைத்தது என்று யோசித்தாளே தவிர, அந்தச் சக்தியின் மீது அவளுக்கு, என்ன முயன்றும், கோபம் வரக் காணோம். அந்தச் சக்தி அதுவாயினும் அது தன் மனத்தில் மட்டுக்கடங்காப் பரவசத்தைப் பரவவிட்டி ருக்கிறது என்பது மட்டும் அவளுக்குப் புரிந்தது.

ராகுல்... ராகுல்... அவன் முகம் அழகானது என்பது மட்டுமே அவளுக்குத் திரும்ப திரும்ப ஞாபகம் வந்தது. ஒரு முறை கூட அதை முழுசாக, திருப்தியாக, நன்றாகப் பார்க்காமல் இருந்துவிட்டோம். ஆனால் அந்தக் குரல்... வார்த்தைகளை அவர் உச்சரிக்கிற விதம்...

ஜன்னல் கம்பியில் தலைசாய்த்தபடியே அவள் தூங்கிப் போனாள். தெரு வெளிச்சத்தில் அவளை யாரேனும் பார்த்திருந்தால், 'பாவம், பைத்தியம் போலிருக்கிறது. சிரித்துக்கொண்டே தூங்குகிறதே?' என்று பரிதாபப் பட்டுக்கொண்டு சென்றிருப்பார்கள்...

**மா**ர்க்கெட்டுக்குப் போய் விட்டு வந்த வெங்கடேசுவரன் கறி காய்களை வெளியே எடுத்து வைத்தபடி சொல்லிக் கொண்டிருந்தார். ''போன் நம்பர் கொடுத்திருந்தானே... விஷயத்தைச் சொன்னேன்.''

''ஒரே சந்தோஷமாக்கும்?'' என்று ரங்கம்மா கேட்டாள்.

''குதிப்பானா என்ன? அடக்கமான பையனாச்சே? சியாமா சம்மதிச்சிட்டாளப்பா என்றேன். 'அப்படியா சார்? ரொம்ப சந்தோஷம் சார். உங்க ஆசீர்வாதம் சார்' என்றான்.''

''தகப்பனார் ஏதோ கிராமத்திலே இருக்கிறதா சொல்லல்லே?''

''ஆமாம், அவருக்கும் எழுதணும். ஜாதகம் வேணும். நேரில் வந்து வாங்கிக்கிறேன்னு சொன்னேன். 'நீங்க சிரமப் பட வேண்டாம் சார், நானே கொண்டு வந்து தர்றேன்னு சொன்னான். எத்தனை பண்பாடுள்ள தங்கமான பிள்ளை!''

''பண்பாடோ, தங்கமோ! சியாமாவை ஓடி வந்து பார்க்கணும்னு அத்தனை ஆசை!'' என்று சிரித்தாள் ரங்கம்மா. ''அதிருக்கட்டும்.ஜாதகம் கீதகம் எல்லாம் எதுக்கு? மனசுப் பொருத்தம்தான் முக்கியம். அது பொருந்தியிருக்கிறது போறாதா?''

''ஏதோ பெரியவர்கள் ஏற்படுத்தி வைத்த வழக்கம். நம்ம காலம் வரை காப்பாத்தி வந்து விடுவோம். அடுத்த தலைமுறைகாரர்கள் என்னவோ பண்ணிக் கொள் ளட்டும்,'' என்றவர், ''சியாமா!'' என்று கூப்பிட்டார்.

இரண்டாம் முறையாகக் கூப்பிட்ட பிறகு தான் அவள் திடுக்கிட்டு விழித்து, ''என்ன மாமா?'' என்றாள்.

''ஊம், ஊம்! நீ என்ன பண்ணுவே! நினைவெல்லாம் எங்கேயோ இருக்கு!'' என்று அவர் சிரித்தார்.

''விஷயத்தைச் சொல்லுங்க.''

''காதிலே ஏறுமா?''

''ஏறும், ஏறும்.''

''நிச்சயமாய்?''

''அட, நிச்சயமாத்தான் மாமா.''

''நானும் உன் அக்காவும் டவுனுக்குப் போகிறோம். ஒரு காரியம் இருக்கு. மாலு ஸ்கூலுக்குப் போய் விடுவாள். நீ பயமில்லாமல் வீட்டிலே இருப்பாயா?''

''பயமா? என்ன பயம்!''

''அந்தப் பிள்ளை வரேனென்று சொல்லியிருக்கிறானே? வருவான். நீ தான்...''

ரங்கம்மா குறுக்கிட்டு, ''என்ன இது, இன்னும் அவன் இவன் என்று மரியாதையில்லாமல்?'' என்று கண்டித்தாள்.

''தப்பு, தப்பு, தப்பு. கோபிச்சுக்காதே, சியாமா. அவர் வருகிறபோது நீதான் அவரை வரவேற்று, அவரை இருக்கச் சொல்லி, அவர் கொண்டு வருகிற ஜாதகத்தை...'' என்று சொல்லிக் கொண்டிருந்தவர், தெருப்பக்கம் தற்செயலாகப் பார்த்ததும், 'சுவாமி! என்று கைதட்டிக் கூப்பிட்டுக் கொண்டே வாசலுக்குப் போய், வழுக்கையும், தொப்பையும் பேண்ட்டுக்கு மேல் போட்ட கையகலப் பெல்ட்டுமாக இருந்த ஒருவரை உள்ளே அழைத்து வந்தார். ''உட்காருங்கள் சார்,'' என்று சொல்லி விட்டு, ''ரங்கம்! சாருக்குக் காப்பி கொண்டு வா,'' என்றார்.

''இப்பத்தான் சாப்பிட்டு விட்டு வர்றேன்,'' என்று பிகு செய்து கொண்டார் சுவாமி. ''என்ன விசேஷம்? எதுக்கோ கூப்பிட்டீர்களே?''

''ஒரு விசேஷமுமில்லை. கோகுலாஷ்டமி சீரிஸை சபாவில் ரொம்ப நன்றாய் நடத்தினீர்களாம். மாம்பலம் பூரா அதே பேச்சு. நேரில் உங்களைப் பார்த்துச் சொல்லணும் என்று நினைத்தேன். நீங்கள் இந்தப் பக்கம் எங்கே வருகிறீர்கள்!...

''ஹி...ஹி...'' அவர் காப்பியை அருந்தினார்.

''யார் சார் இந்தக் காலத்தில் உங்கள் மாதிரி பொதுக் காரியத்தைத் தலையில் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்கிறார்கள்?'' என்று இன்னும் கொஞ்சம் பாராட்டி அவரை அனுப்பி வைத்தார் வெங்கடேசுவரன்.

ரங்கம்மா திகைத்துப் பிரமித்து நின்று கொண்டிருந்தாள். ''என்ன வந்தது உங்களுக்கு? இந்த மனுஷன் சுவாமியைக் கண்டாலே உங்களுக்குப் பிடிக்காதே!''

''உஷ்!'' என்று அவளை அடக்கிவிட்டு, தெருப் பக்கம் பார்த்துக்கொண்டார் வெங்கடேசுவரன். ''அவருக்கு இந்த மாம்பலத்திலே பதினேழு வீடு இருக்கு. அத்தனையும் குடக்கூலிக்கு விட்டிருக்கிறார். ஒன்று மாத்தி ஒன்று காலியாகிக் கொண்டேயிருக்கும். மனுஷனைக் கொஞ்சம் காக்கா பிடித்து வைத்துக் கொண்டால், சியாமாவுக்குக் கல்யாணம் ஆன கையோடு அவளுக்குச் சட்டுனு ஒரு குடித்தனம் வைக்கச் சௌகரியமாயிருக்கும்...''

''ஓகோ! அப்படி ஒரு ஐடியாவா!'' அத்தனை நேரமும் பேசாமல் காய்கறி நறுக்கிக் கொண்டிருந்த சியாமா எழுந்து வந்தாள். ''கல்யாணம் பண்ணி வைக்கத் துடிச்சது, என்னைத் துரத்திவிட்டு அக்காவும் நீங்களும் தனிக்குடித்தனம் போடத்தானா? முடியாது மாமா. கல்யாணத்துக்குப் பிறகும் இங்கேயேதான் இருப்போம்!''

மாலு கடகடவென்று சிரித்து, ''ஐயய்ய! கல்யாணத்தைப் பத்தி சித்தி வெட்கமில்லாமே பேசறாள்!'' என்றாள்.

வெங்கடேசுவரன் சிரிக்கவில்லை. ''சியாமா நான் உன் அக்காவைக் கல்யாணம் பண்ணிக்கொண்ட போது தாலி கட்டியானதும் உன் அப்பா காலில் விழுந்து நமஸ்காரம் பண்ணினேன். என்னைத் தோளைப் பிடித்து நிறுத்திக் கொண்டு அவர் என்ன சொன்னார் தெரியுமா? இப்பத்தான் போலே இருக்கு.''

''என்ன சொன்னார்?''

''அவர் காதிலே விழுந்ததாம் யாரோ பேசிட்டது. 'இனிமே வெங்கடேசுவரனுக்கென்ன, மாமனார் பணக்காரர், ஜாம் ஜாம்னு மாமனார் வீட்டிலே உட்கார்ந்து சாப்பிடலாம்' என்றார்களாம். 'மாப்பிள்ளை, அந்த மாதிரி உங்களுக்கும் மனசிலே ஏதாவது எண்ணம் இருந்தால் இப்பவே அதைத் துடைச்சுப் போட்டுடுங்க. பெண்டாட்டியின் வீட்டோடு இருக்கிறதைக் காட்டிலும் அசிங்கம் கிடையாது' என்று படபடவென்று சொன்னார். ஐயய்யோ, நான் அப்படி எதுவும் நினைக்கலேன்னு சொல்லி, அவரைச் சமாதானப்படுத்துவதற்குள் போதும் போதும்னு ஆயிட்டுது. உன் அப்பா எனக்குச் சொன்ன

வார்த்தையைத் தாம்மா நான் நாளை உன் புருஷனுக்கும் சொல்வேன்.''

ரங்கம்மா சிரித்தாள். ''நன்றாய்த்தான் இருக்கிறது நீங்கள் பண்ணுகிற எச்சரிக்கை! நாளைக்கு ஒரு நல்லது பொல்லாததுக்கு சியாமாவும் அவள் புருஷனும் நம் வீட்டுக்கு வந்தால் கூடத் தடி எடுத்து விரட்டிடுவீங்க போலிருக்கே!''

''நீங்க வெளியே போறப்போ ஆபீசுக்குப் போன் பண்ணி எனக்கு அரை நாள் லீவு சொல்லிடுங்க, மாமா'' என்றாள் சியாமா.

''எவ்வளவு சுலபமாய்ச் சொல்லிவிட்டாள் பார்த்தீங்களா!' என்று பரிகாசமாக மோவாயை இடித்துக் கொண்டாள் ரங்கம்மா. ''ஒரு நாள் கிழமை என்றால் அரை மணி பர்மிஷன் வாங்கிட்டுச் சீக்கிரம் வாடின்னு ஆயிரம் தடவை கெஞ்சணும் இவளை! இப்ப என்னவென்றால்...''

''டும் டும் டும்,'' என்று கதவைத் தட்டினாள் மாலு.

*சா*ர் இல்லையா என்று கேட்டான். தலையசைத்தாள்.

அவரோட மிஸஸ் — உங்கள் ஸிஸ்டர் — அவர்கூட இல்லையா என்று கேட்டான்.

தலையசைத்தாள்.

மாலு — என் பெட்டாச்சே-ஸ்கூலுக்குப் போய் விட்டாளா என்ன என்று கேட்டான்.

தலையை அரை வட்டமாக ஆட்டினாள்.

நீங்கள் மட்டும் தனியாகவா இருக்கிறீர்கள் என்று கேட்டான்.

தலையை மேலும் கீழுமாக அசைத்து, புருவத்தை உயர்த்தினாள்.

சும்மாதான், நீங்கள் தனியாய் இருக்கிறீர்களே என்று கேட்டேன் என்றான்.

அவள் மௌனமாக டபரா டம்ளரில் காப்பி எடுத்து வந்து வைத்துவிட்டு, ஓரமாக நின்றாள்.

என்னோடு பேசக்கூடாது என்று யாராவது தடை உத்தரவு போட்டிருக்கிறார்களா என்று அவன் கேட்ட பிறகுதான் சியாமா வாயைத் திறந்தாள் முதல் முறையாக. ''இல்லை, எனக்கும் நடுநடுவே மௌன விரதம் இருக்கத் தெரியும் என்று காட்டுவதற்காக இப்படி இருக்கிறேன்.''

''அந்த 'ம்'முக்கு ஏதோ விசேஷ அர்த்தம் இருக்கிற மாதிரி இருக்கிறதே? இதற்கு முன் வேறே யாரோ மௌனம் இருந்து, அதற்கு நீங்கள் டிட் ஃபர் டாட் செய்கிற மாதிரி...''

''தாங்கள் அன்னிக்கு வசந்தியைக் கிணத்திலே யிருந்து ரெஸ்க்யூ பண்ணின போது நானும் பக்கத்திலே தானே இருந்தேன்? தங்களிடமிருந்து ஒரு வார்த்தையாவது கேட்க நினைச்சேன். தாங்கள்...''

''ஐயையோ, இதென்ன சகிக்க முடியாத, தாங்கள், தங்கள்?''

''நீங்கள் என்னை' 'நீங்கள்' போடறப்போ நான் அதுக்கு மேலே ஒண்ணு போட்டாக வேண்டி யிருக்கே?''

ராகுல் சட்டெனச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் ஒரு கூச்சம் தெரிந்தது. ''நான் வேலையாய் இருந்தேன்... வேண்டுமென்று பேசாமல் இருக்கவில்லை... நீங்க-நீ-ஏன் அங்கே வந்தேன்னு தெரிஞ்சிட்டேன். அதனாலேதான் உங்க சினேகிதின்னு தெரிஞ்சதாலே தான் அந்தக் கூலிங் கிளாசை இங்கே கொண்டு வந்து தந்தேன்...''

அவன் பேசுவதையே கவனித்தபடி சியாமா பேசாமல் நின்றாள். நாற்காலியில் கால்களை நீட்டிக் கொண்டு சகஜமாக உட்கார்ந்திருப்பது போல் தோன்றி னாலும், அவனுக்குள் ஒருவகை சங்கோஜம் குறுகுறுத்துக் கொண்டிருப்பதை அவள் தெரிந்து கொண்டாள். வெங்கடேசுவரன் இருப்பார் என்று எதிர்பார்த்து, சப்பல்ஸை நடையிலேயே அவன் விட்டு விட்டு வந்திருந்தான். வலது கால் பெருவிரலால் அவன் ஏதோ எழுத முயலுகிற மாதிரி இருந்தது. எஸ் எழுத்து மாதிரி அவளுக்குத் தோன்றியது. சியாமா என்று எழுதப் பார்க்கிறானோ என அவன் காலையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் ஒய் என்று அடுத்த எழுத்து எழுதவில்லை. வெங்கடேசுவரன் சுருட்டி எறிந்திருந்த பொட்டலக் காகிதம் அவன் காலுக்கு அகப்பட்டது. அதை விரல்களால் கவ்வ முயன்றான். அது நழுவி நழுவி விழுந்து கொண்டிருந்தது. அதை நாமே எடுத்து அந்த விரல்களுக்குள் திணிக்கலாமா என்று நினைத்துக் கொண் டாள். அதற்குள் அவன் அதை இரண்டு கால்களாலும் சேர்த்துப் பிடித்துவிட்டு, அவளை நிமிர்ந்து நோக்கினான். இத்தனை நேரமும் அவள் அந்தக் கால்களின் விஷமத்தையே கவனித்த படி இருந்திருக்கிறாள் என்பதை

உணர்ந்ததும் அவனுக்குச் சிரிப்பும் வெட்கமும் வந்து விட்டது. தீயிலும் தண்ணீரிலும் தயங்காமல் குதித்து விளையாடுகிற தொழிலில் உள்ளவருக்கு, இப்படிப்பட்ட கூச்சம் எங்கிருந்துதான் வருகிறதோ என்று அவள் ஆச்சரியம் கொண்டாள்.

''இன்றைக்கு நீ ஆபீசுக்குப் போகவில்லையா?'' என்றான் கடைசியில்.

''நீங்க வருவீங்கன்னு மாமா சொல்லியிருந்தார். அரை நாள் லீவு போட்டேன்.''

''ஜாதகம் கேட்டிருந்தார். இதோ,'' என்று பையிலிருந்து எடுத்துத் தந்தான் அவன். ''உங்க — உன் வேலை எப்படி? கஷ்டமானதா?''

''கொஞ்சம் கஷ்டமானதோ என்னவோ. ஆனால் உயிரைப் பணயம் வைத்து செய்ய வேண்டிய வேலை யில்லை.''

அந்தப் பாராட்டு யாரைக் குறித்து என்பதை உணர்ந்து அவன் முகத்தில் மறுபடி கூச்சம் படர்ந்தது. ''இது எனக்கு ரொம்பப் பிடித்த வேலை. பி.காம். பட்டதாரியாய் ஏதோ ஒரு பாங்க்கில் வேலைக்குப் போயிருக்க வேண்டியவன் நான். என் அம்மாவாலே இந்த ஃபீல்டுக்கு வந்தேன். இன்னொரு நாள் சாவகாசமாய் இருக்கிறப்போ சொல்றேன். இனிமே ரொம்பக் காலம்... வாழ்நாள் பூரா பேசிகிட்டே இருக்கணுமே? அதுக்குக் கொஞ்சம் ஸ்டாக் வைச்சுக்கிறேன்.''

சியாமா சிரித்தாள்.

''காப்பி நீ போட்டதா?''

பிறகுதான் அவளுக்கு ஞாபகம் வந்தது. எவ்வளவு ஆறிப் போயிருந்திருக்கும் அது!

''எனக்கு நன்றாய்ப் போடத் தெரியாது. அக்காவே போட்டு பிளாஸ்கில் வைத்து விட்டுப் போயிருந்தாள்.''

''காப்பியே போடத் தெரியாதுன்னா, சமையல்?''

''ஏதோ சோட்டா சோட்டா மாலும்.''

''நஹி நஹி,'' என்றான் அவன்... ''நான் சரியான சாப்பாட்டு ரா்மனாக்கும்!'' அவனுக்கும் கொஞ்சம் கொஞ்சமாய்க் கூச்சம் தெளிந்து கொண்டிருப்பதை அவள் உணர்ந்தாள். ''கல்யாணத்துக்கு முதல் நாள் ஒரு முழுச் சாப்பாடு தயார் செய்யச் சொல்லி, சாப்பிட்டுப் பார்த்து, பிறகுதான் கல்யாணத்துக்கு ஓகே கொடுப்பேன்.''

அவள் சிரித்துக் கொண்டிருந்தபோதே அவன் விடை பெற்றுச் சென்றுவிட்டான்.

சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினார் வெங்கடேசுவரன்.

வெளியே புறப்படுகிறவரைக் கூப்பிடக் கூடாதே என்று தயங்கிய ரங்கம்மா தொண்டையைச் செருமிக் கொண்டு பின்னால் வந்தாள்.

''நீ கேட்க வேண்டாம். நானே சொல்லிவிடறேன்.'' என்று சிரித்தார் அவர், சட்டைப் பையைத் தொட்டுக் காட்டி, ''மாங்குடி ஜோசியரிடம் இரண்டு பேர் ஜாதகத்தையும் காட்டிவிட்டு வருகிறேன்.''

கேலியும் புன்னகையும் செய்தாள் ரங்கம்மாள். ''பின் போர்ஷனிலே இருக்கிறாரே லட்சுமணன், உங்களைக் காட்டிலும் எத்தனை வயசு சின்னவர்?''

''எதற்குக் கேட்கிறே?''

''அவர் நாள் நட்சத்திரம் பார்த்துச் சொல்லுகிறார். ஜோசியம் பார்க்கிறார். ஜாதகம் கணிக்கிறார் இத்தனை வயசாகிறதே தவிர, இந்த மாதிரி விஷயம் ஒன்றுமே தெரியலியே உங்களுக்கு?''

''ஒப்புக்கிறேன், ஒப்புக்கிறேன்,'' என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தார் அவர். ஆனால் உடனேயே ஒரு திடீர் உற்சாகத்துடன், ''ஓகோ! கல்யாண விஷயமாய் எனக்கு ஒன்றுமே தெரியாதுன்னு நினைச்சிடாதே! ஒரு மகா பெரிய விஷயம் தெரியுமாக்கும்!''

''என்ன?''

வெங்கடேசுவரன் வேடிக்கையாக மார்பைத் தட்டிக் கொண்டார். ''ஒரே கோத்திரத்திலே கல்யாணம் செய்யக் கூடாது என்ற அளவுக்குத் தெரியும். அது வேணுமானால் பார்த்துச் சொல்றேன்!'' அமர்த்தலாகத் தலையை நிமிர்த்திக் கொண்டார். மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டார். சட்டைப் பையிலிருந்து இரண்டு சாதகங்களையும் எடுத்தார். பார்த்தார்.

அடுத்த கணம் அவருடைய வேடிக்கை மொத்தமும் மறைந்தது. முகம் கறுத்தது. மூக்குக் கண்ணாடியை மடித்துச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு, நாற்காலியில் உட்கார்ந்தார்.

''என்னங்க, என்ன?''

கண்ணை மூடிக் கொண்டே முணுமுணுத்தார் வெங்கடேசுவரன்.

''இந்தக் கல்யாணம் நடக்காது, ரங்கம். நடக்காது. நடக்கக் கூடாது.''

''ஏன்?''

''சியாமாவும் ராகுலும் ஒரே கோத்திரம். ஊகூம். ஊகூம்.''

''அவ்வளவுதானே! பூ!'' என்றாள் ரங்கம்மா.

## எட்டு

தங்கையிடம் எப்படிச் சொல்லப் போகிறோம்? பொழுது விடிந்தது முதல் கையைப் பிசைந்து கொண்டிருந்தாள் ரங்கம்மா.

முந்தின நாள் மாலை சியாமா வீட்டிலில்லை. மாலுவுடன் கடைக்குப் போயிருந்தாள். வெங்கடேசுவரன் சொன்னது எதுவும் அவளுக்குத் தெரியாது. திரும்பி வந்தபோது அவர் ஒரு பழைய பேப்பரை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். ரங்கம்மா தலைவலி என்று சொல்லி, ஒரு டம்ளர் காப்பியுடன் அரை மாத்திரையும் விழுங்கி விட்டுப் படுத்துக் கொண்டு விட்டாள். சியாமா எதையும் சந்தேகிக்கவில்லை. மாலுவுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதில் இறங்கிவிட்டாள். ராத்திரிப் பொழுது எப்படியோ கழிந்துவிட்டது.

காலை நேரத்தின் கிரணங்கள் கிழக்கேயிருந்தும் மேற்கேயிருந்தும் தெற்கேயிருந்தும் வடக்கேயிருந்தும், ஜன்னல் வழியாகவும் கதவிடுக்கின் மூலமாகவும் சரம் சரமாக நுழைய நுழைய, குழப்பம் சிறு சிறு குண்டூசி களைப் போல ரங்கம்மாவின் இதயத்தில் தைக்கலாயிற்று. தைரியத்துக்காகக் கணவரின் படுக்கையை நோக்கினாள். அது காலியாக இருந்தது. குழாயடியில் அவர் குளித்துக் கொண்டிருக்கும் சத்தம் கேட்டது. மாலுவும் சியாமாவும் அணைத்துக்கொண்டு தூங்குவதை ஒரு முறை பார்த்தபின் ரங்கம்மா எழுந்து கொண்டாள். வெங்கடேசுவரன் குளித்து முடித்து வேட்டி உடுத்திக்கொண்டிருந்தார். "நான் கோவிலுக்குப் போய்ட்டு வர்றேன். சியாமாவிடம் நீ பக்குவமாய்ச் சொல்லி வை," என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுவிட்டார்.

தன்னிஷ்டத்துக்கு முடிவு எடுத்து விட்டு, அதைத் தெரிவிக்கும் பொறுப்பை மட்டும் நம் தலையில் கட்டிவிட்டுப் போகிறாரே என்று ரங்கம்மாவுக்கு அவர் பேரில் கோபம் ஏற்படவில்லை. அவருடைய உள்ளம் எத்தனை வேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் அதைச் சமாளிக்க அவர் எப்படி மன்றாடிக்கொண் டிருக்கிறார் என்பதையும் அவள் அறிவாள். இப்போது அவர் கோவிலுக்குப் போயிருப்பது கூட மனத்துக்குச் சாந்தியும் திடமும் பெறுவதற்காகத்தான் என்று அவளுக்குத் தெரியும். ஏன் இப்படி மூர்க்கத்தனமாய்த் தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று அவர் இருக்க வேண்டும் என்பது தான் புரியவில்லை. அன்றைக்கொரு நாள் அயோத்யா மண்டபத்தில் ஒரு உபன்யாசக்காரர் சொன்ன வார்த்தைகள் அவளுக்கு ஞாபகம் வந்தது.

'எப்பேர்ப்பட்ட உத்தமர்களுக்கும் ஏதாவதொரு சமயத்தில் திடீரென்று ஒரு கோணல் புத்தி ஏற்படும். அதைத்தான் விதிவசம் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். இல்லா விட்டால் ராமனுக்கு ஏன் சீதையைக் காட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று தோன்றணும்? ஏன் கல்யாணம் பண்ணி வைக்கணும், யாருக்குப் பண்ணி வைக்கணும் என்று எங்களுக்குத் தெரியும்,'' என்று ஒரே அதட்டலில் அடக்கிவிடலாமோ என்னவோ...

''என்னக்கா யோசனை?'' என்று தமக்கையின் தோளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டாள் சியாமா.

''என்னடி இது, குழந்தை மாதிரி?'' என்று அவள் கைகளை மெல்ல விலக்கினாள் ரங்கம்மா. ''போ, போ. போய்க் குளித்து விட்டு வா. ஆபீசுக்கு நாழிகையாகி விடும்.''

''நான் என்ன பண்ணப் போறேன் தெரியுமோ அக்கா?'' என்றாள் சியாமா, குளியலறையின் தகரக் கதவைத் தரதரவென்று சாத்திக் கொண்டே. ''ஒரு மாசம் லீவு போட்டு விட்டு, உன்னோடேயே இருக்கப் போகிறேன். இருந்து, வீட்டு வேலைகளெல்லாம் கத்துக்கப் போறேன்...'' வெட்கத்துடன் சிரித்துக் கொண்டே கதவைச் சாத்திக் கொண்டுவிட்டாள்.

குளிப்பதற்காக புடவைத் துண்டொன்றை அவள் சுற்றிக் கொண்டிருந்ததால், உடம்பின் வனப்புப் பூராவும் கண்ணைக் குத்துகிற மாதிரி வெளிப்பட்டு, ரங்கம்மாவின் இதயத்தைச் சுட்டது...

சியாமா குளித்தும் ஆகிவிட்டது...

''மாமாவை எங்கேக்கா காலையிலிருந்தே காணோம்?''

''எங்கேயோ வெளியே போயிட்டு வரேன்னு போனார்.''

''த்சு, அவர்கிட்டே சில விஷயம் டிஸ்கஸ் பண்ணனும்னு நினைச்சிருந்தேன்...''

''உம்...''

''உன் கிட்டே சொல்றதுக்கு என்னக்கா... வெட்கமில்லாமல் பேசறேன்னு நினைக்காதே...'' சாப்பிடுவதற்குத் தட்டைப் போட்டுக் கொண்டாள் சியாமா.

''இன்னிக்குச் சாம்பார் வைக்கலே... துவையல்தான் பண்ணியிருக்கேன்...''

''அக்கா, இந்த வீட்டிலே நான் மூத்த பிள்ளை மாதிரி இருந்துட்டேன்... அதனாலே பல விஷயங்களை மனம் விட்டுப் பேசித்தான் ஆகணும்...''

''தயிர் புளிப்பா இருக்கு... மோர் ஊத்தட்டுமா? பெருங்காயம் போட்டு வாசனையா இருக்கு.''

இதற்கப்புறம்தான் சியாமா அக்காவின் முகத்தை உற்றுப் பார்த்தாள். அதில் சோகம் இழையோடிக் கொண்டிருப்பது அப்போதுதான் தெரிந்தது. ''என்ன அக்கா விஷயம்? ஏன் என்னவோ போல் பேசறே அப்போ பிடிச்சு?''

''ஒண்ணுமில்லே சியாமா... மாமாவே உன் கிட்டே பேசணும்னு தான் நினைச்சிருந்தார்...''

''எதைப் பத்தி?''

தங்கையின் அருகில் உட்கார்ந்து கொண்டாள் ரங்கம்மா. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள்.

''கல்யாண விஷயம்தான். ஜாதகம் வந்திருந்த தில்லையா... அதைப் பார்த்ததில்...''

''பார்த்ததில்?''

ரங்கம்மாவுக்குத் தொண்டை அடைத்தது.

''அவ்வளவாய் ஒத்துக் கொள்ளலேன்னு...''

சியாமா சிரித்தாள். ''ஜாதகமாவது ஒண்ணாவது... மனசுப் பொருத்தம் தான் அக்கா முக்கியம்... ஜாதக மெல்லாம்...''

''அதில்லே, சியாமா... நீயும் ராகுலும் ஒரே கோத்திரமாம். அந்த மாதிரி சம்பந்தம் கூடாதாம். மாமா ரொம்பத் தீர்மானமாய்ச் சொல்லிட்டார்.

தங்கையின் முகத்தைப் பார்க்காமலேயே சொன்னாள் ரங்கம்மா.

சியாமா ஒன்றும் சொல்லவில்லை. மோர் சாதத்தைப் பிசைந்து சாப்பிட்டு முடித்தாள். தட்டைக் கழுவி ஷெல்பில் செருகி விட்டு, ஆபீசுக்குப் போவதற்காகப் புடவை மாற்றிக் கொண்டாள். அது வரையில் வாசலில் எங்கோ விளையாடப் போயிருந்த மாலு திரும்பி வந்தாள். ''நீ சாப்பிட்டாச்சா என்ன?''

''ஆச்சு. நீ போய்ச் சாப்பிடு.'' ...பவுடர் பூசி நெற்றிக்கு இட்டுக் கொண்டபோது... ''இந்தச் சாந்து

ரொம்பத் தண்ணியாயிருக்கிறது. வேறே வாங்கணும்.'' என்று சொல்லிக் கொண்டாள். செருப்பை ரொம்ப அழுக்காயிருக்கிறது என்று சொல்லி, தண்ணீரில் கழுவித் துடைத்து வைத்துக் கொண்டாள். ''ஃபெமினாவை யார் இப்படிக் கசக்கினாங்க? லைப்ரரி காப்பி. புதிசு,'' என்று சொல்லி, ஹாண்ட் பாக்குடன் எடுத்து வைத்துக் கொண்டாள். டிபன் பாக்ஸைப் பிரித்துப் பார்த்து, ''தொட்டுக்க இந்த ஊறுகாய் வேண்டாம். ரொம்பக் காரம்,'' என்று சொல்லி எடுத்து வெளியே வைத்துவிட்டு டப்பாவை மூடினாள்.

அவளுடைய ஒவ்வோர் அசைவையும், ஒவ்வொரு பேச்சையும் கண்கொட்டாமல் கவனித்துக் கொண்டு சிலை போல் நின்றிருந்தாள் ரங்கம்மா. வெடிக்கப் போகிறது, வெடிக்கப் போகிறது என்று பார்த்துக் கொண்டேயிருக்கும் எரிமலை, வெகு சாந்தமாய், மெரினா பீச் மாதிரி அமைதியாய் இருப்பதைக் காணக் காண...

''சியாமா! இருடி!'' வாசல் வரை போய்விட்டவளை நிறுத்தினாள்.

''என்னக்கா?''

''உன்... உன் கல்யாண விஷயம் தான்.... அது இப்படி நின்று போனதில் உனக்கு வருத்தம் இல்லையா?''

சியாமா மெல்லச் சிரித்தாள். ''அக்கா, பரசுராம்னு ஒரு ஆபீசர் எங்க ஆபீசிலே இருந்தார். அவர் அடிக்கடி, 'மனுஷனுக்கு ஒரு தடவை பட்டால் புத்தி வரணும். அவன் தான் மனுஷன்' என்பார்...''

''எதுக்கு சொல்றே?''

''ஒது தடவை நான் பட்டாயிற்று. அதிலேயே புத்தி வந்திருக்கணும். வரலையே? கல்யாணம் வேண்டாம்னு தீவிரமாய் இருந்தவள், எதற்காக மறுபடி ஒப்புக் கொண்டேன்? இரண்டாம் தடவையும் பட்டாச்சு. இனிமேலாவது புத்தி வர்றதா பார்க்கலாம்.''

''உங்களை யாரோ பார்க்கணுமாம். கான்ட்டீன் கிட்டே நின்னிட்டிருக்கார்.'' பியூன் ரங்கசாமியின் குரலில் சிறிது அச்சம் தென்பட்டதற்குக் காரணம் இருந்தது. காலையில் ஆபீசுக்கு வந்தது முதல் சியாமா அசாதாரண அமைதியுடன் காணப்பட்டாள். உண்டு, இல்லை என்பதற்கு மேல் யாருடனும் பேசத் தயாராயில்லை என்பதை அவளுடைய முகபாவம் காட்டிக் கொண் டிருந்தது.

''யார்னு சொன்னார்?''

''ராகவ்னோ ராகல்னோ என்னவோ சொன் னாரும்மா. புரியல்லே.''

ஹெட்கிளார்க்கின் ஸீட்டைப் பார்த்தாள். காலியா யிருந்தது. ஏஸிடிஓவின் ரூமுக்குப் போயிருக்கிறார் போலும். மூவ்மெண்ட் ரெஜிஸ்தரில் அசைவுப் பதிவேட்டில் 'பத்து நிமிடம் ஒரு விசிட்டர் வந்திருக்கிறார்' என்று குறித்து வைத்து விட்டு, படியிறங்கிக் கீழே வந்தாள்.

'ட' வடிவத்தில் கைகளை மேஜைமீது ஊன்றிக் கொண்டு, இரு உள்ளங்கைகளுக்கு நடுவே காப்பி டம்ளரைப் பிடித்தபடி அவன் உட்கார்ந்திருந்தான். அந்தக்

காப்பிக்குள் எதையோ காண முயலுகிறவனைப் போல் அவன் பார்வை அதிலேயே ஆழ்ந்திருந்தது.

காலடியோசை கேட்டதும் தலை நிமிர்ந்தான். ''வேலையாயிருந்த போது உங்களை டிஸ்டர்ப் செய்து விட்டேன் போலிருக்கிறது.''

அவள் மௌனமாக நின்றிருந்தாள்.

''உங்க அக்கா கணவர் போன் பண்ணிச் சொன்னார்.''

அவள் பேசவில்லை.

க்ளீனர் பையன் மேஜையைத் துடைத்து விட்டுச் சென்றான். அந்த ஈரத்தில், அவனுடைய முகம் நெளிந்து நெளிந்து பிரதிபிம்பம் காட்டியது. யாரோ ஓர் ஊர் பேர் தெரியாத குடிசைப் பெண் அஜாக்கிரதையாக அடுப்பு மூட்டியதென்ன, எந்தெந்தக் குடிசைகளோ தீப்பிடித்த தென்ன, எங்கிருந்தோ இந்த ராகுல் வந்ததென்ன, ஒரு ஃபைல் காணாமல் போனதென்ன, அவன் கண்டெடுத்துக் கொடுத்ததென்ன, தொடர்ந்து சந்தித்ததென்ன, பேசிய தென்ன, வெறுத்ததென்ன, விரும்பியதென்ன, உறவுகள் வளர்ந்ததென்ன, முறிந்ததென்ன... வாழ்க்கை என்பது பூந்தோட்டமா? மயானக் காடா?...

''சியாமா.'' உணர்ச்சி மிகுந்தவனாக அவன் எழுந்து அவளுடைய இரு கைகளையும் அழுத்திப் பிடித்து விட்டான் உடனேயே. ''உன்னுடன்... உங்களுடன்... பேசணுமென்று தான் வந்தேன்...''

அவள் மெதுவே பதிலளித்தாள். ''பேசுவதால் சில விஷயங்கள் நல்லபடி முடிவதுண்டு. பேசாமலிருப்பதால்

சில விஷயங்கள் நல்லபடி ஆவதுண்டு... நாம் பேசாம லிருப்பதே சரின்னு நினைக்கிறேன்... வருகிறேன்...''

அவன் ஏதோ சொல்ல நினைத்தான். நெஞ்சில் அடைத்துக் கொண்டே அந்தப் பந்து...

அதற்குள் அவள் போய் விட்டாள்.

## ஒன்பது

''நீ சிகரெட் பிடிப்பியா என்ன!'' குரல் கேட்ட பிறகுதான் ராகுல் விழித்துக் கொண்டான். தன் கையில் புகைந்து கொண்டிருக்கும் பாதி சிகரெட்டையும், தரையில் நசுங்கியும் வளைந்தும் கருகியும் சுருண்டும் கிடக்கிற ஏராளமான துண்டுகளையும் மாறிமாறிப் பார்த்தான்.

''இப்படி எப்பவாவது...''-அசட்டுச் சிரிப்புடன் தோழனுக்குப் பதிலளித்துவிட்டு, கையிலிருந்த துண்டைக் காலின் கீழ் நசுக்கி, எல்லாத் துண்டுகளையும் ஒரு சேர அறையின் மூலைக்குத் தள்ளிவிட்டான்.

''இப்படி எப்பவாவதா...!'' அந்தச் சிகரெட் குவியலை ஆச்சரியத்துடன் பார்த்த நாகப்பன், ''தேவ தாஸிலே நாகேசுவரராவ் புட்டி புட்டியாய்க் காலி பண்ணுவாரே, அந்த மாதிரியல்ல இருக்கு? உனக்கும் அதே கோளாறா?'' என்று சிரித்தான்.

ராகுல் சிரிக்கவில்லை. தோழன் சொன்னது ஏறத்தாழ சரிதான் என்று அவனுக்குத் தெரிந்திருந்தது.

ஆற்றில் மூழ்கிக் குளிப்பவனுக்கு, தண்ணீர் மட்டத்துக்கு மேலே தலை தூக்கும் போதெல்லாம் கரை

களும், கட்டிடங்களும் மனிதர்களும் வாகனங்களும் அப்படியே நிற்பது தெரிவது போல, எத்தனை நூற்றுக் கணக்கான வேலைகளில் அவன் மூழ்கினாலும் அந்த வேலை முடிந்தவுடன், முடிந்த கணத்திலேயே...

சியாமா, சியாமா என்று உள்ளம் அரற்றத் தொடங்கி விடுகிறது.

கோத்திரமாமே கோத்திரம்! அது எங்கிருந்து உனக்கும் எனக்கும் நடுவே பெரும் சுவராய் முளைத்தது! எங்கோ எப்போதோ கல்யாண வீடுகளில் கேட்டிருக்கிற அந்தச் சொல்... எப்படிப்பட்ட புயலாய் வீசி உன்னை ஒரு மூலையிலும் என்னை ஒரு மூலையிலும் கொண்டு போய்த் தள்ளிவிட்டது!

கீழே டங் டங் என்று தோசைக் கல்லைத் துடுப்பினால் தட்டும் சத்தம் கேட்டது. அந்த அறை, உஸ்மான் ரோடில் ஓர் இரண்டாம்தர ஓட்டலின் மாடியில் இருந்தது. எலிக்கூண்டு எலிக் கூண்டாக மொத்தம் பத்து அறைகள் அந்த மாடி மொத்தமும். ஒவ்வொன்றிலும் மூன்று நான்கு பிரம்மசாரிகள் — அல்லது மனைவியை ஊருக்கு அனுப்பியிருப்பவர்கள். ராகுலின் அறையில் அவனுடனேயே வேலை பார்க்கும் நாகப்பனைத் தவிர, டி.பி.ஐ. அலுவலகத்தில் கடைநிலை ஊழியராக உள்ள ஒருவரும் உண்டு. குறுக்கும் நெடுக்குமாகக் கட்டப்பட்ட கயிற்றில் விதவிதமான போஸ்களில் தொங்கும் துணிகள்... மூலையில் அடுக்கப்பட்டுள்ள பெட்டிகள்... கீழேயிருந்து எழும்பி வந்து ஜன்னலுக்கப்பால் தயங்கி அறைக்குள் எட்டிப் பார்த்துவிட்டு மேலே செல்லும் புகை... டி.பி.ஐ.க்காரர் கவிதையும் எழுதுபவராகையால் அவர்

உபயோகப்படுத்தும் கணக்குப் பிள்ளை மேஜை... விளக்கில்லாத, இரண்டோர் இடங்களில் படியும் இல்லாத மாடிப்படிகளில் ஏறுபவருக்கு இறங்குபவர் வழிவிட்டு ஒதுங்கவைக்கும் குறுகல்...

''போலாமா?'' என்றான் நாகப்பன்.

''ம்... எங்கே?''

''டியூட்டி டயம் பா!'' என்று அவன் ஆச்சரியத்துடன் ராகுலைப் பார்த்தான்.

''ஆமாம்... இதோ புறப்படறேன்.''

சாலையில் இறங்கி நடக்கையில் நாகப்பன் சொன்னான். ''இல்லையில்லை. உனக்கு ஏதோ நேர்ந்திட்டுது. இல்லாட்டிப் போனா சாதாரண சமாசாரங் களில் கூட இப்படிக் கவனமில்லாம இருக்க மாட்டே...''

ஆமாம். எனக்கு ஏதோ நேர்ந்துதான் விட்டது. சாதாரண சமாசாரங்களில் மட்டுமில்லை... பெரிய விஷயங்கள்... மிகப் பெரிய விஷயங்கள்... வாழ்க்கையின் அச்சாணி வேராக அவன் கொண்டுள்ள விஷயங்கள் கூட மறந்துவிடும் போல்தான் இருக்கிறது. இல்லாவிட்டால் அத்தனை சிகரெட்டுகள்...

'அம்மா... அம்மா...' என்று இருதயம் வெடிக்கக் கதற வேண்டும் போலிருந்தது அவனுக்கு...

'பெரிய அக்கவுண்டெண்ட்டாக வரணும்னா என்ன படிக்கணும்' என்பது தான் ராகுலின் இடைவிடாத கேள்வியாக இருந்தது — அவன் ஹைஸ்கூல் மாணவனாக இருந்த போது. 'அக்கவுண்டண்ட் ராகுல் வர்றான் டோய்!'

என்று அவனுடைய சிநேகிதர்கள் பரிகாசம் செய்வது வழக்கம். ஆனால் அதையெல்லாம் அவன் பொருட்படுத்துவதில்லை. 'பெரிய அக்கவுண்டெண்ட்' பதவியிலேயே அவன் வெறியாக இருந்தான்.

அதற்குக் காரணம் உண்டு.

எட்டாவது படித்துக் கொண்டிருந்த சமயம். அவனுடைய வீடு, கடலூர் என்.டி.யில் திருவகிந்திரபுரம் செல்லும் சாலையில், ஒரு பிள்ளையார் கோவிலுக்குப் பக்கத்துத் தெருவில் இருந்தது. அவன் அப்பா கண்ணன் சமையற்காரராக இருந்தார். ஓட்டலிலோ வீட்டிலோ அல்ல. மொத்தம் முப்பது சமையற்காரர்களைத் தன் கீழ் அமர்த்தி வைத்திருந்த நடேசப்பா என்பவரிடம் கண்ணனும் வேலைக்கு இருந்தார். நடேசப்பா கூப்பிட்டனுப்பும் தினங்களில் அவர் சொல்லுகிற இடங்களுக்குக் கண்ணன் செல்ல வேண்டியது. சுற்று வட்டாரம் பதினைந்துஇருபது மைலுக்குள் எங்கே வேண்டுமானாலும் போக வேண்டி யிருக்கும். கல்யாண சீசனில் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குத் தாவிக் கொண்டே இருப்பார். சேர்ந்தாற் போல் பத்துப் பதினைந்து நாட்கள் கூட அவரைப் பார்க்க முடியாமலே போவதுண்டு.

ராகுலின் அம்மா பெயர் ஜனகம். வாடின பன்னீர்ப் பூ மாதிரி, எந்த நிமிடமும் இற்று விழுந்து விடுகிற உடம்பு. அவளுக்கு அவனிடம் உயிர்.

சிநேகிதர்களின் வீடுகளில் அவர்களுடைய அம்மாக்கள் சமையலறையில் விஸ்தாரமாகக் காய்கறிகளையும் பருப்பு எண்ணெய்களையும் பரப்பிக் கொண்டு

சமையலில் ஈடுபடுவதைப் பார்க்கும்போதெல்லாம் ராகுலுக்கு ஆச்சரியமாக இருக்கும். அவன் அம்மா ஒரு நாள் கூட அப்படிச் சமையலறையில் உயிரை விட்டது கிடையாது. மாதத்தில் பாதி நாள் ராகுலின் அப்பா தொன்னைகளில் பலகார பட்சணங்களை வைத்து, அழுக்கு அங்கவஸ்திரத்தில் சுற்றி எடுத்து வந்து விடுவார். சாதம் வடித்து வைத்திருந்தால்போதும். மற்றதெல்லாம் அப்பா கொண்டு வந்து விடுவார். கொண்டு வராத நாட்களில் ஒரு வற்றல் குழம்பு மட்டும் அம்மா செய்து வைப்பாள். பழைய மைசூர் பாகோ லட்டோ இருக்கும் — தொட்டுக் கொள்ள.

ராகுலின் வாழ்க்கை இப்படி ஓடிக்கொண்டிருந்த போதுதான், ஒரு நாள் அவனுடைய தோழன் விசு அவன் காதோடு, "ஸ்கூல் விட்டதும் வீட்டுக்குப் போய் விடாதே, என்னோடு வா. ஒரு வஸ்து காட்டறேன்," என்றான்.

விசுவின் அப்பா புதுப் பாளையத்தில் ஷாப் வைத் திருப்பவர். தினத்துக்கு ஒரு நூதனப் பொருள் கொண்டு வந்து காட்டுவான் விசு. அவன் நிஜாரில் இரண்டு பையிலும் பிஸ்கட்டும், சாக்லேட்டும் இருக்கும். அப்படித்தான் ஏதோ காட்டப் போகிறான் என்று நினைத்து, அன்று சாயந்தரம் அவனுடன் போர்டு ஹைஸ்கூலுக்குப் பின்னால் உள்ள பல தெருக்களைத் தாண்டி, ஒரு பழைய மாதா கோவிலின் மறைவுக்குப் போய் நின்றபோது —

பையிலிருந்து விசு எடுத்தது இரண்டு நீளமான சிகரெட்டும் ஒரு தீப்பெட்டியும்தான்.

"டேய்! என்னடா இது?" என்று திடுக்கிட்டான் ராகுல்.

''சத்தம் போடாதே. எங்க மாமாவோட சூட்கேஸில் டின் டின்னாக இருக்கு... உனக்கு ஒண்ணு, எனக்கு ஒண்ணு எடுத்து வந்தேன்,'' என்றான் அவன்.

''உனக்குப் பழக்கம் உண்டாடா!''

''ச, இதுதான் பஸ்ட்டைம். அதனாலேதான் உன்னைத் துணைக்குக் கூட்டி வந்தேன். இந்தா பிடி.'' என்று ராகுலின் வாயில் சிகரெட்டைத் திணித்தான்.

''வேண்டாம்டா, டேய், டேய்!'' என்று சொல்லும் போதே, சிகரெட் நுனியின் மெல்லிய தூள்கள் நாக்கிலே கசக்க, அதன் வெள்ளைச் சுருள் பரப்பும் மஞ்சள் விளிம்பும் கண்ணைக் கவர —

விசுவுக்கு அவ்வளவு சட்டென்று தீக்குச்சி கிழிக்க வரவில்லை. வாய்க்கருகே கொண்டு போகும் போதெல்லாம் அணைந்தது. ராகுலுக்குத் தினம் வீட்டில் அரிக்கன் விளக்கை ஏற்றிப் பழக்கம். 'இங்கே கொடுடா' என்று பதற்றத்துடன் வாங்கித் தானும் கொளுத்திக் கொண்டு அவனுக்கும் கொளுத்திக் கொடுத்து, மூக்கிலும் வாயிலும் கமறக் கமறப் புகை வழிந்து வெளிப்பட்ட போது, நரம்புகளில் ஏதோ முறுக்கேறுகிற மாதிரி ஒரு புதுமையான உணர்வு...

''ஜோராயிருக்கு இல்லே?'' என்று விசு கேட்கையில், எழுத்துக்கு எழுத்து கமா போட்டாற்போலக் கப் கப்பென்று அவன் வாய்க்குள்ளிருந்து புகை வெளிப்படுவதைக் காண ராகுலுக்கு விசித்திரமாயிருந்தது.

''உங்க மாமா என்னடா பண்றார்? என்று கேட்டான்.

''கல்கத்தாவிலே இருக்கார். பெரிய கம்பெனியிலே பெரிய அக்கவுண்ட்டென்ட். கல்கத்தாவிலேருந்து காரிலேயே வந்திருக்கார். எவ்வளவு பெரிய கார் தெரியுமா?'' என்ற விசு, சிகரெட் அனுபவம் முடிந்ததும் தன் வீட்டுக்கு அழைத்துப் போய், மாமாவின் பிரம்மாண்டமான காரையும் காட்டினான். ''எப்பவும் பையிலே கத்தை கத்தையாய் நோட்டு வைச்சிருப்பார். சூட்கேசிலே பார்த்தால் எவ்வளவு உசத்தி ஷர்ட் பாண்ட் தெரியுமா?'' என்றெல்லாம் அவன் வர்ணித்ததைக் கேட்டது முதற் கொண்டு —

ராகுலுக்குப் 'பெரிய அக்கவுண்டெண்ட்' பைத்தியம் பிடித்துக் கொண்டது. பி.காம்.பட்டம் பெற்றால் மற்றப் படிப்பெல்லாம் சுலபம் என்று ஆசிரியர்களைத் துளைத் தெடுத்துத் தெரிந்துக் கொண்டவன், எஸ்.எஸ்.எல்.ஸி.யில் அதற்கேற்றபடி படித்துப் பாஸ் பண்ணி, பி.யூ.ஸியிலும் மூன்றாம் குரூப் எடுத்துத் தீவிரத்துடன் படிக்கலானான்.

அக்கவுண்டெண்ட் மோகத்துடனேயே இன்னொன்றும் அவனை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தது. சிகரெட் பழக்கம். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பேராசிரியர்களுக்கும் தெரியாமல் சிகரெட் பிடிக்கும் திருட்டுத்தனத்தை அவனால் ஒழிக்க முடியவில்லை. அந்தப் பழக்கமே தன் வாழ்க்கையைத் திருப்பியமைக்கப் போகிறதென்று அவன் எண்ணவில்லை.

அந்த நாள் எத்தனை நன்றாய் நினைவிருக்கிறது! அப்பா ஒரு சஷ்டியப்த பூர்த்திக் கல்யாணத்துக்குப் போயிருந்தார். அது ஒரு புதன்கிழமை. ''இது பிடிச்சிருக்கா பார்,'' என்றபடி ஒரு புது ஸ்லாக்கை வாங்கி வந்து

தந்திருந்தாள் அம்மா. அவன் அதை அணிந்து கொண் டதும், குழந்தைக்குத் திருஷ்டி கழிக்கிற மாதிரி அவன் கன்னங்களை வழித்து விரல்களைச் சொடுக்கினாள். மத்தியானம் ஒரு நாளுமில்லாத திருநாளாய் டிபன் பண்ணினாள். விரல் பருமனிருந்த அடையைக் குழம்பில் தோய்த்துத் தோய்த்துச் சாப்பிட்டது இப்போது கூட ஞாபகம் இருக்கிறது. சாயந்தரம் அவன் எகனாமிக்ஸை உருப்போட்டபடி நடையில் உலாத்திக் கொண்டிருந்த போது, ''கடைக்குப் போயிட்டு வரேண்டா ராகுல்,'' என்று அவனிடம் சொல்லிக்கொண்டு சென்றாள் அம்மா.

அதுதான் அவள் அவனிடம் பேசிய கடைசிப் பேச்சு.

ராகுலுக்கு இருப்புக் கொள்ளவில்லை. சிகரெட் பிடிக்கும் தவிப்பு அவனைப் பிடித்து ஆட்டியது. வீட்டைப் பூட்டிச் சாவியை எதிர்வீட்டில் தந்துவிட்டு மார்க் கெட்டுக்குப் போனான். அதன் பின்புறம் ஒரு மறைவான இடம் உண்டு. அவனுடைய ஃபேவரிட் இடம். யாரும் வரமாட்டார்கள். ஆனால், அன்றைக்கு அவன் சிகரெட்டைப் பற்ற வைத்து, இரண்டு முறை கூட இழுத்திருக்க மாட்டான்.

தொலைவில் காமர்ஸ் பேராசிரியர் வருவது தெரிந்தது. சடடென்று சிகரெட்டை வீசியெறிந்து விட்டு, வேறு வழியாக வெளியேறி, அவசரமாக வீடு திரும்பி விட்டான். தான் சிகரெட்டை வீசியெறிந்த இடத்தில் ஒரு மாட்டுக் கொட்டகை இருந்ததோ, வைக்கோல் போர் இருந்ததோ அவனுக்கு அப்போது தெரியவில்லை.

எத்தனை நேரமாயிற்றோ, எங்கேயோ தீயணைப்பு வண்டியின் ஓசை கேட்கிற மாதிரி இருந்தது. தெருவிலே

யாரோ பதைப்புடன் சொல்லிக் கொண்டு ஓடினார்கள்... 'மார்க்கெட்டிலே நெருப்புப் பிடிச்சுட்டது!' என்று. ''பின்புறம் இருந்த வைக்கோல் போரிலேதான் முதல்லே பிடிச்சதாம்...''

அதிர்ச்சியுடன் தெருவில் இறங்கிப் பார்த்தான். மேற்கே வானத்தில் ஒரே சிவப்பாய்த் தெரிந்தது. தான் சிகரெட்டை வீசியெறிந்த இடம் ஞாபகம் வந்தது அவனுக்கு.

அவன் உள்ளத்தில் ஏற்பட்ட அச்சம் அடங்கு முன்னே, ஒரு ஜட்கா வண்டியில் எடுத்து வந்து நடையிலே போட்டார்கள் — வெந்துகருகிவிட்ட அவன் அம்மாவின் உடம்பை. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவன் அப்பா ஓடி வந்தார் அலங்கோலமாக. 'ஜனகம்! என்னை எப்படிடி மனசு துணிந்து தனியா விட்டுட்டுப் போறே!' என்று கதறிக் கதறி சுவரில் முட்டிக் கொண்டு...

உள்ளுக்குள் வெந்து கொண்டிருக்கும் செங்கல் சூளை மாதிரி ராகுல் பிரமை பிடித்து நின்றான். சிகரெட்டை அன்றோடு விட்டு விட்டான் என்பது மட்டுமல்ல. கணகண வென்ற மணியோசை எப்போதும் அவன் காதில் ஒலிக்கத் தொடங்கியது.

கொஞ்ச நாளில் அவன் தன் பி.யூ.ஸி.படிப்பைப் பாதியில் நிறுத்திக் கொண்டான். எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் தன் பெயரைப் பதிவு செய்து வைத்துக் கொண்டு கடலூர் டிவிஷன் தீயணைப்புப் பிரிவில் எப்போது ரெக்ரூட் செய்கிறார்கள் என்று காத்திருந்தான். அறிவிப்பு வந்ததும் மனுச் செய்து சேர்ந்து கொண்டான். ''பிரமாதமாய்ப் படிக்கிறாய், பி.காம்.அதைப் பூர்த்தி

பண்ணிவிடு,'' என்று பேராசிரியர்கள் சொன்னதைக் கேட்கவில்லை. ''ஃபயர் மேன் வேலைக்கு எட்டாம் ஸ்டாண்டார்டு படித்திருந்தால் போதுமே? பி.யூ.ஸி. படிப்பை நிறுத்திக் கொண்டு இங்கே வருகிறாயே ஏன்? வேறு வேலை தேடிக் கொள்ளேன்,'' என்று பேட்டியின் போது அதிகாரி சொன்னதைக் கேட்கவில்லை.

அப்பா, ''ராகுல், ஒரு வருஷமாய் எனக்கு இந்த வலது கை சுகமில்லை. அடுப்பிலே ஏத்த இறக்க இன்னொருவனைக் கூப்பிட வேண்டியிருக்கு. நீ பெரிய வேலைக்குப் போனால் தள்ளாத வயசில் எனக்கு எத்தனையோ ஒத்தாசையாய் இருக்கும்,'' என்று கெஞ்சியதையும் ஏற்கவில்லை...

நாகப்பனுடன் ஒட்டினாற்போல் நடந்து கொண்டிருந்தவன் நின்றான்.

''என்ன ராகுல்?''

''ஒன்றுமில்லை. நீ போய்க் கொண்டே இரு. வர்றேன்.'

சியாமா.

எதிர்ச் சாரியை அடைவதற்காகப் பிளாட்பாரத்திலிருந்து தெருவுக்கு இறங்க நினைத்தவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அவள் சற்றுத் திரும்பிப் பார்த்திருந்தால், தனக்கு இணையாக நூல் பிடித்த மாதிரி தெருவின் மறுபுறம் நடந்து வந்து கொண்டிருக்கும் அவனைப் பார்த்திருக்க முடியும். அவள் திரும்பவில்லை. அந்த மெஜெண்டா-கலர் வெங்கடகிரி ஸாரி அவள் உடம்புக்கு எத்தனை பாந்தமாயிருக்கிறது! அவளுடைய

சிவந்த கைகளை ஒட்டினாற்போல வரும் புடவையின் சிவப்புக்கரை! நுனியிலே முடிச்சுப் போட்ட அந்த நீண்ட முத்து மாலை... ஒற்றைப் பின்னலைக் கவ்வியிருக்கும் வண்ணாத்திப் பூச்சி கிளிப்.

அவள் நின்று, தெருவோரமாக ஒரு பூக்காரியிடம் குனிந்து பூ வாங்கிக் கொள்கிறாள். ஒரு முழத்தைத் தலையில் சூடிக்கொண்டு, இரண்டு முழத்தை இலையில் மடித்து, கைப் பையில் மேலோடு வைத்துக் கொள்கிறாள்...

*சியாமா! உனக்கு ஏமாற்றமே இல்லையா? என் மனம் படுகிற வேதனைகளில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட உனக்குக் கிடையாதா? சாதாரணமாக பஸ்ஸிலிருந்து இறங்கி, சாதாரணமாகத் தெருவோடு நடந்து, சாதாரண மாகப் பூ வாங்கி, சாதாரணமாகச் சூடி, சாதாரணமாக வீட்டை நோக்கிச் செல்லும் அளவுக்கு உன் வாழ்க்கையை அவ்வளவு அமைதியாக, அவ்வளவு இயற்கையாக, அவ்வளவு ஒன்றுமே நடவாததாகப் பண்ணிக் கொண்டு விட்டாயா? எப்படி உன்னால் முடிந்தது. சியாமா?*

*பார்க்காமலிருந்தால் பேசாமலிருந்தால் சில விஷயங்கள் நல்லபடி ஆகும் என்று அன்றைக்கொரு நாள் அவள் சொன்னாள். உண்மைதான். ஆனால் உனக்குள்ள மன உறுதி எனக்கு இல்லையே சியாமா...*

ஸப்—வேயின் ஆழத்தில் இறங்கி அவள் மறைந்துவிடுவாள் போலிருந்தது.

அடக்க மாட்டாதவனாக, ''சியாமா!'' என்று வாய் விட்டுக் கூப்பிட்டு விட்டான்.

சரேலென அவளும் திரும்பினாள். மின்னல் வெட்டிய மாதிரி ஒரு மலர்ச்சி அந்த முகத்தில் ..

'ஊகூம்' என்று தனக்குள் சொல்லிக் கொள்கிற மாதிரி தலையை அசைத்துக் கொண்டாள். போய் விட்டாள்.

## பத்து

சேத்துப்பட்டுக்கும் நுங்கம்பாக்கத்துக்கும் நடுவிலே, ரயில்வே லயனை ஒட்டினாற்போல, முப்பது நாற்பது வீடுகளைக் கொண்ட ரயில்வே காலனி என்ற இடம் உண்டு. ரயில்வே இலாகாவுக்கும் அதற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னர் ஒரு ரிடையர்டு ஸ்டேஷன் மாஸ்டர் அங்கே முதன் முதலாக ஒரு வீடு கட்டினார். அதற்கு நாலு வருஷம் கழித்து ஒரு ரயில்வே அக்கவுண்டண்ட் ஒரு வீடு கட்டினார். 'ரயில்வேக்காரங்க இருக்காங்களே, அந்த இடம்' என்பதாக அந்த இடம் குறிப்பிடப்பட்டு, பிறகு ரயில்வே காலனி என்று அழைக்கப்படலாயிற்று. அந்த ஸ்டேஷன் மாஸ்டரும் அந்த அக்கவுண்டண்டும் காலமாகி, அவர்களுடைய குமாரர்கள் அந்த வீடுகளையும் விற்று, வருஷம் பதினைந்தாகி, இன்று அருகிலே தண்டவாளம் போகிறது என்பதைத் தவிர வேறு எவ்வித சம்பந்தமு மில்லாத போதிலும் ரயில்வே காலனி என்கிற பெயர் மட்டும் நிலைத்துவிட்டது.

'ப' வடிவத்திலுள்ள அந்தக் காலனியில் வலது கோடி கடைசி வீட்டில், இரட்டை நாடி சரீரமுள்ள ஓர் அம்மாள் ஒரு கையில் கல் வைத்த வளையலும் மறு கையில் ரிஸ்ட் வாட்சும் அணிந்து கொண்டு, இரண்டு கை அகலத்துக்கு

ஜரிகை போட்ட காஞ்சிபுரம் பட்டுப் புடவை சரசரக்க, வாசலுக்கு வருவதும் கேட்டைத் திறந்து கொண்டு தெருக் கோடியைப் பார்ப்பதும் முகத்தைச் சுளித்துக் கொண்டு உள்ளே திரும்புவதுமாக இருந்தாள்.

முன்னறையில் மேஜை மீது ஜமுக்காளத்தைப் பரப்பி, சிறிது கசங்கியிருந்த அங்கவஸ்திரத்தின் விசிறி மடிப்புக்கு அயர்ன் பண்ணிக் கொண்டிருந்த மனிதர், "இவன் எப்பவுமே இப்படித்தான். பங்க்சுவாலிடி என்கிறது சுட்டுப் போட்டாலும் வராது," என்று முணு முணுத்துக் கொண்டிருந்தார்.

உள்ளே வந்த இரட்டை நாடி அம்மாள், "எப்பவும் குழந்தையையே குத்தம் சொல்லுங்க. நீங்க காலம்பற அவன் ஆபீஸ் புறப்பட்ட போது சரியா சொல்லியிருக்க மாட்டீங்க," என்று குற்றம் சாட்டினாள்.

"ஒரு தடவைக்கு நாலு தடவையா படிச்சுப் படிச்சுச்சொன்னேன். அவன் ரெண்டு நிமிஷமாவது நின்னு காதில் வாங்கிட்டால் தானே? நான் பாட்டுக்குச் சொல்லிட்டிருக்கேன், அவன் பாட்டுக்குத் தலையை வாரிக்கிறான், டிரஸ் மாட்டிக்கிறான், ஷூ போட்டுக்கிறான், பாஸை எடுத்து வச்சுக்கிறான், கிளம்பிடறான், இந்தக் காதுக்கும் அந்தக் காதுக்கும் நடுவிலே டைரக்ட்டா குழாய் வைச்சிட்டிருக்கிற மாதிரி, இங்கே நுழையற பேச்சு அங்கே வெளியேறிடறது! அப்புறம் யார் என்னத்தைச் சொல்லி என்ன புண்ணியம்!"

"அப்பாடா! ஒரு வழியாய் சொல்லி முடிச்சீங்களா!" என்று பொத்தென ஒரு கூடை நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள் அந்த அம்மாள். "இந்த மாதிரி லொட லொடன்னு

பேசிட்டே போனீங்கன்னா யார் தான் பொறுமை யோடு கேட்பாங்க!''

அவர் பிளக்கிலிருந்து ஒயரை எடுத்துவிட்டு, அயர்னரை குத்துக் காலில் நிற்கவைத்தார். ''இந்தப் பக்கம் வந்து எதையாவது தொட்டுகிட்டு வைக்காதே. பெண் பார்க்கப் போகிறதுக்குப் பதில் டாக்டரைப் பார்க்கப் போகிற மாதிரி ஆகிவிடும்.''

''ஆமாம்! பெண் பார்க்கப்போகிற மூஞ்சியைப் பார்க்கலியாக்கும்!'' என்று மோவாயைத் தோளில் இடித்துக் கொண்டாள் அவள். ''ஐந்தே முக்காலுக்கு வர்றோம்னு சொல்லியிருந்தோம். இப்பவே மணி ஐந்தரை ஆகிறது.''

அவர் அங்கவஸ்திரத்தைத் தோளில் போட்டுக் கொண்டு கண்ணாடி முன்னே நின்று பார்த்துக் கொண்டார். ''வர வர அவனுக்கு இந்தப்பெண் பார்க்கிற சமாசாரம் னாலே பிடிக்காமல் போயிட்டுது. ஒவ்வொருத்தன் தாயார் தகப்பனாருக்காக ஸஹாராவுக்குப் போய் வேலை பார்க்கிறான். சுரங்கத்துக்குப் போய் பாறை வெட்டறான். யுத்தத்துக்குப் போய் உயிரை விடறான். நம்ம வீட்டுப் பிள்ளைக்கு என்னடான்னா, நம்மோடு டாக்ஸியிலே வந்து ஸ்வீட்டும் காப்பியும் சாப்பிட்டுவிட்டு வர்றதுக்குக் கசப்பாயிருக்கு!''

''கிரி இந்தக் காலத்துப் பிள்ளை. அநாகரிகம்னு நினைக்கிறான்,'' என்று மகனுக்குப் பரிந்து பேசினாள் அம்மாள்.

''அதெல்லாமில்லை. எந்தக் காரியம் ஆரம்பிச் சாலும், எடுத்த எடுப்பிலேயே சரியாய் அமையணும்.

இல்லாமப் போனால் இப்படித்தான் தடங்கல் தடங்கலாய் வரும். யாரோ சொன்னாங்கன்னு நீ அந்த ஸ்கூல் வாத்தியார் மச்சினியைப் போய்ப் பார்க்க ஏற்பாடு பண்ணினே. கிரி முதல் முதல்லே பார்த்தது அந்த இடம். சரியான துக்கிரி அந்தப்பெண். அதற்கப்புறம் ஒரு இடமாவது சரியாய் வந்ததோ பார். அந்தப் பெண் மட்டும் நமக்கு நாட்டுப்பெண்ணாய் வந்திருந்ததோ, குடும்பமே குளோசாகியிருக்கும், நல்ல காலம் தப்பினோம்.''

அவர் மனைவிக்குப் பொறுக்கவில்லை. ''நன்றாய்த் தான் இருக்கிறது. நீங்க பேசறது! ஊரார் பெண்ணோட தலையை நாம் ஏன் உருட்டணும்? அது இப்ப எங்கே கல்யாணம் பண்ணிட்டு எத்தனை சௌக்கியமாய் இருக்கிறதோ! அந்த இடத்துக்கு என்ன குறைச்சல்? எல் லோருக்கும் எல்லா விதத்திலும் மனசுக்குப் பிடிச்சிருந்தது. நிச்சயதார்த்தத்துக்கு இரண்டு நாள் இருக்கிறப்போ நீங்க அந்த இடம் வேண்டாம்னு சொல்லியனுப்பினீங்க. மனசு என்ன பாடு பட்டிருக்கும் அவர்களுக்கு! வேறே எவராயிருந்தாலும் நம்மீது கேசே போட்டிருப்பார்கள்! அந்த ஸ்கூல் வாத்தியார் நல்ல மனிதர். விட்டு விட்டார்.''

''இப்பத்தான் என்ன? நீ வேணுமானால் ஒரு வக்கீலை அவங்ககிட்டே அழைச்சிகிட்டுப் போய் ஒரு கேஸ் போடச் சொல்லி ஏற்பாடு பண்ணேன்!'' என்று சீறினார் அவர். ''ஆளைப்பார், எல்லாம் மறந்து விட்ட மாதிரி பேசறியே! அந்தப் பெண் அப்பா அம்மா இல்லாத அனாதை. பிற்காலத்திலே நம்ம பிள்ளைக்கு ஒரு பைசா வர வழிகிடையாது. என்னமோ கண்ணுக்கு நன்னா யிருக்குன்னு கிரி ஆசைப்பட்டதாலே நான் வேண்டா வெறுப்பாய்ச் சம்மதிச்சிருந்தேன். அந்தச் சமயத்திலே தான்

அந்தத் திருச்சிராப்பள்ளி பெல்காரரோட பெண்ணைப் பத்தித் தகவல் வந்தது. ஒரே பெண். கொள்ளையாய்ச் செய்யறோம்னு சொன்னாங்க. அதனாலே வாத்தியாருக்குச் சொல்லியனுப்பினேன். சினிமாவிலே வர்ற மாதிரி கல்யாணம் நடக்கிறப்போ மணையிலேயிருந்து இறங்கு டான்னா சொன்னேன்? நிச்சயதார்த்தம் நடக்கிறதுக்கு முன்னாலேயே சொல்லிவிட்டேனே!''

''அடடா! என்ன இரக்க மனசு உங்களுக்கு?'' என்று சிரித்தாள் அவர் மனைவி. ''சரி, அப்புறம் அந்த பெல்காரர் சம்பந்தம் ஏன் குதிரல்லே? எனக்கு மறந்து போச்சுன்னு நினைச்சீங்களா? நம்ம பிள்ளையைக் காட்டிலும் உசத்தியான பிள்ளை கிடைக்கிறதுன்னு அந்தமனுஷன் போயிட்டார்.''

அவருக்குச் சுர்ரென்று கோபம் வந்தது. ''எல்.ஐ.ஸி.யிலே ஆயிரம் ரூபாய் வாங்குகிறவனாக்கும் நம் பிள்ளை! அதற்கேற்ற இடம் ஒரு நாள் இல்லைன்னா ஒரு நாள் கிடைக்காமல் போயிடுமா?'' கடியாரம் ஆறு மணி அடித்தது. ''இனிமேல் இவன் எப்ப வந்து, எப்ப நாம் புறப்பட்டு... ஹூம். என்னைச் சார்ஜ் ஷீட் பண்ணு கிறாயே, அந்த லக்னோக்காரர் பெண்ணை வேண்டாம்னு சொன்னது நீயா, நானா?''

'தெரியாத மாதிரி கேட்காதீங்க. வீணை கீணை வாசிக்கத் தெரியுமாடியம்மான்னு கேட்டுக்கொண்டே, தலையைத் தொட்டேன் பாருங்க, சவுரி கையோடே வந்திட்டுது. கேவலம் தலைமயிர் விஷயத்திலே இத்தனை திரிசமன் பண்ணுகிறவர்கள் இன்னும் எத்தனை விஷயத் திலே என்னென்ன செய்வார்களோன்னு பயந்து போய்

அந்த இடம் வேண்டாம்னு சொன்னேன். அது ஒரு தப் —''

வாசலில் கேட்ட செருப்புச் சத்தம் அவர்கள் பேச்சை நிறுத்தியது. கர்சீப்பால் முகத்தைத் துடைத்த வண்ணம் உள்ளே நுழைந்தான் ஓர் இளைஞன். வயது முப்பதுக்கு இரண்டொன்று குறைவாக இருக்கும். நெற்றியின் மேல் கிராப்பு சற்றுப் பின்னோக்கிப் போகத் தொடங்கியிருந்த போதிலும், இளமையுடன் இருந்தான். மெல்லிய மீசை. அறிவைக் காட்டும் கூரிய மூக்கு. கொஞ்சம் பூசினாற்போல் இருந்தானே தவிர, பருமன் இல்லை.

''ஏண்டா கிரி, வர்றப் போவே ஒரு டாக்ஸி பிடிச்சிட்டு வந்திருக்கக் கூடாதா? நாமா கையை விட்டுக் கொடுக்கப் போறோம்? பெண்ணைப் பெத்தவன் கொடுத்துவிட்டுப் போறான்,'' என்றார் அவன் அப்பா.

''சரி, சரி. முகம் கிகம் கழுவிட்டு சீக்கிரமாய்ப் புறப்படப்பா. தெருக் கோடியில் டாக்ஸி பிடித்துக் கொண்டால் போச்சு,'' என்றாள் அம்மா.

கிரி உடைகளைக் கழற்றி விட்டு, பின்புறம் போய் முகம் கழுவிக்கொண்டு உடை மாற்றிக் கொண்டான்.

''உன்னைத்தானே! பின் கதவு நல்லாத் தாள் போட்டிருக்கா, பார். ஊரே கெட்டுக் கிடக்கு,'' என்று அவன் அப்பா சொல்லிக் கொண்டிருந்தார்.

''பூட்டு எங்கே வைச்சீங்க? நேத்து கோவிலுக்குப் போயிட்டு வர்றப்போ நீங்கதானே திறந்தீங்க?'' என்றாள் அம்மா.

செருப்பை மாட்டிக் கொண்டிருந்த கிரி நின்றான். ''நீங்க இரண்டு பேரும் எங்கே கிளம்பறீங்க?''

''நல்லாயிருக்குடா கேள்வி! அந்தப் பாரி கம்பெனிக்காரர் வீட்டுக்கு பெண் பார்க்கத்தான் மூணு பேருமா போகிறோம். வேறே எங்கேன்னு நினைச்சே?''

''ஸாரி அப்பா. நான் வரல்லே.''

''என்னடா உளர்றே!''

''ரொம்ப நாள் கழிச்சு இப்பத்தான் ஸென்ஸிபிளா பேசறேன். மன்னிச்சுடுங்க. எனக்கு இந்தப் பெண் பார்க்கிற விளையாட்டு அலுத்துப் போச்சு. வேறே ஏதாவது விளையாட்டு இருந்தால் சொல்லுங்க. சந்தோஷமாய் விளையாடறேன்.''

அவன் அம்மா முன்வந்தாள் ''கிரி, இப்பப் போய்...''

''இப்ப வரலேன்னு சொல்றது ஒண்ணும் லேட் இல்லை, அம்மா. நிச்சயதார்த்தத்துக்குத் தேதி குறிச்சப் புறம் கூட நாம் நிறுத்தியிருக்கோம். அவர்கள் என்ன மனசு நொந்து போய் என்ன சாபம் இட்டார்களோ, இப்படித் தட்டிக் கொண்டே போகிறது. இன்னிக்கு என் ஆபீசிலே ஒருத்தன், 'டேய் கிரி, உங்க அப்பா அம்மா இருக்கிற வரையில் நீ பிள்ளையார் தாண்டா'ன்னு நாலு பேர் முன்னாலே பரிகாசம் பண்ணிட்டான். அதுக்கப்புறம் தான் இந்த அநாகரிகத்தை இனிமே தொடருகிறதில்லைன்னு சபதம் பண்ணிட்டேன்...!''

''இப்ப என்னதான் சொல்றே நீ!''

''ஒண்ணும் சொல்லலலே. எனக்கு எந்தப் பெண்ணைப் பிடிக்கிறதோ அவளை, எப்ப பிடிக்கிறதோ அப்ப, நானே பண்ணிக்கிறேன். நீங்களோ அம்மாவோ இனிமேல் சிரமப்பட வேண்டாம்...''

''டேய்! ஒரு தகப்பனார்கிட்டே பேசுகிற பேச்சாடா இது!''

''ஏண் வீண் பேச்சு! இதோ பாருங்க!'' பர்சுக் குள்ளிருந்து ஒரு டிக்கெட்டை எடுத்துக் காண்பித்தான் அவன். ''டிராமா டிக்கெட். இன்னிக்கு ஆறே முக்காலுக்கு. வாணிமகாலிலே. ஸெவன்த் ரோ. ஸீட் நம்பர் டென். நான் போறேன்.''

மாம்பலம் ரங்கநாதன் தெருவில் பின் கை கட்டியபடி நடந்து கொண்டிருந்தார் வெங்கடேசுவரன். ''சாமி! கீரைத் தண்டு இளசு சாமி!'' என்ற குரலும், ''அய்யரே! முள்ளங்கி கட்டு பத்துப் பைசா தான் அய்யரே!'' என்ற கூப்பாடும் அவரைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. பை எடுத்து வந்திருந்தால் ஏதாவது கறிகாய் வாங்கிப் போகலாம் என்று எண்ணிக்கொண்டார் அவர். இவ்வளவு தூரம் வருவோம் என்று அவர் நினைக்கவில்லை. ஆனால் அவர் இப்போதெல்லாம் என்ன காரியத்தைத்தான் உணர்ந்து செய்கிறார்!

'நான் பாட்டுக்குக் கல்யாணமும் வேண்டாம், கார்த்திகையும் வேண்டாம் என்று தானே இருந்தேன்?' என்று சியாமாவே சொன்னாளாம். உண்மை. அந்த ரயில்வே காலனிக்காரர்களால் ஏற்பட்ட கொடிய ஏமாற்றம்... பாவம், சியாமாவுக்கு அது தான் முதல் அனுபவம்... ஆசையுடன் எதிர்பார்த்திருந்தாள்...

அந்தத் தினம்... எவ்வளவு நன்றாய் நினைவிருக்கிறது...

சியாமா நமஸ்காரம் செய்தாள். பிள்ளையுடன் வந்திருந்த பெண்கள் கேட்ட கேள்விகளுக்கு, அக்கா சொல்லித் தந்திருந்தபடி, பணிவாகவும் தெளிவாகவும் பதில் சொன்னாள். பையன் கொஞ்சம் குண்டுமாதிரி தோன்றியது. 'நாலு நாள் சாப்பாடில்லாமல் அடித்தால் தன்னால் சரியாகிவிடுகிறான்' என்று எண்ணிக் கொண்டாள். ''நீ படித்தது கான்வென்ட் ஸ்கூலா, சாதாரண ஸ்கூலா?'' என்று சியாமாவிடம் அவன் கேட்டான். அவளுக்கு இங்கிலீஷில் பேச வருமா என்பதற்காகக் கேட்டான் போலிருக்கிறது. சாதாரண ஹைஸ்கூலில் படித்தாலும் இங்கிலீஷ் நன்றாய்ப் பேசத் தெரியும் என்பதைத் தெரிவிக்கிற வகையில் அவனிடமும் மற்றவர்களிடமும் சியாமா இங்கிலீஷிலேயே சில வாக்கியங்களைப் பேசினாள்.

வாசல்புறம் போய் மற்ற விவகாரங்கள்' பேசினார்கள். எல்லாம் திருப்தியாய் முடிந்தது. அடுத்த வியாழனன்று நிச்சயதார்த்தம் என்று தீர்மானமாயிற்று. ரங்கம் தன் தங்கையைக் கட்டிக்கொண்டு கண்ணீர் உகுத்தாள். 'சியாமா அதிர்ஷ்டக்காரி என்று எனக்குத் தெரியுமே?' என்று சொல்லிக் கொண்டே அவர் நாற்காலிகளை மடக்கிப் போட்டார்...

ஆனால் எல்லாம் வீணாகிவிட்டது.

அவர்கள் நிச்சயதார்த்தத்துக்கு வரவில்லை. ஏதோ சகுனம் பார்த்ததாயும் சரியாய்ப் பதில் கிடைக்கவில்லை என்றும், மன்னிக்க வேண்டுமென்றும் சொல்லியனுப்பி

விட்டார்களாம். வேறொரு நல்ல இடம் அகப்பட்டு விட்டதால் இதைக் கை கழுவிவிட்டார்கள் என்று பிற்பாடு தெரிய வந்தது.

சியாமாவுக்கு ஒரே அதிர்ச்சி. கோபம்.

அந்த அடிக்குப் பிறகு அவளிடம் கல்யாணத்தைப் பற்றிப் பேசவே பயமாகிவிட்டது. ''எந்த ராஸ்கலும் என்னை வந்து பெண் பார்க்கிறேன் என்று சொல்ல நான் இடம் கொடுக்க மாட்டேன்'' என்று அவள் கூரை மீதேறி நின்று அறிவிக்கவில்லையே தவிர அவளுக்குள் புகைந்து கொண்டிருக்கும் நெருப்பு எப்படிப்பட்டதென்று எல்லோருக்குமே தெரிந்திருந்தது. எப்போதாவது ஒரு முறை ஒரு வரனைப் பற்றி லேசாகப் பேசுவார்கள்... விட்டுவிடுவார்கள்...

அவ்வளவு வைராக்கியமாக இருந்தவளை மறுபடி ஆசை காட்டி மனசை மாற்றியது எத்தனை முட்டாள் தனம் என்று தன்னையே நொந்து கொண்டார் வெங்கடேசுவரன். ஆனால் இப்படி ஒரு பிரசினை முளைக்குமென்று அவர் நினைக்கவேயில்லையே!... இப்போதுதான் என்ன? அவள் பருவம் வந்த பெண். இந்த வயதுக்கேற்ற கல்யாண ஆசை ஏற்பட்டிருக்கும். தப்பில்லை... வேறொரு நல்ல பையன்... குலம் கோத்திரம் எல்லாம் சரியாயிருக்கிற பையன் கிடைத்தால்...

''வெங்கடேசுவரன்!'' என்று யாரோ கூப்பிட்டார்கள். நின்று திரும்பிப் பார்த்தார். அவருடைய முன்னாள் ஹெட்மாஸ்டர்.

''ஏதாவது காரியமாய்ப் போகிறீரா?'' என்றார் அவர்.

''இல்லை... சும்மாதான்...''

''அப்ப, பிடியும்,'' என்று ஒரு டிக்கெட்டைக் கொடுத்தார்.

''என்ன... எதுக்கு...''

''வாணி மகாலிலே நல்ல நாடகம். வீட்டில் கெஸ்டுகள் வந்திட்டதால் நான் போக முடியவில்லை. மச்சினன்கிட்டே கொடுக்கச் சொல்லி ஒய்ஃப் சொன்னாள். அதான் போயிட்டிருந்தேன். அவன் ஒரு ஸெல்ஃபிஷ் பிளகாட். எனக்காக துரும்பு எடுத்துப் போட மாட்டான். அவனுக்கென்ன கொடுக்கிறது? நீர் சந்தோஷமாய் என்னை நினைச்சுப்பீர். என்ன தயக்கம்? போங்கள். ஸெவந்த் ரோ. ஸீட் நெம்பர் லெவன்...''

''தாங்ஸ்,'' என்று வாங்கிக்கொண்டார் வெங்கடேசுவரன். நாடகம் பார்த்து எத்தனை நாளாகிறது! மனசுக்கு ஒரு மாறுதலாக இருக்கும்...

திரையைத் தூக்குவதற்காக மணி அடித்த போதுதான் பதினொன்றாம் நம்பர் ஸீட்காரரும் பத்தாம் நம்பர் ஸீட்காரரும் ஒருவரையொருவர் கவனித்தார்கள்.

''நீங்க... ரயில்வே காலனி,'' என்றார் வெங்கடேசுவரன்.

''ஆமாம்... கிரி... நீங்க வெங்கடேசுவரன் இல்லே?'' என்றான் அவன்.

''எஸ்... சௌக்கியம்தானே... இப்ப எத்தனை குழந்தைகள்...'' வெங்கடேசுவரன் சிரித்தார்.

''இன்னும் கல்யாணமே ஆகல்லே...உங்க ஸிஸ்டர் இன்லாவுக்கு...''

''ஆகல்லே'' என்றார்.

நாடகம் ஆரம்பித்துவிட்டதால் பின்னாலிருந்து உஸ் உஸ்ஸென்று அதட்டல்கள் கேட்டன. இருவரும் பேசுவதை நிறுத்திக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் மனத்துக்குள் எண்ணற்ற எண்ணங்கள் மேலெழுந்து தளும்ப ஆரம்பித்தன.

## பதினொன்று

ஜன்னலை ஒட்டிய சிறிய மேடையில் சியாமா முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அது அவளுடைய ஃபேவரிட் இடம். அடுத்த வீட்டுக்கும் அவர்கள் வீட்டுக்கும் நடுவே இருந்த சாணகல பூமியில் அவர்கள் பலவகையான செடிகள் வளர்த்திருந்தார்கள். வெள்ளையும் ஊதாவும மஞ்சளும் நீலமுமாய்ப் பூக்கும் அ:ந்தச் செடிகளின் பெயர்கள் சியாமாவுக்குத் தெரியாது. ஆனால் எந்த மாதத்தில் எந்தச்செடி பணக்காரியாகும் என்று அவளால் கண்ணை மூடிக் கொண்டு சொல்ல முடியும். இப்படியொரு மாறாத நியதி செடிகளுக்குக் கூட இருக்கின்றன... மனிதர்கள் மட்டும் ஏன் எதிர்பாராத விதமாகவெல்லாம் மாறுகிறார்கள்...

''பின்போர்ஷன் நாராயணனுடைய வீட்டிலே யாரெல்லாமோ விருந்தாளிகள் வந்திருக்காங்களாம். தண்ணி பிடிச்சுக்கணுமாம்,'' என்று ரங்கம்மா சொல்லிக்கொண்டிருப்பது கேட்டது.

''என்னைப் பிடிச்சு வைக்கச் சொல்றாங்களா? ஓ' ரெடி!'' என்றார் வெங்கடேசுவரன் சிரித்துக் கொண்டே.

''விளையாடாதீங்க. நம்ம பித்தளை அண்டாவை இரவல் கேட்கிறாங்க. பரண் மேலே தூக்கிப் போட்டி ருக்கேன். கொஞ்சம் ஏறி எடுத்துக் கொடுங்க.''

''சே, சே, சே! என்ன நீ கொஞ்சம்கூட இது இல்லாமே! இந்த வேலைக்கெல்லாமா என்னைக் கூப்பிடறது?...'' என்று முனகினாலும் டக்டக்கென்று மேஜையையும் நாற்காலியையும் எடுத்துப் போட்டுக் கொண்டார் வெங்கடேசுவரன்.

மாலு அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன பார்க்கிறே? நான் தாவுவேனா என்றா? ஹைஸ்கூலில் படிக்கிறப்போ, நாலு வருஷம் நான் தான் தொடர்ந்து ஹைஜம்ப் சாம்பியனாயிருந்தேனோக்கும்!'' என்றார் அவர்.

''அஞ்சாவது வருஷம்?''

''லாங்ஜம்ப் சாம்பியனாயிட்டேன்!'' ஒரு தாவுத் தாவிப் பரணில் ஏறினார். ''என்ன மாலு, ஒரு க்ளாப்ஸ் கூடக் கிடையாதா?''...

கையிலிருந்த நாவலில் சியாமாவின் மனம் செல்லவில்லை.

அமரிக்கையும் ஆழமும் உள்ளவராயிருந்த மாமா ஏன் இப்படி ஸில்லியாக மாறியிருக்கிறார் என்று அவளுக்கு அதிசயமாயிருந்தது. டல்லடித்துக் கிடக்கும் அவளை உற்சாகப்படுத்துவதற்காக இப்படிக் கோமாளித் தனமான வேடிக்கைகளில் இறங்குகிறார் போலும் என்பதை எண்ணிப் பார்த்த போது அவளுக்கு அவர் மீது

பரிதாபமும் இரக்கமும் ஏற்பட்டன. அதுவும் சென்ற ஒருவார காலமாய் — அன்று... நன்றாய் நினைவிருக்கிறது.

வாணிமகாலில் ஏதோ நாடகமாம். ஓசி டிக்கெட் கிடைத்ததாம். இருக்கட்டுமே? அவர் நாடகமே பார்ப்ப தில்லையாம். பார்க்கட்டுமே? அதற்காகவா அப்படியொரு துள்ளல், கொண்டாட்டம்? இரவு பத்தே காலாகிவிட்டது அவர் வீடு திரும்பியபோது. எந்த லாலா கடையிலோ ஸ்வீட்டும் மிக்ஸ்சரும் வாங்கி வந்திருந்தார். அரைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த எல்லோரையும் எழுப்பி உட்கார்த்திவைத்து... அதுவும் ஆடி ஆடி விழுந்த மாலுவை உலுக்கு உலுக்கென்று உலுப்பி வாயில் அல்வாவைத் திணித்து...

"என்ன வந்தது உங்களுக்கு திடீர்னு?" என்று அக்கா கூடத் திகைத்துப் போனாள்.

"மனுஷாளுக்கு எப்போதாவது ஒரு தடவை — வருஷத்திலே ஒரு தடவை — சந்தோஷம் ஏற்படக் கூடாதா என்ன? எப்பப் பார்த்தாலும் அழுது வடிந்து கொண்டிருக்கணும்னு சொல்றியா?" என்று கூறிவிட்டு மர்மமாக ஒரு சிரிப்புச் சிரித்தார். "நீ ஸ்வீட் எடுத்துக்கம்மா, சியாமா. முக்கியமாய் உனக்காகத்தான் வாங்கிட்டு வந்தேன் — சோன் பப்டி."

"எடுத்துக்கறேன், மாமா."

"இதோ பார், இப்படித் தந்தி பாஷையிலே பேசறதையெல்லாம் இனிமே நீ விட்டுடணும். உன் வேதனையெல்லாம் தீருகிற காலம் வந்தாச்சு."

"எனக்கென்ன மாமா வேதனை? ஒண்ணும் கிடையாது."

''இப்ப ஒப்புக்குச் சொல்கிறாய். ஆனால் நிஜமாகவே சொல்கிற காலம் வந்திட்டிருக்கு. பார்த்திட்டே இரு.''

ரங்கம்மாவுக்குப் பொறுக்கவில்லை. ''ஐய, என்ன இதெல்லாம் ஜாடைப் பேச்சு?'' என்று முகம் சுளித்தாள். ஆனால் வெங்கடேசுவரன் எதுவும் சொல்லவில்லை. 'நகுமோமு' என்று ஒரு பாட்டை இழுத்துக்கொண்டே போய் விட்டார்.

அது ஒரு வாரத்துக்கு முந்தி. இன்று குருநானக் தினம் என்று ஆபீசில் விடுமுறை. காலையில் தான் சியாமாவுக்கு ஞாபகம் வந்தது. ''டிபன் பண்ண வேண்டாம் அக்கா. ஆபீஸ் கிடையாது,'' என்றாள்.

குளித்துக்கொண்டிருந்த வெங்கடேசுவரனுக்கு அது கேட்டது போலும். ''லீவாம்மா இன்னிக்கு? ரொம்ப நல்லதாப் போச்சு,'' என்றார்.

அந்த 'நல்ல தாய்ப் போச்சு'க்கு என்ன அர்த்தம் என்பதையும் சொல்லவில்லை...

பரணிலிருந்து அண்டாவை இறக்கிவிட்டார் வெங்கடேசுவரன். ஆனால் தான் இறங்கவில்லை. பழைய டிரங்குப் பெட்டிகளை மூடுவதும் திறப்பதும் குடைவது மாய் இருந்தவர், ''அட! இதைப் பார்த்தியா சியாமா!'' என்று அவசர அவசரமாய் இறங்கி வந்தார். புகைபிடித்துப் போன பழைய புகைப்படமொன்று அவர் கையில் இருந்தது.

''என் கல்யாண போட்டோம்மா! ஜான வாசத்தின் போது எடுத்தது,'' என்றார் உற்சாகமாய். ''இதோ என் மாமியாரின் இடுப்பிலே இருக்கிறது யார் தெரிகிறதோ?''

''தெரியலியே மாமா?''

''நீ தான் சியாமா. நீயே தான். அப்பப்பா! நாலு வீதியும் நடுங்குகிற மாதிரி அன்று என்ன அலறல் அலறினே தெரியுமோ? மேளச் சத்தம்னா உனக்குப் பயமாம். உன் அம்மா சொன்னாள்.''

ரங்கம்மாவும் மாலுவும், ''கொண்டாங்க... இப்படிக் காட்டுங்க...'' என்று ஆளுக்கு ஆள் வாங்கிப் பார்த்துச் சிரித்தார்கள்.

''இன்றைக்குப் பார்த்து என் கையிலே இது கிடைத்தது பார்! நலல சகுனம்,இல்லே?'' என்றார்.

இன்றைக்குப் பார்த்து என்ன? சியாமாவுக்குப் புரியவில்லை.

''முதல்லே நீங்க போய் உங்க தலையிலே இருக்கிற ஒட்டடையை எடுத்துட்டு முகம் கழுவிக்குங்க,'' என்றாள் ரங்கம்மா.

சாயந்தம் ஐந்து மணி சுமாருக்கு சியாமா குழாயடியில் முகம் கழுவிக் கொண்டிருந்த போது அக்காவாகவே சொன்னாள்: ''பளிச்சென்று வேறு புடவை கட்டிக்கொள். ஒரு முக்கியமான மனிதர் வருகிறாராம்.''

''யாரக்கா?'' என்று கேட்காதிருக்க முடியவில்லை. பொடிப் பொடியாகச் சோப்பு நுரை இறங்குவதையும் பொருட்படுத்தாமல் கண்ணைத் திறந்தாள். அந்த எரிச்சலினூடே, பிசிறு பிசிறாகத் தெரிந்தஅக்கா,அவளைத் தாண்டிக் கதவு, அவளுக்கப்பால் ஹால், அதற்கும் அந்தண்டை தெரு, தெருவிலே வந்து நிற்கும் ஆட்டோ, அதிலிருந்துஇறங்கும் அந்த வாலிபன் — அவன்... அவனை...

''அக்கா!'' என்றாள் மரத்துப் போய்விட்ட குரலில்.

''..ரர்னு தெரிஞ்சிட்டுதா? அவனே தான். சுவத்துக் கிளையை வழிச்சுப் போட சொரணை கெட்ட வெள்ளாட்டின் ..னாமே, அது மாதிரி...''

''உஷ்! உஷ்!'' என்று எச்சரித்தபடி வேகமாக அங்கே வந்தார் வெங்கடேசுவரன். ''மரியாதை இல்லாமே பேசாதே. மனசு மாறுவது எல்லோருக்கும் சகஜம்தான்,'' என்றவர், சியாமாவின் பக்கம் திரும்பினார்.

''நாடகத்துக்குப் போயிருந்தேன் இல்லையா? தற்செயலாய்ப் பார்த்தேன் இன்னும் தனக்குக் கல்யாணம் ஆகலேன்னான். உன்கிட்டே நாட்டம் இருக்கு என்றும் தெரிஞ்சுது. அப்பா அம்மாவோட சண்டையாம். வீட்டுக்கு வாப்பான்னு கூப்பிட்டேன். வந்திருக்கான்.இதோ பார், சியாமா. சும்மா ஒரு ஃபார்மாலிடிக்குக் காப்பி கொண்டு வந்து கொடு, போறும். முன்னேயே வந்து பார்த்தவன் தான். நமஸ்காரம் கிமஸ்காரம் எதுவும் வேண்டாம்...'' கட கடவென்று சொல்லிவிட்டு வந்த வேகத்திலேயே வாசலுக்குப் போய்விட்டார்.

சியாமா முகம் கழுவிக்கொள்வதை மௌனமாகத் தொடர்ந்தாள்.

''இந்தா துண்டு,'' ரங்கம்மா எடுத்து வந்து தந்து, ''இங்கெல்லாம் சரியாகவே அலம்பிக்கலையே?'' என்று கூறி நெற்றியைத் துடைத்து விட்டாள்.

ஆட்டோ ரிக்ஷா திரும்பிச்செல்லும் சத்தம்...

''அந்த ஆர்கன்ஸா ஸாரியைத்தான் நீ கட்டிக்கிறதேயில்லை. கட்டிக்க,'' என்றாள் அக்கா.

கட்டிக்கொண்டாள்.

"நிச்சயமாய் இன்னைக்கு ஹண்ட்ரட் அண்ட் பைவ் இருக்கும்," என்று வெங்கடேசுவரன்சொல்லிக் கொண்டிருக்கிறார். "இங்கே பரவாயில்லை. கொஞ்சம் மரம் கிரம் இருக்கிறது. எங்க காலனி அசல் சஹாரா தான்," என்று அவன் பதிலளித்துக் கொண்டிருக்கிறான்...

"இந்தா காப்பி." அவள் கையில் டம்ளர்களைக் கொடுத்தாள் ரங்கம்மா. "கொடுத்து விட்டு நீ பாட்டுக்கு மாமா பக்கத்தில் உட்கார்ந்து நாசூக்காய் நாலு வார்த்தை பேசிக் கொண்டிரு. என்ன, தெரிகிறதா?"

"இவள் தான் சியாமா. நினைவு இருக்கிறதோ ல்லியோ!" வெங்கடேசுவரன் பெரிதாய்ச் சிரித்தார். "ஸெகண்ட் மீட்டிங்!"

"மறக்குமா என்ன?" என்று அவன் காப்பியை வாங்கிக் கொண்டான். "தாங்க்ஸ். உட்காருங்க. நீங்களும் காப்பி சாப்பிடலாம்."

சியாமா அவனுக்கும் மாமாவுக்கும் நடுவிலே உட்கார்ந்தாள்.

"என்னோடு படித்த வேணுகோபாலன் இப்ப உங்க டிபார்ட்மெண்டிலே தான் டிஸிடிஓவாக இருக்கானாம். உங்களுக்குத் தெரியுமோ?"

"டி. வேணுகோபாலா, ஜி.வேணுகோபாலா? இரண்டு பேர் இருக்கிறார்கள்," என்றாள் சியாமா.

"இனிஷியல் தெரியலியே," என்று புன்னகை செய்தான் அவன்.

''ரங்கம், நீ என்ன உள்ளேயே அடைஞ்சு கிடக்கிறே?'' என்று கூப்பிட்டவாறு வெங்கடேசுவரன் உள்ளே சென்றார். வேண்டுமென்றே தான். தெருவில் ஏதோ வாத்திய சத்தம் கேட்கவே மாலுவும் வாசலுக்கு ஓடிவிட்டாள்.

''முந்தின சந்திப்பு...'' அவன் கைகளைப் பிசைந்த படி தாழ்ந்த குரலில் பேசினான். ''என் பேரண்ட்ஸோட முட்டாள்தனத்தாலே என்னென்னமோ நேர்ந்து போச்சு... நீங்க ரொம்ப வேதனைப்பட்டிருப்பீங்க... ஸாரி...''

''அப்படியெல்லாம் இல்லை,'' என்றாள் அவள்.

டீப்பாயின் மீது கிடந்த புத்தகத்தைப் புரட்டினான் அவன். ''நான் அகதா கிறிஸ்டியின் விசிறி. நீங்க?''

''எனக்குப் பிடிக்காது.''

''காப்பி ரொம்ப அருமையாயிருந்தது. தாங்க்ஸ் உங்களுக்குச் சொல்லணுமா, உங்க ஸிஸ்டருக்கா?''

''இரண்டு பேருக்கும் தான்.''

அவன் சிரித்துக்கொண்டே எழுந்ததும், ''என்ன அதுக்குள்ளே?'' என்று விரைந்து வந்தார் வெங்கடேசுவரன்.

''என் ஃப்ரெண்ட் ஒருத்தன் பம்பாய் போகிறான். ஸெண்ட் ஆஃபுக்குப் போகணும். இனிமேல் அடிக்கடி வர வேண்டியவன்தானே?''

''சரெக்ட்! கரெக்ட்!'' என்று உரத்த குரலில் ஆமோதித்தார் வெங்கடேசுவரன்.

''வரட்டுமா?'' என்று சியாமாவை நோக்கிக் கைகுவித்தான் அவன்.

''ஊம்.'' புன்சிரிப்புடன் டீப்பாயை நகர்த்தினாள் அவனுக்குத் தடுக்காதபடி. அவர்கள் வாசல்புறம் சென்றார்கள். மின்சார விசிறியை நிறுத்தினாள். ''காப்பியிலே சர்க்கரை போட்டேனோ இல்லையோ தெரியல்லே. நீ சாப்பிட்டுப் பார்த்தாயோ?'' என்றாள் அக்கா. ''சாப்பிட்டேன். போட்டிருந்தாய்,'' என்றாள்.

அவனை வழியனுப்பிவிட்டு உள்ளே திரும்பினார் வெங்கடேசுவரன். ''என்ன சியாமா, நான் உனக்குக் கொடுத்த ஸர்ப்ரைஸ் எப்படி?''

''பிரமாதம் தான், மாமா. மாலு, இந்தக் காப்பி டபராவெல்லாம் குழாயடியிலே கொண்டு போய்ப் போடு.''

''தெய்வ சங்கல்பம் தெய்வ சங்கல்பம்னு சொல் றாங்களே, என்னவோ லட்சம் வார்த்தையிலே அதுவும் ஒரு வார்த்தைன்னு நினைச்சுக்கிறோம். வாழ்க்கையிலே இந்த மாதிரி சந்தர்ப்பங்கள் வர்றபோது தான் அந்த வார்த்தைக் குள்ளே எவ்வளவு பெரிய உண்மை புதைஞ்சிருக்கு என்பது புரியறது. இல்லே சியாமா?''

''ஆமாம் மாமா.''

''இல்லைன்னா, இப்படிக் கூட ஒரு அதிசயம் நடக்குமா? என்ன?''

''உண்மைதான், மாமா.''

''ஆனால் ஒரு விஷயம் அந்தப் பிள்ளைகிட்டே கண்டிப்பாய்ச் சொல்லிட்டேன். என்னன்னு கேள்.''

''என்ன?''

''என்ன வந்தாலும் சரி. அப்பா அம்மாவை விரோதம் பண்ணிக் காதேப்பான்னு சொல்லிட்டேன். எப்படியாவது சமாதானப்படுத்தி, இந்தக் கல்யாணத்துக்கு அவங்க அசீர்வாதத்தையும் வாங்கிடுன்னேன்.''

சியாமா செருப்பை மாட்டிக்கொண்டாள்.

''எங்கம்மா கிளம்பறே?''

''ஒண்ணுமில்லே, மாமா. ஒருபோன் பண்ணணும்,'' என்றவள், ''மாலு, வா,'' என்று அவளையும் துணைக்கு அழைத்தாள்.

''என்ன சியாமா அத்தனை முக்கியமாய்?'' என்று ரங்கம்மா கேட்டாள். தங்கையின் குரலும் பாவமும் அவளை ஏதோ ஒருவகைக் கலவரத்துக்கு உள்ளாக்கின.

''இப்ப யாருக்கு என்ன விஷயமா போன் பண்ணப் போறே?''

''உன்னாலே ஊகிக்க முடியலியா அக்கா?''

''தெரியலியேடி!''

''வாழ்ந்தால் ஒருத்தரோடே தான் வாழப் போறேன். செத்தால் அந்த ஒருத்தரோடேதான் சாகப் போகிறேன். அவருக்குத்தான் போன். தெரியலே? ராகுலுக்கு.''

''சியாமா!'' ஓடி வந்தார் வெங்கடேசுவரன். 'அவனைப் பத்தித்தான் என்னிக்கோ தீர்ந்து போச்சேம்மா! கோத்திரம் —''

''மாமா!'' ஒவ்வொரு வார்த்தையாக நிறுத்திச் சொன்னாள் அவள். ''மாம்பலத்திலே மற்ற தெருக்களிலே

எப்படியோ, நம்ம தெருவில் நாலு குப்பைத் தொட்டி இருக்கு. நல்லதா ஒண்ணு பார்த்து உங்க கோத்திரத்தை அதிலே கிழிச்சுப் போடுங்க!''

## பன்னிரண்டு

தூக்கத்தில் பாதியும் விழிப்பில் பாதியுமாக நடமாடுகிற மாதிரியே இருந்து வந்தது சியாமாவுக்கு. இன்றைக்கு மட்டுமல்ல. சென்ற பத்து நாட்களாக.

என்றைக்கு மாமாவுடன் அவ்வளவு வேகமாக மோதலை ஏற்படுத்திக்கொண்டாளோ அன்று முதல்... நினைத்து நினைத்துப் பார்க்கிறாள், அப்படியொரு சண்டை போட்டது நாம் தானா என்று. நீயேதான் நீயே தான் என அந்த வீட்டின் ஒவ்வொரு இண்டு இடுக்கும் ஒவ்வொரு வினாடியும் அவளை இடித்துக் கொண்டேயிருக்கிறது.

ஒரு வேளை சாப்பிட்டால் ஒரு வேளை சாப்பிடாமல் விரக்தியோடு இருக்கும் மாமா; ஒவ்வோர் அசைவுக்கும் ஒரு பெருமூச்சு விடுகின்ற அக்கா; 'நான் என்னவோ கேட்டால் நீ என்னவோ பதில் சொல்றீயே சித்தி?' என்று குற்றம் சாட்டும் மாலு — எல்லாரும் அன்றைத் தினத்தை, அன்று அவள் பேசிய பேச்சை, இடைவிடாமல் நினைவு படுத்திக் கொண்டேயிருக்கிறார்கள்.

ராகுலைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். கோத்திர சமாசாரத்தையெல்லாம் குப்பைத் தொட்டியில் போடுங்கள் என்று அவள் சொன்னவுடனே ஏற்பட்ட பயங்கர நிசப்தம்!

ரங்கம்மா மெதுவாய் அவளை நெருங்கி வந்து, ''சியாமா, என்னடி உனக்கு வந்தது!'' என்று நடுங்கிய குரலில் கேட்க —

''ஆமாம் அக்கா. ஒரு பெண்ணோட மனசு என்கிறது இஷ்டப்படி பிசைஞ்சு பிடிச்சு வைக்கக் கூடிய களி மண்ணுன்னு நீங்க நினைச்சிருக்கீங்க. அப்படியில்லை, தப்பாய் ஒரு தட்டுத் தட்டினாலும் உடைஞ்சு சிதறிவிடக் கூடிய பளிங்குக் கல் என்று உங்களுக்குக் காட்ட வேண்டாமா?'' என்று அவள் பதிலளிக்க —

வெங்கடேசுவரன் தரையில் ஒரு கை ஊன்றி எழுந்து, மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு அவளை நெருங்கி வந்து முகத்தைப் பார்த்தார். ''என்னம்மா என்னென்னவோ பேசறே?''

''என்னென்னவோ பேசல்லே மாமா. ஸென்ஸிபிளாய்த்தான் பேசறேன். முதல்லே ஒருஅவமானம் ஏற்பட்டது. தலைநிமிர முடியாத வேதனை. தாங்கிக் கொண்டு நான் பாட்டுக்கு வளைய வந்தேன். இரண்டாவது அனுபவத்தை ஏற்படுத்தினீங்க. பைத்தியக்காரி நான் அதைப்பத்தி இல்லாதக் கோட்டையெல்லாம் கட்டிக் கொண்டேன். அதையும் இடிச்சுத் தள்ளினீங்க —''

''சியாமா! வந்து...''

''மறுபடியும் மனசைச் சமாதானப்படுத்திக்கொண்டு, அந்த இடிபாடு மேலேயே உட்கார்ந்து நான்காப்பி சாப்பிட்டேன், டிரெஸ் பண்ணிட்டேன், சிரிச்சேன், சினிமா பார்த்தேன். ஆபீசுக்குப் போனேன், ரேடியோ கேட்டேன் — எல்லாம் பண்ணினேன். இப்ப என் முதல்

அவமானத்தையே என் முன்னாலே கொண்டு வந்து நிறுத்தி, பார்த்தியா, உனக்கு எப்பேர்ப்பட்ட அதிர்ஷ்டம் என்கிறீங்க. மாமா, உங்களை நான் குத்தம் சொல்லல்லே. எல்லாம் நல்ல எண்ணத்தோடதான் செய்யறீங்க. காயம் பட்ட இடத்தைக் குணப்படுத்தறதா நினைச்சு, மேலே மேலே கீறிட்டிருக்கீங்க. ப்ளீஸ் மாமா, இன்னியோட இந்த வினாடியோட உங்க வைத்தியத்தை நிறுத்திக்குங்க. என் ரணத்தை ஆற்றிக்கொள்ள எது சரியான சிகிச்சைன்னு எனக்குத் தெரியும்... அதுக்குத்தான் டெலிபோன் பண்ணப் போறேன்...''

போன் செய்வதற்கான சில்லறையைக் கையில் எடுத்துக் கொண்டு கிளம்பியவளுக்கு எவ்வளவு ஏமாற்றம்! ராகுல் லீவாம். ஊருக்குப் போயிருக்கிறானாம். திரும்பி வரப் பத்து நாள் ஆகுமாம். அவன் இருந்திருந்தால் மட்டும் என்ன சொல்லியிருப்பாள்? என்ன முடிவெடுத்திருப்பாள்? அவளுக்கே அது தெரியவில்லை...

அந்த ஆன்ட்டி — க்ளைமாக்ஸான சமாசாரம் வெங்கடேசுவரனுக்கோ ரங்கம்மாவுக்கோ தெரியாது. அவள் சொல்லவில்லை. எந்த நிமிடத்தில் அவள் பெட்டி படுக்கையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டு விடுவாளோ என்று அவர்கள் உள்ளூர திகில் பட்டுக்கொண்டு இருந்தார்கள். புடவைகளைச் சாதாரணமாக இரண்டு உதறு உதறி அவள் மடித்து வைத்தால் கூட உடனே கலவரத்துடன் அவர்கள் கவனிப்பது அவளுக்குத் தெரிந்தது; அது வேடிக்கையாயும் இருந்தது. வேதனையாயும் இருந்தது.

இந்த ஸஸ்பென்ஸ் அவர்களுக்கு வேண்டியதுதான் என்று ஒரோர் சமயம் நினைத்துக் கொள்வாள். ஆனால்

அமைதியாயிருந்த தடாகத்தில் கல்லெறிந்து எவ்வளவு கலக்கி விட்டோம் என்று அவள் மனச்சாட்சி ஒரு பக்கம் குத்திக் கொண்டும் இருந்தது...

இரவு பத்து மணிக்கு யாரோ கதவைத் தட்டினார்கள்.

''யார்?'' என்று கேட்டுக் கொண்டே கதவைத் திறந்தாள்.

''இந்த மாதிரி வேளை கெட்ட வேளையிலே வேறே எவன் கதவைத்தட்டுவான்? நான் தான்,'' என்று அட்டகாசமாகச் சிரித்தபடி உள்ளே நுழைந்தார் ஆஜானுபாகுவான அந்த மீசைக்காரர்.

''அட, நமசிவாயம் சார்!'' என்ற சியாமாவின் மகிழ்ச்சிக் குரல், அந்த வீடு மொத்தத்தையும் குபுக்கென்று எழுப்பி உட்கார்த்தி வைத்தது. மின்சாரத்தினால் ஒரு குடும்பத்துக்கு உற்சாகமும் குதூகலமும் ஊட்ட முடியு மானால் எப்படி இருக்குமோ அப்படியொரு வேகத்தில் அங்கே புத்துணர்வு பிறந்து சுவர்களிலும் கதவுகளிலும் ஜன்னல்களிலும் அலமாரிகளிலும் ஊடுருவி ஓடுகிற மாதிரி ஆயிற்று.

''வெங்கு எங்கே, அதற்குள்ளே தூங்கிட்டானா?'' என்று அவர் கேட்கு முன்பே, வெங்கடேசுவரன், ''மேட்டூர் லைஃப்லே அப்படியே ஆழ்ந்துட்டே போலிருக்கு? ஆறு மாசமாய் ஒரு லெட்டர் கூடப் போட முடியலியா?'' என்று உரிமையுடன் கோபித்துக்கொண்டு நண்பரை வரவேற்றார்.

பாயைச் சுருட்டி ஓரமாக வைத்து விட்டு, ''வாங்க அண்ணா,'' என்றாள் ரங்கம்மா.

சென்ற பத்து பன்னிரண்டு வருடமாய்த்தான் சியாமாவுக்கு நமசிவாயத்தைப் பழக்கம். ஆனால் முப்பது வருடத்துக்கு மேலாக வெங்கடேசுவரனும் அவரும் நண்பர்கள் என்பது தெரியும். சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இரண்டு பேரும் சேர்ந்து எல்.டி.படித்தார்களாம். நமச்சிவாயத்தின் அப்பா கள்ளுக்கடை இன்ஸ்பெக்டராக இருந்து நிறைய பணம் சேர்த்தவர். மகனுக்குத் தாராளமாய் அனுப்புவார். நமசிவாயம் தனக்குச் செலவழித்துக்கொண்டது போக, மாமாவுக்கும் எவ்வளவோ வகையில் கொடுத்து உதவுவாராம். பிற்பாடு மாமா ஆசிரியராகவும் அவர் என்.ஜி.ஓ.ஆகவும் போனார்கள். பிறகு அவர் பிரைவேட் கம்பெனிகளில் வேலைக்குப் போய்விட்டார். ஆனால் நட்பு மட்டும் குறையவேயில்லை. இப்போது நமசிவாயம் கோயம்புத்தூரில் ஒரு மில் குரூப்பில் லேபர் ஆபீசராக இருக்கிறார். ஏதாவது கான்ஃபரன்ஸ், கல்யாணம் என்று சென்னை வரும்போதெல்லாம், என்னதான் வசதியான கெஸ்ட் ஹவுஸ்களும் ஓட்டல்களும் கிடைத்தாலும் கூட, இந்த மாம்பலம் கொசுக்கடிக்கும் ரங்கம்மாவின் சுக்கா ரொட்டிக்கும் ஆசைப்பட்டு வந்து விடுவார். ரங்கம்மா என்றும் வெங்கு என்றும் பெயர் சொல்லிக் கூப்பிடுகிற ஒரே சிநேகிதர் அவர்தான்.

''ரங்கம்மா, மூணே மூணு சுக்கா ரொட்டி போதும். சும்மா கொடுக்க வேண்டாம். இந்தாங்க, கூலி,'' என்று ஒரு மல்லிகைப் பொட்டலத்தைக் கொடுத்தார் நமசிவாயம்.

''ஆள் இளைச்சிருக்கியே தவிர, மீசை இளைக்கல்லே,'' என்றார் வெங்கடேசுவரன்.

''உன்னைப் போல ஃப்ரண்ட்ஸ் இருக்கிற வரையில் இது ஏன் இளைக்குது?'' என்று சிரித்த நமசிவாயம், ''வாலு எங்கே? என்று சுற்றுமுற்றும் பார்த்தார். ''ஒகோ, தூங்குதா? வேண்டாம்,வேண்டாம். எழுப்பாதேம்மா,'' என்றபடி தன் கர்னாடகமான தோல் பையின் நாலு தாழ்ப்பாள்களையும் படக் படக்கென்று திறக்கலானார். உள்ளேயிருந்து ஒரு கைலியை உருவி எடுத்தார்.

''இரு. இரு. அந்தக் கோரத்தை இங்கே காட்டாதே,'' என்று வெங்கடேசுவரன் அவசரமாய் அவரைத் தடுத்து, ''இதோ நான் வேட்டியே தரேன்,'' என்று கூறி, கொடியில் உலர்த்தியிருந்த தமது வேட்டியிலொன்றை எடுத்துக் கொடுத்தார்.

''இதைக் கண்டாலே உனக்கு அலர்ஜி,'' என்று சிரித்துக் கொண்டே கைலியைப் பைக்குள் திரும்ப அடைத்தார் நமசிவாயம். பிறகு வெங்கடேசுவரன் கொடுத்த வேட்டியைச் சுற்றிக்கொண்டு பாண்ட்டைக் களைந்தார்.

''சியாமா, பீரோவிலிருந்து ஒரு துண்டு எடுத்து வந்து கொடம்மா இவனுக்கு,'' என்றார் வெங்கடேசுவரன்.

'நமசிவாயம் சார், சரியான சமயத்துக்கு வந்தீங்க. நீங்க நல்லா இருக்கணும்' என்று மனத்துக்குள் நன்றியுடன் சொல்லிக்கொண்டாள் சியாமா. வெங்கடேசுவரன் அவளைப் பெயர் சொல்லி அழைத்து ஒரு காரியத்துக்கு ஏவிப் பத்து நாளைக்கு மேலாகிறது.

''இத்தனை வயசாகிறது, என்னப்பா கைலியும் மண்ணாங்கட்டியும்? அழகாய் ஒரு எட்டு முழம் வேட்டி வாங்கி வைத்துக் கொள்ளக்கூடாது?'' என்று வெங்கடேசுவரன் கடிந்து கொண்டார்.

''ஏன் அத்தோட நிறுத்திட்டே? பஞ்சகச்சம் கட்டிக்கக் கத்துக்கொடுத்திடு. உச்சிக் குடுமியும் வைச்சினிறேன். மீசையை எடுத்திடறேன். உங்க ஜாதிக்காரங்க பார்த்தாங்கன்னா, வா அய்யரேன்னு திவசத்துக்குக் கூப்பிட்டுக்கிட்டுப் போயிடுவாங்க,'' என்றார் நமசிவாயம்.

''அதனாலே என்ன அண்ணா? எங்க ஜாதிக்காரங் கன்னு சொல்லிக்கொண்டு மாமிசம் சாப்பிட்டுக்கொண்டு திரியறவங்களைக் காட்டிலும் நீங்கள் ஒண்ணும் குறைஞ்சு போயிட மாட்டீங்க,'' என்றாள் ரொட்டிக்கு மாவு பிசைந்து கொண்டிருந்த ரங்கம்மா.

ஹோஹோவென்று உரக்கச் சிரித்தார் நமசிவாயம். மற்றவர்களுக்கும் அது தொற்றிக்கொண்டது.

அப்பா! இப்படியொரு சிரிப்பலை பரவி எத்தனை நாளாகிறது இந்த வீட்டில்! சியாமாவுக்கு நெஞ்சு நெகிழ்ந்தது.

''ரங்கம்மா, மூணு ரொட்டி போறும்னு சொன்னே னில்ல. இவனை மறந்துட்டேன். ஆறு பண்ணிடுங்க. வெங்குவுக்கும் சேர்த்து!'' என்றார் நமசிவாயம்.

''ஊகூம், ஊகூம். நான் வயிறு முட்டச் சாப் பிட்டாச்சு,'' என்று மறுத்துப் பார்த்தார் வெங்கடேசுவரன் முடியவில்லை. ''நீ சாப்பிடாட்டா எனக்கும் வேண்டாம்

ஒரே ஒரு வேளை சாப்பிடாமல் இருந்தால் உயிராப் போயிடப் போவுது,'' என்று நமசிவாயம் சொல்லவே, வேறு வழியில்லாமல் தனது ஒரு வார உண்ணாவிரதத்தை வெங்கடேசுவரன் ஓசைப்படாமல் முடித்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

சியாமா மீண்டுமொரு முறை நமசிவாயத்துக்கு நன்றி சொல்லிக்கொண்டாள்.

குழந்தைகளுடன் சிக்கென்று ஒட்டிக்கொள்ளக் கூடிய முகராசி சில பேருக்கு உண்டு. நமசிவாயம் அப்படிப்பட்டவர். மாலுவுக்கு 'வாலு' என்று தான் அவர் கூப்பிடுவது வழக்கம் அவரிடம் கொள்ளைப் பிரியம். சரிக்குச் சரியாய் உட்கார்ந்து கொண்டு அதன் பள்ளிக் கூட விவகாரங்களை அக்கறையாய்க் கேட்பார். சியாமாவிடம் எந்தெந்த ஆபீசர்கள் எங்கெங்கே இருக்கிறார்கள் என்று விசாரிப்பார். ரங்கம்மாவின் உறவினர்களில் யார் யார் மண்டையைப் போட்டார்கள், யார் யாருக்கு கல்யாணம் ஆயிற்று என்ற தகவல்களைக் கேட்டறிவார்.

தட்டைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்கள். ''என்ன மிஸ் கமர்ஷியல் டாக்ஸ், உன் குரலையே காணோம்? கடைக்காரங்க உயிரையெல்லாம் ஒழுங்கா எடுத்துட்டிருக்கிறே இல்லை?'' என்று கேட்டார் நமசிவாயம்.

''ஏய்! ஏய்! மெதுவாப்பா! மணி என்ன ஆகிறதுன்னு நினைச்சிட்டிருக்கே? பதினொண்ணுக்கு மேலே ஆயிட்டுது. ஊர் முழுதும் தூங்குது. என்னடா பிள்ளையில்லா வீட்டுக் கிழவன் துள்ளி விளையாடறான் இந்த வீட்டிலேன்னு

அக்கம்பக்கத்திலே நினைப்பாங்க,'' என்றார் வெங்கடேசுவரன்.

அவருடைய பேச்சும் குரலும் தான் நமசிவாயத்துக்குச் சந்தேகத்தைக் கிளப்பிவிட்டன. ரங்கம்மா ஒரே ஒரு ரொட்டியைத்தட்டில் வைக்கும் போதே, 'ஊம், ஊம்,' என்று கையை குறுக்கே நீட்டித் தடுத்ததுவேறே...

''ஆமாம், என்ன நீ. நான் வந்ததே பிடிச்சுக் கவனிச்சிட்டிருக்கேன். எங்கேயோ பார்த்தபடி பேசறே, எங்கேயோ பார்த்தபடிநடக்கிற — என்னப்பா சமாசாரம் வெங்கு?'' என்று கேட்டு விட்டார் நமசிவாயம்.

''சே, சே. அதெல்லாம் ஒண்ணுமில்லை... என்னேவோ வயிறு ஒரு தினுசாயிருக்கு. நீ வற்புறுத்தினாயே என்பதற் காக உட்கார்ந்தேனே தவிர, இந்த அகாலத்தில் ஒரு நாளும் சாப்பிட மாட்டேன்.''

''ரங்கம்மா, என்ன இந்த ஆள் ஒரு மாதிரியாவே பேசறான்?'' என்று ரங்கம்மாவைப் பார்த்தார்.

''அதென்னவோ அவருக்குத் தான் தெரியும்.''

''சரி, அப்பாலே விசாரிக்கிறேன்... இப்பல்லாம் எனக்கு இது தான் சுவாரஸ்யமான பொழுது போக்கு. தெரியுமில்ல? ஊறுகாய் இன்னும் கொஞ்சம் போடுங்க.'' சாப்பிட்டபடியே பேசினார் அவர். ''எமர்ஜென்ஸி வந்தப் புறம் ஸ்டிரைக். லாக்கவுட் எதுவும் இல்லாமல் போச்சா? எனக்கும் வேலையே இல்லாமல் போயிட்டுது. பார்த்தேன். நாமாக ஏதாவது செய்தாலொழிய, தின்கிற சோறு செரிக்காதுன்னு தோணிச்சு. ஒர்க்கரஸோட குடும்பச்

சச்சரவுகளைத் தீர்க்கிறதுன்னு கங்கணம் கட்டிக் கிட்டேன்.''

வெங்கடேசுவரனும் சியாமாவும் ரங்கம்மாவும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். ''குடும்பச் சண்டை தினம் தினம் கிடைக்குமா என்ன?'' என்றாள் ரங்கம்மா.

''கேட்டீங்களே ஒரு கேள்வி! நேத்து ராத்திரி புறப்படறப்போ கூட ஒரு சண்டை. சமரசம் பண்ணிட்டு வந்தேன். எப்படி ஆகப் போறதோ?... ஒண்ணுமில்லை. ஒரு பையன், பெண், ரெண்டு பேரும் நம்ம மில்லிலே வேலை பார்க்கிறவங்க. லவ் மேரியேஜ் பண்ணிட்டவங்க. இப்ப கேட்டால், 'அது கெட்டழிஞ்சு போன கழுதை. நானாக்கும் பண்ணிக்கிட்டேன்'னு இவன் சொல்றான். 'அவன் சுத்த லோஃபர். தெரிஞ்சுதான் கழுத்தை நீட்டினேன்'னு இவ சொல்றா. எப்படியானால் என்ன? பெண்ணுக்கு அக்கவுண்ட்ஸ் செக்ஷனில் வேலை. புருஷனுக்கு சேல்ஸ் பிரமோஷன் செக்ஷன். ஒய்ஃபைக் காட்டிலும் ஐம்பது ரூபாய் சம்பளம் கம்மி. தகராறு அதனாலே இல்லே. பையனுக்கு அப்பா அம்மா இருக்காங்க. வயசானவங்க. இந்த நிமிஷமே அவங்களைத் துரத்திட்டு மறுவேலை பார் என்கிறாள் பெண்டாட்டி.''

''அக்கிரமமாயிருக்கே?''

''அக்கிரமம்தான். ஆனா அவங்களும் வாயை வச்சுக்கிட்டு சும்மா இருக்க மாட்டாங்கன்னு வைச்சுக் குங்க. நாலு மாசமாய்க் குடும்பத்திலே தினசரி அடிதடி சண்டைதான். படிச்சவங்க. 'உசந்த' சாதிக்காரங்க.

கிழவனார் என்கிட்டே, 'இத பாருங்க சார், மாட்டுப் பெண் என் கையைக் கடிச்சிட்டாள்'னு காட்டறார். மென்ட்டல் கேஸாவும் தெரியல்லே. 'கொஞ்ச நாள் மெட்றாஸ் ஆபீசுக்குப் போய் இரம்மா. மாத்தல் வாங்கித் தரேன்'னு அந்தப் பெண்கிட்டே சொன்னேன். 'ஐயையோ, நான் அந்தண்டை போனதும் இவர் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிடுவார்'னு அலர்றா.''

''அப்பறம் என்னதான் பண்ணினீங்க?''

''என்னத்தைப் பண்ண முடியும்? 'மருமகதான் குடும்ப நிர்வாகத்தைப் பார்த்துப்பாள். நீங்க யாரும் அவளிடம் ஒரு வார்த்தை கூடப் பேசக் கூடாது'ன்னு சொல்லிவிட்டு வந்தேன். எதுக்குச் சொல்றேன்னா... எதுக்குச் சொல்றேன்?'' என்று வெங்கடேசுவரனைப் பார்த்தார் நமசிவாயம்.

''ஸென்டென்ஸை ஆரம்பிச்சவன் நீ. கம்ப்ளீட் பண்ண வேண்டியவன் நானா?'' என்று எழுந்து விட்டார் அவர்.

வாசற்புறமிருந்த சிறிய வெராந்தாவில் படுக்கையைப் போட்டுக் கொண்டார்கள். இருவரும். கதவைத் தாழ் போட்டுக்கொண்டு விட்ட போதிலும், அவர்களுடைய தாழ்ந்த குரல்கள் வெகு நேரம் கேட்டுக் கொண்டே யிருந்தன...

காலையில் காப்பி சாப்பிட்டதுமே வெங்கடேசுவரன் வெளியே கிளம்பிவிட்டார் — மயிலாப்பூரில் ஒரு வேலை இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு. 'பதினொரு மணிக்கு ஆபீஸ் வண்டி வரும். நான் போய்க்கிறேன்'

என்று நமசிவாயம் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு விட்டார். அவர்கள் தனியே பேசிக் கொள்ளட்டும் என்றே மாமா போயிருப்பாரோ என்று கூடச் சியமாவுக்குத் தோன்றியது.

ஆனால் குளித்து முடித்துச் சாப்பிட உட்காரும் வரையில் நமசிவாயம் வாயே திறக்கவில்லை. ரேடியோ கேட்பதும் 'வாலு'வுடன் அரட்டையடிப்பதும் வாசலோடு போன மாம்பழ வண்டிக்காரனிடம் வியாபாரம் செய்வது மாக இருந்தார்.

சாப்பிடும் போது தான் மெதுவாய், ''வெங்கு கிட்டே, 'என்னப்பா சியாமாவோட கல்யாண விஷய மாய்க் கம்முனு இருக்கிறே? உன் சொந்தப் பெண்ணா இருந்தால் இப்படி இருப்பியா'ன்னு கேட்டேன் அப்பறம் தான் எல்லாம் சொன்னான்...'' என்று ஆரம்பித்தார்.

''மாமாவோட மனசிலே அந்த மாதிரி வித்தியாசம் கடுகத்தனையும் கிடையாது. அப்படி யெல்லாம் கேட்காதீங்க'' என்று சியாமா குறுக்கிட்டாள்.

''தப்புதாம்மா. கண் கலங்கிப் போயிட்டான் நான் அப்படிச் சொன்னதும். அவன் இருக்கட்டும்மா. இப்ப இப்படிச் பேசுகிற நீ, அன்னைக்கு அவனை அவ்வளவு தூக்கி எறிஞ்சு பேசலாமா? உள்ளுக்குள்ளே வெந்து போயிருக்காம்மா வெந்து போயிருக்கான்.''

ரங்கம்மா தங்கைக்குப் பரிந்து வந்தாள். ''உங்க சினேகிதரும் ஒண்ணும் புத்திசாலித்தனமாய் நடந்துக் கல்லே. இன்னிக்கு ஒண்ணு சொல்றது, நாளைக்கு அதை மாத்திக்கிறது, நாளன்னிக்குப் பழையபடி சொல்றது — இப்படியே வதைச்சு எடுத்து விட்டார் சியாமாவை.''

''தெரியும் ரங்கம்மா. எல்லாம் தெரியும் எனக்கு. அதுக்காக அவர் உயிர் மாதிரி நினைச்சிருக்கிற ஒரு விஷயத்தை அவ்வளவு அலட்சியமாய்ப் பேசலாமா? கோத்திரத்தைத் தூக்கிக் குப்பைத் தொட்டியிலே போடுன்னு சியாமா சொல்லலாமா?''

''ஆமாம், பின்னே என்ன? கோத்திரம் சாத்திரம் எல்லாம் யார் பார்க்கிறாங்க இந்த நாளிலே?'' என்றாள் ரங்கம்மா.

''நாம்ப இல்லேன்னு சொல்றதாலே ஒரு விஷயம் இல்லாததா ஆகிவிடாது. ரங்கம்மா,'' என்றார் நமசிவாயம். ''தீண்டாமையை ஒழிச்சிட்டோம் என்கிறோம். கிராமாந்தரத்திலே போய்ப் பாருங்க. எத்தனை பொதுக் கிணத்திலே எத்தனை ஹரிஜனங்க தண்ணி எடுத்துக்க முடியுது? வரதட்சிணையை ஒழிச்சாச்சு என்கிறோம். அது எத்தனை வடிவத்திலே இருந்திட்டிருக்கு? அந்த மாதிரிதான் இதுவும். ஞாயிற்றுக் கிழமை ஹிண்டுவை எடுத்துப் பாருங்க. எத்தனை மாட்ரிமோனியல் விளம்பரம் வருது, அதிலே கோத்திரத்தைக் குறிப்பிடாதவங்க யார் இருக்காங்க? நான் — பிராமின்ஸா இருந்தால், இன்ன காஸ்ட், இன்ன ஸப் — காஸ்ட்டிலே வரன் வேணுமின்னு குறிப்பிடறாங்க...''

சியாமா மௌனமாய் அவருக்கு ரசம் ஊற்றிக் கொண்டிருந்தாள்.

''வெங்கு ஒரு மடையன். இல்லைன்னா. ஏற்கெனவே உன்னை வேணாம்னு சொல்லிட்டுப் போன பையனைத் திரும்ப அழைச்சிட்டு வந்து உன்னை

இன்ஸல்ட் பண்ணு வானா? படிச்ச பண்பாடுள்ள பெண்ணாய் லட்சணமாய் நீ பல்லைக்கடிச்சிட்டுப் பொறுத்துக் கொண்டாய். மரியாதையாய்ப் பேசி அனுப்பினாய். அதே பொறுமையை இன்னும் கொஞ்ச நேரம் கடைப்பிடிச்சிருக்கக் கூடாதா? 'மாமா, எனக்கு இந்தப் பையனைப் பிடிக்கலே. தயவு பண்ணி வற்புறுத்தாதீங்க'ன்னு ஒரு வார்த்தையில் சொல்லிட்டுப் போக வேண்டியதுதானே? உன் இஷ்டத்துக்கு விரோத மாய் யார் என்ன கட்டாயப் படுத்த முடியும் உன்னை?...''

''என்னவோ அப்போ இருந்த படபடப்பிலே நாக்கிலே வந்துவிட்டது...''

''கரெக்ட். அதையேதான் நானும் வெங்கு கிட்டே சொன்னேன். இரண்டு பேரும் இதைக்கொஞ்ச நாளைக்கு ஆறப் போடுங்க. எல்லாம் சரியாயிடும். சந்தோஷமாய், ஒற்றுமையாய் இருந்த குடும்பத்திலே இப்படிக் கராபுரான்னு சண்டை போட்டுக்கிட்டு... அவன் சாப்பிடாமல் போறதும் ரங்கம்மா மூக்கைச் சிந்தறதும், நீ முறைச்சுக்கிறதும்... ஏதோ காலம் சரியில்லே. விடு. என்ன?''

''சரி.''

''அட, ரசத்தை இன்னும் கொஞ்சம் விடு என்கிறேன். விடும்மா.''

ரங்கம்மாவும் சியாமாவும் சிரித்தார்கள்.

**சா**யந்தரம் வீடு திரும்பியதும் மாமாவிடம் தன் 'ஸாரி'யை எந்த வகையில் தெரியப்படுத்துவது என்ற யோசனையிலேயே அன்று பூரா ஆழ்ந்திருந்தாள் சியாமா.

"போன், சியாமா. உன்னை யாரோ போனில் கூப்பிடுகிறார்கள்," என்று இரண்டு முறை ஹெட்கிளார்க் சொன்ன பிறகுதான் அவளுக்கு நினைவு திரும்பியது.

"போனா? யார்?" என்றபடி ரிஸீவரை எடுத்து, "சியாமா ஹியர்," என்றாள்.

"ஒரு ஆள் ஹியர்," என்று போனின் மறுமுனை சிரித்தது.

ராகுல்!

இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. அவனிடம் என்ன பேசுவது என்று புரியவில்லை. "ஊருக்குப் போயிருக்கிறதா... சொன்னாங்களே. எப்ப வந்தீங்க?" என்றாள்.

"இன்னிக் காலையில்தான். சியாமா, ஊரிலிருந்து உனக்கு ஒரு பிரமாதமான நியூஸ் கொண்டு வந்திருக்கேன். என்ன சொல் பார்க்கலாம்?"

"தெரியலியே?" என்றாள்.

"உன் கோத்திரம் வேறே, என் கோத்திரம் வேறே!" என்றான் ராகுல்.

## பதிமூன்று

"அவ்வளவுதான் விஷயம்," என்று சியாமாவிடம் சொல்லி முடித்து விட்டு, டெலிபோன் கூண்டிலிருந்து வெளியே வந்தான் ராகுல். மூடிய கதவுக்குப் பின்னே வெகு நேரம் அடைந்திருந்ததால் முதுகெல்லாம் வியர்வை யினால் கசகசவென்றிருந்தது. ஆனால் அவன் உள்ளத்

துக்குள் ஜிலு ஜிலுவென்று தென்றல் வீசிக் கொண் டிருந்தது. அப்பாவைப் போய்ப் பார்க்கத் தோன்றியதோ பிழைத்தோமோ என்று நினைத்து நினைத்துச் சந்தோஷப் பட்டுக்கொண்டான்.

அன்று சியாமா அவனைப் பனகல் பார்க் முனையில் பார்த்துப் புன்னகை செய்து விட்டுச் சுரங்கப் பாதையில் மறைந்ததை அவனால் மறக்க முடியவில்லை. இனி நாம சந்திக்க வேண்டாம், சந்திப்பதில் அர்த்தமில்லை என்று அவள் சொல்லாமல் சொல்லிய விதம் அவன் இருதயத்தைப் பிழிந்தது.

இரண்டு நாள் யந்திரம் போல் தன் வேலையைக் கவனித்தான். நல்ல காலமாய் அந்த இரண்டு நாளும் சீரியஸான தீயணைப்பு அழைப்பு எதுவும் வரவில்லை. அப்படி வருமானால், இப்போதைய மனநிலையில் சரியான படி வேலை செய்யாமல் உயிருக்கும் உடைமைகளுக்கும் ஆபத்து ஏற்படுத்தி விடுவோம் என்ற அச்சம் கூட அவனுக்கு ஏற்பட்டது. அந்த மாதிரி ஏதாவது நேருமுன் எங்காவது வெளியூர் போய் இருந்து மனசைச் சரிப்படுத்திக் கொண்டு வரவேண்டுமென நினைத்தான்.

அப்பாவின் ஞாபகம் வந்தது.

உடல் தளர்ந்து, உள்ளம் ஒய்ந்து கடலூருக்குப் பக்கத்திலே ஏதோவொரு கிராமத்தில் முடங்கிக் கிடக்கும் அந்தக் கிழவரைப் போய்ப் பார்த்தால் என்ன என்று தோன்றிற்று. சின்ன வயசில் அவனும் சிநேகிதர்களும் 'ஒடிப் பிளே' விளையாடும் போது வாசல் திண்ணையில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார் அவன்

அப்பா — அதாவது, அன்று கல்யாணம் கார்த்திகை என்று எந்தச் சமையல் வேலைக்கும் போகாமலிருந்தால். ஓடுகிற குழந்தைகளுக்கு அவர் தான் 'தாய்ச்சி' அவரைத் தொட்டு விட்டால் யாரும் எதுவும் பண்ணிக் கொள்ள முடியாது. அது போல இன்று, சடங்கும் சம்பிரதாயமும் தன்னைத் துரத்துகிறாற் போன்ற தோல்வியுணர்ச்சி அவனை ஆட் கொண்டிருந்த போது, அந்தத் 'தாய்ச்சி'யைத் தொட்டுக் கொண்டு, அதன் பின்னே பாதுகாப்பாக நின்று கொள்ள வேண்டும் போலிருந்தது. புறப்பட்டு விட்டான்.

மெயின் சாலையிலிருந்து பிரிந்து, கிளைப் பாதை வழியே தோளில் பிளாஸ்டிக் பையும், மனத்தில் பாரமும், முகத்தில் புழுதியுமாக அவன் இறங்கி நடந்தான். வராகப் பெருமாள் கோவிலின் பழமையான மதில் சுவரோடு ஒட்டிச்சென்று, நீர்ப் பரப்பை மறைக்கும் அளவுக்கு நீல ஆம்பல் வளர்ந்திருந்த குட்டையைக் கடந்து, 'காமராஜ் வாலிபர் சங்க'த்தை அடுத்திருந்த வீட்டுக்குள் நுழைந்து, கரியடுப்பில் புஸ் புஸ்ஸென்று ஊதிக் கொண்டிருந்த அந்தக் கிழவரைக் கண்ட போது, இவரையா 'தாய்ச்சி' என்று பெரிதாக நம்பிக் கொண்டு பலம் பெறுவதற்கு வந்தோம் என்று அவனுக்கு ஏமாற்றமாயிருந்தது.

நெற்றியில் சாரம் கட்டிக்கொண்டு அவனை உற்றுப் பார்த்து, 'யார், ராகுலா? வாடா வாடா,'' என்று வரவேற்றார் அவர்.

இரண்டே நாளில் கிராமம் போரடித்துப் போய்ச் சென்னைக்கு ஓட்டம் பிடித்து விடுவோம் என்று அவன் எண்ணியிருந்தான். அப்படி நடக்கவில்லை. கிராமத்தில் பெரிய மிராசுதாராக இருந்த புளியஞ்சேரி வீரராகவன்

அவனுக்குத் தூரத்து உறவு. படிப்பாளி. பொதுக் காரியங்களில் ஆர்வமும் ஈடுபாடும் உள்ளவர். பிள்ளை குட்டி இல்லாதவர். ராகுலுக்கு அவர் சினேகம் கிடைத்தது. அப்பா செய்கிற அருமையான சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டு வீரராகவனின் வீட்டுக்குப் போய் உட்கார்ந்து கொள்வது சுகமான பொழுது போக்காக இருந்தது. பகல் பூரா கேரம் ஆடுவார்கள்: சாயந்தரம் அரட்டை அடிப்பார்கள்: அல்லது வீட்டுக்கெதிரில் இருந்த அவரது பிரம்மாண்டமான தோட்டத்தில் உலாத்துவார்கள்.

தன் துயரத்தையும் காதலையும் மறக்க முயன்ற வனாக எட்டு நாட்களை ஓட்டி விட்டான். ஒன்பதாம் நாள் அவன் அப்பா தான் அவனுக்கு நினைவூட்டினார். ''ஏண்டா ராகுல், எத்தனை நாளைக்கடா இப்படி இருக்கப் போகிறே? ஒரு கல்யாணம் கில்யாணம்...''

ராகுல் பேசாமலிருந்தான்.

''பரிசாரகத்துக்குப் போகிற இடங்களில் அந்தக் கல்யாண கோலாகலங்களைப் பார்க்கிற போதெல்லாம், நம்ம ராகுலுக்கு எப்ப இப்படி நடக்கப் போகிறதோ என்று நான் நினைச்சுக்கிறேன்...''

''என்றைக்கோ நடந்திருக்க வேண்டியதுதான் அப்பா...'' என்று சொல்லிவிட்டு அவரைத் தயக்கத்துடன் பார்த்தான் ராகுல். பிள்ளைப் பிராயத்தில் தன் ஆசை களையும் அனுபவங்களையும் அம்மாவிடம் மட்டுமே சொல்லிப் பழக்கப்பட்டவன் அவன்: லட்டையும் காராபூந்தியையும் தவிர அப்பாவிடம் எதையும் பகிர்ந்து கொண்டது கிடையாது. இப்போது அந்த முகத்தின் சுருக்கங்களை, அந்தத் தீர்க்கமான மூக்கை, வாழ்க்கையில்

எல்லாவற்றையும் பார்த்தாகிவிட்டது என்ற களைப்புடன் ஆழத்தில் இருக்கும் கண்களை, நோக்குகையில் அவனுக்குள் இனம் தெரியாத நெகிழ்ச்சியொன்று பொங்கிக் கொண்டு வந்தது.

"சொல்லு ராகுல்," என்று அவர் தூண்டியதுதான் தெரியும் — தனக்கும் சியாமாவுக்குமுள்ள காதல் பற்றி, அது முறிந்து போன அவலத்தைப் பற்றி, கொட்டி விட்டான்.

அவர் அவனுக்கு ஆறுதல் சொல்லவில்லை. "ஒரே கோத்திரம் என்றால் தப்புதாம்பா," என்று மட்டுமே சொல்லிவிட்டு, இரவுச் சமையலுக்குக் கொத்தவரங்காய் நறுக்குவதில் முனைந்து விட்டார். இவ்வளவு சாதாரண மாக அவர் விட்டுவிடுவார் என்று அவன் நினைக்க வில்லை.

சாயந்தரம் அவர் எங்கோ வெளியில் போய் விட்டு வந்தவர், "ராகுல்," என்று கூப்பிட்டு, அவன் தோள் மீது ஒரு கையைப் பரிவுடன் வைத்துக் கொண்டார். "ராகுல், ஒரு ஏற்பாடு பண்ணியிருக்கேன்... புளியஞ்சேரி வீரராகவன் ரொம்ப நாளாய்ச் சொல்லிக் கொண்டிருந்தான். நான் தட்டிக் கழிச்சிட்டே இருந்தேன். இன்னிக்கு அவனிடம் போய்ச் சரின்னு சொல்லிட்டேன்."

"என்னப்பா சொல்றீங்க?"

"உன்னைச் சுவீகாரம் கேட்டான். சரின்னு சொல்லிட்டேன். வீரராகவனுக்கு ரொம்ப சந்தோஷம்."

அவன் திகைத்தான். "என்ன அப்பா திடீர்னு..."

''திடீரோ கிடீரோ, சுவீகாரம் போக உனக்குச் சம்மதம் தானே?'' என்றார் அவர்.

திகைத்துப் போனானே தவிர, அவர் செய்ததன் அர்த்தம் அவனுக்குப் புரியவில்லை.

அடுத்த நாள் ஒரு சுருக்கமான சடங்குடன் அவன் புளியஞ்சேரி வீரராகவனின் புத்திரனாகிவிட்டான்.

அப்பா அவனை அணைத்துக் கொண்டார். ''ராகுல், இனிமேல் நீ பழைய காசியப கோத்திரமில்லை. கௌன்டின்ய கோத்திரம் — உன் சுவீகாரத் தகப்பனாரின் கோத்திரம்...''

''அப்பா!'' அவர் செய்த தியாகத்தின் முழுப் பெருமையையும் உணர்ந்த போது அவனுக்கு உடம்பு சிலிர்த்தது. அவர் காலில் விழுந்து ஆசி பெற்ற போது, அவனுடைய சூடான கண்ணீர் அந்தக் கிழவரின் பாதங்களை நனைத்தன...

இவ்வளவையும் போனில் சொன்னவுடன் சியாமாவுக்கு ஏற்பட்ட குதூகலம்!... ''நான் இப்பவே வீட்டுக்குப் போய் மாமாகிட்டே சொல்லிவிடுகிறேன்... நீங்க பின்னாலேயே வாங்க,'' என்றாள்...

''பலே பலே பலே!'' என்று கைதட்டினார் நமசிவாயம். ''அப்புறம் என்ன? ரங்கம்மா, போய்ப் பாயசம் வையுங்க. பால் பாயசம். கையை விட்டால் சும்மா குத்துக் குத்தாய் முந்திரிப் பருப்பு கிடைக்கணும்!''

நமசிவாயம் அன்று பதினொரு மணிக்கு ஊருக்குப் போகவில்லை.

எதிர்பார்த்தபடி அவருடைய 'ஆபீஸ் வண்டி' வராததே காரணம். அவரும் இன்னும் இரண்டு பெரிய அதிகாரிகளுமாக மேட்டூரிலிருந்து காரிலேயே வந்திருந் தார்கள். அலுவலக விஷயமாக, வந்தவர்களில் ஒருவருக்கு ஏதோ சொந்தக் காரியம் இருந்தது. அது அன்று முடிவடை யாததால், பிரயாணத்தை மறு நாளைக்கு ஒத்திப் போட லாமா என்று டிரைவர் மூலம் கேட்டனுப்பினார். ''பை ஆல் மீன்ஸ்,'' என்று சொல்லியனுப்பிவிட்டு, மேலும் ஒரு நாள் தங்கிவிட்டார்.

சியாமா சொன்னதைக் கேட்டு ரங்கம்மாவுக்கு ஒரே உற்சாகம்.

''என்னவோ அந்த ஏழுமலையானைத்தான் நம்பி யிருந்தேன். மோசம் பண்ணவில்லை,'' என்று கண்ணைத் துடைத்துக்கொண்டாள்.

வெங்கடேசுவரன் டிபன் சாப்பிட்டுக் கொண் டிருந்தவர், தட்டை ஓரமாய் வைத்தார். எழுந்து போய்க் கிணற்றடியில் வாயைக் கொப்பளித்து விட்டு, துண்டில் கையைத் துடைத்தபடி திரும்பி வந்தார். அவர் முகம் எவ்வித உணர்ச்சியையும் வெளிப்படுத்தக் காணோம்.

''என்னப்பா வெங்கு. ஒன்றும் சொல்லாமல் இருக்கிறே?'' என்றார் நமசிவாயம்.

''நான் சொல்றதுக்கு என்ன இருக்கு?'' என்றார் வெங்கடேசுவரன்.

''அந்தக் கோத்திர சமாசாரமெல்லாம் நல்லபடி முடிஞ்சிட்டாப்பலே இருக்கே?''

"காதிலே விழுந்தது."

"இனிமேல் கல்யாணத்துக்குத் தடை - எதுவும் இல்லையே?"

"இல்லைன்னு மத்தவங்க சொல்றாங்க."

ரங்கம்மா மெதுவே கணவரிடம் வந்தாள். "இப்படி கோத்திரம் மாத்திக்கிறது வழக்கம் தான்... அந்த லிப்டன் கம்பெனி விசுவனாதன் வீட்டுக் கல்யாணத்திலேகூட அப்படித்தான் பண்ணினாங்க தாலி கட்டறதுக்கு அரை மணி முன்னாலே இன்னொரு மணையிலே உட்கார்த்தி வைச்சு. வேறே யாரோ உறவுகாரருக்குச் சுவீகாரம் கொடுத்தாங்க. கோத்திரம் மாறிட்டுது..."

"கோத்திரம் மாறல்லே ரங்கம். மாறிட்டதாய்ச் சொல்றாங்க!'

"என்ன விட்டேத்தியாவே பேசறீங்க? கல்யாணத் துக்கு ஏற்பாடு பண்ண வேண்டியதுதானே?"

வெங்கடேசுவரன் பதில் தராமலிருந்தார்.

நமசிவாயத்துக்குக் கோபம் வந்துவிட்டது. "என்னப்பா நீ சுத்தக் கோளாறு பிடிச்ச ஆளாக இருக்கிறே! ஒரே கோத்திரமாக இருக்கக் கூடாதுன்னு சொன்னே. இப்ப மாறிப் போச்சு. அப்புறம் என்ன?"

"நமசிவாயம், நான் சொன்னதெல்லாம் வெறும் டிபேட்டிங் பாயின்ட்டுக்காக அல்ல. பெரிய விஷயம் அது வெறுமே வாயளவிலே ஆட்சேபணை பண்ணுகிறவர் களுக்கு வேணுமானால் இந்த சுவீகார ஷார்ட் கட்டெல்லாம் சம்மதமாக இருக்கலாம். எனக்கு அப்படியில்லை. தயவு செய்து இது பற்றி மேற்கொண்டு பேசாதேப்பா."

சடக்கென்று விளக்குகளை அணைத்த மாதிரி அங்கே ஒரு நிசப்தம் பரவியது. காமெராவில் பிடித்த ஃப்ரீஸ் ஷாட் போல அவரவர்கள் அசைவற்று அந்தந்த பாவத்திலே நின்றார்கள். சுவர்க் கடியாரத்தின் டக் டடக் டக் டடக்... 'ஹல்லோ!' என்று தெருவிலே யாரோ யாரையோ கூவும் ஓசை...பின் போர்ஷன் அம்மாள் டபரா டம்ளர்களைக் குழாயடியில் கொண்டு வந்து போடும் ஒலி... 'இன் எ ஸ்பிரிங் பாலன்ஸ்...' என்று மீண்டும் படிக்கத் தொடங்கி விட்ட மாலுவின் ராகம்...

மெல்ல மெல்லக் கண்களைத் திருப்பி சியாமாவை நோக்கினார் நமசிவாயம். அம்மா! என்ன ஜிவுஜிவுவென்று இருக்கிறது!

'மாமா சாஸ்திரம் சம்பிரதாயம் பார்க்கிறவர், கர்னாடகமான மனிதர், கட்டுப்பட்டுப் போகணும் என்றெல்லாம் நாம் நினைச்சிருந்தது தப்போ? நான் சுகமாய் இருந்துடக் கூடாது, என் வாழ்க்கை சந்தோஷமாய் அமைந்துவிடக் கூடாது என்கிற எண்ணம்தான் அவர் கிட்டே பலமாயிருக்கும் போலிருக்கே! இல்லாவிட்டால் மக்கி, உளுத்துப் போன, பைசா பெறாத ஒரு விஷயத்தை இப்படி உடும்புப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டு குதிப்பாரா!' என்று அவள் உள்ளுக்குள் பொருமிக் கொண்டிருப்பது புரிந்தது.

ரங்கம்மா பயத்தினால் பிரமை பிடித்தவளாகக் கதவோடு கதவாய் ஒண்டிக் கொண்டு விட்டாள். மாலுவுக்கு இப்போதும் எதுவும் புரியவில்லை. ஆனால் நிலைமை சரியில்லை என்று மட்டும் தெரிந்தது. 'இன் த மிடில் ஆஃப் எ ஹொரஸான்ட்டல் பீம்...' என்று படித்தபடியே வாசலுக்கு நழுவிவிட்டாள்.

வெங்கடேசுவரனை உற்றுக் கவனித்தார் நமசிவாயம்.

'ஹூம்! நான் பாட்டுக்கு இருந்திருந்தால் இந்த வம்பே கிடையாதே. அன்னிக்கு என் மாமனார் இறந்து போய், குடும்பம் நிர்க்கதியா நின்னிட்டிருந்தப்போ, அவங்கவங்க அவங்கவங்க வேலையைப் பார்த்துக் கொண்டு போயிட்டிருந்தப்போ, இந்தக் கடைசிப் பெண்ணும், இவளோட விதவைத் தாயாரும் எக்கேடு கெட்டுப் போனா எங்களுக்கென்ன என்று மத்தவங்க எல்லாரும் கண்ணை மூடிட்டிருந்தப்போ, நான் சும்மா இருந்திருக்கலாமில்லையா? நான் காப்பாத்தறேன் வாங்கன்னு தலையிலே அட்சதை போட்டுக்கிட்டேன் பாரு, அதற்கு என் புத்தியை ஜோட்டாலே தான் அடிச்சுக் கணும்' என்று அவர் எண்ணுவது முகத்தில் தெரிந்தது.

நமசிவாயம் சியாமாவைப் பார்த்தார்.

'பிற்காலத்தில் நம்மை இப்படி ஆடுமாடுகளைப் பிடிச்சுத் தொழுவத்திலே கட்டற மாதிரி எவன் தலையிலே வேணுமானாலும் கட்டப் பார்ப்பார்னு தெரியாமே, இவர் போடற பிச்சைச் சோற்றுக்கு நாக்கை நீட்டிக்கொண்டு ஓடி வந்து ஒட்டிக்கொண்டோம் அல்லவா? அதற்கு என் தலையிலே அடிச்சுக்க வேண்டியதுதான். நாலு வருஷமாய் ஏதோ நாமும் நாலு காசு சம்பாதிச்சு இந்தக் குடும்பத்தைக் காப்பாத்திட்டிருக்கோம். அதனாலே வேறே எந்த விஷயத்திலே அடிமையாயிருந்தாலும் கல்யாண விஷயம் ஒண்ணிலே யாவது சுதந்திரம் கொடுப்பாங்கன்னு நினைச்சிருந்தேன் அல்லவா? அந்தப் புத்திக்கு ஜோட்டாலே அடிக்க வேண்டியது தான்!' என்று அவள் சொல்வது போலிருந்தது.

புடவைத் தலைப்பால் கண்ணைத் துடைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த ரங்கம்மாவையும் பார்த்தார்.

பிறகு ''நான் ஒன்று சொல்லட்டுமா?'' என்றார் மெதுவாக.

''வெங்கடேசுவரன் சியாமா மேலே வைச்சிருக்கிற அன்பு என்ன, சியாமா அவர்மேலே வைச்சிருக்கிற மரியாதை என்ன — எல்லாரும் எல்லாத்தையும் மறந்திட்டுப் பேசற மாதிரி இருக்கு... வேண்டாம். கொஞ்ச நாளைக்கு இந்தப் பேச்சை ஒத்தி வைச்சிருப்போம். இப்ப போகிற போக்கு எனக்கென்னவோ நல்லதா படல்லே. இப்படியே போனால் பெரிய விபரீதத்திலே கொண்டு போய் விட்டுடும்னு எனக்குப் பயமாயிருக்கு...''

ஆனால் நிதானத்தைக் கடைப்பிடிக்கும் மனப்பாங்கு எப்போதோ அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு விட்டது என்பது அவருக்குப் பிறகு தான் தெரிய வந்தது. ''நமசிவாயம் சார்,'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூப்பிட்டாள் சியாமா.

''என்னம்மா?...''

''அன்னிக்கு ஒரு நாள் நீங்க இல்லாதபோது மாமாவிடமும் அக்காவிடமும் சொன்னேன்... வாழ்ந்தால் ராகுலோடு தான் வாழப் போறேன்னு. வாழ்ந்தால் கிழ்ந்தால் சந்தேக சமாசாரமே இனிமேல் வேண்டாம். அவரோடுதான் வாழப் போறேன். சத்தியமான வார்த்தை.

''என்னம்மா சியாமா நீ!'' நமசிவாயத்தின் குரல் உரத்தது. ''அவன் இந்தக் கல்யாணமே கூடாதுங்கிறான். நீ

ராகுலோடுதான் வாழ்வேன் என்கிறாய். என்ன அர்த்தம்? கல்யாணம் பண்ணிக்காமலே வாழ்ந்திடுவியா என்ன?''

இத்தனை நேரமாக இல்லாத மலர்ச்சியொன்று திடீரென்று அவள் முகத்தில் பரவியது. ''கரெக்ட் சார், கரெக்ட்!'' என்றாள் தெளிவான குரலில். ''கல்யாணம் பண்ணிக்காமலே அவரோடு வாழ்கிறேன்!''

''என்னது!'' என்று பதைத்துக்கூவினார்கள் ரங்கம்மாவும் வெங்கடேசுவரனும். ''என்ன சொல்றேநீ?'' என்றார் நமசிவாயம் குழப்பத்துடன்.

''கல்யாணம் பண்ணிக்கொண்டால் தானே உங்களுக் கெல்லாம் ஆட்சேபம்? பண்ணிக்கொள்ளவில்லை. ஆனால் அவரோடு சேர்ந்து வாழ்ந்திருப்பதை நீங்கள் தடுக்க முடியாது. கல்யாணம் செய்து கொள்ளாமலே ராகுலுடன் வாழந்து காட்டுகிறேன்!''

வாசலில் ராகுல் வந்து நின்றிருந்தான்.

## பதினான்கு

தகராறெல்லாம் ஒரு வழியாய் முடிந்து விட்டது என்று சியாமா சொல்லியிருப்பாள். ஆரத்தி கரைத்து வைத்துக் கொண்டு வீடு மொத்தமும் தன்னை வரவேற்கக் காத்திருக்கும் என்று கற்பனை செய்துகொண்டு வந்த ராகுலுக்கு —

அந்தப் பயங்கர நிசப்தம் — ஒவ்வொருவரும் முகத்தைத் திருப்பிக்கொண்ட விதம் —

நமசிவாயத்துக்குத் தான் அவனைத் தெரியவில்லை. ''யாரோ வந்து நிற்கிறார்களே வாசலில்?'' என்றார்.

ரங்கம்மா விளக்கினாள். ''ராகுல்னு... இத்தனை நேரம் பேசிக் கொண்டிருக்கிற பிள்ளை...''

நொடியில் நிலைமையைச் சமாளித்தார் நமசிவாயம். ''ஓ, உள்ளே, வாங்க, தம்பி,'' என்று அழைத்தார்.

''அங்கேயே இருங்கள்.'' சட்டென வாசல் புறம் பார்த்துச் சொன்னாள் சியாமா. ''இதோ நானே புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.''

''கொஞ்சம் சும்மா இருக்க மாட்டியாம்மா சியாமா? என்றார் நமசிவாயம் மனம் நொந்தவராக.

''நமசிவாயம் சார், நான் எந்த அளவுக்குச் சும்மா இருக்க முடியுமோ அந்த அளவுக்கு இருந்துவிட்டேன். இதற்கு மேலே என்னால் பொறுத்துக்க முடியல்லே. மன்னிச்சுக்குங்க.'' பீரோவைத் திறந்து இரண்டு புடவை களைப் பிளாஸ்டிக் பையில் திணித்துக் கொண்டாள் அவள்.

பாய்ந்தோடி வந்து அவள் கையிலிருந்து அந்தப் பையைப் பறித்து அந்தண்டை எறிந்தாள் ரங்கம்மா. ''என்னடி நீ பாட்டுக்குப் பெரிய விபரீதமாய் ஆரம் பிக்கிறே? விளையாட்டாயிருக்கா இதெல்லாம் உனக்கு? மானம் போகிற சமாசாரம்டி!''

''நமக்குள்ளே ஒரு சிறு அபிப்பிராய பேதம் இருக்கு அக்கா,'' என்றாள் சியாமா. ''மானத்தைப் போக்குறேன்னு நீ நினைக்கிறே. இப்பத்தான் மானத்தை நிலைநாட்ட றேன்னு நான் நினைக்கிறேன்.''

அமைதியாகப் பையைத் திரும்ப எடுத்து, வெளியே விழுந்து விட்ட புடவையைத் திரும்ப அதற்குள் திணித்தாள் அவள்.

"ஏண்டி, பேய் கீய் ஏதாவது உன்னைப் பிடிச்சு ஆட்டறதா என்ன? வயசுப் பொண்ணு நீ, படிதாண்டிப் போறதாவது!"

"என்னிக்காவது ஒரு நாள் நான் இந்தப் படியைத் தாண்டிப் போக வேண்டியவள் தானே அக்கா? ஆசீர்வாதம் பண்ணி என்னை வழியனுப்பு." என்ற சியாமா, திருதிருவென்று விழித்துக் கொண்டிருக்கும் மாலுவைத் தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டாள். "சமர்த்தாய்ப் படிக்கணும். தெரியறதா? நான் இல்லையேன்னு பாடத்தையெல்லாம் கோட்டை விடக்கூடாது. வாரத்திலே ஒரு நாள் நான் வருவேன். சந்தேகமாயிருக்கிறதையெல்லாம் எடுத்து வை. இருந்து சொல்லித் தந்துட்டுப் போகிறேன், என்ன?"

"சே, சே,சே!" என்று தலையைக் கையில் அழுத்திக் கொண்டார் நமசிவாயம்.

"என்ன நீங்க, பேசாமல் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருக்கீங்க?" என்று கணவனிடம் ஓடினாள் ரங்கம்மா.

வெங்கடேசுவரனின் கண் முனைகள் ஈரத்தால் பளபளத்துக் கொண்டிருந்தன. "ரங்கம், உன் தங்கைக்கு மனசிலே ஈசுவரன் அபாரமான திடம் கொடுத்திருக்கான். உன்னையும் என்னையும் போல அவள் அழமாட்டாள். உறுதியாய்ச் சவால் விட்டாள். உறுதியாய் நடவடிக்கை எடுத்துக்கிறாள்..."

''என்னப்பா வெங்கு, நீயும் உன் வேதாந்தமும்!'' என்று குறுப்பிட்டார் நமசிவாயம். ''கொஞ்சம் விட்டுக் கொடப்பா இப்பவாவது!''

''என்னை என்ன செய்யச் சொல்றே, நமசிவாயம்? கோத்திரமாவது மண்ணாங்கட்டியாவது, அதெல்லாம் தாமஷுக்குச் சொன்னேன் என்று என் மனசறிஞ்சு பொய் சொல்லச் சொல்றியா? என்னாலே முடியாது நமசிவாயம். என்னாலே முடியாது. அவள் இஷ்டப்படி எதுவும் அவள் செய்து கொள்ளட்டும். இதோ இந்த மார்பிலே சாத்தி வைத்துக்கொண்டு அவளை தூங்கப் பண்ணியிருக்கேன் எத்தனையோ நாள். அதே மார்பை உதைச்சிட்டுப் போறேன் என்கிறாள். போகட்டும். எங்கேயாவது அவள் சந்தோஷமாயிருந்தால் சரி. என் நம்பிக்கை என்னோடே.''

அவரை ஏறிட்டுப் பார்த்தாள் சியாமா. ஆனால் எதுவும் சொல்லவில்லை. குனிந்து அவர் கால்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள். ''வரேன் அக்கா. என்னைப் பத்திக் கவலைப்படாதே. வரேம்மா மாலு.''

சிலையடித்த மாதிரி ராகுல் இன்னும் நடையிலேயே நின்றிருந்தான். எல்லோருடைய பேச்சும் ஒன்று விடாமல் கேட்ட பிறகும் கூட அவனுக்கு அதன் முழு அர்த்தமும் விளங்கவில்லை.

''என்ன சியாமா? என்ன நடந்தது?'' என்றான், அவள் வாசலுக்கு வந்ததும்.

''ஒன்றுமில்லை. வாருங்கள்.''

அவள் கையிலிருந்த பையைப் பார்த்தான். ''எங்கே நீ கிளம்பறே இப்ப?''

''பேசாமல் என்னோடு வாங்க,'' என்று சொல்லி விட்டு முன்னே நடந்தாள் அவள். தெருக் கோடியை அடையும் வரை இருவரும் பேசிக் கொள்ளவில்லை. முனை திரும்பும்போது அவள் ஒருமுறை பின்னால் பார்த்தாள். யாரும் பின்தொடர்ந்து வருவதாகத் தெரியவில்லை.

''என் குடும்பத்திலே ஒரு மனஸ்தாபம்,'' என்றாள் அமைதியாக.

திகைத்தான் அவன்.

''அதுதான் தீர்ந்துவிட்டதே?''

''நாளை சாயந்தரம் நாம் சந்திக்கலாம். அப்ப விவரம் சொல்றேன். இன்னொரு நாலைஞ்சு நாளைக்கு என் சினேகிதி வசந்தியோட வீட்டிலே — நீங்க கிணத்திலே யிருந்து காப்பாத்தினீங்களே, அவள் தான் — தங்கியிருக்கப் போறேன்.''

''சியாம்... நீ...''

''எல்லாம் சரியாகிவிடும். பார்த்துக் கொள்ளலாம்,'' என்று சொல்லிவிட்டு அவள் பஸ் ஏறிவிட்டாள்.

''தலையணை கொஞ்சம் அழுக்காயிருக்கு, சியாமா... பரவாயில்லையா?'' என்று தயக்கத்துடன் சொன்னாள் வசந்தி.

''சே சே... இதிலே என்னடி...'' என்று சொல்லி அதை வாங்கித் தலையின் கீழே வைத்துக் கொண்டு, அந்த அகலமான மரக் கட்டிலில் ஒண்டிக்கொண்டாள் சியாமா.

யார் எதற்காக வைத்திருந்தார்களோ, அலாரம் டைம்பீஸ் கிணுகிணுவென்று ஓயாது அடித்தது. விடி விளக்கின் பக்கத்தில் வைத்திருந்ததால் மணி தெரிந்தது — ஒன்பது.

''அதெல்லாம்' நடந்து முடிந்து, அவள் வசந்தியின் வீட்டுக்கு வந்து மூன்று மணி நேரமாகிறது. ஒரு நூற்றெண்பது நிமிடத்துக்குள் வாழ்க்கையில் எப்படிப் பட்ட புரட்சிகரமான திருப்பம் ஏற்பட்டு விட்டது!

வசந்தியின் வீட்டில் அன்று நல்ல காலமாய் விருந்தாளிகள் யாரும் வந்திருக்கவில்லை. அவளுடைய அம்மாவும் அப்பாவும் தம்பியும் வெளியே கூடத்தில் படுத்து விட்டார்கள்.

வசந்தி கேட்டாள். ''கதவெல்லாம் சாத்திவிட்டேன். இப்ப சொல்லு — என்ன நடந்தது?''

என்ன நடந்தது என்பதை சியாமா சிறிது சிறிதாய்ச் சொல்லி முடித்ததும் —

தோழியைக் கட்டிக்கொண்டாள் வசந்தி. ''அந்த ராகுல் ரொம்ப நல்ல மனிதர்... அன்னைக்கே தெரிஞ்சு கொண்டேன்... உன்கிட்டே அவருக்கு ஒரு 'இது' இருக்குன்னு அப்பவே புரிஞ்சது. அதனாலேதான் உன்னை ஜாடையாய்க் கேட்டேன், எப்ப கல்யாணச் சாப்பாடு போடப் போறேன்னு. நைசாய்ப் பேச்சை மாத்தினியே! ஒண்ணும் தெரியாத பாப்பா, போட்டுக்கிட்டாளாம் தாப்பா!'' அவளுடைய கலகலப்பான சிரிப்பு, அந்த இரவின் நிசப்தத்தில் சியாமாவின் உள்ளத்துக்கு இதமான தென்றலாக இருந்தது.

''ஏன் வசந்தி: நான் செய்த காரியத்தைப் பத்தி நீ வேறே எதுவும நினைக்கலியா?''

''வேறே என்ன இருக்கு நினைக்கிறதுக்கு? நீ எடுத்தது கரெக்ட் ஸ்டெப். தூங்கு இப்ப பேசாமல். மெதுவாய் யோசனை பண்ணிக்கலாம். நாலைஞ்சு நாள் போனால் இந்தக் குருடிக்கேகூட ஏதாவது ஐடியா தோணும்.''

''ஓ சும்மா இரு,'' என்று அவள் வாயைப் பொத்தினாள் சியாமா.

அடுத்த நாள் காலை வசந்தியின் அம்மா தன் மகளுக்குத் தந்த மாதிரியே சியாமாவுக்கும் ஒரு டிபன் பொட்டலம் கட்டித் தந்து ஆபீசுக்கு அனுப்பியபோது, சியாமாவுக்கு மனம் நெகிழ்ந்தது. என்னவோ தன் வீட்டிலிருந்து வழக்கமாய்க் கிளம்புகிற மாதிரியும், வித்தியாசம் எதுவும் புலப்படாதது போலவும் ஆபீசில் நடந்து கொண்டாள். ஒரு பெரிய பார்மஸியின் வரி தள்ளுபடிக் கோரிக்கையின் பேரில் விவரங்கள் குறித்துத் தர வேண்டியிருந்தது. சாயந்தரம் நாலு மணி சுமாருக்கு ராகுலுக்கு போன் செய்தாள். ''அவரோட யூனிட் இப்பத்தான் வெளியே போயிருக்கு. ராஜகுமாரி தியேட்டரண்டை ஒரு ஃபயர்,'' என்று தெரிவித்தார்கள். ஆகவே அன்று அவனைச் சந்திக்க முடியவில்லை. அதற்கு மறுநாள் அவனே போன் செய்து, அன்று மாலை சந்திக்கலாம் என்றான்...

'''லெஸ் பஸ் ஸ்டாப்பிலே, நவசக்தி வினாயகர் கோவிலுக்குப் பக்கமாய் நான் காத்துக் கொண்டிருப்பேன். வந்துவிடு,'' என்று அவன் சொல்லியிருந்தான்.

ஆனால் சியாமா அந்த இடத்தை அடைந்த பிறகுதான் அவன் தி.நகர் பஸ்ஸிலிருந்து இறங்கினான்.

அவசரமாக அவனைக் காலோடு தலை ஆராய்ந்தாள்.

அவள் பார்வையை அவன் ரசித்தான். ''கஸ்டம்ஸ் ஆபீசர் மாதிரி அப்படிப் பார்க்காதே... முழுசாய், உருப்படியாய் வந்து சேர்ந்து விட்டேன்,'' என்றான்.

அவள் சிரித்தாள்.

''ஹூம்! இனி ஆயுள் பூராவுக்கும் தினசரி நீங்க வீட்டுக்கு வந்தவுடனே சேதாரம் எதுவுமில்லையான்னு செக் அப் பண்ணிக் கொண்டிருக்க வேண்டியதுதான். என்ன செய்ய!''

கபாலி கோயிலின் மணியோசை டாண் டாணென்று காற்றில் மிதந்து வந்தபோது சியாமா கேட்டாள். ''இந்தப் பக்கம் போறீங்களே? சாந்தோமுக்குப் போகலாம்னு சொல்வீங்கன்னு பார்த்தேன்.''

''எனக்கு இது ரொம்பப் பிடித்தமான இடம,'' என்றான் ராகுல். குளத்தங்கரைப் படிக்கட்டில் இறங்கியபடி. ''சுற்றுப்புறத்தில் எவ்வளவு சந்தடியும் கூச்சலுமாய் இருந்தாலும் மனசுக்குள் ஒருவித அமைதி ஏற்படும். உனக்கு ஏற்படல்லே சியாமா?''

''ஏற்படுகிறது,'' என்று அவனைப் பார்த்துப் புன்னகை செய்தாள் சியாமா. ''ஆனால் அது கோவிலுக்குப் பக்கத்திலே இருக்கிறதாலே இல்லை. உங்களுக்குப் பக்கத்திலே நிற்கிறதாலே.''

''ஸில்லி!''

''இங்கே அசுத்தமாயிருக்கே?''

''இந்த ஓரமாய் வா. சுத்தமாயிருக்கு.''

அருகருகாக அவர்கள் இருவரும் அமர்ந்து கொண்டார்கள். வெய்யிலின் கொடுமை குறைந்து விட்டது. படிக்கட்டுக் கற்கள் ஒருவித இதமான வெப்பத்தை வெளிப்படுத்தின. அப்பொழுதுதான் யாரோ ஒருவர் திருக்குளத்தில் இறங்கிக் கால் கழுவிக் கொண்டு மேலே சென்றிருந்தார் போலும். கீழ்ப்படிக்கட்டில் முழுப் பாதமாக, பிறகு முக்காலாக, அதன் பின்னர் அரையாக, காலாகத் தேய்ந்து மறைந்திருந்தன ஈரமான கால் சுவடுகள்.

''ரா... ராகுல்,'' என்றாள் அவள். வெகு நாட்கள் கழித்துத் தனக்குப் பேச்சுத் திக்குவதைக் கண்டு அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. ''என்ன பார்க்கிறீங்க?''

''இல்லை, நான் பார்த்த அளவில் உன் வீட்டிலே எல்லோரும் நல்ல மனிதர்களாய்த் தானே தெரிஞ்சாங்க? நீ வீட்டை விட்டுக் கிளம்பற அளவுக்குச் சண்டை போட்டாங்கன்னா...''

''இப்பவும் எப்பவும் அவங்க நல்ல மனிதர்கள் தான்... அவங்க கட்டுப் பெட்டித் தனத்துக்கும் எனக்கும் ஒத்துக்கல்லே. அவ்வளவுதான். கோத்திரம் மாறிப் போச்சுன்னு சொன்ன பிறகும் என் மாமா சம்மதிக் கல்லே...''

''அப்படியா!''

''இந்தக் கல்யாணம் கூடாதுன்னு சொன்னார். அப்படின்னா நான் வீட்டிலே இருக்கிறதுக்கில்லைன்னு சொல்லி வெளியேறிட்டேன்.''

''சியாம்! நிஜம்மாவா... எனக்காக...'' ராகுலுக்கு வார்த்தைகள் வரவில்லை. நேற்றுச் சந்தித்த நம் பொருட்டு, காலமெல்லாம் பழகிய குடும்பத்தாரை விட்டு விட்டு ஒருத்தி வந்திருக்கிறாள்... நிஜமாக! மெய்யாக! இதோ பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு அவள் வாயாலேயே அதைச் சொல்கிறாள்!

அவள் முழங்காலின் மீது அவன் கையை வைத்தான். உணர்ச்சி மிகுதியினால் அவன் விரல்கள் மெல்ல நடுங்கின.

''உங்களுக்கு என்ன சம்பளம் வருகிறது?'' என்றாள் அவள்.

''முன்னூறுக்கு ஏறத்தாழ.''

''எனக்குப் பிடிப்பெல்லாம் போக முன்னூத் தெழுபது ரூபாய் வருகிறது. அக்காவையும் மாமாவையும் நான் தான் முழுக்க முழுக்கத் தாங்கிட்டிருந்தேன் என்றில்லை. இருந்தாலும் மாசம் நூறு ரூபாயாவது அனுப்பணும்னு நினைச்சிருக்கிறேன். அனுப்ப வேண்டியதுதானே?''

''கட்டாயம்.''

''போச்சுன்னா, இருநூத்தி எழுபது, உங்களோட முன்னூறு-ஐந்நூத்தி எழுபது இரண்டு பேருக்குத் தாராளமாய்ப் போதும். இரண்டு பேர் ஆபீசுக்கும் பொது வாய்த் தேனாம்பேட்டை வட்டாரத்திலே இடம் பார்த்துக்க லாம். எழுபது ரூபாய் வாடகை கொடுக்க முடியும் இல்லை?''

''தேனாம்பேட்டைதானே? எனக்கு ஏகப்பட்ட ஃப்ரண்ட்ஸ் இருக்காங்க. நாளைக்கே குடி போகலாம்.''

''நீங்க சீட்டு ஏதாவது கட்டிட்டு வர்றீங்களா?''

''சீட்டா? என்ன சீட்டு?'' என்று திகைத்தான் அவன்.

''சேவிங்ஸ்னாலே. என்ன என்று கேட்பீங்க போலிருக்கு,'' என்று சிரித்தாள் அவள். ''குடித்தனத்துக்கு அவசியமானதாய் நாலு பாத்திரம், பண்டம், ஒரு ஸ்டவ் — இதெல்லாம் வேணும். முடியுமானால் ஊருக்கு இன்னொரு முறை போய், உங்கள் அப்பாவைக் கேட்டு...''

''அப்பாகிட்டே இரண்டு பித்தளை டபராதான் இருக்கும். அது கூட ஓட்டைக்குப் புளி வைச்சு அடைச்சிருப்பார். ஏன், என் சுவீகாரத் தகப்பனார் எங்கே போனார்? குட்டி ஜமீந்தாராக்கும்! ஒரு வார்த்தை சொன்னால் போதும், பாத்திரக் கடையையே கொண்டு வந்து இறக்கிட மாட்டாரா!''

''ஓ, அவரையே கேட்டால் போச்சு!''

அவன் அவளையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். ''சியாமா, கொஞ்சம் முன்னால் வரையில் எனக்கு ஒரே பிரமையாயும் என்ன செய்யப்போகிறோமோன்னு பயமாயும் இருந்தது. நீ பேசறதையெல்லாம் கேட்ட பிறகுதான் தைரியம் வருகிறது.''

''நானிருக்கப் பயமேன்?'' என்று கோவில் அம்மன் போலக் கைகளை அபிநயித்துக் கொண்டு சிரித்தாள் சியாமா.

''சியாம், இன்னொரு ஐடியா.''

"ப்ரொஸீட்."

"நம்ம கல்யாணத்தையும் கிராமத்திலேயே ஜமாய்ச்சிடலாமே!"

அவள் முகம் இறுகிற்று.

"ராகுல், உங்களிடம் முக்கியமான விஷயம் இன்னொண்ணு சொல்லணும்." என்றாள் கனமான குரலில். "நமக்குள் கல்யாணம் கூடாதுன்னு என் மாமா சொன்னார். கல்யாணமே பண்ணிக்காமல் ராகுலோடு வாழ்ந்து காட்டறேன்னு சவால் விட்டு விட்டு வந்திருக்கேன். நாம் இரண்டு பேரும் சேர்ந்து இருப்போம். ஆனால் கல்யாணம்கிற பேச்சு கிடையாது..."

அவன் பேசாமல் இருந்தான். "என்ன ராகுல், உங்களுக்கு இஷ்டமில்லையா?"

"இஷ்டமில்லாமல் இல்லை..."

"பின்னே?"

கோவிலின் பக்கம் கையைக் காட்டினான் அவன். "ஆடம்பரமாய் எதுவும் வேண்டாம்... என் பையிலே போதுமான பணம் இருக்கு. பூக்கடைகள் பக்கத்திலேதான். இரண்டு மாலை வாங்கிக்குவோம். அர்ச்சகர் இருப்பார். சுவாமி சன்னதியில் முறைப்படி கணவன் மனைவியாகி விடலாம். சியாம் அதிலே தப்பு ஒன்றும் இல்லை."

வெகு நேரம் அவள் மௌனமாயிருந்தாள். யார் யாரோ படிக்கட்டுக்களில் இறங்குவதும் ஏறிச் செல்வது மாக இருந்தார்கள். நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாய்க் குளத்துத் தண்ணீரில் தெரியத் தொடங்கின.

''என்ன சியாம்?''

''ராகுல், உங்களை நான் என்னோடு வாழ்ந்துதான் ஆகணும்னு கட்டாயப்படுத்தத் தயாராயில்லை.''

''சியாம்!''

''பின்னே சடங்குக்காகவாவது கல்யாணம்னு ஒன்று வேணும்னு ஏன் நினைக்கிறீங்க?''

''அதில்லை... வந்து...''

''கல்யாணம்னு ஒன்று இல்லாமலே வாழ்ந்து காட்டறேன்னு சொல்லிவிட்டு, இரண்டே புடவையோடு வீட்டை விட்டுக் கிளம்பினப்போ, நான் உங்களை நம்பிக் கொண்டு வரல்லே. என்னையேதான் நம்பிக் கொண்டு வந்தேன். ஏன்னா எனக்கு இப்பத்தான் உலகம் புரிஞ்சிருக்கு. மனிதர்களைப் புரிஞ்சிருக்கு. அவங்கவங்க தங்கள் தங்களோட வீம்பையும் வீறாப்பையும் அகங்காரத் தையும் தான் ஸெல்ஃபிஷாய், பெரிசாய் நினைக்கி றாங்களே தவிர, மத்தவங்களுடைய உணர்ச்சிகள், ஆசைகள் இதையெல்லாம் தூசு மாத்திரம் கூட மதிக்கிறது கிடையாதுன்னு இப்பத்தான் நான் தெரிஞ்சிட்டிருக்கேன்...''

''சியாம்!''

''எல்லாரும் அப்படி இருக்கிறப்போ நாமும் நம்ம வழியைப் பார்த்துக்க வேண்டியதுதான்னு தீர்மானம் செய்து, அக்காவையும் மாமாவையும் விட்டுப் பிரிஞ்சு வெளியே வந்தேன். இப்ப நீங்களும் எனக்குக் கை கொடுக்காமல் ஒதுங்கிக்கறீங்கன்னு வைச்சுக்குங்க. எனக்கு

ஒன்றும் ஆகிவிடாது. கொஞ்சம் வருத்தமாய் வேணு மானால் இருக்கும். ஆனால் ஆச்சரியப்பட மாட்டேன். ஏன்னா, ஷாக் பழகிப் போச்சு. இப்ப சொல்லுங்க, இப்பவே சொல்லிடுங்க. நீங்க என்ன முடிவு எடுக்கப் போறீங்க?''

''சியாம்! என்னென்ன வார்த்தையெல்லாம் பேசறே! நான் உன் பக்கம் தான் சியாம், என்னிக்கும் நான் உன் பக்கம் தான்,'' என்று அவள் உள்ளங்கையை மெல்லத் தட்டியபடி சொன்னான் ராகுல். அதற்கு முத்திரை வைப்பதுபோல் சூடான இரண்டு கண்ணீர்த்துளி அந்தக் கைகளின் சந்திப்பில் விழுந்தது.

## பதினைந்து

''எங்கே, சியாமாவுக்கு ஒரு ஜே போடுங்க பார்க்கலாம். முக்கால் மணி நேரத்துக்குள் ஒரு சாதம், ரசம், கறி தயார்ப் பண்ணிவிட்டேனாக்கும்!'' என்றாள் சியாமா.

''சியாமுக்கு, ஜே!ஜே! ஜே! ஜே போடுவதற்காகவே ஒரு நாள் லீவு போட்டுவிட்டு வீட்டில் தங்கலாம்னு பார்க்கிறேன்,'' என்றான் அவன்.

''உதை!'' என்று ஒரு ஸ்பூனினால் அவன் தலையில் நோகாமல் அடித்தாள் அவள்.

''இப்படி அடி வாங்க இரண்டு நாள் ஜே போடலாம்!''

''ரசம் மட்டும் ஒரு கொதி கொதித்தால் தேவலை... பொடி வாசனை வருகிறது...'' என்று சொல்லிவிட்டு வேலையில் இறங்கினாள்.

இரவு மணி ஏழு.

சமையலறைக்கு வெளியே நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு சியாமா ஸ்டவ்வுக்குப் பம்ப் அடிப்பதையே பார்த்தபடி இருந்தான் அவன்.

பல்பைச் சுவரில் கட்டையடித்துப் பொருத்தாமல், புகையேறிக் கறுத்து விட்ட ஒயரில் தொங்கவிட்டிருந்ததால் அது காற்றில் மெல்ல ஆடிக் கொண்டிருந்தது. அதனுடன் சியாமாவின் நிழலும் ஒயிலாக அசைந்து கொண்டிருந்தது. ஒரு காலை மண்டியிட்டாற்போல் மடித்துக் கொண்டு மறு காலை நுனியாக ஊன்றிக் கொண்டு, வளைந்த வாக்கில் அவள் பம்ப்பை அடித்த போது, 'நல்ல உயரம். நமக்கு மேலேயே இருப்பாள் போலிருக்கிறது. இத்தனை நாளும் நாம் கவனித்ததில்லையே' என்று எண்ணிக்கொண்டான். ஸ்டவ்வின் அடிப்பாகத்தை அழுத்திப் பிடித்திருந்ததால் விரல்கள் ரத்த ஓட்டம் நின்று வெளுத்துத் தெரிந்தன. கண்ணை மறைக்கும்படி விழும் கூந்தல் கற்றையைத் தள்ளிவிட விரும்பியவள். சிமினி எண்ணெய்க் கையால் தொட்டு விடக் கூடாதென்று புஜத்தினால் ஒதுக்கி விட்டுக்கொள்வது தனியாக அழகாகத் திகழ்ந்தது. நடு நடுவே சரிகின்ற மேலாடையைக் கைகளை உயர்த்தி உயர்த்தியே தோளுக்குத் தள்ளிக் கொண்டபோது, 'இங்கே நான் ஒருத்தன்தானே இருக்கிறேன்! ஏனிந்தக் கூச்சம்?' என்று ஆசையுடன் அவன் மனம் சிணுங்கிக் கொண்டது. அப்படியும் கூட அவள் முதுகின் கீழ்ப் பகுதி நிலாத் துண்டம் போலப் பளபளப்பாகத் தெரிவதை அவளால் மறைத்துக் கொள்ள இயலவில்லை என்று சிரித்துக் கொண்டான்.

தன்னை அவன் கூர்ந்து கவனிக்கிறான் என்பதுதான் அவள் உணர்வில் உறைத்ததோ, அல்லது சத்தத்தையே காணோமே, என்ன செய்கிறார் என்று நினைத்தாளோ — சரேலெனத் திரும்பிப் பார்த்தாள். கையைக் கட்டிக் கொண்டு அவளையே பார்த்துக் கொண்டு உட்கார்ந் திருந்தவனைக் கண்டதும் கோபம் கோபமாய் வந்தது. "சட்! பார்த்திட்டு இருங்கீங்களே, உதவி செய்யக் கூடாது?" என்றாள்.

"அஜந்தா ஓவியமாய் நீ குனிஞ்சு உட்கார்ந்து வேலை செய்கிற அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கணும் போலவும் இருக்கு. நீ கஷ்டப்படறதைக் கண்டு மனம் சகிக்காமல், நகர்ந்துக்க, நான் செய்யறேன்னு சொல்லணும் போலவும் இருக்கு. என்னை என்ன செய்யச் சொல்றே?" என்று கூறிய வண்ணம் அவள் அருகில் போய் உட்கார்ந்து கொண்டான் அவன். அடுத்த வினாடி குபுக்கென்று சிரித்தான்.

"சிரிப்பென்ன சிரிப்பு?"

"ரொம்ப ஜாக்கிரதையா. வேலை பார்க்கிறியேன்னு நினைச்சேன். எந்தச் கரிப் பாத்திரத்தையோ தொட்டுட்டு முகத்தையும் தொட்டுட்டு இருக்கிறே! சியாம், உன் முகத்துக்கு மீசை எத்தனை அழகா இருக்கு, தெரியுமா?"

"சீ! நிஜம்மாவா?"

'நிஜம்மா! இரு, துடைச்சு விடறேன்." கைக் குட்டையை எடுத்து, அவள் மோவாயை இடது கையால் ஏந்தியபடி, உதட்டின் மேற்புறத்தையும் கன்னத்தையும் துடைத்துவிட்டான் அவன். கையை எடுக்கவே மனம்

வராமல் இன்று பூரா அந்த மலர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கலாம் போலத் தேகத்தில் ஒரு படபடப்பு ஏற்பட்டது. அவளுடைய அகன்ற விழிகள் வரவர விரிந்து பெரிதாகி விசுவரூபமெடுத்து அவனை மொத்தமாகத் தன்னுள்ளே வாரியணைத்துக் கொண்டுவிட முயலுவது போல் பிரகாசித்தன.

''ரசம் கொதிக்கட்டும்,'' என்று அவள் அந்த மௌனத்தைக் கலைத்தாள். ஸ்டவ் பின்னினால் இன்னொரு முறை குத்திவிட்டு, பஸ்ஸென்று எரியும்படி பற்ற வைத்தபின் நெருப்புக் குச்சியைத் தூர எறிந்தாள்.

''ஆ! ஆ! போச்சு! போச்சு!'' என்று கூச்சலிட்டான் ராகுல்.

''என்ன! என்ன!''

''ஒரு லீடிங் ஃபயர்மேனின் வீட்டிலே... தீக்குச்சி அணைஞ்சிட்டுதா இல்லையான்னு பார்க்காமல் இப்படியா தூக்கி எறியறது! நூத்துக்குத் தொண்ணூத்தெட்டு விபத்து இப்படித்தான் ஏற்படறது,'' என்றவன் அந்தக் குச்சியை எடுத்து, தரையில் நன்றாய்த் தேய்த்து விட்டு எறிந்தான்.

''இதோ பாருங்க! உங்க ஃபயர் சர்வீஸ் பிரசாரமெல்லாம் உங்க ஸ்டேஷனோடு! வீட்டுக்கு எடுத்து வந்து போரடிச்சீங்களோ, நானும் நீங்க தேய்ச்சுக்கிற சோப்புக்கு என்ன டாக்ஸ், வாரிக்கிற சீப்புக்கு எத்தனை வரி என்றெல்லாம் அளக்க ஆரம்பிச்சிடுவேன்.''

''நீ என்ன அளந்தாலும் நான் ஆன்னு வாயைப் பிளந்து கொண்டு எத்தனை நேரமானாலும் கேட்டுக் கொண்டிருப்பேனே!'' என்றான் அவன்.

அவள் தன் கைப்பையைத் திறந்து ஒரு பழைய போட்டோவை எடுத்தாள். ''உங்களுக்குத் தெரிஞ்சு யாராவது போட்டோகிராபர் இருக்காங்களா?''

''எதுக்கு?''

''எங்க ஆபீசுக்கு அவர் எப்பவோ வந்திருந்தப்போ எடுத்தது இது.'' அவள் காட்டிய புகைப்படத்தில், நாலைந்து பேருக்கு நடுவே அவள் மாமா வெங்கடேசுவரன் நின்றிருப்பது தெரிந்தது. ''இதை மட்டும் என்லார்ஜ் பண்ணிக் கொடுத்தால் கண்ணாடி போட்டு இங்கே மாட்டிக்கலாம்னு பார்க்கிறேன்.''

''விசாரிக்கிறேன்,'' என்றான் அவன்.

''ஏன் என்னவோ போல் பேசறீங்க?'' என்றாள் அவள். ''உங்க அப்பா படம் இருந்தால் கொண்டு வாங்க, அதையும் மாட்டி வைக்கலாம்.''

''என் ஃபஸ்ட் அப்பா படத்தை மாட்டினால் ஸெகண்ட் அப்பா சண்டைக்கு வருவார்.''

''அப்படியானால்அந்த ஸெகண்ட் அப்பாவோட படத்தையே கொண்டு வாங்க.''

''ஏய்! கையைக் கையை ஆட்டிப் பேசாதே!'' என்று கண்ணைக் கசக்கிக் கொண்டான் அவன். ''உன் கையிலே இருக்கிற மிளகாய்ப் பொடி, கரிப் பொடி, சீயக்காய்ப் பொடி எல்லாம் என் கண்ணிலே வந்து விழுகிறது!''

''ஸாரி!'' என்றாள் அவள். ஜன்னலின் கீழ்க் கதவுகள் மூடப்பட்டிருந்தன. அப்படியும் மேல் பக்கமாக எம்பிப் பார்த்தன இரண்டு பிஞ்சு முகங்கள். 'அவர்தான் புது மாமா. அவங்க தான் புது மாமி. புதிசா வந்திருக்காங்க,' என்று ஒரு

குழந்தை இன்னொரு குழந்தைக்குத் தெரிவித்தது. பிறகு இரண்டும் ஓட்டம் பிடித்தன.

அவள் ராகுலை நோக்கி புன்னகை செய்தாள்.

''வணக்கம் புது மாமி!'' என்று கேலி செய்தான் அவன்.

இருவரும் அன்று காலைதான் வந்திருந்தார்கள். தேனாம்பேட்டை போயஸ் ரோடிலிருந்து பிரியும் சிறிய தெரு அது. பங்களாக்கள், நடுத்தர வீடுகள், குடிசைகள் எல்லாம் கலந்து கட்டப்பட்ட பேட்டை அது. ஒரு காம்பவுண்டுக்குள், அடர்த்தியாக வளர்ந்திருந்த மரங்களை வெட்டி விட்டு, பன்னிரண்டு குடித்தனங்களுக்கான போர்ஷன்களைக் கட்டியிருந்தார்கள். ஒன்றையொன்று தொட்டாற் போலிருந்தாலும் இன்டிபென்டென்ட் போர்ஷன்கள். சொந்தக்காரரின் பங்களா எட்டத்தில் இருந்தது. இரண்டுக்கும் நடுவே பல புளிய மரங்களும் தூங்குமூஞ்சி மரங்களும் ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்தன. எப்போதும் குளுகுளுப்பான, பசுமையான சூழ்நிலை...

வசந்தியின் அம்மா அவர்களுக்குத் தேவையான பாத்திரங்களையும் சாமான்களையும் வாங்கித் தந்து விட்டுக் காலையில்தான் புறப்பட்டுப் போயிருந்தாள். பெட்ரூம், சமையலறை இரண்டேதான். வாசல் பக்கம் சிறிய வெராந்தா. பின்புறம் பாத்ரூம். எழுபத்தைந்து ரூபாய் வாடகை. இரண்டு மாத அட்வான்ஸ்.

ஒரு பாட்டியம்மாள் கதவைத் திறந்து கொண்டு தலையை நீட்டி, ''நீங்க தஞ்சாவூர் பக்கமா?'' என்று விசாரித்தாள்.

''இ...இ... இல்லை பாட்டி, இந்தப் பக்கம்தான்,'' என்று சியாமா சொன்னதும், குடித்தனச் சமான்களை ஒரு நோட்டம் பார்த்துவிட்டுப் போனாள். ஒரு நடுத்தர வயதுக்காரர் எட்டிப் பார்த்து, ''உங்க பாத்ரூம் குழாயைக் கொஞ்சம் மூடறீங்களா? அப்பத்தான் எங்களுக்குத் தண்ணீர் வரும். நாங்க பின்பக்கத்திலே இருக்கிறோம்,'' என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டு விட்டுச் சென்றார். ஒரு வேலைக்காரி வந்து, ''ஏதாச்சும் வேலை இருந்தால் கூப்பிடுங்கம்மா. இங்கே எல்லாவீட்டுக்கும் நான் தான் பார்த்துக்கிறது,'' என்று தெரிவித்துவிட்டு அகன்றாள்.

''சரியான நியூஸென்ஸாயிருக்கு, இல்லே?'' என்றான் ராகுல்.

''சே, சே. எல்லாரும் நல்ல மனிதர்கள். பிரியமாய்ப் பேசறாங்க. அந்தப் பங்களாக்காரன் இருக்கானே — வீட்டுச் சொந்தக்காரன் — தங்கராசு? அவனைக் கண்டால் தான் எனக்குப் பிடிக்கலே,'' என்றாள் சியாமா.

''நோ, நோ, தங்கமான ஆளாச்சே அவர்?'' என்று மறுத்தான் ராகுல்.

''இருக்கட்டுமே! நீங்க கவனிக்கல்லே, நான் கவனிச்சேன். வந்து இறங்கி ஒரு நாள் ஆகல்லே. பத்து தடவை வந்து, 'ஹி...ஹி... ஏதாவது வேணும்னா சொல்லுங்க' என்கிறான்.

''ஏன் அவனையும் நல்ல மனிதன், பிரியமாய்ப் பேசறான்னு எடுத்துக்கக் கூடாதா?''

''எவனோட பார்வை கபடமா இருக்கு, எவன் களங்கமில்லாமல் பார்க்கிறான் என்கிறதை ஆண்களைக் காட்டிலும் பெண்கள் நல்லா கண்டுபிடிச்சிடுவோம்...''

அந்தத் தங்கராசுவைப் பற்றி இவள் இப்படிச் சொல்லிவிட்டாளே என்று ராகுலுக்கு வருத்தம் ஏற்பட்டது. கேட்டவுடனே என்னமாய் டக்கென்று இடம் கொடுத்தார்!

போன வாரத்தில் ஒரு நாள் —

கிராமத்திலிருந்து அப்பா எழுதியிருந்தார். ''கோத்திரம் மாறியதை அந்தப் பெண்ணின் வீட்டில் ஒப்புக்கொள்ள வில்லை என்று கேட்க வருத்தமாயிருக்கிறது. நீயும் நீ பிரியப்படும் பெண்ணும் சந்தோஷமாய் வாழ பகவான் கிருபை செய்வார். கவலைப்படாதே... வீரராகவனும் அதையே தான் சொன்னார்...''

ராகுலுக்குத் தெம்பாயிருந்தது.

வாடகைக்கு ஒரு இடம் பிடிக்க வேண்டும் என்று அவன் சொன்னதுமே ஸ்டேஷனில் எல்லாரும் அவனைக் கலாட்டா பண்ணத் தொடங்கிவிட்டார்கள். ''ராங்க்' காரணமாக அவர்கள் அரட்டைகளில் அதிகமாய்க் கலந்து கொள்ளும் வழக்கமில்லாத ஸ்டேஷன் ஆபீசர்கூட, ''எப்ப ராகுல் கல்யாணம் நடந்தது? சொல்லவில்லையே?'' என்று ஆச்சரியப்பட்டார். அவன் அவர்களுக்கு விளக்கிக் கொண்டிருக்கவில்லை. விளக்க முடியாத, விளக்கினாலும் யாராலும் விளங்கிக் கொள்ள முடியாத விஷயம் என்று அவனுக்குத் தெரியும்.

''என்னதான் அவசர லவ் மேரியேஜானாலும் இப்படியா அநியாயம்!'' என்று சாமுவேல் திட்டினார்.

''ஆளுக்கொரு அஞ்சு பைசா மிட்டாயாவது கொடுக்காட்டி விடமாட்டோம்.'' என்று ஃபயர்மேன் — டிரைவர் ராமலிங்கம் சொல்லிக்கொண்டிருந்தபோது —

ஓர் அவசர அழைப்பு வந்தது. ஆனால் தீயணைப்புக் காக அல்ல. தேனாம்பேட்டையிலே — ஒரு பங்களா காம்பவுண்டுக்குள் — ஒரு ஆள் ஒரு மரத்தின் உச்சியில் குதித்துவிடுவேன் என்று பயமுறுத்துகிறானாம்! அவனைக் கீழே இறக்க வேண்டுமாம்!

தங்கராசுவின் பங்களா தோட்டத்தில்தான் அந்த அமளி.

ராகுலின் தலைமையில் சென்ற யூனிட், இரண்டு மணி நேரம் படாத பாடுபட்டு அந்த அரைக் கிறுக்கு ஆளைப் பத்திரமாய்க் கீழே இறக்கியது. தங்கராசுவின் தோட்டக்காரனாம் அவன். ''ரொம்ப நன்றி...'' என்று அவர் சொன்னபோது, சாமுவேல் குறுக்கிட்டு, ''இவர் புதிதாய்க் கல்யாணம் கட்டிக் கிட்டவர். வீடு தேடிட்டிருக்கார். புருஷன் பெண்சாதி இரண்டே பேர்தான். இங்கே நிறையப் போர்ஷன் இருக்கிறதாய்த் தெரியுதே? ஏதாவது காலி இருந்தால் கொடுங்கள்,'' என்றான்.

உடனே ஒரு போர்ஷன் கொடுத்துவிட்டார் தங்கராசு.

அவ்வளவு நல்ல மனிதரைச் சியாம் என்னவோ தப்பாகச் சொல்கிறாளே என்று எண்ணிக் கொண்டான் ராகுல்.

திடீரென மூக்கை உறிஞ்சி "என்னவோ ஒரு நாற்றம் வரல்லே?' என்றாள் அவள்.

"உன் உடம்பிலிருந்து இனிமையாய் ஒரு மணம் வர்றதுதான் தெரியுது. ஆனால் நீ மூக்கை உறிஞ்சறது ஒரு தனி அழகா இருக்கு சியாம்," என்று அவள் நாசியைத் திருகினான் அவன்.

"இருங்க. அப்புறம் விளையாடலாம்," என்று அவன் கையை விலக்கிவிட்டு, மறுபடியும் மூக்கை உறிஞ்சி ஆராய்ந்தாள் சியாமா. "ஐயய்யோ! ரசம்!"

அவள் சமையலறைக்கு ஓடினாள். பாத்திரத்தைப் பார்த்தாள். அவனும் பார்த்துவிட்டு விலாவைப் பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தான்.

பாத்திரம் அடியோடு வற்றிப்போய், ரசம் தீய்ந்து கொண்டிருந்தது.

"அத்தனை ரசமும் வீண்!" என்று முகம் சுளித்தாள் சியாமா.

"அது பரவாயில்லை. இன்னும் ஒரு மாசத்துக்கு அந்தப் பாத்திரத்திலே எதுவும் வைக்காதே. நாற்றம் கொன்றுவிடும்!"

"இப்ப என்ன செய்கிறது?"

"சாதம் இருக்கு. ஊத்திக்கறது. காரெட் இருக்கு. கடிச்சிக்கறது. கை இருக்கு, சாப்பிடறது," என்றான் அவன்.

இரண்டு பேரும் இரண்டு சிறிய பாத்திரங்களில் மோர் சாதத்தைப் பிசைந்து எடுத்துக்கொண்டு ஜன்ன

லருகே நின்று கொண்டார்கள். பக்கத்துக் குடித்தனங்களில் குழந்தைகள் படிக்கும் சத்தத்தைத் தவிர மற்றச் சந்தடிகள் ஓய்ந்துவிட்டன. விஸ்தாரமான தோட்டத்தில் எட்டாம் பிறையின் ஒளி மரங்களின் இடுக்கு வழியாய் நுழைந்து திட்டுத் திட்டாகத் தரையில் விழுந்திருந்தது. இலைகள் சலனமற்று நின்றிருந்ததால், அதன் மீது தீட்டப்பட்ட நேர்க் கோடுகள்போல் ஜன்னல் கம்பிகள் புலப்பட்டன.

''அந்த ஆள் ஏறி உட்கார்ந்திருந்தான்னு சொன் னீங்களே, எந்த மரம்?'' என்று கேட்டாள் சியாமா.

''அதோ அந்தத் தூங்கு மூஞ்சி மரம்,'' என்று சுட்டிக் காட்டினான் அவன்.

''எந்தக் கிளை?''

''குனிந்து பார். அதோ அது.''

அவள் உடம்பை வளைத்துக் கொண்டு குனிந்து பார்த்தபோது அவள் உடம்பு அவன் மார்புக்குள் சிக்கி யிருந்தது. ''தெரியவில்லை? அது,'' என்று அவன் காட்டிய போது அவன் கன்னமும் அவள் கன்னமும் இழைந்து கொண்டிருந்தன. அவனுடைய மூச்சுக் காற்றின் வெம்மையை அவள் உதடுகள் உணர்ந்தன. உனக்கே உனக்கு நான், எனக்கே எனக்கு நீ என்பதை இரண்டு உள்ளங்கள் வாய்ச் சொல் இல்லாமலே உணரக்கூடிய வினாடி ஒன்று உண்டென்றால், அது இதுதான்... கைம்மாறு கருதாத, கொடுக்கக் கொடுக்கக் குறையாத, ஆனந்தம் ஒன்று உண்டென்றால் அது இதுதான்...

''நேரமாகிறது,'' என்றாள் சியாமா.

தன்னை மறந்து, சூழ்நிலையை மறந்து, பழரசத்தின் இனிப்பில் கிறங்கிப் போய்விடக்கூடிய தருணத்தில் கல் ஒன்று அகப்பட்டு உணர்வைத் தட்டி விடுவதுபோல, திடீரென சியாமாவுக்கு ஒரு விழிப்பு உண்டாயிற்று. எப்படிப் பட்ட அபாயமான நிலையில் இருக்கிறோம் என்பதை ஒரே வினாடியில் அவள் புரிந்துகொண்டாள்.

அவள் ஒரு ஜமுக்காளத்தையும் தலையணையையும் சுருட்டி, வாசற்புறமிருந்த நடையில் விரித்தாள்.

''என்ன சியாம்!'' என்றான் அவன் அதிர்ச்சியுற்று.

''உங்களுக்கு. அங்கே ரூமுக்குள்ளே எனக்கு விரிப்பும் தலையணையும் வைச்சிருக்கிறேன்.'' அவள் கதவைச் சாத்தப்போனாள். அவன்அதைத் தடுத்து, ''சியாம்... சியாமா..'' என்றான்.

அவள் கதவைச் சாத்திக்கொண்டாள். தாளிட்டுக் கொள்ளும் ஓசை கேட்டது.

## பதினாறு

''டிபன் ஒன்றும் தயாராகல்லே?'' என்று அவன் கேட்டான்.

''அரை மணி பொறுங்கள். உப்புமா செய்திட்டி ருக்கிறேன்,'' என்று அவள் சொன்னாள்.

''எட்டரை மணிக்கு ஸ்டேஷனில் நான் இருந் தாகணும். இப்பவே மணி ஏழு ஐம்பத்தஞ்சு.''

''ராத்திரி ரொம்ப நேரம் ஃபைல்கள் பார்த் திட்டிருந்தேன். காலையில் எழுந்திருக்கவே நேரமா யிட்டுது... இதோ உப்புமா ஆயிடும்.''

"வேண்டாம். டயமாயிட்டுது."

அவன் கிளம்பிச் சென்றுவிட்டான், எதுவும் சாப்பிடாமல்.

சென்ற ஆறு நாட்களில், இது தொடர்ந்து நாலாவது உரசல்.

இருவருக்குமே இந்த அசாதாரணமான நிலைமை புரிந்தது. இது சரியல்ல. சரியல்ல என்று ஏதோ ஒன்று அவர்களுக்குள் சொல்லிக் கொண்டுதான் இருந்தது. இந்த உலர்ந்த, சாரமில்லாத, மரக் கட்டையான வாழ்க்கைக்கா பிரமாதமாய்ப் போராட்டம் நடத்திவிட்டுத் தனிக் குடித்தனம் வைத்தோம் என்று இருவருமே ஆச்சரியப் பட்டுக் கொண்டார்கள். அன்பு ஒன்று தான் அனைத்துக்கும் அஸ்திவாரமென்றாலும், வேறு எந்த வகை உறவுமில்லாத போது, யந்திரம் போல வாழ்க்கை நடத்தும்போது, தங்கள் இருவருக்குமிடையே கண்ணுக்குத் தெரியாத குறுக்குச் சுவரொன்று முளைக்காமல் இருக்காது என்பதை இருவரும் உணர்ந்திருந்தார்கள்.

வேறு ஏதாவது நினைக்கலாம் என்று சியாமா எண்ணிக் கொள்வாள்.. அக்கா இன்னேரம் குழாயடியில் தன் புடவையை அலசிக் கொண்டிருப்பாள், முழங்கா விடுக்கில் புடவையைப் பற்றிக் கொண்டு முறுக்கிப் பிழிவது வேடிக்கையான காட்சி... பக்கத்திலேயே மாலு குளித்துக் கொண்டிருப்பாள். மாமா... சே! ஏன் நான் அந்த வீட்டைப்பற்றி எண்ண வேண்டும்? மனம் ஏங்குகிறதா? பழைய வாழ்க்கையை விட்டுவிட்டு இந்தப் பரிசோதனைக்கு வந்ததெல்லாம் தப்பு என்று உள்ளூர நினைக்கிறோமோ...

சாம்பலை மெல்லுவது போன்ற சுவையற்ற இந்த அன்றாடங்காட்சி வாழ்வுக்காகவா நாம் சவால்விட்டோம் என்று சியாமா தன்னுள் வியந்து கொண்டிருந்தாள். இந்த வாழ்க்கைக்காகவா நான் என்றும் உன் பக்கம் இருப்பேனென்று வாக்குக் கொடுத்தேன் என்று ராகுல் தன்னைத் தானே கேட்டுக் கொண்டிருந்தான்.

சீக்கிரமே ஏதோ ஒன்று நேரப் போகிறதென்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

அன்று மாலை அது நேர்ந்தது.

அன்றைக்கு அவள் சீக்கிரமாகவே வீட்டுக்குத் திரும்பிவிட்டாள் — ராகுல் வருவதற்கு முன்னதாகவே. இரண்டு பேரும் செய்து கொண்டிருந்த ஏற்பாட்டின்படி ஆளுக்கு ஒரு சாவி இருந்தது. கைப்பையிலிருந்து அதை எடுத்த போது, தங்கள் போர்ஷன் வாசலில் அந்தமனிதர் நின்றிருப்பதைக் கவனித்தாள்.

பத்திரிகைகளில் பார்த்திருக்கும் ஜி.டி. நாயுடுவின் உருவம்தான் சட்டென அவளுக்கு ஞாபகம் வந்தது. ஒல்லியாய், உயரமாய், தங்க பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடியுடன், பழங் காலத்து ஃபுல் ஷர்ட்டும் தார்பாய்ச்சு வேட்டியுமாய், பெரிய மனிதத் தோற்றத்துடன் இருந்தார் அவர். காதில் வைரக் கடுக்கன். சிவப்பு நிறம். பாதத்தில் பளீரென்று தெரியும் கறுப்பு நிறச் செருப்பு.

''நீ தானே சியாமாங்கிற பெண்?''

''ஆமாம்... நீங்க?'' என்று தயங்கினாள் அவள்.

''நான் உன் மாமனார். கரெக்டாய்ச் சொல்வதானால் ராகுலின் சுவீகாரத் தகப்பனார். வீரராகவன் என்று பெயர்...'' என்றார் அவர்.

அவளுக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. எவ்வளவு பெரிய மனிதர் இங்கே காத்துக் கொண்டு இருந்திருக்கிறார் என்று வருந்தியவளாக, ''வாங்க வாங்க,'' என்று அவசரமாய் வரவேற்றாள். ''நான் உங்களைப் பார்த்ததில்லை... அதனாலே...''

''அதனாலே என்ன ஆயிட்டுது? அதான் வாங்கன்னு கூப்பிட்டுட்டியே?'' என்று சிரித்துக் கொண்டே அவள் பின்னால் வீட்டுக்குள் வந்தார் வீரராகவன்.

''உட்காருங்கள்,'' என்று நாற்காலியை இழுத்து, காற்று வரும் பக்கமாய்ப் போட்டாள் அவள்.

''ரெஜிஸ்டிரார் ஆபீசில் ஒரு வேலை இருந்தது. அதுக்காக மெட்றாஸ் வந்தேன்... நீ என்ன கேட்கப் போகிறாய்னு தெரியும்,'' என்றார் அவர்.

அவள் எதுவும் கேட்கப் போவதாக இருக்கவில்லை. திடுதிப்பென்று அவர் வந்ததால் ஏற்பட்ட குழப்பத்தி லிருந்து இன்னும் மீளாதவளாக இருந்தாள். ''இல்லையே, நான் ஒண்ணும்...''

''எப்படிடா இவன் வீட்டைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து சேர்ந்தான்னு நினைக்கிறே? இல்லையா? ரொம்ப சுலபம். ராகுல் வேலை பார்க்கிற ஸ்டேஷனிலே போய் விசாரிச்சேன். அவன் இல்லை. அட்ரஸ் சொன்னாங்க... இந்தாம்மா, வைச்சுக்க.''

பைக்குள்ளிருந்து ஒரு மல்லிகைப் பொட்டலத்தை எடுத்துத் தந்தார் அவர்.

சியாமா கண்ணாடியின் முன்போய் நின்று கொண்டு பூவைத் தலையில் சூடிக் கொண்டாள். வீரராகவனை நமஸ்காரம் பண்ண வேண்டுமென்று திடீரென ஓர் எண்ணம் உதித்தது. பண்ணினாள்.

''ஊம், ஊம், இதெல்லாம் போதாது. அடுத்த வருஷம் இதே நாளில் கையில் ஒரு குழந்தையோடு எனக்கு நமஸ்காரம் பண்ணனும். என்ன?''

''உங்களுக்குக் காப்பி போடறேன், சார். இருங்க,'' என்று சமையல் அறைக்குள் நுழைந்து கொண்டாள் அவள்.

''சாரா? மாமான்னு கூப்பிடும்மா, உன் புருஷனுக்குச் சுவீகாரத் தகப்பனார் என்பதால் மாமனாராயில்லாமல் போயிடுவேனா? வேணுமானால் சுவீகார மாமான்னு கூப்பிடு,'' என்றார் வீரராகவன்.

சிரித்து விட்டாள் சியாமா, தான் மிகவும் அன்பு வைக்கக் கூடியவர்களில் இவரும் ஒருவராக இருக்கப் போகிறார் என்று அவள் உள்ளம் சொல்லியது.

''ஹா! இந்த மாதிரி காப்பி சாப்பிட்டு இருபத்தைந்து வருஷம் ஆகிறது,'' என்று பாராட்டிக் கொண்டே அவள் கொணர்ந்த காப்பியைச் சுவைத்தார் வீரராகவன். ''எனக்கு என்ன சந்தோஷம்னா, எங்க ராகுலுக்கு எப்படிப்பட்ட மனைவி வாய்க்கணும்னு நான் நினைச்சிருந்தேனோ அப்படியே இருக்கிறே நீ! கிராமத்திலே இருந்தவனாச்சே, சுத்தக் கட்டுப் பெட்டியாய் இருப்பான்னு என்னைப் பத்தி எண்ணாதே. சாஸ்திரம், சம்பிரதாயம் எல்லாம்

வேண்டியது தான். ஒரு அளவு வரையில்தான்னு நினைக்கிறவன் நான். உன் அக்கா புருஷன் சொன்னதுக்கெல்லாம் நீ தலையாட்டிக்கொண்டு இருக்காமல், மனச்சாட்சி தான் முக்கியம்னு வீட்டை விட்டு வந்தே பார். அதிலே எனக்கு ரொம்ப சந்தோஷம்.''

அவள் நிலைப்படியில் சற்றே சாய்ந்த மாதிரி தலைகுனிந்து கொண்டு நின்றிருந்தாள்.

''தினம் சீக்கிரம் வந்து விடுகிறானா ராகுல்? இல்லே, ஊரெல்லாம் சுற்றிவிட்டு வருகிறானா?''

''இல்லையில்லை. இப்ப வந்து விடுவார். உங்களுக்கு என்ன சமையல் பண்ணட்டும்? பிடிச்சதாய்ப் பண்ணுகிறேன்,'' என்று சொல்லி அவள் காப்பி டம்ளர்களை எடுப்பதற்காகக் குனிந்தாள்.

''சும்மா சாம்பார் கீம்பாரெல்லாம் வேண்டாம்மா. ஜம்முனு ஒரு துவையல் அரைச்சு...'' அவர் பேச்சு பாதியில் நின்றது, ''ஓகோ... அப்படியா சேதி...'' என்றார்.

டம்ளர்களை எடுத்துக் கொண்டு நிமிர்ந்தவள் அவர் தன்னையே உற்றுப் பார்ப்பதைக் கண்டாள். ''என்ன... ஏதோ சொல்ல வந்தீங்களே...''

''இல்லை, அப்புறமாய்ச்சொல்கிறேன்,'' என்று செருப்பை மாட்டிக் கொண்டார் அவர்.

''ஏதாவது வேணுமானால் சொல்லுங்க. நான் வாங்கிட்டு வந்து தர்றேன்...''

''நீ வாங்கிட்டு வரக் கூடியது, இல்லே... நான் தான் வாங்கணும்... உனக்குப் பிடிச்ச சமையலாய் எது வேணு

மானாலும் செய்து வை. ராகுல் வந்தான்னா எங்கேயும் போகாமே இருக்கச் சொல்லு. இதோ அரை மணியிலே வந்துவிடுகிறேன்,'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்.

கொஞ்ச நேரத்தில் ராகுல் வந்துவிட்டான். உள்ளே நுழையும் சமயம் சியாமா மெல்லிய குரலில் ஏதோ பாடிக் கொண்டிருப்பது கேட்டது. நின்றிருந்தான் ஓசைப்படாமல்.

அவள் தானாகத் திரும்பிய பிறகுதான் அவனைக் கண்டாள். ''ரொம்ப நேரமாச்சா என்ன, நீங்க வந்து?''

அவள் உல்லாசமாயும் உற்சாகமாயும் இருப்பது அவனுக்கு மகிழ்ச்சி தந்தது.

''நீ மூணாவது 'அடி தெரியாமல் ம்ஹ்ம் ம்ம்ம்ஹ்ம்'னு இழுத்திட்டிருந்தியே அப்பத்தான் வந்தேன். என்ன, இன்னிக்கு குஷி பிய்த்துக்கொண்டு போகிறது?''

''ஒரு அனெக்ஸ்பெக்டட் கெஸ்ட் வந்திருந்தார்.''

''உன் அக்காவா? மாமாவா? அல்லது இரண்டு பேருமா?''

''ஏன், உங்க மனிதர்களில் யாரும் வந்தால் நான் சந்தோஷமாயிருக்க மாட்டேனா என்ன?'' என்றாள் அவள் குறைப்பட்ட குரலில்.

''அப்படியானால்... என் அப்பாவா?''

அவள் தலையாட்டினாள்.

''ஃபஸ்ட் ஆர் ஸெகண்ட்?''

''ஸெகண்ட்.''

வீரராகவனுடைய கிராமத்திலே அவருடைய அரண்மனை போன்ற வீடும், காடு போன்ற தோட்டமும், வேலைக்காரர்களும், ராஜாங்கமும் அவன் கண்முன் ஒரே வினாடியில் எழுந்து நின்றன. அவ்வளவு பெரிய மனிதர் இங்கே, இந்த வீட்டுக்கு... பிரமிப்பு அவன் வாயை அடைத்தது.

அருகிலிருந்த கடைத்தெருவுக்குப் போய்க் கறிகாய் வாங்கி வந்தான் ராகுல். சமையல் பாதி நடந்து கொண்டிருந்தபோது வீரராகவன் திரும்பிவிட்டார், கையில் ஒரு சிறிய காகிதப் பார்சலுடன்.

ராகுலுக்கு அவருடன் பழகவே கூச்சமாயிருந்தது. சுவீகாரம் என்று ஒன்று நடந்ததே தவிர, ஒரு தந்தையாக அவரைப் பாவித்துக்கொண்டு, ஒரு மகனின் உரிமையோடு அவருடன் பழக இதுவரை வாய்ப்பு ஏற்படவில்லை. கிராமத்தில் அவரோடு கேரம் ஆடியபோதும் தோப்பில் சுற்றியபோதும் நிலவிய தோழமையையும் இப்போது கொண்டு வர இயலவில்லை. மரியாதை தடுத்தது.

''உள்ளே வாங்க... புது இடம்... சின்னது... உங்களுக்கு அசௌகரியமாயிருக்கும்...'' என்றான்.

''இந்த ஃபார்மாலிடீஸ் தானே வேண்டாங்கிறது!'' என்றார் அவர், ''இந்த இடம் டெம்ப்ரரி, தான்னு எனக்குத் தெரியாதா? வீரராகவனோட பிள்ளை என்கிற அந்தஸ்துக்குத் தகுந்தபடி பெரிய வீடாய்ப் பார்த்து வைத்துவிட மாட்டேன்? முதல்லே நீயும் உன் மனைவியும் ஒரு நல்ல நாளில் கிராமத்துக்கு வந்து சேருங்க, சியாமா, உனக்குத்தான் முக்கியமா சொல்றேன். இதோ மகாலட்சுமி மாதிரி இருக்கிறாளே, இந்தப் பெண்தான் என் மருமகள்னு

எல்லார்கிட்டேயும் நான் டமாரம் அடிச்சிக்கணும்! என்ன?''

''கட்டாயம் வரோம் சார்.''

''இப்பவும் நான் சார் தானா? சரி, இருக்கட்டும். இந்த உறவு முறை சமாசாரமெல்லாம் அப்புறம் தீர்த்துக்கிறேன். முதல்லே இந்த விஷயத்தை முடிக்கலாம்,'' என்று பார்சலைப் பிரித்தார். கண்ணாடி சட்டம் போட்டிருந்த ஏழுமலையானின் வெள்ளிப் படம் உள்ளே இருந்தது. அதை அலமாரியில் வைத்தவர், தானே வாங்கிக் கொண்டு வந்திருந்த பூவைச் சாத்தினார். ஊதுவத்தியை ஒரு கொத்தாகக் கொளுத்திச் செருகினார்.

''காப்பி டம்ளரை எடுக்கிறதுக்காக மருமகள் குனிந்தாள் பார். அப்பத்தான் கவனிச்சேன்,'' என்றவாறு சட்டைப் பையிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்தார். டிஷ்யூ பேப்பரைப் பிரித்து, தங்கக் குண்டுகளும் புலிநகமும் கோத்த மஞ்சள் சரட்டை வெளியிலெடுத்தார்.

''நல்ல காரியம் செய்யறதுக்கு எந்த வேளையும் நல்ல வேளைதான்,'' என்று கூறி ராகுலின் கையில் கொடுத்தார். ''பகவானைத் தியானம் பண்ணிக் கொண்டு விட்டு, அவள் கழுத்தில் கட்டி, முடிச்சுப் போடு.''

''சார்...'' என்று ராகுல் திகைக்குமுன், சியாமா, ''வந்து...'' என்று இரண்டடி விலகி நின்று கொண்டாள்.

''புரிகிறது அம்மா எனக்கு. உன் குடும்பத்தார் செய்ய வேண்டிய காரியம். அசட்டுப் பிடிவாதமாகச் செய்யாமல் இருந்து விட்டார்கள். பரவாயில்லை. உன் குடும்பத்துக்கும் என் குடும்பத்துக்கும் சேர்த்து நானே செய்கிறதாய்

நினைத்துக்கொள். மூளிக் கழுத்தாக மட்டும் இருக்காதே. என்ன ராகுல், நிற்கிறே? போடப்பா மூணு முடிச்சு!''

''சார்...'' என்று மென்று விழுங்கினான் அவன். ''வந்து... இதெல்லாம் வேண்டாம்னு நாங்க முடிவு பண்ணியிருக்கிறோம்...''

''நோ நோ! அவ்வளவு தூரம் போகப்படாது. என்னதான் ரெஜிஸ்டர் மேரியேஜ் என்றாலும் இதுவும் ஒரு பக்கம் இருக்கட்டுமப்பா.''

''இல்லை சார்... ரெஜிஸ்டர்மேரியேஜ் கூடப் பண்ணிக்காமல் தான் நாங்கள் வாழ்ந்துகிட்டு இருக்கிறோம்,'' என்று துணிந்து தெரிவித்து விட்டாள் சியாமா.

''என்ன... பேருக்குக் கூட ஒரு கல்யாணம்னு பண்ணிக்காமல்...'' இருவரையும் மாறி மாறிப் பார்த்தார் வீரராகவன்.

ராகுல் தன் பார்வையைத் திருப்பிக் கொள்வதைக் கண்டு சியாமாவுக்குக் கோபம் வந்தது. ஏன் இவரே சொல்லக் கூடாது என்று நினைத்துக் கொண்டவள், ''ஆமாம் சார்... கல்யாணம்னு ஒன்று இல்லாமலே வாழ்க்கை நடத்தறேன்னு சொல்லிவிட்டுத்தான் நான் வீட்டை விட்டு வந்தேன். அந்தச் சவாலைக் காப்பாத்தறதா உங்க பிள்ளையும் எனக்கு வாக்குத் தந்திருக்கிறார்...'' என்றாள்.

அந்தத் தாலிச் சரட்டைக் கையில் சுழற்றிக் கொண்டே குறுக்கும் நெடுக்குமாய்ச் சில நிமிடங்கள் நடை போட்டார் வீரராகவன். பிறகு, ''ஆல்ரைட்! நான் சொன்னபடியே துவையல் செய்திருக்கியாம்மா?'' என்று

கேட்ட வண்ணம் தானாகவே இலையை எடுத்துப் போட்டுக் கொண்டார்.

''நீங்க ரொம்ப ஆசையாய் வாங்கி வந்தீங்க... நாங்க மறுத்து விட்டோம்னு... தப்பாய்...'' தயங்கிக் கொண்டே அவர் பக்கம் உட்கார்ந்தான் ராகுலும்.

''துவையல் பிரமாதமாயிருக்கும் போலிருக்கு. வாசனை மூக்கைத் துளைக்கிறதே!'' என்று பேச்சை மாற்றினார் வீரராகவன்.

ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் சியாமா பரிமாற ஆரம்பித்தாள். இருந்தாலும் அடுத்த சோதனை இனிமேல் தான் இருக்கிறது என்று அவள் உள்ளத்துக்குள் ஒரு படபடப்பு இருந்து கொண்டேயிருந்தது.

சாப்பிட்டு முடித்ததும் ராகுல் வெளி வெராந்தாவில் அவருக்கு ஒரு ஜமுக்காளம் விரித்துவிட்டு, தனக்கும் ஒன்று போட்டுக்கொண்டான்.

''உஷ்! இந்த அனாவசிய மரியாதையெல்லாம் வேண்டாம். நீ உள்ளே போய்ப் படு,'' என்றார் வீரராகவன்.

''இல்லை... வந்து...''

''எனக்கு வயது ஐம்பத்தெட்டாகிறது, ராகுல். துணை கிணை எதுவும் இல்லாமல் தூங்கத் தெரியும். நீ உள்ளே போ.''

''பரவாயில்லை... உங்களோட பேசிட்டிருந்து ரொம்ப நாளாகிறது...''

''உனக்காக நாளைப் பகல் பூரா தங்கியிருக்கிறேன், அவ்வளவு தானே? இப்ப, புது மாப்பிள்ளையாய்

லட்சணமாய் உள்ளே போய்ப் படுத்துக்க,'' என்று கண்டிப்புடன் சொன்னார் வீரராகவன்.

அதன் பிறகு வேறு வழி இருக்கவில்லை,

உள்ளே ஒரே ஒரு பெட்ரும் விளக்கு மட்டுமே எரிந்து கொண்டிருந்தது. வீரராகவன் கதவைச் சாத்திய வேகத்தில் அதுவும் அணைந்து விட்டது.

குளிர்ச்சியாயிருந்த வெறும் தரையில் அவன் படுத்துக்கொண்டான். ''கீழே ஏதாவது போட்டுக் கொள்ளுங்கள்,'' என்று ஒரு போர்வையை எடுத்து அவள் அவன் பக்கமாய்ப் போட்டாள்.

அவள் மிகவும் கோபமாய் இருப்பாள் என்று எண்ணி யிருந்தவனுக்கு, அவளுடைய சாதாரணக் குரல் வியப்பை அளித்தது. அவளைப் பார்த்தான், இருட்டில் அவளுக்குத் தலைமாடு எது கால்மாடு எது என்று எதுவும் தெரிய வில்லை. ''சியாம், அவர் பாட்டுக்கு தெரியாதவர்...'' என்று வெகு தாழ்ந்த குரலில் சொன்னான்.

அவள் பதில் சொல்லவில்லை.

''சியாம்... நான் உன்கிட்டே வரமாட்டேன். தள்ளிப் படுத்துக்கிறேன், என்றான். அவள் கைகளைப் பற்றிக்கொண்டு அதைச் சொல்ல வேண்டும் போலிருந்தது. இருளில் துழாவி பற்றினான். ஆனால் அது கையல்ல அவளுடைய மிருதுவான பாதம் என்பது புரிந்தது. குறு குறுப்புக் காரணமாக அந்தப் பஞ்சு விரல்கள் நெளிவதை உணர்ந்தான்... கைவிரல்களைக் கோத்துக் கொள்வது போலவே அந்த கால் விரல்களைக் கோத்துக் கொண்டாள். அவள் முழங்கால்கள் தன் வயிற்றில் படுவதிலிருந்து

அவள் தன் பக்கமாகத்தான் திரும்பியிருக்கிறாள் என்று ஊகிக்க முடிந்தது.

"சியாம்... என் மேலே கோபமா சியாம்? உன் முகமே தெரியவில்லை..."

பாதத்திலிருந்து விரல்களை எடுத்து விட்டு, அவளுடைய முகத்தை இரண்டு கைகளாலும் ஏந்திக் கொண்டான். ஏந்தியவாறே பெருவிரலால்அவள் கண்களைத் தொட்டபோது இமைகள் படபடவென்று துடித்துக்கொண்டிருப்பது புலப்பட்டது. கழுத்து வழியே கைகள் இறங்கியபோது பூப்பந்து போல உருண்ட தோள்முனைகள் அவன் பிடிக்கு அகப்படாமல் திமிறுவது போலிருந்தது. அவளுடைய சுவாசம் அவன் முகத்தில் அலைஅலையாய்ப் படிந்து படிந்து பரவியது.

குபீரென அவள் அவனை அணைத்துக் கொண்டாள். அந்தக் கைகளின் வளையல்கள் அவன் முதுகில் உருண்டன.

அதன் பின்னர் அவர்களுக்குள் இடைவெளி இருக்கவில்லை.

## பதினேழு

ஓர் ஐந்தாறு நாட்களுக்கு வெங்கடேசுவரன் வெளியே தலைகாட்டாமல் இருந்தார். எப்போதாவது தன்னை மறந்து கறிகாய் வண்டிக்காரனைக் கூப்பிடுவதற் காகவோ, வெட்டிக் கொண்ட நகத்தை வீட்டுக்குள் போடக் கூடாது என்பதற்காகவோ வாசல் புறம் வந்து விட்டால், தெருவின் பிரகாசம் மொத்தமும் அவரை ஏளனம் செய்வது போலச் சுட்டெரிக்கும். தெருவோடு யாராவது இரண்டு பேர் சிரித்துக் கொண்டே போகும் போது இவரைப் பார்க்க

நேரிட்டால், தன்னைப் பார்த்துவிட்டுத்தான் சிரித்துக் கொண்டு போகிறார்கள் என்று கூசுவார். தபால்காரர் சியாமா பெயரிட்ட ஒரு ரிஜிஸ்தர் தபாலை — ஏதோ சீட்டுக் கம்பெனியிலிருந்து வந்திருப்பதாகத் தோன்றியது — எடுத்து வந்தபோது, அதை எந்த விலாசத்துக்குத் திருப்பி யனுப்புவது என்று தெரியாமல் அவளுடைய ஆபீஸ் முகவரியைச் சொல்லியனுப்பினார். நாலு ஒண்டிக் குடித்தனங்களுள்ள வீட்டில் எந்த விஷயத்தைத்தான் ரகசியமாய் வைத்துக் கொள்ள முடியும்? சியாமா வீட்டை விட்டு வெளியேறியது அன்றிரவே மற்றப் போர்ஷன் காரர்களுக்குத் தெரிந்துவிட்டது. அவர்கள் ஏறத்தாழக் குடும்ப சினேகிதர்களாகவும் இருந்ததால், தானாகவே அவர்களிடம். ''இந்தப் பெண்ணுக்கு எத்தனை திமிர் பார்த்தீர்களா, நாராயணன்? நான் எத்தனை செல்லம் கொடுத்து வளரத்தேன்? அதற்குக் கைம்மாறா இது?'' என்று முந்திக் கொண்டு புலம்பி விட்டார். அவர்களும், ''சியாமா நல்ல பெண். தப்புத்தண்டா வழிக்குப் போக மாட்டாள். யாராவது சினேகிதி வீட்டில் இருந்து விட்டு இரண்டு நாளில் வந்துவிடுவாள் பாருங்கள்,'' என்று ஆறுதலாகவே சொன்னார்கள். இரண்டு, மூன்று, நாலு என்று இரண்டு மாதங்களுக்கு மேல் ஓடிவிட்ட பிறகு — சியாமாவின் நிழல் இனிமேல் இந்த வீட்டு வாசற்படிமீது விழாது என்று நிச்சயமாகிவிட்ட பின்னர் — வெங்கடேசு வரனுடைய அவமானம் கசப்பாகவும் வெறுப்பாகவும் மாறிவிட்டது.

எப்போதேனும் ரங்கம்மா மூக்கை உறிஞ்சுகிற சத்தம் கேட்டாலோ, அல்லது மாலு கணக்கு நோட்டை வைத்துக் கொண்டு 'சித்தி இருந்தாள்னா...' என்று முனகுவது காதில்

விழுந்தாலோ, "இந்த வீட்டிலே வேறே நினைப்பே கிடையாது யாருக்கும்?'' என்று உறுமுவார். அதே சமயம், தானும்தான் சியாமாவின் நினைப்பைத் தவிர வேறு இல்லாமல் இருக்கிறோம் என்று உள்ளூர உறுத்தும். பாசமல்லவா தன்னை இந்தப் பாடுபடுத்துகிறது என்று எண்ணி அந்தப் பாசத்தின் மீதே கோபம் கொண்டார்.

கடைசியில், முளைத்து மூன்று இலை விடாத இந்தப் பெண் தன்னை இப்படி வீட்டோடு முடக்கி வைத்து விட்டாள் என்பதை வெளி உலகம் கண்டு கொண்டால் இன்னும் அதிகமாகச் சிரிக்கும் என்பதை உணர்ந்தவராக கொஞ்சம் கொஞ்சமாய் வெளியில் வாசலில் போய் வர ஆரம்பித்தார். மூன்று பி.ஏ. மாணவர்கள் அவரிடம் ட்யூஷன் வைத்துக் கொண்டதால் இன்னும் எளிதாகப் பொழுது நகர்ந்தது.

அன்று காலையிலிருந்து மாலுவுக்குக் காய்ச்சல், "ஸ்கூலுக்குப் போக வேண்டாம். கஞ்சி சாப்பிட்டு விட்டுப் படுத்திரு.'' என்று சொன்னார். பத்து மணிக்குத் தொட்டுப் பார்த்த போது மிகவும் சுடுகிற மாதிரி தோன்றியது.

"டாக்டர்கிட்டே காட்டி விட்டு வந்தால் நல்லதுன்னு தோன்றுகிறது...'' என்று ரங்கம்மா பயந்து கொண்டே சொன்னாள். இப்போதெல்லாம் அவ்ரெதிரில் வந்து நிற்கவே அவளுக்கு அச்சமாயிருந்தது.

"ஊம் ஊம்,'' என்று சொல்லிவிட்டு சைக்கிள் ரிக்ஷாவில் மாலுவை அழைத்துக் கொண்டு புறப்பட்டார் வெங்கடேசுவரன். அவருடைய குடும்ப டாக்டரின்

டிஸ்பென்ஸரி வடக்கு உஸ்மான் ரோடில், கோடம்பாக்கம் மேம்பாலத்துக்கருகே இருந்தது.

ஆபீஸ் நாளாக இருந்தும், காலை வேளையாக இருந்தும், டிஸ்பென்ஸரியில் நல்ல கூட்டம். கன்ஸல்ட்டிங் அறைக்குப் பக்கமாக மாலுவை ஒரு நாற்காலியில் உட்கார வைத்து விட்டு வெராந்தாவுக்கு வந்தார். அங்கேயும் ஒரு பெஞ்சியில் இரண்டு மூன்று பேர் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களில் ஒருவரை ஜரிகை அங்கவஸ்திரத்துடன் ஜபர்தஸ்தாக இருந்தவர் — எங்கேயோ பார்த்த மாதிரி இருந்தது. எங்கே என்று ஞாபகம் வரவில்லை.

ஆனால் அந்த மனிதருக்கு இவரைத் தெரிந்து விட்டது. "அடடா! வெங்கடேசுவ்ரனா! வாரும், வாரும். உமக்குத் தாங்ஸ் சொல்லணும்னு ரொம்ப நாளாய் நினைச்சிட்டிருக்கேன். இன்னைக்குத்தான் பார்க்க முடிஞ்சுது!" என்றார். "இப்படி உட்காரும்," என்று கொஞ்சம் நகர்ந்து கொண்டு பெஞ்ச்சில் இடமும் கொடுத்தார்.

"நீங்க..." என்று அவர் முகத்தைப் பார்த்தார் வெங்கடேசுவரன்.

"ரயில்வே காலனி... கிரியோட தகப்பனார் நான்... உங்க மைத்துனிக்குப் பார்த்தீர்களே..."

"ஓ, ஆமாம்..." வெங்கடேசுவரனுக்கு ஞாபகம் வந்தது.

அவர்களுக்குப் பக்கத்தில் இருந்தவர்கள் எழுந்து சென்றுவிட்டார்கள். ஜரிகை அங்கவஸ்திரக்காரர்

தாராளமாகப் பேசினார். "அதான், தாங்ஸ் சொல்லணும்னு உம்மைத் தேடிட்டிருந்தேன்," என்றார் மறுபடி.

"தாங்ஸா... எதுக்கு..."

"தெரியாத மாதிரி கேட்கிறீரே? என் பிள்ளை என் மூக்கை உடைச்சு, உம்ம மச்சினியைத்தான் பண்ணிக்கப் போறேன்னு வீறாப்புப் பேசினான். அவனை நீர் நல்லா மூக்கை உடைச்சு அனுப்பி வைச்சீர், உம்ம மச்சினி அவனைப் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லிவிட்டாள் இல்லையா?"

"டாக்டர் ஃப்ரியா இருப்பார் இப்ப," என்று சொல்லி எழுந்திருக்கப் பார்த்தார் வெங்கடேசுவரன்.

"உட்காரும் ஓய்!" என்று அவர் கையை அழுத்திப் பிடித்து இருத்திக் கொண்டார். "என் குடும்பத்திலே அவ்வளவு பெரிய சண்டைக்குக் காரணமாயிருந்துவிட்டு, அத்தனை அவமானத்தை ஏற்படுத்திவிட்டு, ரொம்ப சுலபமா போகப் பார்க்கிறீரே, முடியுமா ஐயா!"

வெங்கடேசுவரனுக்கு என்ன சொல்வது, எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. அவர் கோபமாயிருப்பது நியாயம்தான் என்று புரிந்தது. அவரைச் சமாதானப் படுத்துகிற மாதிரி, "இந்தக் காலத்துப் பிள்ளைகளே அப்படித்தான் இருக்கிறார்கள். இன்னாரைத் தான் பண்ணிக்குவேன் என்கிறதும், இன்னாரைப் பண்ணிக்க மாட்டேன்னு சொல்றதும் சகஜமாக ஆயிட்டுது. இதிலே அவமானப்படறதுக்கு ஒண்ணும் இல்லே..." என்று ஆரம்பித்தார்.

அந்த வார்த்தையை அவர் சொன்னவுடன் கிரியின் தகப்பனாருக்கு முகம் சிவுசிவு என்று சிவந்துவிட்டது. ''அவமானம் இல்லேன்னா சொல்கிறீர்? சொல்லுவீர் ஐயா! சொல்லுவீர்! மானம் அவமானத்தையெல்லாம் துடைச்சு எறிஞ்ச மனுஷனாச்சே நீர்! இல்லாவிட்டால் உம்ம மச்சினி எவனோ ஒரு பையனை இழுத்துக்கொண்டு ஓடிப்போன பிறகு கூட, இப்படிக் கூச்சப்படாமல் வெளியே பவனி வருவீரா?''

''சார்... நீங்க. வந்து...''

''என்ன. இவ்வளவு தெரிஞ்சு வைச்சிருக்கிறோ னேன்னு பார்க்கிறீரா? இதற்கு மேலேயும் தெரியும் ஐயா! தாலியும் கட்டிக்காமே. ரெஜிஸ்டர் மேரியேஜூம் பண்ணிக் காமே அந்தப் பையனோட குடித்தனம் நடத்துகிறாள் என்கிறதும் எனக்குத் தெரியும். அவள் குடியிருக்கிற காம்பவுண்டிலேதான் என் மருமான் ஒருத்தன் இருக்கிறான். சொன்னான். அவமானப்படறதுக்கு என்ன இருக்குன்னு நீர் ஏன் கேட்க மாட்டீர்!''

டாக்டரின் உதவியாளர் ஒருவர் விரைந்து வந்து, ''உஷ்! இது டிஸ்பென்ஸரி...'' என்று சொன்ன பிறகே அவர் பேச்சு நின்றது.

வெங்கடேசுவரன் தலை குனிந்துகொண்டு பல நிமிடங்கள் வரை உட்கார்ந்திருந்தார்.

பகல் இரண்டரை மணிக்கு ரங்கம்மா, மாலு நன்றாகத் தூங்குகிறாளா என்று பார்த்துப் போர்த்தியபின், ''இதோ பத்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன்,'' என்று பக்கத்துப்போர்ஷன்காரரிடம் சொல்லிவிட்டு, வெளியே

கிளம்பினாள். வெங்கடேசுவரன் அப்போது வீட்டில் இல்லை.

தெருக் கோடியிலிருந்த ஷாப்புக்குள் நுழைந்தாள். கடையில் யாரும் இல்லை. கடைப் பையன் தமிழ் காமிக்ஸ் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தான்.

ரங்கம்மா ஐம்பது பைசாவை அவன் முன் வைத்து, கையோடு கொண்டு போயிருந்த ஒரு துண்டுக்காகிதத்தை அவனிடம் காட்டினாள். "இது என் தங்கையோட ஆபீஸ் நம்பர். கொஞ்சம் அவளைக் கூப்பிடப்பா," என்றாள்.

"நீங்களே பண்ணிக்குங்க அம்மா," என்று போனை அவள் பக்கம் நகர்த்தினான் பையன்.

"எனக்குப் பண்ணத் தெரியாதப்பா. நீயே தயவு பண்ணி அவளைக் கூப்பிட்டு என்கிட்டே கொடேன். அவள் பேர் சியாமா,"

பையன் புன்னகையுடன் டயல் பண்ணி, எக்ஸ்டென்ஷன் நம்பரைச் சொல்லி, சியாமாவைக் கூப்பிட்டான். போனை ரங்கம்மா கையில் கொடுத்தான். "இப்படி வைச்சுக்குங்க," என்று ரங்கம்மா தலைகீழாய் வைத்துக் கொள்ளப் போன ரிசீவரைச் சரியாய் வைத்துக்கொடுத்தான்.

"ஹலோ... சியாமா ஹியர்," என்ற தங்கையின் குரலைக் கேட்டதுமே ரங்கம்மாவுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. கண்களில் அழுகையும் நெஞ்சில் நெகிழ்ச்சியும் முட்டிக் கொண்டு வந்து நின்றன.

''நான்... நான்தாண்டி சியாமா, சௌக்கியமா இருக்கியாடி?'' என்று நாலு வார்த்தைகள் பேசுவதற்குள் அவளுக்குத் திக்கித் திணறிவிட்டது.

''அ...அ...அக்கா!'' என்று பதில் வந்தபோது. மறு முனையில் இருப்பவளும் தன்னைப்போலவே உணர்ச்சி வசப்பட்டிருக்கிறாள் என்று புரிந்து கொண்டாள். ''சௌக்கியமா இருக்கேன் அக்கா, நீ கவலைப் படாதேன்னு ஒரு குருவி கிட்டே சேதி சொல்லியனுப்பக் கூட முடியாமே போயிட்டுதாடி உனக்கு? பதினைஞ்சு பைசா செலவழிச்சு ஒரு கார்டு எழுதிப் போடப் பிடிக்காத அளவுக்கு அவ்வளவு வெறுத்துப் போயிட்டுதாடி எங்களை யெல்லாம்?''

''அக்கா... நான் உன்னையும் மாமாவையும் மாலுவையும் நினைச்சுக்காத நாளில்லை... நினைச்சுக்காத வினாடி இல்லே... மாமா கோபமாய் இருக்கிறாரே, என்ன சொல்லுவாரோன்னு பேசாமல் இருக்கிறேன்...''

''மாமாதான் உன்னைப்பத்திச் சொன்னார் இன்னிக்கு...''

''என்ன சொன்னார்?''

''மாலுவுக்கு ஜுரம்னு — பயப்படாதே, லேசான ஜுரம்தான் — டாக்டர் வீட்டுக்குப் போயிருந்தார். அங்கே யாரைப் பார்த்தாரோ, என்ன சொன்னார்களோ — தெரியல்லே. வீட்டுக்கு வந்ததும், 'உன் தங்கையைப் பற்றிப் புலம்பிட்டே இருந்தியே? கவலைப்படாதே. அந்த ராகுலோடே நன்றாய்க் குடித்தனம் நடத்துகிறாளாம்'னு மட்டும் சொல்லிட்டுப் போயிட்டார்.''

''கோபமா சொன்னாரா?''

''கோபமாய்ச் சொன்னாரா, சாதாரணமாய்ச் சொன்னாரான்னு கண்டுபிடிக்கிற அளவுக்கு எனக்குப் புத்தி இருந்தால் நான் ஏண்டி இப்படி இருக்கிறேன்?'' என்றாள் ரங்கம்மா.

''அவ்வளவு தான் சொன்னார். சொல்லிட்டுப் போயிட்டார். எனக்கு மனசு தாங்கல்லே. முன்னே எப்பவோ நீ டெலிபோன் நம்பரைக் குறிச்சுக் கொடுத்திருந்தியே, அதைத் தேடிக் கண்டுபிடிச்சு, இப்பக் கூப்பிட்டேன். சியாமா, நீ எங்கேயிருந்தாலும் நன்றாயிருக்கணும். கெட்டலைஞ்சு நிற்காமே, தப்புக் காரியம் பண்ணாமே, மனசுக்குப் பிடிச்சவனைக் கல்யாணம் பண்ணிட்டுக் குடியும் குடித்தனமுமா இருக்கிறியே, அதுவே போதும். உன் மாமா கோபம் தணிஞ்சிருக்கு தான்னு தெரியல்லே. தெரிஞ்சதும் ஒரு நாள் அவரே எங்களையெல்லாம் உன்கிட்டே அழைச்சிட்டு வருவார் பார். நீ எங்கே ஜாகை இருக்கிறே?''

''தேனாம்பேட்டையிலே அக்கா.''

''தேனாம்பேட்டையிலா? நாளைக்கு ஒரு கல்யாண ரிசப்ஷன் இருக்கு அங்கே, எல்லாரும் போகணும்னு சொல்லிட்டிருந்தார்...''

சியாமாவின் குரலில் உற்சாகம் ஏறியது. ''எந்த மண்டபம் அக்கா? சொல்லு, நான் வந்து பார்க்கிறேன்.''

''ஆமாம்டி. நேரே பார்த்தால் உன் மாமாவோட கோபம்கூடக் குறைஞ்சிடும்...''

''எந்த மண்டபம் அக்கா? அதைச் சொல்லு...''

''வந்து... ராதாகிருஷ்ணாவோ... கிருஷ்ணராதாவோ...''

''சரி, நான் விசாரிச்சுக்கிறேன். மாமாகிட்டேயோ மாலுகிட்டேயோ நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்... ஸர்ப்ரைஸாய் வந்து சேர்றேன் பார்.''

''சரிடி... உடம்பைப் பார்த்துக்கோ. வைச்சிடட்டுமா?'' என்று கேட்டுவிட்டு, போனைக் கடைப் பையனிடமே கொடுத்தாள் ரங்கம்மா. அதை அவன் வைத்த பிறகுதான், 'குளிச்சிட்டிருக்கியான்னு ஒரு வார்த்தை கேட்காமல் போயிட்டோமே!' என்று அவளுக்கு வருத்தம் ஏற்பட்டது. அதனாலென்ன, நாளைக்கு நேரில் கேட்டுக் கொண்டால் போச்சு என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

''மார்க்கண்டேயனுடைய அப்பா பெயர் என்ன?'' என்று கேட்டான் ராகுல், காப்பியை உறிஞ்சியபடியே.

வெளியே போவதற்காகப் புடவை மாற்றிக் கொண்டிருந்த சியாமா அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள். ''மிருகண்டு முனிவர்னு ஞாபகம். திடீர்னு என்ன புராண ஆராய்ச்சி?''

''பரமசிவன் அவரிடம் என்ன கேட்டார்? மிருகண்டு என்ன சொன்னார்?''

''நூறு வயதுள்ள அயோக்கியப் பிள்ளை வேணுமா, பதினாறே வயதுள்ள சத்புத்திரன் வேணுமான்னு சிவன் கேட்டார். பதினாறு வயதுள்ள சத்புத்திரனே போதும்னு மிருகண்டு சொன்னார்.''

''அதேபோல என் கிட்டே, சகிக்க முடியாத தண்ணிக் காப்பியாய் இரண்டு டம்ளர் வேணுமா, கெட்டியாய் நல்ல காப்பியாய் அரை டம்ளர் வேணுமான்னு கேட்டால்...''

சியாமாவுக்குப் புரிந்துவிட்டது. ''இன்னைக்கு ஒரு நாளைக்குக் காப்பி சுமாராய் அமைச்சிட்டதாலே ஒன்றும் முழுகிவிடாது. முழுங்கி வையுங்கள். நான் அவசரமாய் வெளியே போகிறேன்.''

''ஐ ஸீ!'' என்று ராகுல் விசிலடித்தான். ''மே ஐ நோ வேர்?''

அவன் உட்கார்ந்திருந்த நாற்காலியின் கைப்பிடியின் மீது அவள் தொற்றிக் கொண்டு அவன் கழுத்தை வளைத்து அணைத்துக்கொண்டாள். ''சொல்றேன். நீங்களும் வர்றீங்களா?''

''எங்கேன்னு சொல்லு.''

''கிருஷ்ணராதா கல்யாண மண்டபம் அடுத்த தெருவுக்கு அடுத்த தெருவிலே. அங்கே ஒரு ரிஸப்ஷன் நடந்து தொண்டிருக்கு. என் அக்காவும் மாமாவும் மாலுவும் வர்றாங்களாம். அக்கா டெலிபோன் பண்ணிச் சொன்னாள். போய்ப் பார்க்கலாம்.''

''உன் மாமா உன்னை வரச் சொன்னாராமா?''

''இல்லை. ஸர்ப்ரைஸாய் இருக்கட்டும்னு நான்தான் போகிறேன்.''

ராகுல் மோவாயைத் தடவிக் கொண்டான். பொதுவாக, அவளுக்கு யோசனை கூறுவது அவனுக்கு வழக்கமில்லை. இப்போது என்னவோ தோன்றியது.

''சியாம், ஸர்ப்ரைஸ்னு நினைக்கிற சில விஷயங்கள் ஷாக்காகவும் முடியறது உண்டு. ஏன் வீணாய்? இன்னும் கொஞ்ச நாள் போகட்டும். அவராகவே...''

''என்னைக் காட்டிலும் மாமா பெரியவர்... அவராக வந்து என்கிட்டே மன்னிப்புக் கேட்கட்டும்னு நான் நினைக்கிறதே தப்பு... பரவாயில்லை. நீங்க வரவேண்டாம். நான் மட்டுமே போய்விட்டு வருகிறேன். நீங்க எங்கேயும் போயிடாதீங்க. வீட்டிலேயே இருங்க. ஒருவேளை பக்கத்திலே தானே நம்ம வீடுன்னு மாமாவும் அக்காவும் என்னோடு வந்தாலும் வருவாங்க...'' என்று கூறுவிட்டு உற்சாகமாகப் புறப்பட்டாள் சியாமா.

காலையிலே விசாரித்து வைத்திருந்ததால் கல்யாண மண்டபத்தை அடையச் சிரமம் இருக்கவில்லை.

வரவேற்பு ஹாலில் நடைபெற்றுக் கொண்டிருந்த புல்லாங்குழல் கச்சேரியை லட்சியம் பண்ணாமல் விருந்தாளிகள் வெளியிலிருந்த புல் வெளியில் நாற்காலிகளைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். பெண்கள் வரிசையிலிருந்த ரங்கம்மாவும் மாலுவும் தான் சியாமாவின் கண்ணில் முதலில் பட்டார்கள்.

அவளை முந்திக் கொண்ட ரங்கம்மாவே அவளைப் பார்த்து விட்டு ஓடி வந்து கட்டிக்கொண்டாள், ''சியாமா! சியாமா...'' என்று வேறொன்றும் சொல்லத் தோன்றாமல் அவள் புலம்ப, ''சித்தி... சித்தி'' என்று மாலு சியாமாவின் இடுப்பைச் சுற்றித் தன் பிஞ்சுக் கைகளால் கட்டிக் கொண்டாள்.

''சியாமா! துரும்பாய் இளைச்சுப் போயிருப்பியோன்னு கவலைப் பட்டுக் கொண்டு இருந்தேன்.

பரவாயில்லை. உடம்பு தேறி, ராணியாட்டம் இருக்கிறே,'' என்று ரங்கம்மா வெகுளித்தனமாய்ச் சொன்னாள்.

சியாமா சிரித்தாள்.

''உங்களையெல்லாம் பிரிஞ்சிருக்கிறேன் என்கிறதைத் தவிர மத்தப்படி நான் மனசுக்குப் பிடிச்ச வாழ்க்கையிலே சந்தோஷமாயிருக்கேன் அக்கா.'' என்று கூறி, ''எப்படிடி இருக்கே, கழுதை!'' என்று மாலுவின் காதைத் திருகினாள்.

மறுபடியும் ஒருமுறை தங்கையைக் காலோடு தலை ஆராய்ந்தாள் ரங்கம்மா. என்னவோ சந்தேகம் வந்தது. ''ஏண்டி. நீ...'' என்று ஆரம்பித்தவள் மாலுவை, ''நீ அந்தண்டை போ,'' என்று அதட்டிவிட்டு, சியாமாவிடம் காதோடு ஏதோ கேட்டாள்.

சியாமாவின் முகம் சிவந்தது நாணத்தினால். ''இரண்டு மாசம் இருக்கும்...'' என்றாள் அவள். பிறகு, ''மாமா எங்கே?'' என்றாள்.

''அதோ!'' என்று சுட்டிக் காட்டினாள் ரங்கம்மா.

வெங்கடேசுவரன் வேறு பக்கம் திரும்பியவராக நின்றிருந்தார் எட்டத்தில். அருகில் பல நாற்காலிகள் காலியாகிக் கிடந்தன.

''என்ன, உங்களைத்தானே? சியாமா வந்திருக்கிறாள் பார்த்தீங்களா!'' என்று ஆவலுடன் அவரிடம் ஓடினாள் ரங்கம்மா.

நேரமாகிறது. இப்பவே புறப்பட்டால் தான் பஸ் பிடிச்சு வீட்டுக்குப் போகலாம்,'' என்றார் வெங்கடேசுவரன், அவர் பார்வை அவர்கள் புறமாய்த் திரும்பவில்லை.

சியாமா முன்னே வந்தாள்.

''மாமா... என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க மாமா.''

''புறப்படலாமா ரங்கம்?'' என்றார் அவர் தன் மனைவியிடம்.

''ரொம்ப நாள் கழிச்சு சியாமாவைப் பார்க்கிறோம்... அதுக்குள்ளே புறப்படணுமா... கொஞ்ச நேரம் பேசிட்டு...''

''நேரமாகிறதுன்னு சொன்னேனே, காதில் விழல்லே?''

''பழசையெல்லாம் மறந்துட்டு...''

அப்போதும் அவர் சியாமாவின் பக்கம் திரும்ப வில்லை ''சில பேராலே எதையும் மறந்துவிட முடியும். கூடப் பிறந்த தங்கையாச்சே என்று எதையும் மன்னிக்க முடியும். ஆனால் வேறே சில பேருக்கு மானம், கௌரவம், பாவம், புண்ணியம் இதெல்லாம் பெரிசாயிருக்கும்... எதையும் மறந்துட்டு இருக்கிறது அவர்களுக்குக் கஷ்டம்...''

''இப்ப என்ன ஆயிட்டுது... சிறிசு... நம்மைக் கேட்காமல் செய்துவிட்டாள் அவள் சந்தோஷமா யிருக்கணும்னு நினைச்சோம். சந்தோஷமாயிருக்கிறாள்...''

''அது எத்தனை நாளைக்கு ரங்கம்?'' மனைவி மீது தீப்பொறி பறக்கும் பார்வையை வீசினார் வெங்கடேசுவரன். ''எத்தனை நாளைக்கு இந்தச் சந்தோஷம் நீடிக்கும்? எத்தனை நாளைக்கு இந்த வாழ்க்கை நடக்கும் என்கிறே? கடவுளுக்கே பொறுக்காது இது! பார்த்திட்டேயிரு... ஒரு நாள்...''

# பதினெட்டு

''சீ! கோணல் கோணலாய் வருது!'' என்று அடுத்த வீட்டுச் சிறுமி சீப்பைத் தரையில் ஓங்கி அடித்து விட்டு, முகத்தைச் சுளித்துக் கொண்டு முணுமுணுவென்று ஏதோ திட்டுவதைச் சியாமா பார்த்தாள்.

அவளுக்குச் சிரிப்பு வந்தது. அரைமணி நேரமாக அந்தப் பெண் தன் முடியோடு போராடிக் கொண்டிருப்பதை அவள் கவனித்துக் கொண்டு இருந்தாள். பின்னலை முன்னுக்கு எடுத்துவிட்டுக்கொண்டு இரண்டு தரம் சீவுவாள். சிடுக்கு வரும். சீப்பினால் வரக் வரக் கென்று வெட்டுவாள். அதற்குள் ஏற்கெனவே பின்னலில் எடுத்திருந்த மூன்று கால்கள் பிரிந்து கொண்டு விடும். பின்னலைப் பின்பக்கம் தள்ளிவிட்டுக் கொண்டு மறுபடி பின்னிக் கொள்ளத் தொடங்குவாள். ரொம்ப விறைப்பாக இருக்கிறது என்று தோன்றுமோ என்னவோ, அதை விரல்களால் அமுக்கி விடுவாள்...

விட்டெறிந்த சீப்பைக் குனிந்து எடுத்துக் கொண்டு நிமிர்ந்தபோது அவள் சியாமாவைக் கவனித்தாள். இத்தனை நேரமாய் அவள் தன்னையும் தன் அவஸ்தை யையும் பார்த்துக்கொண்டு இருந்திருக்கிறாள் என்று அறிந்ததும் வெட்கமும் கோபமும் கலந்து வந்தன. குழந்தைத்தனமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அந்தப் பெண்ணுக்குப் பத்து வயதுதான் இருக்கும். பாரு என்று பெயர். அவள் அப்பா ஒரு வக்கீலிடம் குமாஸ்தாவாக இருப்பவர். அவரை அதிகம் சியாமா பார்த்ததில்லை. ஆனால், ''அப்பனே! முருகா! சண்முகா! நீ

எங்கடாப்பா இருக்கே?'' என்ற அவர் குரல் மட்டும் அடிக்கடி கேட்கும். (''இங்கேதான் இருக்கேன்னு சொல்லிட லாமா?'' என்று ராகுல் கூடப் பரிகாசம் செய்வான்.)'' பாருவின் அம்மா ஒரு நர்ஸரிப் பள்ளியில் ஆசிரியையாக இருக்கிறாள். இரண்டு வீட்டுக்குமாக வந்து போய்க் கொண்டிருக்கும் வேலைக்காரி மூலமாய்த்தான் சியாமாவுக்கு இந்த விவரம் தெரியுமே தவிர அவர்கள் இவளுடன் பழகுவதில்லை.

''ஏன் பாரு, அம்மா இல்லையா வீட்டில்? பாவம், நீயே மன்றாடிட்டிருக்கியே ரொம்ப நேரமாய்?'' என்று சியாமா சொன்னாள்.

அந்தக் குரலில் இருந்த கனிவு பாருவைத் திரும்பிப் பார்க்கப் பண்ணியது போலும். ''உக்கும்! கைவேலையா இருக்காளாம். 'கடா மாடாட்டம் வயசாகலையா, நீயே பின்னிக்கோ'ன்னு சொல்லிவிட்டாள்,'' என்றாள்.

''இங்கே வா. நான் பின்னி விடறேன்.''

அந்தப் பெண் தயங்கினாள்.

''பரவாயில்லை, வா.''

இரண்டு வீட்டு வெராந்தாவுக்குமிடையே ஒரு சிறிய திண்ணை இருந்தது. அதைத் தாண்டிக் கொண்டு இந்தண்டை வந்தாள் அந்தச் சிறுமி. சீப்பைச் சியாமாவின் கையில் கொடுத்து விட்டு, வாகாகத் திரும்பி நின்று கொண்டாள். ''வலிக்காமல் வாரி விடறீங்களா?''

வலிக்காமல் வாரிவிடு... வலிக்காமல் வாரி விடு... சியாமாவின் கண்ணை உறுத்திக் கொண்டு நீர் நிறைந்தது.

இதே கெஞ்சலை, அவள் சிறுமியாயிருந்த காலத்தில் எத்தனை நாட்கள் அக்காவிடம் வெளியிட்டிருக்கிறாள்! அக்காவுக்கு ரொம்ப முரட்டுக் கை. உயிர் போகிறமாதிரி சீவுவாள். நடுநடுவே, ''அசக்காமல் காட்டேண்டி சனியனே!'' என்று பின்னலை அழுத்தி ஒர் உலுக்கு உலுக்கி, பின்னாலிருந்தபடியே சியாமாவின் கன்னங்களை இரு கைகளாலும் அமுக்கி, ''அதோ அந்தப் படம் மாட்டி யிருக்கு பார், சுவரிலே, அதையே பார்த்துக் கொண்டு நிற்கணும். துளி அசக்கினியோ கொன்னுடுவேன்!'' என்பாள்.

''எனக்கு முடி எத்தனை நீளமிருக்கு, பார்த்தியா! என் ஃப்ரண்ட்ஸெல்லாம் தொட்டுப் பார்த்துப் பொறாமைப் படறாங்க!'' என்பாள் சியாமா.

''மண்டு! தலைமுடி நிறைய இருந்தால் தரித்திரம்னு சொல்வாங்கடி!'' என்பாள் அக்கா.

''நான் ஒன்றும் தரித்திரம் இல்லே!'' என்று சியாமா தலையை ஆட்ட, பின்னல் கலைய, ''உனக்கு எமன்தான் தலை பின்னுவான்!'' என்று சீப்பைத் தூக்கி எறிந்துவிட்டுப் போய் விடுவாள் அக்கா. கொஞ்சம் பொறுத்து, 'வந்து தொலை' என்று இழுத்து வைத்துக் கொள்வாள் மறுபடி...

அந்த நாட்களையெல்லாம் எண்ண எண்ணச் சியாமாவுக்கு உள்ளம் நெகிழ்ந்தது. பட்டுப் போன்ற அந்தச் சிறுமியின் கூந்தலில், பூப்போல அவள் கை மிதந்தது. இன்னதென்று தெரியாத ஒரு தாய்மையுணர்வு அவள் நெஞ்சுக்குள் பொங்கி வழிகிற மாதிரி இருந்தது. தன் அடி வயிற்றைத் தொட்டுப் பார்த்துக்கொண்டாள். ஆபீஸ் லைப்ரரியிலிருந்து வெட்கத்துடன் வாங்கி வந்திருக்கும்

குழந்தை வளர்ப்புப் புத்தகத்தைப் பார்க்க வேண்டும். இந்த ஏழாவது மாதத்தில் சிசு என்ன உருவில் இருக்கும்?... இப்போதே கூட அது தன்னை உதைக்கிற மாதிரி இருக்கிறது... ராகுலுக்கு இதெல்லாம் எதுவும் தெரிய வில்லை. கொஞ்ச நாள் முன்பு, ராத்திரி படுத்துக் கொண்டே புத்தகம் படித்துக்கொண்டிருந்த போது, ஏதோவொரு பூச்சி காலில் குறுகுறுத்தது. அவசரமாகப் புடவையை உதறினாள். விட்டில் பூச்சி. படபடவென்று பறந்தோடிவிட்டது. ''சியாம்! அது... காலில் என்னது?'' என்று அவள் காலைத் தொட்டான். 'தழும்புபோல...?' ''ச், இதுகூடத் தெரியாமல்! நரம்பு சுருட்டிக் கொண்டிருக்கிறது. அப்படித்தான் இருக்குமாம். டாக்டர் சொன்னார்,'' என்று அவள் சொல்லித்தான் அவனுக்குத் தெரிந்தது... ''சிவந்த தொடையில்... கருநீல நிறமாய்... அதுவும் ஒரு அழகு!'' என்றான்...

''ரொம்ப நேரமாய்ப் பின்னறீங்களே ஆன்ட்டி!'' என்று அந்தச் சிறுமி சியாமின் நினைவைச் சுண்டி இழுத்தாள்...

''இதோ ஆச்சு, கிளிப் வைச்சிருக்கியா?'' என்று சியாமா கேட்டுக் கொண்டிருக்கையில், ''பாரு! டீ பாரு!'' என்று ஒரு கடுமையான குரல் கேட்டது. அந்தப் பெண்ணின் அம்மாதான். முகத்தில் கனல் தெறிக்க, இடுப்பில் கை வைத்துக்கொண்டு நின்றிருந்தாள்.

''இதோ வரேம்மா. தலைவாரி...''

வா இப்படி!'' என்று சீறினாள் அந்த அம்மாள். ''கண்ட கண்ட வீட்டுப் படியெல்லாம் நீ ஏண்டி மிதிக்கிறே! ஸ்நானம் பண்ணினால் கூடக் கர்மம் போகாது!''

அந்தச் சிறுமி பயந்து மிரண்டவளாக, போய்வருகிறேன் என்று கூடச் சொல்லிக் கொள்ளாமல் ஓட்டம் பிடித்தாள். கதவு மடாலென்று சாத்திக் கொள்ளும் ஓசை கேட்டது.

சியாமா உதட்டைச் சுழித்துத் தன்னுள் சிரித்துக் கொண்டாள். ஆபீசுக்கு நேரமாகிவிட்டது, குளித்து முடித்துச் சாப்பிட்டு விட்டுக் கிளம்ப வேண்டும் என்ற எண்ணங்களினூடே, இந்த அடுத்த வீட்டம்மாள் போன்றவர்களும் இருக்கிறார்களே என்று சிந்தனை ஓடியது. கதவைத் தாளிட்டுக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள். அவளும் ராகுலும் வாழ்கிற வாழ்க்கையைப் பற்றி இந்தக் காலனியில் இருக்கும் எல்லாக் குடித்தனங் களுக்கும் தெரிந்தாகிவிட்டது. சிலபேர் வித்தியாசமா எதுவும் நினைக்காமல் பேசுகிறார்கள், பழகுகிறார்கள், கடைக்குப் போகிறேன், ஏதாவது வேண்டுமா என்று கேட்டு விட்டுப் போகிறார்கள், நல்லது பொல்லாததுக்குக் கூப்பிடுகிறார்கள். வேறு சிலபேர் மூஞ்சியைத் தூக்கிக் கொண்டு போகிறார்கள். பாவம், அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. கல்யாணம் செய்து கொள்ளாமலே வாழ்க்கை நடத்திக் கொள்கிறேன் என்று நாம் எடுத்துக் கொண்டிருக்கிற சபதம் இவர்களுக்குத் தெரியாது. தெரிந்தாலும் புரிந்து கொள்வது சிரமமாயிருக்கும். ஏன்,ராகுலே கூட நடுநடுவே, 'உறவு வைத்துக் கொள்ளாமலே இருந்திருந்தால் சரி. அதுவும் ஏற்பட்டுப் போய்விட்டது. குழந்தைப் பிறக்கப் போகிறது. இனிமேல் நாம் ஏன் இப்படி இருக்க வேண்டும்?' என்று சொல்லிப் பார்க்கிறார். இவரே இப்படி நினைக்கும் போது மாமா அன்றைக்கு அப்படியொரு சீறல் சீறியதில் என்ன ஆச்சரியம்?...

யாரோ கதவைத் தட்டினார்கள். திறந்தாள்.

அத்தனை வீடுகளுக்கும் அதிபதியும் பங்களாவில் குடியிருப்பவருமான தங்கராசு நின்றிருந்தார், வழக்கமான அசட்டுச் சிரிப்புடன்.

சுள்ளென்று எரிந்து விழ வேண்டுமென்று தான் சியாமாவுக்கு முதலில் தோன்றியது. ஆனால் அவர் தங்கமான மனிதர் என்று ராகுல் அடிக்கடி சொல்வது ஞாபகம் வரவே, ''வாங்க,'' என்றாள்.

அவர் உள்ளே வந்த பிறகுதான் கவனித்தாள். அவர் கையில் இரண்டு பெரிய சைஸ் முட்டைக்கோசு இருந்தது. அவைகளைப் பெஞ்ச் மீது வைத்து, ''நம்ம தோட்டத்தில் பயிரானது,'' என்றார்.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம்,'' என்றாள் அவள். ''நானும் அவரும் இரண்டே பேர்தான். இவ்வளவு காபேஜ் வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறோம்?''

''பரவாயில்லை. இருக்கட்டும். எனக்கு என் குடும்பத்தைச் சேர்ந்தவங்க, என் காம்பவுண்டிலே குடியிருக் கிறவங்க அப்படீன்னு வித்தியாசம் கிடையாதும்மா.''

''அப்ப ஒவ்வொரு டெனன்ட்டுக்கும் இரண்டிரண்டு காபேஜ் கொடுத்திருக்கீங்களா என்ன? அவ்வளவு பயிராகி யிருக்குதுங்களா நம்ம தோட்டத்திலே?''

''நீங்க ஒண்ணு! எல்லோருக்கும் கொடுத்து விடுவேனாம்மா? உங்களைப் போல ரொம்ப வேண்டிய வங்க, மனசு அறிஞ்சு பழகறவங்க... இப்படிப்பட்ட வங்களுக்கு மட்டும்தான்.'' இளித்தார் தங்கராசு.

"ஓகோ. சரி. ரொம்பத் தாங்ஸ். அவர் வரட்டும். இதற்கான பணத்தைக் கொடுத்தனுப்புகிறேன்," என்று கூறிவிட்டு, "சே, சே! பணம் எதுக்கம்மா?" என்று அவர் சொல்லிக் கொண்டிருப்பதைப் பொருட்படுத்தாமலே குளிப்பதற்காகப் பின்புறம் சென்று விட்டாள் சியாமா. பணக்காரர் என்றாலே ஒரு பண்பாடும் பதவியும் ஏற்பட்டு விடும் என்று நாம் நினைத்தது எத்தனை தப்பு என்று ஆத்திரம் அவளுள் சீறிக்கொண்டு வந்தது.

குளித்து விட்டுத் திரும்பியபோது —

தங்கராசு குத்துக் கல்லாட்டம் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

அவளுக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று. விடை கொடுத்த பிறகும் மரியாதை இல்லாமல் உட்கார்ந் திருக்கிறானே என்பதால் மட்டுமல்ல. வீட்டில் ஒருவரும் இல்லையென்கிற நினைப்பில் அவள் ஈரப் புடவையை அரைகுறையாகச் சுற்றிக் கொண்டு வந்து விட்டதால் ஏற்பட்ட கூச்சம் அவள் மேனியை ஊசியாகக் குத்தியது. குளியலறை, தாழ்ப்பாள் இல்லாமல் கோணல் மாணலான தகரக் கதவுடன் இருக்கிறதென்று ஞாபகம் வந்தபோது இந்த அயோக்கியன் எட்டிக் கூடப் பார்த்தாலும் பார்த்திருப்பான் என்ற அவமான எண்ணம் எழுந்து, அவள் சினத்தை இன்னும் அதிகரித்தது. சட்டென அடுத்த அறைக்குள் நுழைந்து கொண்டு, "நீங்க இன்னும் போகல்லே?" என்றாள் சீற்றத்துடன்.

"நீங்க ஆபீசுக்குக் கிளம்பிட்டிருக்கீங்க போலிருக்கு?"

"ஆமாம்."

''சாயங்காலம் சீக்கிரமாய் வந்துடுவீங்களா? இல்லே, நேரமாகுமா?''

''அதை என் வீட்டுக்காரர் தெரிஞ்சு கொண்டால் போதும்.''

''என்னையும் அப்படி வைச்சுக்கிட்டுத்தான் சொல்லேன், சியாமா.''

''தங்கராசு, இப்ப பத்து எண்ணுவதற்குள் நீர் வெளியே போகாவிட்டால் மரியாதை கெட்டுவிடும்,'' என்று அழுத்தமாக எச்சரித்தாள். ''ஒன். டூ...''

''அட, ரொம்பத்தான் மிரட்டறியே!'' என்றபடி தங்கராசு எழுந்து கொண்டார்.

''த்ரீ... போர்...ஃபைவ்...''

''நீ எப்படிப்பட்ட பத்தினிங்கிறது எனக்குத் தெரியும்மா...''

''ஸிக்ஸ், ஸெவன், எய்ட்...''

''பார்த்துக்கிறேன், இரு.''

தங்கராசு போய் விட்டார்.

சியாமா பதறும் தேகத்தை அடக்கத் தெரியாமல் வெகுநேரம் நின்று கொண்டிருந்தாள். தங்கராசுவின் முட்டைக்கோசுகள் பெஞ்ச் மேலேயே இருந்தன. தூக்கிக்கொண்டு போய்க் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டுத் திரும்பினாள். அப்படியும் ஆத்திரம் அடங்க வில்லை. சீ! எவ்வளவு மட்டமான ஆள்! என்ன துணிச்சலாய்ப் பேசிவிட்டான்!

எப்படியோ ஆபீசுக்கு வந்து, நாற்காலியிலும் உட்கார்ந்து விட்டாளே தவிர அன்று முழுதும் சியாமாவுக்கு எந்த வேலையும் ஓடவில்லை. எப்படியும் இனி அந்தத் தங்கராசுவின் வீட்டில் இருக்கக் கூடாதென்று உறுதியாகத் தோன்றியது.

சாயந்தரம் ஆயிற்று. வீட்டுக்கு வந்தாள். ராகுல் வந்தவுடனே நடந்ததையெல்லாம் சொல்லிவிட வேண்டு மென்று பரபரத்துக் கொண்டிருந்தாள். ஆனால், கையில் ஒரு சிறு அட்டைப் பெட்டியுடன் உற்சாகமாகச் சீட்டி யடித்துக்கொண்டே அவன் உள்ளே நுழைந்ததைப் பார்த்ததும் அந்தச் சந்தோஷத்தை உடனேயே கெடுக்க வேண்டுமா என்று நினைத்துக் கொஞ்ச நேரம் பேசாதிருந்தாள்.

''சியாம், கண்ணை மூடிக்க ஒரு வஸ்தலாக் குட்டி காட்டப் போறேன் உனக்கு,'' என்றான் அவன்.

''த்சு,'' என்றாள் அவள் அசுவாரசியமாக.

''த்சுவா த்சு? இப்பப்பார்!'' என்று அவள் கண்ணெதிரே ஒரு பாக்கெட் டிரான்ஸிஸ்டரை எடுத்துக் காட்டிய ராகுல், அதை ஆன் செய்தான். 'காது கொடுத்துக் கேட்டேன் குவா குவா சத்தம்' என்ற பாட்டு கணீரென்று வெளிப்பட்டது. ''ஹை! எப்படிப் பொருத்தம்!''

தன்னை மறந்து சியாம் சிரித்து விட்டாள். மறுகணமே தான் சொல்ல வேண்டிய விஷயத்தை ஞாபகப்படுத்திக்கொண்டவளாக, ''இப்ப எதுக்கு இந்த அனாவசியச் செலவு? வேறே ஜாகை போகணும் என்றிருக்கிறேன். என்ன வாடகை இருக்குமோ, எத்தனை

அட்வான்ஸ் தரவேண்டியிருக்குமோ? அதற்கெல்லாம் பணம் தேவைப்படும்போது...''

''புது ஜாகையா? ஏன், இங்கே தொட்டில் போட இடம் இல்லேங்கிறியா?''

''விளையாடாதீங்க,'' என்னும் போது சியாமாவின் குரல் தழுதழுத்தது. தலையைக் குனிந்து கொண்டு சிறிது சிறிதாகத் தெரிவித்தாள் தங்கராசு விஷயத்தை.

பதைப்போ அதிர்ச்சியோ எதுவும் காட்டவில்லை அவன். தொடர்ந்து டிரான்ஸிஸ்டரில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு, ''சமையலாகி விட்டதா? பசிக்கிறது,'' என்றான்.

அவனுடைய ரியாக்ஷனைக் கண்டு ஏமாற்றமும் கோபமும் கொண்டவளாக அவள் பேசாது உட்கார்ந் திருந்தாள்.

''சாப்பாடு ரெடியான்னு கேட்டேன்.''

''ஜாகை மாற்றுவது பற்றி ஒரு முடிவு பண்ணி விட்டுச் சாப்பிட உட்காரலாம்.''

''அசடு மாதிரி பேசாதே!'' என்று அதட்டலான குரலில் சொன்னான் அவன். ''ஜாகை மாறினால் பிரசினை தீர்ந்துவிடாது. நீ எங்கே போனாலும் உன்னை இந்த ஆபத்து தொடர்ந்துகிட்டுதான் இருக்கும். புரியலேன்னா கண்ணாடியிலே போய்ப் பார். புரியும்.''

''நான் அழகாயிருப்பது குற்றமா என்ன?''

''அழகாயிருப்பது குற்றமில்லை. அழகுக்கு வேலி யில்லாமல் இருப்பது தப்பு. எந்த மாடும் மேய வரும்.

கண்ணாடியிலே உன் கழுத்தைப் பார்னு சொன்னேன். இருக்க வேண்டியது இல்லைங்கிறது புரியும."

"சரி, சரி. இதுதான் சாக்குன்னு நீங்க அதுக்கு வரவேண்டாம்," என்றாள் அவள் ரோஷமாக.

"நான் வரல்லே. நீயும் உன்னை அவன் இப்படிப் பார்த்தான், இவன் அப்படிப் பார்த்தான் என்கிறதை யெல்லாம் என்கிட்டே சொல்லாதே!"

"கணவனாயிருக்கிறவனுக்கு மனைவியைக் காப்பாத்தறது கடமையாச்சேன்னு சொன்னேன்!"

"கணவன் மனைவியா!" அவன் கசப்புடன் சிரித்தான். "உலகத்தார் கண்களுக்கு, நீ என் மனைவி யில்லை. ஆசை நாயகி. ஒருத்தனுக்கு ஆசை நாயகி யாயிருக்கிறவள் ஒன்பதுபேருக்கு ஆசை நாயகியாய் இருக்கக் கூடாதான்னு நினைக்கிறாங்க! அதை நீ புரிஞ்சுக்காத வரையிலும் இந்த அசிங்கம் இருந்து கிட்டேதான் இருக்கும்!"

டிரான்ஸிஸ்டரைப் படக்கென்று நிறுத்திவிட்டு அவன் வெளியே போய்விட்டான்.

## பத்தொன்பது

ராகுல் அந்தண்டை நகர்ந்ததுமே மொத்த வீடும் வெறிச்சென்று இருட்டி விட்ட மாதிரி ஆகிவிட்டது சியாமாவுக்கு. அவசர அவசரமாக வாசல்புறம் வந்து பார்த்தாள். விளையாடிக் கொண்டிருந்த சில குழந்தைகள் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்ததைத் தவிர யாரையும் காணோம். காம்பவுண்டு கேட் வரையில்போய்ப் பார்த்

தாள். தெருவின் இரு கோடிகளையும் கவனித்தாள். முணு முணுவென்று எரியத் தொடங்கும் தெரு விளக்குகளின் வெளிச்சத்தில் எதுவும் தெளிவாய்த் தெரியவில்லை.

'பசி பசி என்று இரண்டு முறை வாய்விட்டுச் சொன்னவரை சண்டை போட்டுப் பட்டினியாய் விரட்டி விட்டாயே!' என்று அவள் உள்மனம் இடித்துரைத்தது. ஓட்டலுக்குத்தான் போயிருப்பார் என்று ஊகித்தாள். ராகுலுக்குப் பிடித்த ஓட்டலொன்று எல்டாம்ஸ் ரோடில் இருக்கிறது. அங்கே தான் இருப்பார்.

வீட்டைப் பூட்டிக் கொண்டு புறப்பட்டாள். ஒரு பர்லாங்கு தூரம்தான் என்றாலும் நடப்பது சிரமமா யிருந்தது. அந்த ஓட்டலில் டோக்கன் கொடுப்பது மட்டும்தான் கீழே. சப்ளை, சாப்பாடு எல்லாம் மாடியில். இருபது முப்பது படிகள் ஏறி மேலே சென்று, அந்தக் கூட்டத்தில் அவனைத் தேடும்போது, கவலையோடு கோபமும் பிறந்ததுஅவளிடம். காப்பி கொடுக்குமிடத்தில் அவன் நின்றிருந்தான். அவளைப் பார்த்ததும் கையை ஆட்டினான், இதோ வருகிறேன் என்று.

ஒன்றும் வரவேண்டாம் என்று சொல்கிற மாதிரி தலையை அசைத்து விட்டு, தூக்கிய முகத்துடன் கோபமாக ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டாள் அவள்.

சற்று நேரத்தில் அவன் கையில் ஒரு டிபன் தட்டுடன் அவளருகில் வந்தான். சியாமா திரும்பவில்லை.

அவன் தட்டை மேஜை மீது வைத்தான், ''ஒரு கதை சொல்லட்டுமா? முன்னொரு காலத்தில் உலகத்திலேயே பெரிய மடையன் ஒருத்தன் இருந்தான். அவன் பெயர் ராகுல்,'' என்றான்.

அவள் சிரிக்காமல் ''ஊம்,'' என்றாள்.

''உலகத்திலேயே மகா அழகியான ஒரு பெண் இருந்தாள். அவள் பெயர் எஸ்.ஒய் ஏ.எம். இந்த மடையன் அந்த எஸ்.ஒய்.ஏ.எம்மிடம் எப்பப் பார்த்தாலும் சண்டை போட்டுக்கிட்டே இருப்பான்.''

''அந்த எஸ். ஒய். ஏ. எம்மும் பொல்லாத பெண்ணோ என்னவோ.''

''சே, சொன்னால் சொன்ன ஸெகண்டே நாக்கு டமால்னு கழண்டு தடால்னு விழுந்துடும்! கேளேன். அன்னிக்கு அந்த மடையனுக்கு ஒரே பசி. பசி வந்தால் தான் எல்லாம் பறந்து விடுமே? அந்த மகா அழகி என்னடான்னா மனசிலே என்னவோ வேதனையோடே இவனுக்காகக் காத்திட்டிருக்கிறாள். இவன்கிட்டே சொன்னால் ஆறுதலாயிருக்கும்னு நினைச்சிருக்கிறாள். அது, தெரியாமே இந்த முட்டாள்...''

''எனக்கென்னவோ அந்த உலக மகா அழகிக்கும் அவ்வளவு கல்மனசு இருக்கக்கூடாதுன்னு தோணுது — களைப்பாய் வந்தவனுக்கு முதல்லே ஆகாரத்தைப் போட்டிருக்கக் கூடாதா? ராட்சசி!''

''ஐ லவ் ஆல் ராட்சசிஸ்.''

''ஐ லவ் ஆல் மடையன்ஸ்.''

இருவரும் கடகடவென்று சிரித்த சிரிப்பைக் கேட்டுப் பக்கத்து மேஜைக்காரர்கள் திகைப்புடன் திரும்பிப் பார்த்தார்கள்.

ராகுல் சொன்னான்: ''வேடிக்கை என்னன்னா, வீட்டுக்கு வந்தபோது அந்த மடையன் நினைச்சிருந்ததே

வேறே. அந்த அழகியை ஒரு இடத்துக்கு அழைத்துப் போகணும்னு நினைச்சிட்டுத்தான் வந்தான்.''

''எந்த இடத்துக்கு?''

''அழகி புறப்பட்டால் மடையன் வழிகாட்டுவான்.''

அவன் கையைக் கோத்துக் கொண்டு தெருவில் நடந்த போது சியாமாவின் உள்ளத்தில் ஓரளவு அமைதி ஏற்பட்டிருந்தது. 'ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொள்ள வேண்டுமென்றுதானே இவர் சொல்கிறார்? ஏன் வீண் பிடிவாதம் நமக்கு?' என்று ஒரு வினாடி எண்ணினாள்.

ஆனால் அந்த எண்ணம் ஏற்பட்டவுடனேயே அவள் இதயத்திலிருந்து அமைதி பறந்தோடி விட்டது.

பிடிவாதமா! அவள் சிரித்துக் கொண்டாள் வெறுப்புடன். தன்மானத்தோடு இருக்க வேண்டுமென்று ஆசைப் படுகிறவர்கள், மற்றவர் கண்ணுக்குப் பிடிவாதக் காரராகத்தான் தோன்றுவார்கள்...

தன்மானம் என்றால் கிலோ என்ன விலை என்று மற்றவர்கள் கேட்பார்கள். அவளுக்கோ அது உயிர்மூச்சு. அவளது தன்மானத்தை யார் எப்போது சீண்டிவிட்டாலும் அவளுக்கு அக்கா மறந்து போகிறாள்; அக்கா கணவர் மறந்து போகிறார் உயிருக்குயிரான காதலன் கூட மறந்து போகிறான். அதைப் புரிந்து கொள்ளாதவர்கள் அவளைப் பிடிவாதக்காரி என்கிறார்கள்; பொல்லாதவள் என்கிறார்கள்.

அவள் பாட்டுக்கு வேலைக்குப் போய்க் கொண்டிருந்தாள். எப்போதாவது கதைகளில் படிக்கும் போதோ, சினிமாவில் பார்க்கும் போதோ, நமக்கும் இப்படி

ஒருத்தன் வந்து சேருவான் என்று வேடிக்கையாக நினைத்துக் கொண்டது உண்டே தவிர, கல்யாணத்தைப் பற்றி அவள் சிந்திக்காமலே இருந்தாள். திடீரென்று ஒரு நாள் மாமாவுக்கு என்னவோ தோன்றியது.

எல்.ஐ.ஸி.யிலே பெரிய உத்தியோகம், நல்ல பையன் என்று சொல்லி ஒரு வரனை அழைத்துக்கொண்டு வந்தார். அவளொன்றும் துள்ளிக் குதிக்கவில்லை. விவாகம் என்றதும் வயதுப்பெண்கள் எல்லோருக்கும் ஏற்படக்கூடிய துறுதுறுப்புதான் அவளுக்கும் ஏற்பட்டது. கண்ணுக்கு நன்றாயிருந்தான். கண்ணியமாய்ப் பேசினான். எல்லாம் நல்லபடி முடிந்துவிட்டது என்று சொல்லி நிச்சயதார்த்தத்துக்கு நாள் குறித்திருந்தபோது, திடுதிப் பென்று அவர்கள் இந்தப் பெண் வேண்டாமென்று சொல்லியனுப்பிவிட்டார்கள். யாருக்குத் தெரியும், அடுத்த பத்துப் பதினைந்து நாட்கள் அவள் பட்ட வேதனையும் அனுபவித்த தலைக்குனிவும்! அன்று ஆபீசுக்குள் நுழைந்த போது திகைப்புடன் வேதாசலம் கேட்டார், ''என்னம்மா சியாமா, இன்றைக்கு உனக்கு நிச்சயதார்த்தம்னு லீவு போடலியோ!'' என்று. அலுவலகம் ஆரம்பிக்கும் அந்தப் பத்தரை மணி வேளையில், பேனாவையோ ஃபைலையோ டைப்ரைட்டரையோ தொட இருந்தவர்கள் அப்படியே அதனை நிறுத்திக் கொண்டு அவளைப் பார்த்தது பார்த்தபடி சிலைமாதிரி நின்றுபோனது இன்னும் எத்தனை ஜன்மங்கள் எடுத்தாலும் அவள் கண்ணினின்று மறையாதே!

அவளை வேண்டாமென்று அந்தக் கிரி ஏன் சொன்னான்? அவளிடம் ஏதாவது குறையைக் கண்டோ? அல்லது அவர்களுடைய குடும்பத்தில் எதிர்பாராத விதமாய் ஆபத்து நேர்ந்து விட்டதா? ஒன்றுமில்லை. வேறு

பெரிய இடத்துப் பெண் கிடைக்கிறதென்று போய் விட்டார்களாம்! கேவலத்திலும் கேவலம்! அக்காவா கட்டும் மாமாவாகட்டும், அதைப் பற்றி ஒரு வார்த்தை பேசினார்களா? கிடையாது. உலகத்தில் இதெல்லாம் சகஜம் என்று இருந்து விட்டார்கள். சகஜமாம் சகஜம்! பெண் என்றால் அவ்வளவு இளப்பமாக இருக்கிறது! அப்படிப்பட்ட ஆண்கள் உலகத்தில் தனக்கு எவ்வித சம்பந்தமுமில்லாமல் கல்யாணம் என்பதே இல்லாமல் வாழ்ந்து காட்டத்தான் அவள் தீர்மானித்திருந்தாள்.

ராகுல் அவள் வாழ்க்கையில் பிரவேசித்தான். தெருக் கோடியிலே மூண்ட பிரம்மாண்டமான தீ அவளுக்கு மட்டும் குத்து விளக்காக ஒளி வீசிற்று.

ஆனாலும் அவனைக் கண்ட மாத்திரத்தில் அவள் கிறங்கிப் போய் விடவில்லை.

அக்காவும் மாமாவும் ரொம்ப காலமாய் அவர்களுக்குள் 'இது' இருக்கும் போலிருக்கிறது என்று முடிவு செய்ததைக் கேட்டதும், உடனேயே கத்திரித்துக் கொள்ளவில்லையா? ஆனால், ராகுல் அவளிடம் முழுக்க முழுக்கப் பித்துக் கொண்டவனாக, அவள் நடக்கும் பூமியைக் கண்ணில் ஒற்றிக் கொள்கிறவனாக இருந்ததால் சிறிது சிறிதாக அவளையும் மீறிஅவனிடம் பிடிப்பு ஏற்பட்டது.

அப்படியும் வீட்டுக்குள் அவனைக் கூப்பிடாமலே இருந்தாள். மாமா கூப்பிட்டார். கூப்பிட்டு உபசாரம் பண்ணினார்.

அப்படி அவள் மனத்தை மாற்றிய பிறகு என்ன செய்தார் மாமா! அவளும் ராகுலும் ஒரே கோத்திரம் என்று

ஓர் உளுத்துப்போன காரணத்தை எடுத்துப் போட்டு, சுள்ளியை உடைத்துப் போடுகிற மாதிரி அவள் மனசை முறித்துப் போட்டார். ஏதோ சினிமாவுக்கோ கல்யாணத்துக்கோ போய்விட்டுத் திரும்பியதும், நல்ல ஜாக்கெட்டைக் கழற்றி விட்டுப் பழைய ஜாக்கெட்டை மாட்டிக் கொள்கிற மாதிரி, அவளும் மனசை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்த்தார் போலிருக்கிறது!

அந்த அவமானத்தை அவள் ஜீரணித்துக் கொள்ளு முன்பே அடுத்த அடி! எவன் அவளை வேண்டாமென்று சொல்லி முகத்தில் கரியைப் பூசிவிட்டுப் போனானோ அவனையே திரும்ப அழைத்து வருகிறார் மாமா! தன்மானம், ரோஷம் என்பதெல்லாம் இவர்கள் அகராதி யிலேயே கிடையாதா? எதைப் பொறுத்துக் கொண்டாலும் இதைப் பொறுத்துக் கொள்வதில்லை என்று அன்று தான் அவள் தீர்மானித்தாள். வாழ்ந்தால் ராகுலோடு தான் வாழ்வேன் என்று சூளுரைத்ததும் அன்றைக்குத்தான். அதிலென்ன தவறு?

ராகுல் தன் கோத்திரத்தையே மாற்றிக் கொண்டு வந்தாரே, ஒப்புக் கொண்டாரா மாமா? கல்யாணம் கூடாது, கல்யாணம் கூடாது, கல்யாணம் கூடாது — இது ஒன்றுதான் திரும்பத் திரும்பச் சொன்னார்.

சரி மாமா! உங்களுடன் பழகிய தோஷத்துக்காக, நீங்கள் என்னை வளர்த்த நன்றிக்காக, கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் இருக்கிறேன். தாலி கட்டிக்கொள்ளாமல் இருக்கிறேன். அவ்வளவுதானே!அவருடன் வாழக் கூடக் கூடாது என்றோ, வாழ்ந்தால் தாலி கட்டிக்கொள்ளத்தான் வேண்டும் என்றோ எனக்குக் கட்டளை போட இவர்களெல்லாம் யார்?...

ராகுலின் சம்மதத்தையும் கேட்டுக் கொண்டுதான் இந்த வாழ்க்கையை ஏற்றிருக்கிறாள். மாமாவின் கோபத்துக்காகவோ, தங்கராசு போன்ற ஈனப்பிறவிகளின் மிரட்டலுக்காகவோ தன் சவாலை அவள் கைவிடத் தயாராயில்லை. எது வந்தாலும் வரட்டும்...

அவன் நின்றான்.

சியாமா நிமிர்ந்து பார்த்தாள். 'மாநகராட்சி மருத்துவமனை — தாய் சேய் விடுதி' என்ற பலகையைக் கண்டதும் அவளுக்கு முகம் சிவந்தது. "சே, போங்கள்! வெட்கமே கிடையாது உங்களுக்கு! இதுக்குத்தான் அழைச்சிட்டு வந்தீங்களா?"

"சர்தான் வாம்மே உள்ளே," என்று அவள் கையை வேடிக்கையாக முறுக்கியபடி உள்ளே அழைத்துச் சென்றான் அவன். "இப்பவே பிடிச்சுப் பதிவு பண்ணி வைச்சிக்கிட்டால், பின்னாலே காம்ப்ளிகேஷன் எதுவும் இல்லாமல் பார்த்துக்குவாங்க."

"அடி ஆத்தி!" என்று அவளும் மோவாய்க் கட்டையில் கைவைத்து அதிசயம் வெளிப்படுத்தினாள். "இம்புட்டு விவகாரம் என் வூட்டுக்காரர் எங்கே கத்துக்கினாரு!"

"பெஞ்சியிலே உட்காரும்மே," என்று சொல்லி விட்டு அவன் சற்றுத் தள்ளினாற்போல நின்று கொண்டான். சியாமாவுக்கு முன்னால் மூன்று நாலு பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள். அனைரும் பிள்ளைத் தாய்ச்சிகள். நர்ஸ் ஒருத்தி அவர்களிடம் விவரம் கேட்டுப் பதிவு செய்து கொண்டிருந்தாள்.

''உன் பேரு என்னம்மா?''

''சரசு''

''புருஷன் பேரு?''

கொஞ்சம் இளிப்பு. ''ராமு.''

''வயது?''

''முப்பதுங்க.''

''நெக்ஸ்ட். உன் பேர்?''

''இசக்கி.''

''புருஷன் பேர்?''

''காத்தமுத்து.''

''வயது...''

சியாமா விருட்டென எழுந்து கொண்டாள்.

ராகுல் திடுக்கிட்டான்

''என்ன சியாமா?''

''வாங்க, போகலாம்.''

''இன்னும் உன் பேரை...''

''போகலாம் வாங்க.''

கோபமாக அவள் நடந்தாள். பின்னாலேயே விரைந்தான் ராகுல். ''சியாம்! என்ன சியாம் திடீர்னு?''

வாசலை அடைந்ததும் அவள் நின்றாள். ''இதென்ன, பொறி வைக்கிறீங்களா எனக்கு?''

''பொறியா? என்ன சொல்றே நீ? எதுக்குப் பொறி?''

''என்னை மடக்கத்தான். வேறு எதற்கு?'' வெடித்தாள் அவள். ''உன் புருஷன் யார் என்று என்னைக்

கேட்பாங்க. நான் ராகுல்னு சொல்லணும். அது ஒரு ஸார்ட் அஃப் ஸர்டிபிகேட் உங்களுக்கு! அந்தத் திருப்திக்காகத் தான் என்னை இங்கே அழைச்சிட்டு வந்தீங்க. உண்டா இல்லையா?''

அவனுக்குச் சுர்ரென்று கோபம் வந்து விட்டது. ''உன் புருஷன்னு என்னைச் சொல்லிக்கக் கூட உனக்கு வெட்கமாயிருக்கா?''

''அதுக்கு வெட்கப்படல்லே. ஆனால், கல்யாணம் கிறதை இப்படி ஏதாவது ஒரு மறைமுகமான வழியிலாவது செய்து முடிச்சிக்கணும்னு நீங்க குறுக்கு வழியைக் கையாளறீங்க பாருங்க, அதுக்கு வெட்கப்படறேன்.''

''சியாம்... நான்...'' என்று சொல்ல ஆரம்பித்தான் ராகுல். உணர்ச்சி மிகுதியினால் அவன் முகம் சிவந்து விட்டது. கண்களும் உதடுகளும் துடித்தன. அடுத்த வார்த்தை வராமல் அவன் தடுமாறி நின்ற சமயம் —

''நீ இங்கியா இருக்கிறே ராகுல்?'' என்று ஒரு குரல் கேட்டது.

கூப்பிட்டவன், ஃபயர்மேன் நாகப்பன்.

சட்டெனத் தன் முகபாவத்தை மாற்றிக் கொள்ள முயன்றான் ராகுல். ''ஏன், என்னைத் தேடினாயா என்ன?''

''தேடினேன்னு சொல்லமுடியாது. ஆனால் நீ ஸ்டேஷனிலே இருந்திருந்தால் எனக்கு உதவியாய் இருந்திருக்கும்.''

''என்ன ஆச்சு, சொல்லேன்.''

''என் சம்சாரத்துக்குப் பிரசவ டயம்ப்பா. இங்கே தான் அட்மிட் பண்ணியிருக்கிறேன். ராத்திரி இங்கே இருக்கலாம்னு லீவு கேட்டேன் 'அதெல்லாம் கிடையாது. இங்கே ஏற்கெனவே ஆள் கம்மி. ஆஸ்பத்திரியிலே தலையைக் காட்டிட்டு வந்திடு'ன்னு ஆபீசர் சொல்லிட்டார்...''

''சரி நீ இங்கே இருந்துக்க. நான் ஸ்டேஷனுக்குப் போய் கொள்றேன். ஆபீசாண்டையும் சொல்லிக்கிறேன்.'' ராகுல் சியாமாவைப் பார்த்தான். குரலைச் சாதாரணமாக ஆக்கிக்கொண்டு, ''அப்ப நீ வீட்டுக்குப் போய்க்கிறியா?'' என்றான்.

நாகப்பன் குறுக்கிட்டு, ''பரவாயில்லேப்பா. ஒய்ஃபை அழைச்சிட்டு வந்திருக்கிறே...'' என்றான்.

ராகுலைக் கோபத்துடன் பார்த்தாள் சியாமா. ட்யூட்டி இல்லாதபோதுகூட, இன்னொருத்தர் ட்யூட்டியைத் தலை மேல் போட்டுக்கொண்டு போகிறாராமா! போகட்டும்.

''நான் இப்படியே வீட்டுக்குப் போய்க் கொள் கிறேன். நீங்கள் போங்கள்,'' என்றாள் சளைக்காதவளாக.

## இருபது

ஒரு காக்கை.

ஒரு குடிகாரன்.

ஒரு ரிடையர்டு ஐ.ஸி.எஸ்.காரரின் மனைவி.

இந்த மூன்று பேருக்கும் ஒருவரைப் பற்றி மற்றவருக்குத் தெரியாது. அப்படியொருவர் இருக்கிறா

என்றுகூட அறிய மாட்டார்கள். இருந்தாலும், அந்தச் சாயந்தர வேளை ஆறேகால் மணிக்கு —

அது ஒரு குட்டையான அவலட்சணமான காக்கை. வலது இறக்கையைவிட இடது இறக்கை சற்றுச் சிறியது. வயசாகாமலே அதற்குப் பார்வைக் கோளாறு உண்டு. கொஞ்சம் அற்பத்தனமான புத்தி. ஆகாரம் கிடைத்தவுடன் மற்றவர்களைக் கூப்பிட வேண்டுமென்று எண்ணாது. தான் முதலில் தின்று விட்டு, போதுமென்று ஆன பிறகே கரையும். அப்போதும் கூட, 'இவர்களை யெல்லாம் கூப்பிட்டுத் தான் ஆக வேண்டுமா? மிஞ்சுவதை நாளைக்கு வைத்துக் கொண்டால் என்ன?' என்று எண்ணுகிற மாதிரி அதன் கூவலில் ஒரு தயக்கம் தென்படும்.

மேற்கு ஸி.ஐ.டி. நகரும் மவுண்ட் ரோடும் சந்திக்கும் முனையினருகே, 'ஓட்டல் ரேகா'வுக்கு நாலாவதாக இருந்த ஒரு வீட்டில் மாணவர்களுக்கான ரூம்கள் பல கட்டப் பட்டிருந்தன. அங்கே வசித்து வரும் மாணவர்களில் ஒருவன் — சற்று வசதிக் குறைவானவன் — தினம் சாயந்தரம் ஆறு மணிக்கு ரொட்டி வாங்கி வந்து சாப்பிடுவான். அப்போது கொஞ்சம் பிய்த்து ஜன்னல் வழியாக முற்றத்திலே காத்துக் கொண்டிருக்கும் அந்தக் காக்கைக்குப் போடுவான்.

மற்ற நேரங்களில் எங்கே இருந்தாலும் அந்த ஆறு மணிக்கு அது கட்டாயம் அங்கே வந்துவிடும். இன்றும் அதேபோல் வந்திருந்தது. ஆனால் அந்த மாணவன், தன் தாயாருக்கு உடம்பு சரியில்லை என்று தந்தி வந்திருந்ததன் பேரில் அவசரமாக அன்று மத்தியானம் புறப்பட்டுப் போய் விட்டான்.

ஆறு மணிக்கு எப்படியும் உணவு கிடைக்குமென்ற நம்பிக்கையில் அது மெத்தனமாக இருந்து விட்டது. இப்போது பசி அதன் சின்ன வயிற்றைக் கிள்ளியது. வேறு எங்கு என்ன கிடைக்கும் என்று யோசித்தவாறே தாழ்வாகப் பறந்து சென்றது.

ஒட்டல் ரேகாவின் ரூஃப் கார்டன் அதன் கண்ணில் பட்டது. அங்கே சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்த கூட்டத்தினரைப் பார்த்து விட்டு, ஓரமாயிருந்த ஒரு டூம் விளக்கின் உச்சியில் உட்கார்ந்து கொண்டது.

ஓட்டல் ரேகாவுக்கு பின்புறம் பல குடிசைப் பகுதிகள் உண்டு. அங்கே இருப்பவன் கண்ணுசாமி. வயது அறுபதாகிறது. கோடம்பாக்கத்தில் ஓர் ஆட்டோமொபைல் ஒர்க்ஷாப்பில் வாராந்தரக் கூலியாக வேலை பார்க்கிறான். சனிக்கிழமை மாலை சம்பளம் வரும். முன்னெச்சரிக்கையாக அவன் பெண்சாதி ஒர்க்ஷாப் வாசலிலேயே வாங்கிக் கொண்டு விடுவாள். ஆனால் கெஞ்சிக் கூத்தாடியோ, மிரட்டி உதைத்தோ அதில் பாதியை வாங்கிக் கொண்டு விடுவான் கண்ணுசாமி. அந்தப் பணம் கோடம்பாக்கத்தின் குடிசைப் பகுதிகளில் ஏதோ ஒரு மர்மமான இடத்தில், கள்ளச் சாராயத்துக்குச் செலவழிந்து விடும். எத்தனை வார்னிஷ் சாவுகள் ஏற்பட்டாலும் அப்படியொன்று தனக்கு ஒரு நாளும் வராது என்று திடமாக நம்புகிறவன் அவன்.

அன்று சாயந்தரம் அவன் தன் பெண்சாதியிடமிருந்து ரொம்பச் சொற்பத் தொகையே பறிக்க முடிந்தது. அதற்குண்டானதைப் 'போட்டு' விட்டு அரைப் போதையுடன் வீடு திரும்பினான். இன்னும் கொஞ்சம்

பணம் கிடைத்தால் இரண்டாம் தடவையும் குடிக்கலாமே என்ற ஆத்திரத்துடன் சட்டி பானைகளையெல்லாம் உருட்டி உடைத்துவிட்டு, சம்சாரத்தின் கூந்தலையும் பலப் பரீட்சை செய்த பின்னர், தெருவுக்கு வந்து ஓட்டல் ரேகாவுக்கு சற்று அருகில் ஆடிப்பாடிக் கொண்டிருந்தான்.

பழைய ஐ.ஸி.எஸ். அதிகாரி பெருமாத்தூர் ராமகிருஷ்ணன் இப்போது உயிருடன் இல்லை. அவருடைய மனைவியான லீலாவதி ராமகிருஷ்ணன், கணவர் கட்டியிருந்த பங்களாவில் தனியே வசித்து வந்தாள். ஒரு வேலைக்காரனும், சமையல்காரியும் தான் துணை.

லீலாவதியம்மாளின் ஒரே பிள்ளை கல்யாணமாகி மனைவியுடன் அமெரிக்காவில் ஐ.நா.ஸ்தாபனத்தில் பணியாற்றி வருகிறான். அங்கேயே அவர்களுக்குக் குழந்தை பிறந்து, ரமேஷ் என்ற பெயருடன் வளர்கிறான். மூன்று வருடங்களுக்கு ஒரு முறை பையனுடன் பெற்றோர்கள் வருவார்கள். இந்த வருடம் அவர்கள் ஐரோப்பா டூர் போய்விட்டார்கள். பையனுக்குப் பதினொரு வயது ஆகியிருந்தது. அவனை மட்டும் பாட்டி வீட்டுக்கு அனுப்பியிருந்தார்கள்.

லீலாவதி அம்மாளுக்கு ஏகப்பட்ட பெருமை பேரனைப் பற்றி. பத்து வார்த்தை இங்கிலீஷூம், இரண்டு வார்த்தை தமிழும்தான் பேசுகிறான் என்றாலும், அந்த மணிப்பிரவாளத்தைக் கேட்பதில் அளவற்ற ஆனந்தம்.

அன்று அந்தச் சிறுவன், ''கிரான்னி, வாட் இஸ் டிஸ் மசால் தோசை? நெவர் டேஸ்டட் இட்!'' என்றான் பாட்டியிடம்.

உடனே சமையற்காரியைக் கூப்பிட்டு மசால் தோசை செய்யச் சொல்ல வேண்டுமென்று தான் எண்ணினாள் லீலாவதி அம்மாள். ஆனால் அது ஓட்டல் மசால் தோசை மாதிரி ஆகாது என்று தோன்றவே, அருகிலேயே இருக்கும் ஓட்டல் ரேகாவின் ரூஃப் கார்டனுக்கு அழைத்துப் போகலாம் என்று முடிவு செய்தாள்.

'ஓட்டல் ரேகா' தடபுடலான பெரிய ஓட்டல் அல்ல. கீழே சாப்பாடு டிபன் இரண்டும் உண்டு. சாயந்தர வேளையில் மூன்றாம் மாடியின் திறந்த வெளியில் சிற்றுண்டி சப்ளை நடைபெறும். நடு மாடியில் பலசரக்கு. ஸ்டோர், சிப்பந்திகளின் பெட்டி படுக்கை குடியிருப்பு முதலியன இடம் பெற்றிருந்தன. கீழேயிருந்து மேலே செல்ல, குறுகலான, வளைவான படிக்கட்டு உண்டு. அந்தப் படிக்கட்டு முதல் மாடியின் வாசலைத்தொட்டு விட்டு இரண்டாம் மாடிக்குச் செல்லும்.

மாலை ஆறே கால்.

அந்தக் காக்கை, டூம் விளக்கின் உச்சியில் உட்கார்ந்தபடி எந்தத் தட்டு காலியாகும் என்று நோட்டம் விட்டுக் கொண்டிருந்தது.

"இதுதான் மசால் தோசை," என்று சர்வர் கொண்டு வந்து வைத்த தட்டைப் பெருமையுடன் பேரனின் அருகே நகர்த்தினாள் லீலாவதியம்மாள்.

அந்தச் சிறுவன் தோசையைத் தொட்ட அதே வினாடி, விளக்குகள் அணைந்தன. கரெண்ட் கோளாறு.

திறந்த மாடியாயிருந்ததால் இன்னும் நல்ல வெளிச்சம் இருந்தது. இருந்தாலும் லீலாவதி

அம்மாளுக்குத் தன் அமெரிக்கப் பேரன் இப்படிப்பட்ட சங்கடத்துக்கு ஆளாகும்படி நேர்ந்துவிட்டதே என்று கோபம் வந்தது. "இந்தாப்பா, ஒரு மெழுவத்தி கொளுத்திக் கொண்டு வந்து வை," என்றாள் சர்வரிடம்.

"இப்ப லைட் வந்துடும்மா."

"சொன்னதைச் செய்யப்பா. இவ்வளவு பெரிய ஓட்டலில் ஒரு மெழுகுவத்திக்கா வக்கில்லை?" என்று அதட்டினாள் லீலாவதி அம்மாள்.

சர்வர் கீழே ஓடிப்போய் ஒரே ஒரு வத்தியைக் கொண்டு வந்து அவள் மேஜையில் மட்டும் வைத்தான்.

அந்தக் காக்கைக்கு அது பளிச்சென்று தெரிந்தது. என்ன வினோதப் பண்டம் என்று நினைத்ததோ ஒரே தாவலாய் வந்து அதைக் கொத்திக்கொண்டு பறந்தது. "சூ! சூ!" என்று சர்வரும் மற்றவர்களும் விரட்ட அதற்கும் வத்தியின் சூடு உறைக்க, அதைத் தொப்பென்று கீழே போட்டு விட்டுப் பறந்தோடியது.

அந்தச் சில ஸெகண்டுகளுக்குள் கரெண்ட்டும் வந்து விடவே, காக்கை எறிந்த மெழுகுவத்தியை யாரும் பொருட்படுத்தவில்லை.

ரேடியோ ஏரியல் கம்புக்காக சுற்றியிருந்த கயிற்றின் மீது அந்த மெழுகுவத்தி விழுந்ததையோ, கயிறு புகைந்து எரிந்து நழுவி நழுவிக் கீழே சரிந்ததையோ, கீழ் மாடி ஜன்னலில் உலர்த்தியிருந்த ஒரு எண்ணெய்ப் பிசுக்கான துணியில் தீப்பிடித்ததையோ, அந்தத் துணி உள்ளே விழுந்து, அடுக்கி வைக்கப்பட்டிருந்த காலிக் கோணிப்பையைத் தழுவியதையோ அங்கிருந்து

அருகிலிருந்த எண்ணெய் டின்களுக்குத் தீ தாவியதையோ எவரும் பார்க்கவில்லை.

அரை மணிநேரம் கழித்து, குபுகுபுவென ஜுவாலை வெளிப்பட்ட போதுஅந்தத் தெருவே பிரமித்து நடுங்கியது.

மொட்டை மாடியிலிருந்தவர்கள் ஒரே சமயத்தில் குறுகலான படிகளின் வழியே கீழிறங்கப் பாய்ந்தார்கள்.

''கிரானி! கிரானி! பாட்டி!'' என்று எங்கிருந்தோ அமெரிக்கப் பேரன் கூவினான்.

''ரமேஷ்! எங்கே இருக்கே?'' என்று வேறு எங்கிருந்தோ கத்தினாள் லீலாவதி அம்மாள்.

தியாகராயநகரிலிருந்து வந்த மூன்றாவது யூனிட்டில் ராகுல் வந்தான்.

தீயணைப்பு வேலைகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த டிவிஷனல் அதிகாரி, ''அந்தப் பக்கம்! க்விக்! ப்ரிவென்டிவாக அங்கே அடி!'' என்று பக்கத்துக் கட்டிடத்துக்கு விரட்டினார் அவனையும் அவன் தோழர்களையும் பார்த்து.

''எஸ் சார்!'' என்று அவன் சொல்லு முன்னே, மற்றவர்கள் கட கடவென்று ஹோஸ் பைப்களை மாட்டி விட்டு, குழாய்ப் பட்டைகளைப் பிரித்துக் கொண்டு அவர் காட்டிய திசையில் ஓட்டம் பிடித்தார்கள்.

''இன்னாய்யா நீ, எரிஞ்சிட்டிருக்கிற இடத்தை விட்டுவிட்டு, எரியாத கட்டிடத்துக்குத் தண்ணி அடிக்கிறே?'' என்று அந்த ஆபீசரை உலுக்கிக் கொண்டே கேட்டான் குடிகாரக் கண்ணுசாமி.

''இந்தாப்பா, இவனை யாராவது அந்தண்டை இழுத்துக்கிட்டுப் போங்களேன். இவன் செய்யற உபத்திரவம் சகிக்கல்லே!'' என்றார் அந்த ஆபீசர். ஒரு ஃபயர்மேன் ஓடிவந்து அவனை நல்லதனமாகப் பேசி அந்தண்டை கொண்டு போய்க் கூட்டத்துக்குள் தள்ளினான்.

''நல்லாத்தான்யா கேட்டே நீ! திமு திமுன்னு எரிகிற இடத்தை விட்டுட்டு, வேறே எங்கியோ போறாங்க பாரேன்!'' என்று அவனைக் கிண்டலாகப் பாராட்டினான் கூட்டத்தில் ஓர் ஆள்.

இன்னொருவன் குறுக்கிட்டு, ''யோவ்! என்னய்யா வேடிக்கை, அவனைப் போய்க் கிளப்பி விட்டுக்கிட்டு!'' என்று அவனைக் கண்டித்த பின், கண்ணுசாமியிடம், ''நெருப்பு மேற்கொண்டு பரவாம இருக்கணுமில்லை? அதற்காக, பக்கத்து வீடுங்களைப் பத்திரம் பண்ணுவாங்க! அதுவும் ஒரு முக்கியமான வேலைதான். நீ கவலைப் படாமல் வூட்டுக்குப் போ!'' என்று சொன்னார்.

மேல் துண்டினால் மூக்கைப் பி'டித்துக்கொண்டு அவர் சொன்னதைக் கண்ணுசாமியினால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. ''டாய்! இன்னாங்கடா எல்லாருமா என் கையிலே டாவு கட்டறீங்க? வுடுங்கடா!'' என்று திமிறிக் கொண்டு மறுபடியும் புறப்பட்டு விட்டான்.

எரிந்து கொண்டிருந்த ஓட்டலின் இடப்பக்கமிருந்த வீட்டின் பக்கவாட்டுகளில் தண்ணீரைப் பீய்ச்சிச் சொட்ட சொட்ட நனைத்துக் கொண்டிருந்தான் ராகுல். தண்ணீர் எட்டாத இடங்களையும் நனைக்க வேண்டுமென்பதற்காக, ஆங்காங்கிருந்த ஜன்னல்களின் மீது கால் வைத்துத் தொற்றியபடி உயரங்களுக்கு ஏறிக் கொண்டிருந்தான்.

ஜன்னல் வழியாக வீட்டுக்குள்ளும் பார்த்து, அங்கிருந்தவர்களிடம், ''வேறே எங்கேயாவது போயிடுங்க! இந்தப் பக்கம் இருக்கிற துணி, மேஜை நாற்காலி எல்லாத்தையும் அப்புறப்படுத்துங்க!'' என்று கூவினான். அங்கே ஒரு பெண்மணி பதைக்கப் பதைக்கச் சாமான்களைத் தூக்கிக்கொண்டு அங்குமிங்கும் ஓடுவதைக் காணப் பரிதாபம் ஏற்பட்டது. ''பெரியம்மா! பதறாதீங்க! இங்கே தீ வராது! எதுக்கும் ஜாக்கிரதையா இருங்க,'' என்று சொல்லிக் கொண்டே தண்ணீரை உள்ளும் வெளியும் பீய்ச்சினான்.

அந்த வீட்டுக்கும் ஓட்டலுக்குமிடையே ஒரு சிறிய காம்பவுண்டு சுவர் இருந்தது. அதற்கப்பால் குப்பை கூளங்களும் கரி மூட்டைகளும் கட்டைகளும் போட்டு வைத்திருப்பார்கள் போலும். பதினைந்தடிப் பரப்பில் இரண்டு ஆள் உயரத்துக்குத் திகுதிகுவென்று எரிந்து கொண்டிருந்தது. காம்பவுண்டு சுவரை ஒட்டியிருந்த இடத்தில் எரிந்ததால், சுவர் மொத்தமும் பளபளவென்று ஜொலித்துக்கொண்டிருந்தது உஷ்ணம் தாங்காமல். அங்கிருந்து அவ்வப்போது தீக் கங்குகள் பறந்து வந்து ராகுலின் முகத்தில் மோதிக் கொண்டிருந்தன.

''கிரான்னி! ஐயம் ஹியர்! பாட்டி! இங்கே! ஹியர்!''

ஜன்னலில் தொற்றியபடியே ராகுல் அதிர்ச்சியுடன் குரல் வந்த திசையை நோக்கினான்.

நெருப்பின் வெளிச்சம் நூறாயிரம் விளக்குகளைக் கொளுத்தி வைத்த மாதிரி பிரகாசமாயிருந்ததால் அவனால் நன்கு பார்க்க முடிந்தது.

நெருப்புக் கொழுந்து விட்டெரியும் இடத்துக்கு மறுபுறம் ஒரு அறை தெரிந்தது. காம்பவுண்டைப் பார்த்தாற்போல் அதற்கு ஒரு கதவும் இருந்தது. அதைத் திறந்து கொண்டு, வாசலில் நின்றபடி ஒரு சிறுவன் கத்திக்கொண்டிருந்தான். கொழு கொழுவென்று ஊட்டமாயிருந்தான் அந்தப் பையன். ஆனால் மிகப் பயந்தவனாக அழுது கொண்டிருந்தான். மற்றவர்க ளெல்லாம் வேறு வழியாகத் தப்பியோடியிருக்கையில் இவன் மட்டும் எப்படி இந்தப் பக்கமாய் வந்தான் என்று ராகுலுக்கு ஆச்சரியமாயிருந்தது.

''கிரான்னி! கிரான்னி!'' என்று கத்திக் கொண் டிருந்தான் பையன்.

''தம்பி! உள்பக்கமாகவே ஓடிவிடு! இங்கே வராதே! நெருப்பு!'' என்று கூவினான் ராகுல்.

''நோ! ஐ கான்ட்! ஃபயர் தேர்!'' என்று உட்புறம் கையைக் காட்டினான் சிறுவன்.

பார்ப்பதற்குத் தமிழ்ப் பையன் மாதிரி இருப்பவன், ஏன் இங்கிலீஷிலேயே பேசுகிறான் என்ற ஆச்சரியத்தி னூடே, உட்புறமாக ஓட முடியாதபடி அவனுக்கு அந்தண்டைப் புறத்திலும் நெருப்பு மூண்டு, இரண்டுக்கும் நடுவே அவன் சிக்கியிருக்கிறானென்று ராகுலுக்குப் புரிந்தது. உட்புறத்துத் தீ எந்த அளவில் எந்த மாதிரி இருக்கிறதென்று அவனால் காண முடியவில்லை. பையனை அந்த வழியே போகும்படி சொல்வது ரிஸ்க். அதைக்காட்டிலும், கண்ணுக்குத் தெரிகிற காம்பவுண்டு வழியாகவே ஓடச் சொல்வது மேல் என்று நிச்சயித்தான்.

இந்த முடிவுக்கு வர இரண்டு மூன்று வினாடிகள் தான் பிடித்தன அவனுக்கு. ஆனால் அந்தச் சில வினாடிகளுக்குள் நெருப்பு மேலும் உக்கிரமாக எரியத் தொடங்கியது.

''கிரான்னி! ஹெல்ப்! ஸேவ் மி!'' என்று வெகு தீனமாக அலறினான் அந்தச் சிறுவன். கத்திக் கத்தி இப்போது அவனுக்குத் தொண்டை கட்டிவிட்டது.

கட்டிடத்தின் ஓரமாகக் கொஞ்சமேனும் தீயின் உக்கிரத்தைத் தணித்தால்தான் அந்த வழியே அவன் ஓட முடியும் என்று ராகுல் தீர்மானித்தான். தண்ணீர்ப் பைப்பைக் கையில் பிடித்தபடி காம்பவுண்டு சுவரின் மீது ஒரே தாவலாகத் தாவினான். கனத்த பூட்ஸ்கள் நெருப்பின் வெம்மையிலிருந்து அவனைக் காத்தன.

''ராகுல்! அந்தக் காம்பவுண்டிலே நிற்காதேப்பா! சுவர் கொதிச்சிட்டிருக்கு!'' என்று பதறினான் அருகில் இருந்த சாமுவேல். தீயில் வெந்திருக்கும் சுவரில் தண்ணீர் படுவது அபாயமானது என்று எந்த ஃபயர்மேனுக்குத் தான் தெரியாது?

''இங்கே தண்ணீர் படாதபடி பார்த்துக்க! ஒரு நிமிஷம்தான். அந்தப் பையனுக்கு ஒரு வழி பண்ணிட்டு வரேன்!'' என்று பதிலளித்தான் ராகுல். பிறகு சிறுவனைப் பார்த்து, ''பயப்படாதே! ஐ வில் ஹெல்ப் யூ! கட்டிடத்தின் ஓரமாகத் தண்ணி அடிச்சு, நெருப்பில்லாமல் பாதை பண்ணித் தரேன்! பயப்படாமல் ஓடிடணும்! ஓடுவியா?'' என்று கூவினான்.

''ஷ்யூர்!'' என்றான் அவன் கண்ணைத் துடைத்துக் கொண்டு.

பாதை போட்ட மாதிரி தண்ணீரைப் பீய்ச்சினான் ராகுல். ஓரடி அகலத்துக்கு நெருப்பு அடங்கி வழி ஏற்பட்டது, "ஓடு! ஓடி வாசற்பக்கம் போயிடு!" என்று ராகுல் கத்த, அந்தப் பையன் சிறிது தயங்கி, அறைக்கு வெளியே காலை வைத்துப் பார்த்து விட்டு, பயமில்லை என்று புரிந்து கொண்டவனாக, "தாங்க் யூ!" என்று ராகுலை நோக்கிக் கையை வீசி விட்டு, ஓடித் தப்பிவிட்ட அதே சமயம் —

குடிகாரக் கண்ணுசாமி எல்லோரையும் மீறிக் கொண்டு சாமுவேலை நோக்கி ஓடிவந்து கொண் டிருந்தான்.

"அறிவிருக்காய்யா உனக்கு? யோவ்!"

"சீ அந்தண்டை போடா! குடிகார ராஸ்கல்!" என்று சாமுவேல் திட்டினான்.

கண்ணுசாமிக்குக் கோபம் மூண்டது.

"எங்கியோ தீப்பிடிச்சு எரியுது! நீ வெட்டியா இங்கே அடிச்சிட்டிருக்கிறே தண்ணியை! கொடய்யா இப்படி!" என்றவன், சாமுவேல் சிறிதும் எதிர்பாராத வண்ணம் அவன் கையிலிருந்து பைப்பைப் பறித்தான், "இங்கே பார்! நான் அடிக்கிறேன்!"

சர்ரென்று அந்தக் காம்பவுண்டுச் சுவர் மீது தண்ணீர் பாய்ந்தது. ராகுல் திடுக்கிட்டவனாக, "நிறுத்து! நிறுத்து! இங்கே அடிக்காதே!" என்று கத்தினான்.

அதற்குள் சுவரில் மடேரென்று ஒரு வெடிப்புச் சத்தம் கேட்டது. சுவர் இரண்டாகப் பிளந்து சரிந்தது.

ராகுல் வெளிப்புறமாக விழுந்திருந்தால் அவன் மீது வெறும் சுவர் மட்டுமே சரிந்திருக்கும். ஆனால் உள்புறமாக விழுந்து விட்டான் — இன்னும் அடங்காதிருக்கும் நெருப்பிற் குள்ளே.

சுவர் அவன்மீது விழுந்து போர்வைபோல அணைத்துக் கொண்டது.

## இருபத்தொன்று

ராகுலின் தீயணைப்பு நிலையத்தில் நிமிர்ந்து நடமாடிக் கொண்டிருந்தவர்களைக் காட்டிலும் தலை குனிந்து நின்றிருந்தவர்களே அதிகமிருந்தனர்.

இரவு எட்டு மணிக்கு ஸ்டேஷனில் வழக்கமாக இருக்கும் அமைதியைவிடக் கூடுதலாகவே அன்று மௌனம் நிலவியது.

விளக்கினடியில் உட்கார்ந்திருந்த ஃபயர்மேன் — டிரைவர் பெரியண்ணன், ரொம்ப மும்முரமாக நாகபுரி நேஷனல் ஃபயர் சர்வீஸ் காலேஜுக்கு ஏதோ விண்ணப்பம் எழுதிக் கொண்டிருந்தான். ஆனால் அது ஒரு சாக்கே தவிர, முக்கியமான வேலை அல்ல என்பது அடிக்கடி எழுத்தின் மேலேயே எழுதி விளம்பிக் கொண்டிருப்பதிலிருந்தும், கொஞ்சம் கொஞ்சம் தலையை உயர்த்தித் திரும்பிப் பார்ப்பதிலிருந்தும் தெரிந்தது.

ஏழெட்டு ஃபயர்மேன்கள், தீயணைப்பு வண்டி களின் சுவரில் பட்டிருந்த சேறு கரிக் கறைகளை அகற்று வதில் ஈடுபட்டிருப்பது போல் பாசாங்கு செய்தனர்.

ஒருவர் ஆம்புலன்ஸ் வண்டியிலிருந்த ஸ்ட்ரெச்சரில் ஒரு மறையை அனாவசியமாகக் கழற்றி அனாவசியமாகத் திரும்ப மாட்டிக்கொண்டிருந்தார்.

பின்கை கட்டிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக உலாவிக் கொண்டிருந்த ஸ்டேஷன் தீயணைப்பு அலுவலர், தனது மேஜைமீது முட்டியினால் குத்திக் கொண்டே யிருந்தார் அமைதியின்றி. கடைசியில் அவரையும் மீறி அவரது கோபம் வெடித்துக் கொண்டு வெளிப்பட்டது. ''எங்கே அந்த சாமுவேல்? மடையன்! முட்டாள்! எட்டு வருஷ சர்விசாம்! பீற்றிக் கொள்வதில் ஒன்றும் குறைச்சலில்லை!''

அவர் மேஜைக்குப் பக்கத்திலேயே குந்தினாற்போல் உட்கார்ந்திருந்தான் சாமுவேல். வெகு நேரமாக அங்கே தான் அவன் உட்கார்ந்திருக்கிறான்.

''நான் என்ன சார் செய்யட்டும்? அந்தக் குடிகாரன்...'' என்று அவன் ஆரம்பித்ததுமே ஸ்டேஷன் ஆபீசருக்குச் சீறிக் கொண்டு வந்தது சினம்.

''எனக்கு என்னமா வருது தெரியுமா இப்ப? மறுபடியும் மறுபடியும் நீ அதையே சொல்லிக்கிட்டு! உன் வயசென்ன, அவன் வயசென்ன? தொண்டுக் கிழவன் அந்த ஆள். கிட்ட வந்தவுடனே எட்டி ஒரு காலாலே உதைச்சுத் தள்ள வேணாம்?''

''அவன் வந்ததும் தெரியலே, பைப்பைப் பிடுங்கியதும் தெரியலே சார். கண் இமைக்கிறதுக்குள்ளே நடந்து போச்சு!''

''பக்கத்திலே போலீஸ் இருந்தாங்க, இல்லே? கூப்பிடறது ஹெல்ப்புக்கு.''

''யாரும் இல்லே சார். ஒரே ஒரு வேனில் தான் வந்திருந்தாங்க. அவங்களும் அந்தண்டை 'எண்டி'லே இருந்தாங்களே தவிர, என் பக்கம் வரல்லே!''

பெரியண்ணன் மெதுவாகச் சொன்னான்: ''அதுகூட நாம் போய் இருபது நிமிஷம் கழிச்சுத்தான் வந்தாங்க. இப்படித்தான் அந்த நர்ஸரி ஸ்கூல் ஃபயரின்போதுகூட...''

''சரி, சரி, நான் மேலிடத்துக்கு அதைப்பத்தி எழுதிக்கிறேன். ராகுல் வீட்டுக்கு ஆள் போச்சா இல்லையா? ஆஸ்பத்திரிக்கு வரும்படி சொல்லியாச்சா...''

''இதோ கிளம்பிட்டேயிருக்கிறேன் சார்,'' என்றார் மோட்டார் பைக்கை உதைத்துக் கொண்டிருந்த ஒரு ஃபயர்மேன்.

''என்னடா அநியாயம் பண்ணறீங்க?'' என்று கத்தினார் அலுவலர். கோபம் மிதமிஞ்சி ஏற்பட்டாலொழிய அவர் 'டா' போட்டுப் பேசமாட்டார்.

''ஒரு மணி நேரமாகுது. இன்னமுமா தகவல் தெரிவிக்கலே அவங்களுக்கு? ஏண்டா, நீங்கள்ளாம் அம்மா அப்பாவோடே, அக்கா தங்கச்சிங்களோடு பிறந்தவங்கதானா? மனசு கிடந்து துடிக்கலே?...''

''அதில்லே சார்.'' என்று சாமுவேல் கழுத்தைத் தடவிக்கொண்டான். ''அது இப்ப பிள்ளைத்தாய்ச்சிப் பொண்ணு. அதுங்கிட்டே எப்படிப் போய்ச் சொல்றதுண்ணு எல்லாருக்குமே தயக்கம்...''

''அழகாயிருக்குதடா நீங்க ஃபயர் சர்வீஸ் நடத்தற லட்சணம்! கடைசி வரை அந்தப் பொண்ணுக்குச் சொல்லா மலே இருந்து விடலாம் இல்லை? அப்படித்தானே?''

''அதில்லை சார்... அந்தப் பெண்ணோட ஸிஸ்டரும் ஸிஸ்டர் ஹஸ்பெண்டும் மாம்பலத்திலே இருக்காங்க. அவங்ககிட்டே முதல்லே சொல்லிட்டா அவங்க பக்குவமாய் அந்தப் பெண்கிட்டே சொல்லிப் பாங்கன்னு...''

''சரி,அதைச் செய்யறதுக்கென்ன?''

''விலாசம் விசாரிச்சிட்டு வர ஆள் போயிருக்கு, சார்...'' என்ற சாமுவேல்,'' அதோ வந்திட்டான் சார்,'' என்றான் சைக்கிளில் வந்திறங்கிய ஒரு ஃபயர்மேனைக் காட்டி.

''இங்கேதான் சார் பழைய மாம்பலத்திலே இருக்கிறாங்களாம். வெங்கடேசுவரன்னு பெயர். விலாசம் விசாரிச்சுட்டு வந்திட்டேன்.''

''சரி, நீயும் போ அவனுடன்.'' என்று மோட்டார் பைக்கைக் கிளப்பிக் கொண்டிருந்தவனின் பின்னால் அவனை ஏற்றியனுப்பினார் ஸ்டேஷன் அலுவலர்.

தீயணைப்பு நிலையத்திலிருந்து ஆள் வந்து சேதி சொல்லிவிட்டுப் போய் ஐந்து நிமிடமாகியிருந்தது. வெங்கடேசுவரன் மர நாற்காலியில் உட்கார்ந்திருந்தார் முழங்கால்களை இரு கைகளாலும் கட்டியபடி, துளியும் அவரிடத்தில் அசைவு காணப்படவில்லை. கண்கள் நிலைகுத்தினாற்போல் நின்றிருந்தன.

''என்ன நீங்க கல்லுப் பிள்ளையாராட்டம் உட்கார்ந் திருக்கிறீங்க?'' என்று அடக்கமாட்டாமல் கேட்டாள் ரங்கம்மா.

''என்னை என்னச் செய்யச் சொல்றே ரங்கம், என்ன செய்யச் சொல்றே?''

''முதல்லே இடத்தை விட்டு எழுந்திருங்க. மாலு போய் நாராயணன் வீட்டிலே உட்கார்ந்திருக்கட்டும், நாம் போகலாம், கிளம்புங்க.''

''ஊகூம்... என்னாலே முடியாது.''

''என்ன, என்ன? முடியாதா? இந்தச் சந்தர்ப்பத்திலே கூடவா உங்க மனசு பாறாங்கல்லாட்டமாயிருக்கு? வந்தவங்க என்ன சொல்லிட்டுப் போறாங்கன்னு கேட்டப்புறமுமா உங்க பகைமையையும் கோபத்தையும் விடமாட்டேன் என்கிறீங்க? அந்த அளவுக்கா உங்க இருதயம்...''

வெங்கடேசுவரன் அவளை நிமிர்ந்து பார்த்தார். அவர் விழிகளில் ஈரம் பளபளத்துக் கொண்டிருந்தது. ''ரங்கம், என் இருதயம் கல்லுமில்லே, இரும்புமில்லே. அது இப்ப நெருப்புகிட்டே கொண்டு போன மெழுகாட்டம் ஆகிவிட்டது. என்னாலே சியாமா முகத்திலே முழிக்க முடியாது. எனக்குத் தைரியம் கிடையாது. அவளைப் பார்த்ததுமே நெஞ்சு வெடிக்க அழுதுடுவேன்.''

சுடச்சுட ஆயிரம் சொற்களை வீச வேண்டும் போலிருந்தது ரங்கம்மாவுக்கு. ஆனால் அவருடைய பரிதாபமான முகத்தைப் பார்த்துத் தன்னைத் தானே

அடக்கிக் கொண்டாள். ''அதுக்காக? நான் பெண். என்னாலே மட்டும் தாங்க முடியுமா? எட்டு மாதப் பிள்ளைத்தாய்ச்சி. ஒன்றுக்கிடக்க ஒன்று ஆகிவிடக் கூடாதுன்னுதானே நம்கிட்டே வந்து சொல்லிவிட்டுப் போகிறாங்க? கிளம்புங்க.

அவர் எழுந்து சட்டையை மாட்டிக் கொண்டார்.

மாலு எப்போதோ தன் நோட்டுப் புத்தகங்களை மூடி வைத்து விட்டு, தந்தையையும் தாயையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''மாலு, நீ தனியா இருக்க வேண்டாம். பக்கத்து வீட்டிலேபோய் இரு. நாங்க போய்விட்டு வந்துவிட றோம்,'' என்றாள் ரங்கம்மா.

''சித்திக்கு என்னம்மா ஆச்சு?''

''சித்திக்கா... ஒண்ணுமில்லையே...''

''அப்ப... அந்த மாமா... ராகுல் மாமாவுக்கா...''

''கம்முனு போய்ச் சொன்னபடி செய்யம்மா,'' என்று அதட்டினாற் போல் சொன்னாள் ரங்கம்மா. ''வேதனையா இருக்கிற சமயத்திலே தொண தொணன்னு கேட்டுக் கொண்டு இருக்கக் கூடாது. தெரிகிறதா?''

''சரிம்மா.'' ஏதும் புரியாதவளாக, மாலு அகன்றாள்.

''உனக்கு அட்ரஸ் தெரியுமா?'' என்றார் வெங்கடேசுவரன்.

''யார் அட்ரஸ்?''

''சியாமாவைத்தான் சொல்றேன்.''

''முன்னேயே அவள் சொல்லியிருக்கிறாள். இப்ப வந்தவங்களும் சொல்லிவிட்டுப் போறாங்க.''

தற்செயலாய்த் தெருவோடு போன ஆட்டோ ரிக்ஷாவைக் கைதட்டிக் கூப்பிட்டு நிறுத்தினார் வெங்கடேசுவரன்.

வீட்டுக்குள் நுழைந்து ஸ்விட்சைப் போட்டாள் சியாமா. ஃபயர்மேன் நாகப்பனுக்குப் பதிலாக, தானே ட்யூட்டிக்குப் போகிறேனென்று சொல்லி ராகுல் புறப்பட்டுப் போன பிறகு அந்தத் தாய் — சேய் மருத்துவ விடுதியிலிருந்து தனியாகவே அவள் வீடு திரும்பி யிருந்தாள்.

எனவே கோபம் கோபமாய் வந்து கொண்டிருந்தது.

நிறை கர்ப்பிணியை என்ன முரட்டுத்தனமாய் நடுத்தெருவில் நிறுத்திவிட்டுப் போய்விட்டார்! அந்த ஃபயர்மேன்கூட, 'ஒய்ஃபோடு வந்திருக்கிறாயே' என்று சொன்னார். இவர் பரவாயில்லை என்றார். பரவாயில்லை யாம், பரவாயில்லை! இந்த நிலையில் தனியாய் வீடு வந்து சேர எவ்வளவு சங்கடமாயிருந்தது! மெடர்னிடி ஆஸ்பத்திரி எங்கே இருக்கிறது, நம்ப ஜாகை எங்கே இருக்கிறது என்று கொஞ்சமாவது யோசித்துப் பார்த்தாரா...

தாய் — சேய் மருத்துவமனையில் அவனை வாங்கு வாங்கென்று வாங்கியதெல்லாம் அவள் ஞாபகத்தில் எழுந்தன. அப்போது அவன் முகத்தில் தெரிந்த அதிர்ச்சி!... அவள் நினைத்துப் பார்த்தாள்... பாவம், வேண்டுமென்றே நம்மை மடக்குவதற்காக அவர் அழைத்துச் செல்ல வில்லை... நல்ல எண்ணத்தோடு தான்...

அவள் உள்ளம் நெகிழ்ந்தது. 'ராகுல்! ரொம்பத்தான் உங்களை வாட்டிவிட்டேன் இல்லை?'

அவனைச் செல்லமாய் அடிப்பது போல, ஸ்டாண்டில் தொங்கிக் கொண்டிருந்த அவனுடைய டெரிகாட்டன் சட்டையை ஒரு தட்டுத் தட்டினாள்.

மூன்றாம் மாதம் அவள் வாங்கித் தந்த இரண்டு ஷர்ட்டுகளில் ஒன்று அது. அதற்கு முன்னால் அவன் காட்டன் சட்டை தான் அதிகம் வைத்திருந்தான். 'இதிலே கொஞ்சங்கூடச் சிக்கனமே இல்லை. சீக்கிரம் கிழிந்து விடுகிறது. லாண்டிரி செலவு வேறே. டெரிகாட்டன் சட்டை வாங்கிக் கொள்ளுங்கள். அன்றாடம் நானே வாஷ் பண்ணி விடுவேன். என் மாமா கூட இப்போதெல்லாம் காட்டன் சட்டை போடுவதில்லை,'' என்றாள்.

''நீங்க, உங்க அக்கா, உங்கள் மாமா எல்லோரும் பணக்காரங்கம்மா. நான் கேவலம் ஒரு ஃபயர்மேன்!''

''யோவ் புளியஞ்சேரி ஜமீந்தார்! நீயாய்ய ஏழை!'' என்று சிரித்தாள் அவள். மறுநாள் ஆபீசிலிருந்து வரும்போது இதை வாங்கி வந்திருந்தாள்.

காலரில் எத்தனை அழுக்காயிருக்கிறது! சுத்த அழுக்கு மனுஷன்! சிரித்துக் கொண்டே பிளாஸ்டிக் பக்கெட்டில் போட்டு, சோப்புத் தூளில் அலசினாள்.

காற்றாட உலர்த்த வேண்டுமென்று ஜன்னலருகே சென்றபோது —

யாரது ஆட்டோவில் வந்து இறங்குவது? அக்கா! மாமா!

''மாமா! வாங்க மாமா!'' என்று வாய் நிறைய வரவேற்றாள் தன் திகைப்பை அடக்கிக் கொண்டு. அக்கா வந்ததைக் காட்டிலும் மாமா வந்ததில் தான் அவள் உள்ளம் அதிகம் உவகை கண்டது.

''சௌக்கியமா இருக்கியா?'' என்று வெங்கடேசுவரன் தான் முதலில் நிலைமையைச் சமாளித்தார்.

அந்தக் குடியிருப்பு மொத்தத்துக்குமாகச் சேர்த்து ஒரே ஒரு விளக்குக் கம்பம் இருந்தது. சியாமாவின் போர்ஷனுக்கு வெகு தொலைவில், அணைந்து அணைந்து எரிந்து கொண்டிருந்தது அந்தக் குழல் விளக்கு. ஆகவே அக்காவின் முகத்தையோ அதில் படர்ந்திருந்த கலவரத்தையோ அவளால் காண முடியவில்லை. கொஞ்சம் நிதானித்திருந்தாளானால், தன்னைத் தொட்ட அக்காவின் கைகள் படபடவென நடுங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்திருப்பாள். அந்த எதிர்பாரா சந்திப்பின் பரபரப்பில் அதைக் கவனிக்கவில்லை.

''இவள் தினம் தினம் என்னை நச்சரித்துக் கொண்டேயிருந்தாள், நீ இப்படி வயிறும் பிள்ளையுமாய் இருக்கிறப்போ உன்னை ஏனென்றுகூடக் கேட்காமல் இருக்கலாமான்னு...'' என்றார் மாமா.

அவள் நெகிழ்வுற்றாள்.

''எத்தனை கோடி மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் உங்க பிரியமும் ஆசீர்வாதமும் எனக்கு இல்லாமல் போயிடுமா? உள்ளே வாங்க மாமா. வாசல்லேயே நிற்கிறீர்களே?''

அவர் அவள் பார்க்காத வகையில் கண்ணைத் துடைத்துக் கொண்டு, ''இந்தப் பக்கம் ஒரு காரியமாய் வந்தோம். சரி, உன்னைப் பார்த்து மெடர்னிடி ஹாஸ்பிடலுக்கு அழைத்துப் போய்...''

''நாளைக்குப் போகலாம். கட்டாயம் வரேன்.''

''நாளைக்கு வேண்டாம். இப்பவே போய்விட்டு வந்து விடலாம். வா. வீட்டைப் பூட்டிக்கொள்.''

அவள் திகைத்தாள். ''என்ன மாமா அத்தனை அவசரம்?''

ரங்கம்மா தன் குரலை வெகு சிரமத்துடன் மாற்றிக் கொண்டாள். ''சாயந்தரம் மாப்பிள்ளை கூடச் சொன்னார், 'நீங்களாவது வந்து சியாமாவைக் கவனிக்க வேண்டாமா'ன்னு...''

''அவரா... சாயந்தரம் எங்கே பார்த்தீங்க?''

''சாயந்தரம் இல்லை...

காலையில்... புறப்படேன். அப்புறம் நாழிகை ஆகிவிடும்.''

வெங்கடேசுவரன் ஆட்டோவை அனுப்பிவிட்டு டாக்ஸி அழைத்து வந்தபோது, இது இயற்கையான சந்திப்பல்ல என்று ஏதோ ஒன்று சொல்லத் தொடங்கி விட்டது சியாமாவின் மனத்துக்குள். மாலு எங்கே? ஏன் அவளை விட்டு விட்டு வந்திருக்கிறார்கள்? இரவு ஒன்பது மணிக்கு எந்த மெடர்னிடி ஹாஸ்பிடல் திறந்திருக்கும்? ஏன் அக்காவும் மாமாவும் கலகலப்பாகப் பேசாமல் செயற்கையாக ஏதேதோ சொல்கிறார்கள்?

முன்ஸீட்டில் டிரைவரின் பக்கத்தில் உட்கார்ந் திருந்தார் வெங்கடேசுவரன். அவருடைய அங்கவஸ் திரத்தின் நுனி காற்றில் படபடத்து சியாமாவின் முகத்தை மோதிக் கொண்டிருந்தது. அருகே உட்கார்ந்திருந்த அக்காவின் முகத்தில் வீதிகளின் ஆயிரம் வெளிச்சங்கள் படர்ந்து படர்ந்து மறைந்து கொண்டிருந்தன. டிரைவர் ஹாரனை அடிக்கும் ஒவ்வொரு சமயமும் வேறு ஏதோவோர் உலகத்திலிருந்து எழும்பிக் குதித்து மீண்டு வருவது போல அவள் திக்கித் திக்கி விழிப்புப் பெற்றாள்...

டாக்ஸி உள்ளே நுழைந்தது.

''மாமா... என்ன... இது மெடர்னிடி ஹாஸ்பிடல் இல்லையே? ஜி.எச்...இங்கே எதற்கு...''

''இங்கேயும் பிரசவ வார்டு இருக்கிறது சியாமா. உனக்கு என்ன தெரியும்?'' என்றாள் ரங்கம்மா.

''வாங்க சீக்கிரம்,'' என்று முன்வந்து வரவேற்றவர் —

ஒரு தீயணைப்பு அதிகாரி.

''என்ன... என்ன அவருக்கு... என் ராகுலுக்கு?'' என்றுஅந்தக் கட்டிடம் மொத்தமும் நடுங்கும் படி வீரிட்டுக் கொண்டு அந்த நீண்ட வெள்ளைத் தாழ்வாரங் களில் ஓட வேண்டும் போலிருந்தது சியாமாவுக்கு.

அதே சமயம் அடிவயிற்றில் பழுக்கக் காய்ச்சிச் சூடு போட்டாற் போல் ஒரு வலி தெரிந்தது.

அவளுக்கு அது தான் முதல் கர்ப்பம். பிரசவ நோவு என்பது எப்படி இருக்கும் என்பது அதற்கு முன் அவளுக்குத் தெரியாது. இருந்தாலும், தான் உணர்வது பிரசவ வலிதான் என்பது அவளுக்குப் புரிந்துவிட்டது.

# இருபத்திரண்டு

ஜி.எச்.சில் காஷுவாலிடி வார்டு.

ராகுலுக்கு எமர்ஜென்ஸி சிகிச்சை கொடுக்கத் தொடங்கிய போது தீப்பட்ட இடமெங்கும் அங்குல இடைவெளி இல்லாமல் கொப்புளங்கள் தோன்றி விட்டன. அவனுக்குப் பிரக்ஞை வருவதும் போவது மாயிருந்தது. நினைவு வரும்போதெல்லாம், தாள முடியாத எரிச்சல் அவனைக் கத்தியால் வெட்டுகிற மாதிரி பயங்கரமான வேதனையைத் தந்து கொண்டிருந்தது.

செய்தியறிந்து அவனுடைய மேலதிகாரிகள் ஆஸ்பத்திரிக்கு ஓடி வந்து பார்த்தபோது ராகுலுக்கு ஸெடடிவ் கொடுத்திருந்தார்கள் — நினைவு நீச்சில்லாமல் கிடப்பது ஒன்றுதான் அவனை வலியின் கொடுமை யிலிருந்து தற்காலிகமாகவேனும் காப்பாற்ற ஒரே வழி என்பதால்.

ஒரு பெரிய டாக்டரும் இரண்டு உதவி டாக்டர்களும் இரண்டு நர்சுகளும் கொண்ட ஒரு குழு அவனைப் பிழைக்க வைப்பதற்காக அரும்பாடு பட்டுக் கொண்டிருந்து.

"நிலைமை எப்படி இருக்கு, டாக்டர்?" என்று விசாரித்தார் பெரிய அதிகாரி.

"நெருப்புக் காயம் இருபது பர்ஸென்ட்டுக்குள் இருந்தால் ஒரு கவலையும் இல்லை என்று உடனேயே சொல்லி விடுவேன். கணக்கெடுத்துப் பார்த்ததில் மொத்தம் முப்பத்தைந்து பர்ஸெண்ட் இருக்கிறது. பேஷண்ட்டின் இளம் வயதுதான் இதுவரை அவனைக்

காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. வயதானவராயிருந்தால் இன்னேரம்...''

ஸ்பெஷல் படுக்கையில் ராகுலைக் கிடத்தியிருந்தார்கள். இடுப்பில் ஒரே ஒரு உள்ளங்கை அகலத் துண்டைத்தவிர அவன் நிர்வாணமாயிருந்தான். கொப்புளங்களையெல்லாம் துளைத்துத் துளைத்து உடைத்திருந்தார்கள். அவை உடம்பெங்கும் மடிந்து மடிந்து தொங்கிக் கொண்டிருந்தன. ரத்தக் குழாயைத் துண்டித்து எடுத்து ஸலைனும் மருந்தும் இடைவிடாமல் ஓடும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள். துளிக் காற்றுப் பட்டாலும் அவன் துடித்துப் போவான் என்பதால் அவனைச் சுற்றி மெல்லிய கொசுவலை மூடப் பட்டிருந்தது.

தலைமை டாக்டர் சொன்னார்: ''நல்ல வேளையாக மூளையைப் பாதிக்கும்படி ஷாக் ஏற்படவில்லை. கிட்னீஸ் நன்றாய் வேலை செய்து கொண்டிருக்கிறது. யூரின் அவுட்புட்டும் பரவாயில்லை...

ஆனால்...''

''ஆனால் டாக்டர்?''

''இன்ஃபெக்ஷன் ஏற்படாமல் இருக்க வேண்டும். அது தான் மூன்றாவது ஸ்டேஜ். அதில் தப்பிவிட்டால்...'' என்று அவர் சொல்லிக் கொண்டிருந்த போது, ஒரு உதவி டாக்டர் அவரிடம் ஓடி வந்தார்.

''டாக்டர்! ஹி ஸீம்ஸ் டு பி...''

''ஸீம்ஸ் டு பி?'' கேட்டுக் கொண்டே ராகுலின் கட்டிலுக்கு விரைந்தார் பெரிய டாக்டர்.

''பல்ஸ் ரேட்டும் பி.பியும்...'' என்று உதவி டாக்டர் தகவல் கொடுத்துக் கொண்டே அவர் பின்னே ஓடினார்.

தீயணைப்புப் படை அதிகாரிகள் ஒருவரையொருவர் கலவரத்துடன் பார்த்துக்கொண்டார்கள். ''நான் போய்த் தெரிந்து கொண்டு வருகிறேன்.'' என்று ஒருவர் டாக்டரின் பின்னே செல்ல முயன்றார்.

ஆனால் நர்ஸ் விடவில்லை.

''நீங்களெல்லாம் வெளியே போய் இருங்கள். ப்ளீஸ்!'' என்று அவர்களை வெளியே அனுப்பி வைத்தாள். அவர்கள் பின்னே கதவு சாத்திக் கொண்டது.

ராகுலைப் போலவே மாநிறத்தில் ராகுலைப் போலவே பெரிய கண்களுடன், ராகுலைப் போலவே கரு கருவென்ற முடியுடன், ராகுலைப் போலவே சற்று நீளவாட்டமான முகத்துடன், ஆண் குழந்தையொன்று தன் அருகில் கிடப்பது சியாமாவுக்குத் தெரியாது. அவள் இன்னும் மயக்க மருந்தின் ஆதிக்கதிலிருந்து விடுபட வில்லை.

நார்மல் நிலைமையாயிருந்தால் எல்லாம் இத்தனை சீக்கிரம் முடிந்திருக்காது. தலைச்சன் பிரசவத்துக்குப் பொதுவாக எத்தனை நேரம் பிடிக்குமோ அத்தனை அவளுக்கும் ஆகியிருந்திருக்கும்.

ஆனால் அவளைப் பொறுத்த மட்டில் எதுதான் நார்மலாக நிகழ்ந்திருக்கிறது?

தீயணைப்புப்படை அதிகாரி அவளை 'வாங்கம்மா' என்று வரவேற்றவுடனேயே அவளுக்கு எல்லாவிதமான

விபரீதக் கற்பனைகளும் ஏற்பட்டுவிட்டன. ''ராகுல்! ராகுல்!'' என்று கத்திக் கொண்டே ஓடலானாள்.

வெங்கடேசுவரனும் ரங்கம்மாவும் ''சியாமா! நில்லு! நில்லு!'' என்று கூவுவதோ, தீயணைப்பு அதிகாரி, ''இந்தப் பக்கம்மா, அப்படியில்லை!'' என்றபடி துரத்திக் கொண்டு வருவதோ அவள் புலன்களுக்கு எட்டவில்லை. எதிரில் வரும் நர்ஸ்களும் விஸிட்டர்களும் டாக்டர்களும் அவளைத் தடுத்து நிறுத்தப் பார்ப்பதும் தெரியவில்லை. எந்தப் பக்கம் போகிறோம், யாரைத் தேடிச் செல்கிறோம் என்ற நினைவேயில்லாமல் வெறி பிடித்தவள் போல அவள் ஓடுகையில், அடி வயிற்றில் அந்த வலி உதித்து, நேர் உச்சி மண்டையில் அடிப்பது போல் பிளந்தது. பிரசவ நோவு என்பதை உணர்ந்து கொண்ட அதிர்ச்சி ஒருபுறமும், ராகுலுக்கு என்ன... என்ன என்ன என்ன? என்று இருதயம் ஓயாமல் புலம்பும் துயரம் மறுபுறமும் தாக்க, ராகுலிடம் அழைத்துப் போக வந்தவர்களையும் எங்கேயோ விட்டுவிட்டோமே என்ற உணர்வு உறைத்து, அவர்களைத் தேடுவதாக நினைத்துக் கொண்டு பின்னும் குழம்பிய வளாக அவள் தலைதெறிக்க ஓடிய சமயம் —

ஆளில்லாமல் வெறுமே வந்து கொண்டிருந்த சக்கர நாற்காலியின்மீது அவள் மோதிக் கொண்டாள். அதைத்தள்ளிக் கொண்டு வந்த நர்ஸ. ''ஒத்திக்கம்மா! ஒத்திக்க!'' என்று குரல் கொடுப்பதற்குள் சியாமா அதன் மேல் முட்டிக் கொண்டு நிலை தடுமாறி, தலைகுப்புற ஒரு கரணம் அடித்துத் தாழ்வாரத்துக்கு அப்பாலிருந்த வெட்ட வெளியில் போய் விழுந்தாள்.

ஓடி வந்து பார்த்த நர்ஸுக்கு, ஒரே நிமிடத்தில் புரிந்து விட்டது சியாமாவின் நிலைமை எந்த நிமிடமும் பிரசவம் ஆகலாம் என்ற நிலைமை.

ஐந்து நிமிடத்துக்கெல்லாம் சியாமா காஷுவாலிடி வார்டில் இருந்தாள்.

'இது ஜி.எச்.அல்லவா? இங்கே ஏது மெடர்னிடி வார்டு?' என்று சற்றுமுன் அவள் தன் அக்காவை மடக்கியது சரிதான். அங்கே பிரசவ விடுதி கிடையாது. ஆனாலும் இந்த மாதிரி அவசர நிலைமையைச் சமாளிக்க டாக்டர்களுக்குத் தெரியும்.

காஷுவாலிடி வார்டில் ஒரு தற்காலிக 'பெட்' ஏற்பாடு செய்து அவளைக் கவனிக்கத் தொடங்கினார்கள்.

சியாமா எங்கே போனாள், என்ன ஆனாள் என்பது தெரியாமல் எங்கெல்லாமோ சுற்றிவிட்டு வெங்கடேசுவரனும் ரங்கம்மாவும் அங்கே வந்து சேர்ந்தபோது ஒரு டாக்டர் இன்னொரு டாக்டரிடம் சொல்லிக்கொண்டிருந்தார்:

"மெம்ப்ரேன் ரப்சர் ஏற்பட்டிருக்கிறது. காம்ப்ளிகேடட் கேஸ்தான்."

"எக்மோர் மெடர்னிட்டிக்கு அனுப்பி விடுவோம்." என்றார் மற்றவர்.

"இந்த ஸ்டேஜில் வேண்டாம். அங்கிருந்து ஒரு டாக்டரை இங்கே வரச் சொல்வோம். முன்னே ஒரு தடவை இந்த மாதிரி நேர்ந்ததுண்டு. வருவார்கள்."

இரண்டு டாக்டர்களும் வெளியே வந்தபோது வெங்கடேசுவரனையும் ரங்கம்மாவையும் பார்த்தார்கள்.

''டாக்டர்! அந்தப் பொண்ணு என் தங்கை. அவள் அக்கா நான். எப்படி இருக்கு?'' என்று ரங்கம்மா பதைத்தாள்.

''நல்லபடி ஆகும். கவலைப்படாதீங்க. அதோ அப்படி ஓரமாய்ப் போய் உட்கார்ந்திருங்கள்,'' என்றார் டாக்டர்.

வெராந்தாவிலிருந்த பெஞ்சில் உட்கார்ந்து கொண்டார்கள். வெங்கடேசுவரன் தன்னுள் தானே ஆழ்ந்து போனார்.

''என்ன இது, குழந்தை மாதிரி? கண்ணைத் துடைச்சுக்குங்க,'' என்று ரங்கம்மா அதட்டிய பிறகே அவருக்குத் தன் கன்னங்களில் கரகரவென்று நீர் வழிந்து கொண்டிருப்பது தெரிந்தது. அதைத் துடைத்துக் கொண்டு தலை நிமிர்ந்தபோது ஒரு லேடி டாக்டர், ''உங்களுக்குப் பேரன் பிறந்திருக்கிறான்,'' என்று அவரிடம் தெரிவித்தாள்.

அவளுடைய தவற்றைத் திருத்தக் கூடத் தோன்ற வில்லை அவருக்கு. ரங்கம்மாவை இழுத்துக் கொண்டு ''வா, வா,'' என்று புறப்பட்டார்.

''இருங்கள்,'' என்று தடுத்தாள் லேடி டாக்டர். ''கேஸ் ரொம்ப சிரமப்பட்டு விட்டது. இன்னும் நினைவு வரவில்லை...''

சியாமாவுக்கா நினைவு வரவில்லை! எத்தனை எண்ணற்ற நினைவுகள்! வீட்டைக் காலி செய்து குப்பைகளை வெளியே கொட்டுகிற மாதிரி... ஒன்றுக் கொன்று தொடர்பில்லாமல் உலகமே டோன்ட் கேர்னு

இருக்கணும் மாலு. ஜான்ஸி ராணி தெரியாது. அது ஏன் கேட்கிறே? மரூன் கலரிலே பாபி பாடர்ன் வேணும்னு எத்தனை கடை ஏறி இறங்கியிருக்கிறேன். ட்ரை ஸெல்லுக்கு ஸேல்ஸ் டாக்ஸ் ஜாஸ்தி. கணக்கு எடுக்கணும். வசந்தி! வசந்தி! ஏண்டி கிணத்திலே விழுந்திட்டே? கால் கட்டை விரலால் ராகுல் தரையில் எஸ் என்று எழுதுகிறான். ஒய் எழுதவில்லை. பாக்குப் பொட்டலக் காகிதம்... எடுங்களேன், எடுங்களேன். என்ன கஷ்டம்? பரசுராம்னு ஒரு ஆபீசர். மனுஷனுக்கு ஒரு தடவை பட்டால் புத்தி வரணும். ஐ லவ் ஆல் மடையன்ஸ். ஐ லவ் ஆல் ராட்சசீஸ். எந்தக் கிளை? அதோ அந்தக் கிளை. குனிந்து பார். ஊகூம், விடுங்க. நான் உன் பக்கம் தான் சியாம், என்னிக்கும் உன் பக்கம் தான். இன் த மிடில் ஆஃப் எ ஹொரஸான்ட்டல் பீம்... யோவ் புளியஞ்சேரி ஜமீந்தார்!...

என்ன அது, சத்தம்? யாரோ அழுகிறார்கள். பெரியவர்கள் இல்லை... குழந்தை. சிசு. இப்போது தான் பிறந்த சிசு...

நர்ஸ் அவளுடைய குழந்தையைக் கொண்டு வந்து பக்கத்திலே விட்ட போது அவளுக்குப் பூரணமாய் நினைவு திரும்பியது. அந்தத் தளிர்ப்பிஞ்சான கால்... கை... முணுக் முணுக்கென்று துடிக்கும் விழிகள்... அதைத் தொட்டுத் தன் பக்கமாக இழுத்துக் கொண்ட போது காலோடு தலை பரவிய பரவசம்... இது என் குழந்தை... எனக்கு ராகுல் கொடுத்த குழந்தை... ராகுல்! ராகுல்!

திடுக்கிட்டவளாகப் பார்வையை நாலுபுறமும் சுழலவிட்டாள். நர்ஸ்... ஒரு டாக்டர்... மாமா... அக்கா... ஆனால் ராகுல்? ராகுல்?

''மாமா! ராகுலுக்கு என்ன மாமா? எங்கே அவர்...'' அவள் குரல் அவளுக்கே கேட்காத அளவுக்கு ஈனசுரத்தில் இருந்தது.

''பக்கத்திலேதாம்மா இருக்கான்... குழந்தையைப் பார்த்தியா? நல்ல சிவப்பு...'' என்றார் வெங்கடேசுவரன்.

''பெத்துப் பிழைச்சியே, அதுவே போறும்டி, சியாமா,'' என்று தொண்டை கம்மக் கூறினாள் ரங்கம்மா.

சியாமாவுக்கு உடம்பு பதறியது.

''அவர் எங்கே அக்கா? ராகுல்... மாமா! சொல்லுங்க! சொல்லுங்க!''

''ஒண்ணுமில்லே, சியாமா... ஒரு சின்ன ஆக்ஸிடெண்ட். அதுவும் சரியாயிட்டுது...''

''இல்லே, என்கிட்டே என்னவோ மறைக்கிறீங்க,''

''இல்லேம்மா. எதையும் மறைக்கல்லே.''

''உண்மையைச் சொல்லிடுங்க. அவருக்கு ஏதோ ஆபத்து... அப்படித்தானே? இல்லை, ஒரு வேளை... ஒரு வேளை...'' நினைக்கவே அவளுக்குத் தலை சுழன்றது. ''மாமா! நான் எதிர்த்ததெல்லாம் மடத்தனம். போராடினதெல்லாம் பைத்தியக்காரத்தனம். என் ராகுல்... அவருக்கு ஒரே ஒரு ஆசைதான்... தன் கையாலே ஒரு தாலியை என் கழுத்திலே கட்டிடணும்னு... மாமா! இப்ப நான் கட்டிக்கிறேன். எங்கேயிருந்தாவது ஒரு மஞ்சள் கயிறு கொண்டு வாங்க... என்னை... என்னை...அவர்கிட்டே அழைச்சிட்டுப் போங்க.''

''உஸ்! சும்மா இரம்மா!'' என்று அதட்டினாள் நர்ஸ்.

''ஏன் மாமா பேசாமல் இருக்கிறீங்க? என்னவோ பெரிசாய் அவருக்கு நேர்ந்திருக்கு. என்னை அவர்கிட்டே அழைச்சிட்டுப் போங்க, மாமா! அக்கா! உனக்குக் கூடவா மனசு கல்லு?''

''ராகுலுக்கு ஒண்ணுமில்லே. கொஞ்சம் பேசாமல் இரு. பச்சை உடம்பு. அலட்டிக்கக் கூடாது.''

''இல்லை இல்லே இல்லே. அக்கா. நீ பெண் ஜன்மம். என்னைப் புரிஞ்சுக்கோ. எனக்கு எல்லாம் விளங்கிட்டுது. ஒரு தாலியைக் கட்ட இப்பவாவது ஏற்பாடு பண்ணு. டூ லேட் ஆகிவிடக் கூடாது அக்கா. அவர் இருந்தவரையிலும் அவருடைய மனைவின்னு வாழாமே இருந்துட்டேன். அவர் போயிட்ட பிறகு அவருடைய விதவைன்னாவது சொல்லிக்கணும். அதுவும் இல்லாமல் போயிடக் கூடாது, அக்கா! ப்ளீஸ்! தயவு பண்ணு!''

''சியாமா, டாக்டர்கள் வருகிறார்கள். நல்ல சேதி சொல்வார்கள், பார்,'' என்றார் வெங்கடேசுவரன்.

ராகுல் இருந்த வார்டிலிருந்து இரண்டு டாக்டர்கள் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

சியாமாவும் அவளைச் சுற்றியிருந்தவர்களும் அவர்கள் முகத்தையே கவலையுடன் நோக்கினார்கள்.

வெங்கடேசுவரன் ஒன்பதாம் வகுப்புக்கு ஆசிரியராக இருந்தபோது சிட்டிபாபு என்று ஒரு பையன் படித்து வந்தான். இன்று அந்தப் பையனின் முகம் அவருக்கு நினைவு வந்து கொண்டேயிருந்தது. அவன்

கணக்கு நன்றாய்ப் போடுவான். ஆனால் ''வழி எங்கேடா?'' என்று கேட்டால் தலையைச் சொறிந்து கொண்டு சிரிப்பான்.

''வழி போடத் தெரியலே சார். ஆனால் ஆன்ஸர் வந்துட்டுது,'' என்பான். அந்த மாதிரிதான் இருக்கிறது நம் வாழ்க்கை என்று எண்ணிக் கொண்டார் வெங்கடேசுவரன். ஆன்ஸர் வந்துவிட்டது. ஆனால் எந்த வழியில், யார், எப்போது போட்டார்கள் இந்த விந்தையான வாழக்கைக் கணக்கை? அதுதான் அவருக்குப் புரியவில்லை.

மடத்தனம், பைத்தியக்காரத்தனம் என்றெல்லாம் சியாமா அழுதது அவருக்கு ஞாபகம் வந்தது. அவர் கோத்திரத்தைப் பற்றிப் பிடிவாதம் பிடித்ததும் அப்படித்தானோ? ஊருக்குப் போய் என்னவோ பரிகாரம் செய்து, ராகுல் கோத்திரத்தை மாற்றிக் கொண்டு வந்தானே அதற்கப்புறமும் அவர் முரண்டு பிடித்தது சரியில்லையோ? இந்த முரண்டுகளினால் வாழ்க்கை பாழாகிறதா அல்லது வாழ்க்கைக்கே அப்போது தான் அர்த்தம் ஏற்படுகிறதா?...

உள்ளே சிசுவின் அழுகை கேட்டுக் கொண்டிருந்தது.

''திருப்தியாய்ப் போச்சா?'' என்ற ரங்கம்மாவின் குரல் அவரை நிமிர வைத்தது. ஒருபோதும் அவள் அந்தத் தொனியில் பேசி அவர் கேட்டதில்லை.

ரங்கம்மா... நீயுமா...''

''வருத்தம்கூட ஏற்படறதா என்ன உங்களுக்கு? கோத்திரத்தைக் கட்டிக் கொண்டு மாரடித்தபோதுஇது ஏற்பட்டிருக்கக் கூடாதா? சியாமாவுக்கு அதிலே ஏற்பட்ட வெறுப்பு. கல்யாணமே வேண்டாம்கிற பிடிவாதத்திலே

கொண்டு போய்விட்டது. அதனாலேதான் அந்தப் பிள்ளைக்குக் கோபம் வந்து ட்யூட்டியில்லாத நேரத்திலே ட்யூட்டிக்குப் போய் ...'' ரங்கம்மா புடவைத் தலைப்பை வாயில் புதைத்துக் கொண்டாள்.

அவள் கோபித்ததாலோ என்னவோ, சற்று முன் இளகியிருந்த வெங்கடேசுவரனின் உள்ளம் மறுபடியும் பாறையாயிற்று. ராகுல்தான் ஏதோ செய்து கோத்திரத்தை மாற்றிக் கொண்டானே, அதற்குப் பின்னும் நாம் பிடிவாதம் பிடித்தது சரிதானா என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தவர் சிலிர்த்துக்கொண்டார். எல்லாம் பெரியவர்கள் நல்லதற்குத் தான் கட்டுப்பாடுகளும் தடைகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்... தடுக்கப்பட்ட விஷயத்தை ஏன் சியாமா நாடியிருக்க வேண்டும்? ஏன் வெட்டென மறந்திருக்கக் கூடாது.

ராமா ராமா ராமா என்று தனக்குத் தெரிந்த ஒரே ஜபத்தை அவர் திரும்பத் திரும்பத் திரும்பத் திரும்ப...

நிறைந்தது



ரா.கி.ரங்கராஜன் : 5.10.1927-ல் கும்பகோணத்தில் பிறந்தார் தந்தை மகாமகோபாத்தியாய ஆர்.வி.கிருஷ்மாச்சாரியார், மிகப் பெரிய சமஸ்கிருத வித்வான். ரங்கராஜன், தனது 16வது வயதில் எழுத ஆரம்பித்தார். 1946-ல் ‘சக்தி’ மாத இதழிலும் ‘காலச்சக்கரம்’ என்ற வார இதழிலும் உதவி ஆசிரியராகத் தொடர்ந்தார். 1950-ல் ‘குமுதம்’ நிறுவனம் சிறிது காலம் நடத்திய ‘ஜிங்லி’ என்ற சிறுவர் இதழில் சேர்ந்து, குமுதம் இதழில் 42 ஆண்டு காலம் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

இவர் 1500க்கும் மேற்பட்ட சிறுகதைகளும், 50 நாவல்களும், ஏராளமான கட்டுரைகளும், மொழிபெயர்ப்பு நாவல்களும் எழுதியுள்ளார். இவருடைய மூன்று நாவல்கள் திரைப்படமாக வெளிவந்துள்ளன. பல படைப்புக்கள் சின்னத்திரையிலும் இடம் பெற்றுள்ளன. ரங்கராஜன் ‘சூர்யா’, ‘ஹம்ஸா’, ‘கிருஷ்ணகுமார்’, ‘மாலதி’, ‘முள்றி’, ‘அவிட்டம்’ - போன்ற புனைப்பெயர்களில் தரமான சிறுகதைகள், வேடிக்கை நாடகங்கள், துப்பறியும் கதைகள், குறும்புக் கதைகள், மழலைக் கட்டுரைகள், நையாண்டிக் கவிதைகள்-என பலதரப்பட எழுத்துக்களைத் தந்தவர், ஒவ்வொரு புனைப் பெயருக்கும் - நடையிலோ, கருத்திலோ, உருவத்திலோ எதுவம் தொடர்பு இல்லாமல் தனித்தனி மனிதர்போல் எழுதிய மேதாவி. இந்தப் பல்திறமைக்கு ஒரே ஒரு முன்னோடி தான் உள்ளர்;

- கல்கி

‘ரங்கராஜன் ஒரு கர்ம யோகி, குமுதம் ஸ்தாபன விசுவாசம், ஆசிரியர் எஸ்.ஏ.பி. மேல் பக்தி, கிடைத்தது போதும் என்கிற திருப்தி, சக எழுத்தாளர்கள் மேல் பொறாமையற்ற பிரிவு, நேசம், வெள்ளைச் சட்டை, வெள்ளை வேட்டி, நண்பர்களைக் கண்டால் கட்டியணைத்து முதுகில் ஒரு ஷொட்டு-இவைதான் இவருடைய சிறப்புகள்’,

- சுஜாதா